


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MANN (ERDE) MAGAZIN
V. Sivarajah
Am Windhövel 18a
47249 Duisburg
Germany

~~17/4/10~~

2-5-2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயச் சிறை

(சிறுகதைகள்)

ஆசிரியர்:

**சு. விக்னா பாக்யநாதன் B.A.,**

**மணிமேகலைப் பிரசுரம்**
தபால் பெட்டி எண் : 1447,
7, (ப. எண் 4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை – 600 017.
தொலை பேசி : 4342926
தொலை நகல் : 0091 044 - 434 6082
மின் அஞ்சல் : E-mail : Manimekalai@eth.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | ☛ | இதயச்சிறை |
| ஆசிரியர் | ☛ | சு. விக்னா பாக்யநாதன் |
| மொழி | ☛ | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | ☛ | 2000 |
| பதிப்பு விபரம் | ☛ | முதல் பதிப்பு |
| உரிமை | ☛ | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | ☛ | 11.6 கி.கி. |
| நூலின் அளவு | ☛ | கிரெளன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | ☛ | 10 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | ☛ | 216 |
| **நூலின் விலை** | ☛ | **ரூ. 43.00** |
| அட்டைப்பட ஓவியம் | ☛ | திரு. சாய் |
| லேசர் வடிவமைப்பு | ☛ | ஆதவ் கிராபிக், சென்னை - 14. |
| அச்சிட்டோர் | ☛ | எம்.கே. எண்டர்பிரைசஸ் |
| நூல் கட்டுமானம் | ☛ | தையல் |
| வெளியிட்டோர் | ☛ | மணிமேகலைப் பிரசுரம், சென்னை - 17. |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புரை

ஜெர்மனியில் வாழும் தமிழ் எழுத்தாளரான திருமதி விக்னா பாக்யநாதன் மணிமேகலைப் பிரசுர வாசகர்களுக்குப் புதியவரல்ல. இவரது நூல்களைத் தொடர்ந்து வெளியிடுவதில் எங்களுக்கும் பெருமைதான்.

"இதயச்சிறை" என்ற இச்சிறுகதைத் தொகுப்பு நூலில் மொத்தம் 23 சிறுகதைகள் உள்ளன. இவற்றில் சில முன்பே பத்திரிகைகளில் வெளிவந்தும், வானொலியில் ஒலி பரப்பப்பட்டும் பல பாராட்டுகளைப் பெற்றுள்ளன.

இச்சிறுகதைகளில் பல ஜெர்மனியில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் வாழ்க்கை முறையைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளன. எனவே, இக்கதைகளைப் படிக்கும்போது வாசகர்களுக்கு ஜெர்மனி போய்வந்த உணர்வு தோன்றுவது இயற்கை.

ஆசிரியர் கதை சொல்லும் பாணியே தனி. ஒவ்வொரு காட்சியையும் திரைப்படம் பார்ப்பது போல் கண்முன் கொண்டுவந்து நிறுத்தும் சாகத்தை கதைகளைப் படிக்கும் வாசகர்கள் உணர்ந்து கொள்வார்கள்.

பிள்ளைகளின் காதலுக்காகப் பெற்றோர் தியாகம் செய்வதை நடைமுறையில் பார்த்து இருக்கிறோம். ஆனால் பெற்றவர்களின் காதலுக்கு தம் காதலைத் தியாகம் செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மகளை இதயச் சிறை என்ற கதையில் நீங்கள் சந்திக்கலாம். ஜெர்மன் வாழ்க்கை முறையில் இப்படியும் நடக்க வாய்ப்பிருக்கிறது என்பது நம்மை வியக்க வைக்கிறது.

"உள்ளக் கிடக்கை" ஒரு மர்மக்கதை போலச் சென்று கடைசியில் மனத்தை உருக்கிவிடும் ஒரு அற்ப ஜீவராசியின் கதை என்பது முடிவில் தெரியும்போது மனித சமுதாயம் இன்னும் எங்கே இருக்கிறது என்று புரிந்து கொள்ள முடிகிறது

ஒவ்வொரு சிறுகதையும் தத்துவ முத்துகளை உள்ளடக்கியிருக்கின்றன. வாசகர்கள் கோர்த்து மாலையாக்கி தங்கள் வாழ்வை வளமாக்கிக்கொள்ளலாம். மணிமேகலைப் பிரசுரத்துக்குப் பெருமை சேர்க்கும் புத்தகம் இது.

**- பதிப்பகத்தார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| இதயச்சிறை | 7 |
| கனவும் நிறைவும் | 22 |
| ஆண்டி அல்ல | 35 |
| பூவைக்குள் பூகம்பம் | 46 |
| எதிர்பார்ப்புக்கு எதிர் | 54 |
| ஒரு தன்மானத்தின் தவிப்பு | 63 |
| சத்தங்கள் | 70 |
| அரும்பு தந்த திருப்பம் | 77 |
| உத்தியோகம் கிடைத்தது | 85 |
| காலந்தாழ்த்திய தெளிவு | 96 |
| ஊனமுற்ற மனம் | 105 |
| கொடுத்து வைத்தவன் | 115 |
| மாறியது நெஞ்சம் | 130 |
| செம்பிற் களிம்பு | 142 |
| வாயும் வயிறும் வேறு | 150 |
| காகித ஒடம் | 158 |
| உள்ளக்கிடக்கை | 165 |
| புதுவகை விருந்து | 176 |
| என் உரிமை | 183 |
| காலத்தின் கோலமா? | 188 |
| சமுதாய நீதிவான் | 195 |
| கிருகப்பிரவேசம் | 203 |
| தெளிவு | 208 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயச் சிறை

பல்கலைக்கழகத்திலிருந்து களைத்து வந்தவளை உபசரித்து, தேநீர் கொடுத்தாள் மகள் சாதனா. "படிப்பு... படிப்பு... படிப்பித்தல் என்றும் பல்கலைக் கழகம் என்றும் இருக்கிறீர்களே அம்மா! உங்களுக்கு எத்தனை வயதாகிறது, நானும் படிக்கிறேன் தானே! நீங்கள்தான் எப்போதும் புத்தகமும் கையுமாக இருக்கிறீர்கள்" என அன்புடன் கடிந்து கொண்டாள் சாதனா.

பேராசிரியை திருமதி. சுந்தரவதனியைப் பார்க்கும் போது அவரின் முகத்திலே அறிவின் ஒளி பிரகாசித்தது. வயது 38ஐத் தாண்டினாலும் கலையாத அழகும் சுறுசுறுப்பும் அவரது வயதைக் குறைத்துக் காட்டியது. இடையிடையே தலைமுடியில் ஓரிரண்டு வெள்ளிக் கம்பிகள் போல சில மயிர்கள் எட்டிப் பார்த்து அவரது வயதை உறுதி செய்து கொண்டிருந்தன.

"யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே, "யாழ்ப்பாணக் கடற்கரையின் பயன்பாடும் அதனை வளம்படுத்தும் முயற்சிகளும்" என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கு நடைபெறப்போவதை அறிந்து எல்லா மாணவர்களும் ஆவலுடன் அந்நாளை எதிர்பார்த்திருந்தனர். போர்ச் சூழலின் போது வளம் குன்றிப் போன கடற்கரையில் இருந்து பயனைப் பெற என்னென்ன செய்யவேண்டும்? என்பது பற்றிய உள்ளடக்கம் அக்கருத்தரங்கில் இருந்தது. இது பற்றி ஏறக்குறைய இரண்டு மாதங்களுக்கு முன்னரேயே நோட்டிஸ் போர்ட்டில் போடப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவியியற் பேராசிரியை திருமதி. சுந்தரவதனியே இந்தக் கருத்தரங்குக்கு ஒழுங்கு செய்து, அந்த வேலைகளை மும்முரமாகக் கவனித்தார். கொழும்பு, பேராதனை, இந்தியா போன்ற இடங்களிலிருந்து பேராசிரியர்களும், கலாநிதிகளும், விரிவுரையாளர்களும் வருகிறார்கள் என மாணவர்கள் அறிந்து சந்தோஷப்பட்டனர். குறிப்பிட்ட நாளும் வரவே கருத்தரங்கு காரசாரமாக, பலவகைக் கரகோஷங்களுடனும், கைதட்டல்களுடனும் நடைபெற்றது. இக்கருத்தரங்கு மாணவர்களுக்குப் பெரும் பயனளிப்பதாகவே அமைந்திருந்ததில் வியப்பில்லை.

பேராதனைப் பல்கலைக் கழகத்திலிருந்து கருத்தரங்கில் பங்குபெற்ற வந்திருந்த பேராசிரியர் சிவநாதன் "கருத்தரங்கில் பங்கு பற்ற வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்" எனக் கூறிக் கொண்டு சந்திரவதனியை நோக்கி வந்தார். பேராசிரியர் சிவநாதனுக்கு வயது 45 மட்டில் இருக்கும். அவரது எடுப்பான தோற்றம், நரையே இல்லாத தலைமுடி, கருத்தரங்கில் வாதிட்ட தன்மைகள் சந்திரவதனிக்குப் பெரிதும் பிடித்திருந்தன. அவர்கள் சிறிது நேரம் உரையாடி விட்டு அவர் தங்குவதற்கான ஏற்பாட்டை, தமக்குத் தெரிந்த நண்பர்கள் மூலம் செய்து கொடுத்தார் பேராசிரியை.

நான்கு நாட்கள் கருத்தரங்கு நடைபெற்றது. பேராசிரியையும் பேராசிரியர் சிவநாதனும் அறிவியல் ரீதியான பல விடயங்களை, நேரம் கிடைக்கும்போது இடையிடையே உரையாடி, தத்தம் ஐயங்களைத் தீர்த்துக் கொள்ளும் சந்தர்ப்பங்களும் ஏற்பட்டன. யாழ்ப்பாணக் கடற்கரை இப்போது போர்ச்சூழ்நிலைகளால் மாசுபட்டுக் காணப்படுகிறது. அவற்றை வளப்படுத்தினால் விலை மதிப்பற்ற கடல்படுதிரவியங்களைப் பெறமுடியும். இதனால் யாழ்ப்பாணக்குடா நாட்டின் வருமானத்தைப் பேண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்ற ரீதியிலேயே சந்திரவதனியின் உரையாடல்கள் அனைத்தும் இருந்தன.

திருமணமாகி இருபது வயது நிரம்பிய ஒரு மகனுக்குத் தந்தையாக விளங்கும் பேராசிரியர் சிவநாதன் சுந்தர வதனியின் பேச்சுத்திறத்தையும், அவரது விவேகத்தையும், மண்மீது கொண்ட பற்றையும் மனதுக்குள் பாராட்டினார். கட்டுக்குலையாத சந்திரவதனியின் அழகாலும் அவர் கவரப்பட்டார். வயது கடந்தாலும் சிறுபிள்ளை போல கூர்ந்து, கூர்ந்து கவனித்துக் கேள்வி கேட்கும் சந்திரவதனியின் முகபாவணையில் அவர் வசீகரிக்கப்பட்டாலும் அவரது வயது, பதவி பின்னணி என்பன அவரது நினைவுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தன. நாட்கள் தனது செட்டையை விரித்து பறக்கத் தொடங்கி ஆறு மாதங்களாகி விட்டன.

சந்திரவதனி தனது அலுவலக அறையிலிருந்து முக்கியமான விடயங்களைச் செய்து முடிப்பதற்காக, ஏதோ சில பல பைல்களைத் தட்டிக்கொண்டிருந்தார். மூக்குக் கண்ணாடியைச் சரி செய்துவிட்டு ஏதோ நினைத்தவராக எழுத முற்படும் போது "கிறிங், கிறிங் கிறிங்" என செல்போன் அலறியது. இந்த நேரத்தில் யார் இப்போது? என நினைத்தவளாக ரிசீவரை எடுத்து "ஹலோ... ஹலோ" என்றதும்... மறுமுனையிலிருந்து... "ஹலோ... நான் சிவநாதன் பேசுகிறேன்" எனக் குரல் வந்தது.

திடீரென... யார் இவர்? என அவளால் ஊகிக்க முடியவில்லை. மூளை நிரம்பிய வேலையில் இருந்தவளுக்கு... இந்த ஆண்குரல் யாருடையது? என ஊகித்து... "உங்கள் குரல் கேட்ட குரல் மாதிரி... ஆனால் மன்னிக்கவேணும்... யார் என்று அறியமுடியவில்லையே..." என்று கூற, "நான் சிவநாதன். ஏறக்குறைய ஆறு மாதங்களுக்கு முன் உங்கள் பல்கலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்குக்கு வந்திருந்தேனே. அதற்கிடையில் மறந்துவிட்டீர்கள் போலிருக்கிறது."

"ஓ... ஓ... பேராசிரியரா? எப்படி மறக்கமுடியும்? எத்தனையோ கோல்கள் வருகின்றன. அதுதான் இப்படி..." என தனது மறதியை வெளிக்காட்டாமல் சமாளித்தாள். "எப்படி விரிவுரைகள் எல்லாம் போகிறது? கருத்தரங்கில் முடிவெடுத்த விடயங்கள் எந்தளவில் இருக்கின்றன?"

"ஓரளவுக்கு அவற்றை நடைமுறையில் செயற்படுத்தி வருகின்றோம். ஆலோசனைகள் வழங்கி வருகின்றோம். உலகநாடுகளுக்கு பணஉதவி கேட்டு அறிக்கை விடுத்துள்ளோம். எல்லாம் திடீரென வருமா? கொஞ்சம் கொஞ்சமாக நிறைவேற்ற வேண்டும்."

வேறு ஏதும் கருத்தரங்கு மகா நாடுகள். விழாக்கள் என்று விஷேடமாக உங்கள் பல்கலைக் கழகத்தில் நடைபெறவில்லையா?"

சந்திரவதனி சிரித்துவிட்டு... "ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?"

கொழும்புப் பல்கலைக் கழகத்திலிருந்து நானும் அங்கு வரலாம் என்று தான். பலவிடயங்களை உரையாடலாம். யாழ் மண் என் பிறப்பு மண் அல்லவா? மற்றும் உங்களிடமிருந்தே நான் அதிக பாடங்களைக் கற்க முடியும். கற்கக் கூடியதாகவும் இருக்கின்றது. நீங்கள் ஒரு நடமாடும் நூல்நிலையம். அது தான்..."

"அப்படி எதுவும் இல்லை. ஆனால் எதிர்வரும் டிசம்பர் மாதம் "ஈழத்துச் சிறுகதைகளின் போக்கு" என்ற பொருளில் ஒரு கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. முடிந்தால் நீங்களும் வரலாம். வரும்போது உங்கள் பத்தினியையும் அழைத்து வந்து, எங்கள் வீட்டில் விருந்து உண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லவேண்டும்" என்று அன்புக் கட்டளை பிறப்பிப்பது போல் கூறினார், பேராசிரியை சந்திரவதனி.

"ஹலோ... ஹலோ! அதுவா? எப்படி?" என்று பேராசிரியர் சிவநாதனின் குரல் கரகரத்தது.

மறுமுனையில் சந்திரவதனி, "என்ன மௌனம் சாதிக்கிறீர்கள்? ஏதாவது தவறாகச் சொல்லிவிட்டேனா? ஐ ஆம் வெறி சொறி சோ."

"நோ... நோ... அப்படி ஒன்றும் தவறாக ஏதும் கேட்கவில்லை. உலகரீதியான, யாவர்க்கும் பொதுவான அழைப்பை விடுத்துள்ளீர்கள். நீங்கள் அழைத்துவரச் சொல்லிய என் அன்பு மனையாள் என்னைப் பிரிந்து போய் பத்து வருடங்களாகி விட்டன. தனிமையாகதான் இந்த மரம் இதுவரையும் இருக்கிறது."

"மன்னிக்க வேண்டும். உங்களைக் குழப்பிவிட்டேன். தனிப்பட்ட விடயத்தில் தலையிட்டு விட்டேன் என வேதனைப்படுகிறேன்."

"பரவாயில்லை... எவ்விறி திங்ஸ் ஆர் ஓ.கே. இதை உங்களுக்குத் தெரியப்படுத்தியதில் ஆறுதல் எனக்கு."

சேர்!... வரமுடிந்தால் நீங்கள் டிசம்பருக்கு வாருங்கள்!

ஓ.கே.

"ஓ.கே. குட்பை" எனக் கூறி, ரிசீவரை வைக்க மனமின்றி வைத்தார் பேராசிரியர் சிவநாதன்.

❖ ❖ ❖

"என்ன சாதனா? இப்படியே நாம் ஒருவரை ஒருவர் விரும்பி இப்பல்கலைக்கழகத்திலே இனி எத்தனை நாள் காத்திருப்பது. எமது படிப்பு முடிய இன்னும் ஒரு வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறது. சாதனா! இதை எண்ணும்போது மனதில் ஏக்கம் குடிகொள்கிறதே."

"பிரதீப்! இதே நிலைதான் எனக்கும். அதை நினைக்க நினைக்க எனக்குப் படிப்பே மனமில்லாமல் இருக்கிறது. எப்படிப் பரீட்சை எழுதப் போகிறேனோ தெரியாது. தன்னைப் போலவே நான் வரவேண்டும் என்று என் அம்மா அடிக்கடி சொல்லிக் கொண்டே இருக்கின்றார். அவரின் ஆசைகள், எதிர்பார்ப்புகள், திட்டங்கள், பெருமைகள் எல்லாம் என்னை மையமாகவே சூழ்ந்திருக்கின்றன. சுருக்கமாகச் சொன்னால் அவருக்கு எல்லாமே நான்தான், ஒரே ஒரு மகள். ஆசைக்குரிய பிள்ளையும் நான்தான். ஆஸ்திக்கான பிள்ளையும் நானேதான்..." என்று கூறிப்பெருமூச்சு விட்டாள் சாதனா.

பிரதீப் கேலியாகவே, "யார் அந்தத் திருவாட்டி? சந்திரவதனி அம்மையாரா?"

"உங்களுக்கு எந்நேரமும், எது சொன்னாலும் பகிடிதான். எனது அம்மா, தான், மனதார விரும்பியவருடன் கருத்தொருமித்துக் காலம் பூராவும் வாழ நினைத்தும், வாழமுடியாமல்... என்னையும் அம்மாவின் கருவறைக்குள் இருத்திவிட்டுச் சென்றுவிட்டார் தந்தை எனக் கூறப்படும், நான் உருவாகக் காரணமாகிய தந்தை என்னும் துரோகி. பிறப்பின் காரணமாக எனது பெயருக்கு முன்னால் வர வேண்டிய ஒரு பெயர் என்பதால் அவரது பெயர் எனக்குத் தெரியும். ஆனால் அந்த ஆளை நான் பார்த்ததே இல்லை. அம்மா மறைக்க முற்பட்டபோது அதுபற்றி அக்கறை இல்லாமலே, இதுபற்றி எதுவும் கேட்காமலே விட்டு விட்டேன். காரணம் நான் அம்மாவின் பழைய வாழ்க்கையைக் கேட்டு அவரின் நிம்மதியைக் குழப்ப விரும்பவில்லை. அம்மா தன் வைராக்கியத்தோடு படித்துப் "பேராசிரியை" பட்டம் பெற்றதோடு என்னையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுவிட்டார். அவரின் இரத்தம், வைராக்கியம் எனது உதிரத்திலும் ஓடுகின்றது. அதுதான் நான் நிறையப் படித்து, பாஸ் பண்ண வேண்டும். அதற்கிடையில் நீங்கள் குறுக்கிட்டு...?"

"அப்படி என்றால் நீர் என்னை மறந்து விடும். பிரச்சினை இல்லை."

"பிரதீப்! என்ன கூறுகிறீர்கள். அப்படிச் சொன்னால் பலித்து விடும்." என்பார்கள்" எனக் கோபித்துக் கூறினாள் சாதனா.

"நீர் அம்மா சந்திரவதனி பேராசிரியை போல, வந்தால் நான் ஏன் பேராசிரியர் சிவநாதன் போல வரக்கூடாது?"

"ஓகே... ஓகே... பிரதீப்! இது எங்கள் இலட்சியம். அதன் பின் தான் இல்லறம்!"

"ஓ.கே. சாதனா! நம் இலட்சியம் (பரீட்சை) முடியும் வரையும் எமது காதலை ஒத்திவைப்போம்."

"அதுவும் நல்லது. ஆனால் நேருக்கு நேர் எதிர்பாராமல் சந்தித்துக் கொண்டால் கதைகளைப் பரிமாறுவோம். அது விதி விலக்கு. சரிதானே பிரதீப்!"

"ஓ... சாதனா! அப்படியே ஆகட்டும் மகாராணி."

❖ ❖ ❖

"ஹலோ... ஹலோ! பேராசிரியை சந்திரவதனியோடு கதைக்கலாமா?" என்று கேட்ட சிவநாதனின் குரலோடு ரிசீவரைப் பேராசிரியையிடம் கொடுத்தார் பியோன் சுந்தரம்.. உடனே அவர்... "சந்திரவதனி கியர்" ஆ... நீங்களா?

ஹௌ ஆர் யூ? எப்படிச் சுகங்கள்? எப்படி இருக்கிறீர்கள்? என்ன திடீரென்று போனில்?"

"சுகத்துடன் இருப்பதாற்தான் இந்தப் புவியியல் டிப்பார்ட்மென்ரில் தலைவராக இருக்கிறேன்"

"நகைச்சுவையாகவும் புவியியல் பேராசிரியர்களுக்குப் பேசவும் தெரியுமோ?"

"வாழ்க்கையே நவரசங்கள் சேர்ந்தவைதான். அதில் ஒன்றுதான் இது.

உங்களுடன் தொலைபேசியில் அடிக்கடி தொந்தரவு கொடுத்து, உங்களையும், உங்கள் குடும்பப் பின்னணியையும் அறிந்த நண்பனாகிவிட்டேன். உங்கள் நண்பரிடம் இனி எதையும் மறைக்க வேண்டும் என்பதில்லையே.. என நான் நினைக்கிறேன்...?"

"நன்றி சேர்! உங்கள் அக்கறைக்கும், நட்புக்கும் நன்றிகள்."

"நீங்கள் இளமையின் பருவவலையில் சிக்குப்பட்டு, சமுதாயத்தின் தீர்ப்புக்கு அஞ்சி, இளமையைப் புதைத்து, திருமணம் புரியாமல் இன்றுவரையும் இருப்பது உங்களுக்குச் சரியாகத் தோன்றுகிறதா?"

"அப்படி இருந்தமையற்தான் இப்படி நான் இருக்கிறேன். சொல்லப்போனால் கணவன் என்றும் குடும்பம் என்றும் ஒரு வட்டம் போட்டுவிட, பிள்ளைகள் மாமி, மச்சாள் எனக்குடும்பத்தேர் பெரிதாகிவிட, நான் குடும்ப வாழ்க்கைக்குள்ளேயே முடங்கி வாழ்ந்திருப்பேன். அப்படி வாழ நேரிட்டால் இந்தச் சேவைத் துறையில், கற்பித்த நற்பணியில் முழுநேரவேலையாக ஈடுபட நேரம் கிடைத்திருக்கவே மாட்டாதல்லவா?"

"அதுவும் உண்மைதான். இப்போது உங்கள் இலட்சியங்கள் யாவும் நிறைவேறிவிட்டனவே. இனி என்ன தடை..?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள் சேர்?" என்று பதற்றத்தோடு கேட்கும்போது, பதினெட்டு வயதில் துளிர்த்த ஒரு வெட்கம் நாற்பதில் புதிதாகத் துளிர்க்கத் தொடங்கி மின்னி மின்னி மறைவது போல சந்திரவதனிக்கு இருந்தது. உடனே அவள் ஆச்சரியம் தாழாமல், "யாருக்கு கல்யாணம்? விளங்கவில்லையே. எனக்கா? திருமணமா? 'இவ்வளவு காலம் கடந்த பின்பா? பத்தொன்பது வயது மகளின் தாய்க்கா? என்ன புதிர் விடுகிறீர்கள்?"

"உங்கள் திருமணம் பற்றித்தான்.. பேச்சுக் கொடுத்தேன்.. அதுசரி... என்னை நீங்கள் சேர்.. சேர்... என்று மலைமேலே உயர்த்தி வைத்து அழைப்பது போல இருக்கின்றது. நாம் இருவரும் சமாந்தர நிலம்தான். அதாவது இருவரும் ஒரே அந்தஸ்தில்தானே இருக்கின்றோம். ஒரே பதவியிலும் இருக்கிறோமே. அவ்வாறு இருக்கும்போது ஏன் சேர் என்று என்னை அழைக்கின்றீர்கள்? சிவா! என்று கூப்பிட்டாலே போதும். அதைத்தான் நான் எதிர்பார்க்கிறேன், விரும்புகின்றேன்."

"ஆனால் வயதால் எனக்கு முன்னரே நீங்கள் இவ்வுலகுக்கு வந்துவிட்டீர்களே... அதற்கான மரியாதை வேண்டாமா? அதுதான்."

"பரவாயில்லை. நீங்கள் என்னைச் சிவா என்றே கூப்பிடலாம். அதனால் எனக்கு எதுவும் குறைத்துவிடப் போவதில்லை."

"நீங்கள் என்னைப் பார்த்து, வாருங்கள்! நீங்கள் என்ற மரியாதைப் பன்மையை எப்போது நிறுத்துகிறீர்களோ, அப்போதே நான் "சேர்" என்பதை விட்டுவிடுகிறேன்" என்று கூறிய சந்திரவதனி "நானா இப்படிக் கதைக்கிறேன்" என்ற ஒரு வெறுப்புடன் தன்னைக் கடிந்து கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் அடுத்தகிழமை மட்டில் யாழ்ப்பாணம் வருகின்றேன். உங்கள் வீட்டுக்கும் வர அனுமதி உண்டா?"

"ஓ... ஓ... தாராளமாக...!"

"ஓகே... குட்பை..."

ரிசீவரை வைத்துவிட்ட சந்திரவதனிக்கு மனதிலே என்னவென்று சொல்லமுடியாத, இனம் புரியாத உணர்வலைகள் பாய்ந்தன. 'இருபது வருடங்களாகப் பூட்டியிருந்த இதயக்கதவை இந்தப் பேராசிரியர் எப்படி வெகு சீக்கிரத்தில் உடைத்துவிட்டாரோ? எத்தனை விரிவுரையாளர்களோடு, பேராசிரியர்களோடு, சகபணியாளர் களோடு, நேருக்கு நேரான பார்வையோடு, துணிவாகப் பழகிய நான் இவரைக் கண்டதும் தடுமாற்றம் அடை கின்றேனே, நானா? இப்படிச் சபலப்படுகிறேன், இது என்ன? பொம்மலாட்டமா? நடக்கக்கூடிய விடயமா?' என சந்திரவதனியின் மனம் மத்தளம் அடித்தது.

அன்றிரவு தூக்கம் வராமல் மனப்போராட்டத்துடன் இருந்த சந்திரவதனி, அவர் கூறிய வார்த்தைகளை மீண்டும் மீண்டும் அசைபோட்டுப் பார்த்தாள். "ஒரே பதவியில் நாம் இருக்கிறோம், ஒருவருக்கு ஒருவர் நட்புடன் நெருங்கிப் பழகலாம்; இருவரும் கல்வி விடயங்களைக் கலந்துரையாட கதைக்க.. ஆராய வெறும் நட்புடன் இருந்தால் நல்லது. ஆனால் இந்தச் சமுதாயம் இடம் கொடுக்காது; தானே அதற்கு முடிச்சுப் போட்டு விடும். ஆதலினால் நாமே "திருமணம்" என்ற பந்தத்துக்குள்ளேயே இருந்து என்ன செய்தாலும்! இச்சமுதாயம் வாய்பொத்திவிடும். அதற்காகத் தான் சொல்கிறேன். திருமணம் என்ற போர்வையை நாம் போர்த்தபின்னர்தான் எமது ஆய்வுகள், அரங்குகளில் பங்கு பெறலாம்" என்று கூறிய வார்த்தைகளில் முழு உண்மை இருப்பதாக உணர்ந்தாள் சந்திரவதனி. நட்பாகப் பழகலாம்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன் மனைவியாக வாழலாம். ஆனால் "திருமணமான வர்கள்" என்று சமுதாயக் கண்ணுக்கு காட்ட வேண்டும். அல்லாவிடில் எங்கள் பட்டம், பதவி, ஆய்வு, கருத்துரைகள் எல்லாவற்றையும் சமுதாயம் சுக்கு நூறாகக் கிழித்து, சாக்கடையில் போட்டுவிடும், என எண்ணியவளாக "திருமணம்" செய்வதற்கு நான் சம்மதம்" என்பதை அவள் வாயாற் சொல்லக் கூசினாள். எனவே ஒரு கடிதத்தில் எழுதி, அவரிடம் ஒப்படைக்கவேண்டும், என்று நினைத்து அவ்வாறே எழுதி, ஒரு கவருக்குள் வைத்து, பின் தன் தலையணைக்கு கீழே பத்திரப்படுத்தி விட்டு ஆறுதலாக நிம்மதியான நித்திரையைத் தழுவியபோதும் மனம் அலைபாய்ந்து கொண்டே இருந்தது.

காலையில் எழும்பியதும் அவசர அவசரமாக குளியலறைக்குச் சென்றாள். கடிதத்தைப் பேராசிரியரிடம் ஒப்படைக்கவேண்டும் என்ற வேகத்தில் நேரத்துக்கே எழும்பி விட்டாள். வீட்டைச் சுத்தம் செய்து கொண்டிருந்த மகள் சாதனா, படுக்கையறையைச் சுத்தம் செய்யச் சென்றாள். தலையணை, படுக்கை விரிப்பு எல்லாவற்றையும் உதறி மடித்தபோது,... ஒட்டப்படாத கவருடன் கீழே விழுந்தது ஒரு கடிதம். உடனே அவள் அது.. தனது தாய்க்குத் தெரியாமல் தன் காதலன் பிரதீப்புக்கு எழுதிய கடிதமோ? என மனம் திடுக்கிட்டு... அம்மா அதைக் கண்டெடுத்து வாசித்துவிட்டு, தன் தலையணைக்கு கீழே வைத்திருக்கிறாளோ... எனப் பயந்தவளாக... திறந்து பார்த்தாள். அப்பாடா! நல்லகாலம்.. எனது கடிதம் இல்லை.. எனது எழுத்தும் இல்லை... அப்படியென்றால்.. இது அம்மாவின் கையெழுத்து என்று அவளுக்கு நிம்மதிப் பெருமூச்சு வந்தது.

பின் தன்னைச் சுவாதீனப்படுத்திக் கொண்டு... இது என்ன கடிதமாக இருக்கும்? அம்மாதானே... என்ன எழுதியிருக்கின்றா... நான் அவளின் மகள்தானே... பார்ப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியில்லை என்றாலும், அம்மாவின் கடிதத்தைப் பார்க்க முயன்றாள் சாதனா. கடிதத்தை வாசிக்கவேண்டும் என்ற அவா, மற்றவர் கடிதத்தைப் படிப்பது நாகரிகமில்லை என்ற பண்பை மறைத்தது. தாய் என்ற உரிமை மேலும் அவளைத் தூண்டியது. கடிதத்தை மெல்லத் திறந்தபோது..

"என் இதயச்சிறையை உடைத்த அன்பருக்கு!" என ஆரம்பித்து எழுதப்பட்டிருந்ததைத் தொடர்ந்து வாசித்தாள். அக்கடித முடிவில், சிவா! நீங்கள் சிவம். நான் சக்தி என எழுதியிருந்ததைப் பார்த்து, கவரில் எழுதப்பட்ட விலாசத்தையும் மலைப்புடன் பார்த்தாள். ஆ... அம்மா! அம்மாவா? என்னுடைய அன்பான அம்மா எழுதியிருக்கின்றாளா?... அப்படியாயின் சிவா...? யார்? பிரதீப்பின் அப்பாதான் சிவா... அவரின் விலாசம்தான் இது...

எனது பிரதீப்பின் அப்பா... ஓ... மை கோட்! நம்பமுடியவில்லையே. அப்படியென்றால் எங்கள் காதல் - திருமணம் - வாழ்க்கை? தலையைச் சுற்றுகிறதே. மை கோட்! என்ன சோதனை? நான் பிரதீப்பை மறக்க முடியுமா? அல்லது எனது காதலை வெளிப்படுத்தி அம்மாவின் விருப்பத்தை (காதலை) அழிப்பதா? நான் என்ன செய்வேன். ஆண்டவனே, எந்த முடிவை நான் எடுப்பது? எனத் "தொப்" என்று கட்டிலில் இருந்து விட்டாள். இந்தப் பிரச்சினையை யாரிடம் சொல்லித் தீர்வு காண்பது? எல்லோரிடமும் சொல்லக்கூடிய விடயமா? இது எமது குடும்பம் தொடர்பான விடயம்? மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் நான் தவிக்கின்றேன். கடவுளே! நான் அம்மாவின் விருப்பத்தை நிறைவேற்றுவதா? நான் சுயநலமாக என் வாழ்க்கையைத் தீர்மானிப்பதா? எனக்குப் புரியவில்லை.

நீண்ட நேர மனப்போராட்டத்தின் பின்னர் அவளது மனசாட்சி அவளைப் பார்த்துப் பரிதாபப்பட்டு... நீ ஏன் மூளையைக் குழப்பி வருந்துகிறாய்! உன் கவலையை நீக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. ஆனால் ஒன்றை யோசி! பின் தீர்மானமாக ஒரே முடிவாக எடுத்து உன்வாழ்க்கையைத் தீர்மானிக்க வேண்டும். உனக்கோ வயது பத்தொன்பது, நீ திருமணம் செய்ய, இன்னும் காலமும் வயதும் இருக்கிறது. உனக்கு எத்தனை மணமக்கள் வருவார்கள். விரும்பியவரையே மணக்கலாம். வாழ்க்கையின் முக்காற்பகுதி உனக்காகக் காத்திருக்கிறது. வசந்த காலச்சோலைப் பருவத்தில் பூத்த மலர் என இளமையொடு இருக்கின்றாய். உன் காதல் வேதனையை நீக்க முடியாது. அதை ஒரு பக்கம் வைத்து உன் அம்மாவின் விருப்பத்தையும் ஒரு கணம் யோசி!

உன் அம்மாவைப் பார்! இரண்டு மூன்று வருடங்கள் காதலின்பத்தை அனுபவித்து விட்டு இன்றுவரை மணமாகாத தாயாக, மரத்துப்போன மனத்துடன் வாழுகின்றார். பட்டமரத்தில் இருந்து சிறு தளிர் முளை கொள்வது போல இப்போது அம்மாவுக்கு துணைதேடும் தளிர் வந்துள்ளது. இதை நீ உன் சுயநலத்துக்காக அழித்தால் அம்மாவின் பிற்கால வாழ்க்கையையும் யோசித்துப் பார்! இப்படியே ஒண்டிக் கட்டையாக அம்மா வாழ்வதா? அல்லது அம்மாவைக் குடும்பப் பெண் கோலத்தில் தாலியோடு பார்க்கப் போகிறாயா? எது வேண்டும்? என்று மனச்சாட்சி கேட்டது. இரண்டையும் மனத்தராசிலே போட்டு நிறுத்தினாள் மகள் சாதனா. இதுவரை காலமும் என் அம்மாவைத் தாலி கூறையோடு நான் பார்த்ததில்லையே. மற்றவர்களின் சம்பிரதாயச் சடங்குகளிலும் அம்மா முன்னின்றதில்லை. இனியாவது நான் அதைப் பார்க்கவேண்டும்.

குடும்பப் பெண்ணாக என் தாயைப் பார்க்க வேண்டும், என்று எண்ணியவளாய் மனத்தராசைப் பார்த்த போது, குடும்பப் பெண்ணாகத் தாயைப் பார்க்க வேண்டும் என்று எண்ணிய தராசுத்தட்டு பாரத்துடன் தாழ்ந்தது. இதை நானே முன்னின்று நடத்தவேண்டும் என்று உறுதியான முடிவு எடுத்தாள் அந்தப் புரட்சிப் பெண் சாதனா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது துன்பங்களையும், இழப்பையும், காதற்பிரிவு தரும் வேதனைகளையும் முண்டி விழுங்கித் தனது இதயச்சிறைக்குள் அடைத்துப் பூட்டினாள். பிரதீப்பை... எவ்வாறு சமாளிப்பது. எப்படிச் சொல்வது. என்று எண்ணியவளாக உடனே பேனாவையும் பேப்பரையும் எடுத்தாள். மனக்கருத்தை பேப்பரில் பதிக்க எண்ணியவளாக..

அன்பினும் இனிய என்னுயிர் பிரதீப்!

நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்துவிட்டது. இவ்வளவு காலமும் எனக்குத் தெரியாமல் அது வளர்ந்துவிட்டது. எனக்காக என் வளர்ச்சிக்காக என் விருப்பங்களுக்காக... தன் விருப்பங்களைத் தியாகம் செய்த என் அம்மாவுக்கு, நான் செய்யும் கைம்மாறு என் காதலை அவருக்காகத் தியாகம் செய்து, அவருக்கே அதை அர்ப்பணிப்பதுதான் என முடிவு எடுத்துவிட்டேன். இந்தக் காதலின் கதாநாயகன், அதாவது அம்மாவின் இதயச்சிறையை உடைத்து மறு உருவம் வடிக்க முயலும் சிற்பி யார் தெரியுமா? உங்கள் தந்தை சிவநாதன் பேராசிரியர்தான். ஆச்சரியமாக இருக்கிறதா பிரதீப்! ஆனால் உண்மை. பிரதீப்! உங்களுக்கு ஒன்று தெரியுமா? பொதுவாகப் பிள்ளைகளின் காதலைப் பெற்றோர்கள் எதிர்த்துப் பிரிப்பதும், தற்கொலைக்குத் தள்ளிவிடுவதுமே இதுவரையும் நமது சமுதாயத்தில் கண்டு வருகின்றோம். இந்த முறைமையை நாம் உடைத்தால் என்ன? அதாவது பெற்றோரின் வயது வந்த காதலை, அவர்களின் பிள்ளைகளாகிய நாம் மனச்சந்தோஷமாக ஏற்று, எமது கவலைகள், கஸ்டங்களை மறைத்து அவர்கள் விரும்பியபடி வாழ வழி சமைப்போமா? பெற்றோர் பிள்ளைகளின் காதலை எதிர்ப்பது போல் நாம் நம் பெற்றோரின் காதலை எதிர்க்காது எமது உயர்ந்த பண்பை அவர்களுக்குக் காண்பிக்கவும் இதுதான் தருணம். எனவே எமது பெற்றோரின் விருப்பத்துக்குப் பச்சைக் கொடி காட்டுவோம். 'எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்கள் எம் மனச்சிறைக்குள் முடங்கிப் பொசுங்கட்டும்" எல்லாம் கனவாகக் கலைந்து பறந்துவிடவேண்டும். எமது தலையெழுத்து இப்படியாகப் போய்விட்டது. உங்கள் மனநிலையும் எனக்குப் புரியும்.

இந்நாடகத்தின் அடுத்த பாத்திரம் உங்கள் அன்பான தந்தை. எனவே இதற்கு எப்படியாயினும் உடன்படுவீர்கள்! என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு. எமது இன்ப துன்பங்களுக்காகத் தம் விருப்பு வெறுப்புகளைத் தியாகம் செய்யும் எமது பெற்றோருக்கு, அவர்கள் உயிரோடு இருக்கும்போது நாம் அவர்களின் காதலுக்கு நாம் அளிக்கு பரிசு எமது காதல். எம்மை ஈன்ற கடனுக்கு நாம் அளிக்கும் பிரதியுபகாரம் இதுவே என்பது என் முடிவு. பிரதீப்! சகோதரனாக வரப்போகும் நீங்கள், உங்கள் தங்கையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள் என நம்புகின்றேன். உங்களைத் திருமணம் செய்யும் பாக்கியம் இல்லாவிட்டாலும் சகோதரன் என்ற பாசத்துடன் என்றும் என் அன்பு உங்கள் மீது இருக்கும். சீக்கிரம் ஒரு அன்னியைத் தேடுங்கள்!

எல்லாவற்றையும் மறந்த புது உறவான உங்கள் தங்கை

சாதனா.

"மடமட" என கடிதத்தை முடித்து, கவருக்குள் வைத்து, ஒட்டி விட்டு, அன்றைய அஞ்சலில் சேர்ப்பித்தாள். மனத்தைக் கல்லாக்கியே கண்களில் நீர்வடிய, ஏதோ ஒரு பிரமை பிடித்தவள் போல, மனப்பாத்திரம் வெறுமையாகிட தனது கட்டிலில் துவண்டு உழன்ற சாதனாவுக்கு எதிர்காலம் ஒரு பூச்சியம் போலத் தோற்றம் அளித்தது. அவளது மனம் ஏதோ ஒன்றைப் பற்றிச் சுற்றித்தவிக்கும் தவிப்பு அவளுக்கும் ஆண்டவனுக்குமே வெளிச்சம்.

☆☆☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவும் நிறைவும்

**கா**லைக் கதிரவன் மெல்ல மெல்ல ஜன்னலின் திரைச்சீலையினூடே களவாக எட்டிப் பார்ப்பது போல், துயின்று கொண்டிருந்த நவியாவை எட்டிப் பார்த்தான். 'இன்னுமா நீர் எழும்பவில்லை?' என்று தனது ஒளிக்கற்றை களை அவளது முகத்திலும், கட்டிலிலும் பரவ விட்டான். சூரியனின் கதிர்த்தாக்குதலினாலும்... றிங்... றிங்... றிங்... ங்... ங்... என ஒலித்த மணிக்கூட்டின் "அலார்ம்" ஒலியினாலும் திடுக்கிட்டு விழித்தெழுந்த நவியா அவசர அவசரமாக எழுந்து பாத்ரூமுக்குள் போய்விட்டாள்.

இன்று பயிற்சி நெறிப் பாடசாலையில் இவளுக்கு 10.30 மணிக்குத்தான் பாடம் ஆரம்பம் என்று ஏற்கனவே தெரிந்திருந்தபடியால் இந்த நீண்டநேர நித்திரை நவியாவுக்கு. மேலதிகமாக அவளுக்குச் செல்லம் கொடுத்த அவளது தாய், 'இன்றைக்குத் தானே இப்படி நித்திரை கொள்கிறாள்... கொள்ளட்டுமே' எனப் பேசாது விட்டு விட்டாள். வயது வந்த பெண் நவியா என்று தெரிந்திருந்தும் அவளது விருப்பத்திற்கு மாறாகத் தாய் நடப்பதில்லை. நவியா தனது இரண்டு தம்பிகளுடன், பெற்றோர்களுடன்.. ஜேர்மனிக்கு வந்து ஆறுவருடங்களைத் தாண்டிக் கொண்டிருக்கின்றன. பிறந்த மண்ணை மறந்தும், மறக்காமலும் அவளது பெற்றோர்கள் தமது வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருந்தனர்.

நவியா இங்கு வந்ததும் தான் தாயகத்தில் கற்ற வகுப்பிற்கு ஏற்ப இங்கு ஐந்தாம் வகுப்பில் சேர்ந்து கொண்டாள். ஆண்டுகள் உருண்டோட, இப்போது ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைப் பயிற்சி நெறி ஒன்றைக் கற்று வருகிறாள். படிப்பு-படிப்பு... என்றும் கதைப்புத்தகங்கள் என்றும் எப்போதும் புத்தகமும் கையுமாக, மேசையும் கதிரையுமாக இவள் இருப்பது வழக்கம். விளக்கம் புரியாத தாய் தந்தையர், 'அவள் விளக்கம் தெரிந்த பிள்ளை, நாங்கள் புத்திமதியோ, படி! படி! என்றோ சொல்லத்தேவை இல்லை' என அவள் போக்கிலேயே விட்டு விட்டனர். அந்தளவுக்கு ஜேர்மன் மொழி அறிவும் அப்பெற்றோர்க்கு இல்லையே.

நவியா பாடசாலைக்குத் தேவையான பொருட்கள். கொப்பிகள் என்று இவள் படிக்கும் காலத்திலிருந்தே தாயிடம் தொந்தரவு கொடுத்துப் பணம் மேலதிகமாக வேண்டி விடுவாள். இப்போதும் இதே நிலைதான். ஜேர்மன் பிள்ளைகள் போல இவளும் இருக்கவேண்டும். பசித்தால் ஏதாவது வேண்டிச் சாப்பிடட்டும், குடிக்கட்டும். மற்றப் பிள்ளைகள் சாப்பிடும்போது இவள் பார்த்துக் கொண்டு வாயூறக் கூடாது என்பதற்காகக் காசை மேலதிகமாகக் கொடுத்து விடுவதுதான் தனது கடமை என்று எண்ணி விடுவதோடு அவளது கடமை முடிந்ததாக எண்ணிவிடுவாள். அவள் அப்பாவோ அவள் பாடசாலைக்குப் போய் என்ன படிக்கிறாள்? ஏன் சில நாட்களில் நேரம் தாமதித்து வருகிறாள் என்பது பற்றி ஒன்றும் அக்கறை காட்டுவதே இல்லை.

ஜேர்மன் சிறுமிகள் மாதிரி வளர்க்க வேண்டும், அதாவது ஜேர்மனியப் பெண்ணைப் போல அவள் ஜாலியாக வாழவேண்டும், என்பது அப்பாவின் ஒரே ஆசை. ஒரேயொரு பெண்பிள்ளை என்றபடியால் அவள்மீது மேலதிக பிரியமாயிருந்தாள். சிறிது கட்டுப்பாட்டுடன் வளர்க்க வேண்டும் என தாய் விரும்பினாலும் அதற்கு அவளது கணவன் உடன்பட்டாற்தானே! பதினாறு வயதுப் பருவத்தில் உள்ள பிள்ளைகளை உடைய பெற்றோர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகு அவதானமாக அப்பிள்ளைகளை வளர்க்க வேண்டும். இது நன்மை தீமை தெரியாத யௌவனப் பருவம். இப் பருவத்தில் உள்ள பிள்ளைகளை வெகு கண்காணிப்புடன், பொறுப்புணர்ச்சியுடன், கூடிய அக்கரையுடன் அவர்களின் நடை, உடை, பாவனையை நோட்டமிடுதல் அவசியம். இவை எல்லாவற்றையும் அந்தப் பெற்றோர்கள் உணர நியாய மில்லை. காரணம் வெளிநாட்டு மோகம், வெளிநாட்டுப் போலிகள் அவர்கள். ஜேர்மனியில் வாழ்கிறோம். அவர்களைப்போல் நமக்கு என்ன தடை? என்பது போல் வாழ்ந்து வந்தது அந்தக் குடும்பம். அதற்கு இன்னொரு முக்கிய காரணம் அவர்கள் இங்கு நீண்ட காலம் வாழலாம் என ஜேர்மனிய அரசு கொடுத்த ஒரு உறுதிப்பத்திரம். (வாழ்விட அனுமதி) இதை வைத்துத்தான் இந்தக் கோலங்கள்.

நவியா இளமை பொங்க பதினாறு வயதின் இறுதிக் கட்டத்தில் நிற்கிறாள். அவளது மாநிறம், அலங்கரிப்பு, நடையுடை பாவனை, யாவும் ஒரு ஜேர்மனியப் பெண்ணின் சாயலைத்தான் நினைவூட்டும். அதாவது ஜேர்மனியப் பருவமங்கைகள் போலவே அவள் வாழநினைத்தாள். ஜேர்மன் மொழியும் அவள் சரளமாகப் பேசுவாள். சுருக்கமாகச் சொன்னால் அவளது மேனியின் தோல்நிறம் தான் ஒரு ஆசிய மங்கை எனப் பறை சாற்றியது.

"நவியா!.... என்ன பிள்ளை செய்கிறாய்? வகுப்பிற்கு இன்னும் வெளிக்கிடவில்லையா?" சமையலறையில் இருந்து அவளுக்கு சாப்பாடு கட்டிக் கொண்டே தாய் கேட்டாள்.

"ஓம்... அம்மா, நான் இண்டைக்குப் போகவில்லை. அம்மா! நான் போக முடியாது."

"ஏன்?... இண்டைக்குப் போகவில்லை... ஏன் போகமாட்டேன் என அடம்பிடிக்கின்றாய்? ஏன் செல்லம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம் மாறிவிட்டது? என்ன? என்று சொன்னாற்தானே எனக்கு விளங்கும். என்ன மகளே! சொல் மகளே!"

"அம்மா... நான் வாங்கவேண்டும் என்று சொன்ன கிளிப்பும், கியூடெக்ஸ்ம், மினிப்பாவாடையும் வாங்க வேண்டும். காசு தாங்கோ"

"நான் அடுத்த கிழமை வாங்கித் தாறேன். ராசாத்தி! இண்டைக்குப் போயிற்று வா! காசும் இப்ப இல்லை."

"அம்மா! இண்டைக்கு வேணும். லைட் பில் (Light bill) கட்ட வேணும் என்று வைத்திருக்கின்ற காசில் 100 மார்க்கைத் தாங்கோ. பிறகு லைட் பில் கட்டலாம். அம்மா!... அம்மா" என அழாத குறையாகக் கெஞ்சினாள் நவியா.

"இதென்னடா! விடியற்காலையில் கரைச்சல் கொடுக்கின்றாய்! பெரிய தொல்லை... இந்தா பிடி! காசு... கிளிப்பை, கியூடெக்ஸை வாங்கு."

"தாங்ஸ்! அம்மா!" என்று கூறிக்கொண்டு புத்தகப்பையையும் தோளில் போட்டுக் கொண்டு புறப்பட்டாள். தனது எண்ணங்கள் நிறைவேறி விட்டது என்ற பெருமை குடிகொண்டதே தவிர, தானே தன்னை ஏமாற்றிக் கொள்கிறேன் என்பதை உணர அவளுக்கு அறிவு வளரவில்லை. வெளிநாட்டு நாகரிக மோகம் நவியாவின் அறிவுக்கண்ணை மறைத்தது.

நவியா தனது வகுப்பு முடிந்ததும் தனது நண்பிகளுடன், நண்பர்களுடன் கிளிப்பு, கியூடெக்ஸ் பிளாஸ்ரிக் தோடு, மாலைகள் என்று வாங்கிவிட்டு, மிகுதிப்பணத்தில் தனது வேறு நண்பர்களுடன் தொலைபேசியில் ஏதேதோ கதைத்து முடித்தாள். வழமையை விட இன்று நேரம் தாமதித்தே வீட்டிற்குச் சென்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிலே பெற்றோர்கள் நவியா வந்து சேர்ந்த நேரத்தையும் பொருட்படுத்தாமல் "காதல் படுத்தும் பாடு" என்ற சினிமாப் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர். நவியா திடீரென தனது அறையுட் புகுந்து உடைகளை மாற்றி. முகம் கை கால் கழுவி வரவேற்பறைக்குள் வந்தபோது தான், தாய் நேரத்தைக் கவனித்து மாலை ஆறு மணியாகிவிட்டது என உணர்ந்து கொண்டாள். உடனே தாய் நவியாவைப் பார்த்து, "என்ன இண்டைக்கு லேட்டாக வந்திருக்கிறாய்?"

"அம்மா! இண்டைக்கு கடைசிப்பாடம். கலந்துரை யாடல் வகுப்பு... அதாவது "டிஸ்கஸிங் கிளாஸ்" அம்மா! உங்களுக்கு அது விளங்காது. அதுதான் நேரம் சென்று விட்டது." எனப் பற்பல பொய்களை வலித்து இழுத்துப் பெற்ற மனதை மௌனமாக்கிவிட்டாள்.

"சரி... சரி... கனநேரம் படித்து, மூளையும் களைத்து, நீயும் களைத்து வந்திருக்கிறாய். முகம் எல்லாம் காய்ந்து போயிருக்கிறது. உடம்பு கெட்டுப் போய்விடும். போய்ச் சாப்பிடு பிள்ளை! நீயும் இந்தப் படம் பார்க்கவில்லையா? கெதியாக வா! உனக்காக நாங்கள் மீண்டும் முதலில் இருந்து ரிவைன் (Rewind) பண்ணிப் பார்ப்போம். நல்ல படம். நீயும் பார்க்கலாம்."

"ஓம் அப்பா! நானும் இந்தா வந்துவிடுகிறேன்" எனத்துள்ளிக் கொண்டு ஓடினாள் சமையலறைக்கு.

❖ ❖ ❖

காலைச்சூரியக்கதிர் யன்னலினூடாக நவியாவின் முகத்தில் பட்டுத் தெறித்தன. அந்த இளஞ்சூடு மேலும் கதகதப்பூட்டவே போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு அயர்ந்து தூங்கினாள் நவியா. ஞாயிற்றுக்கிழமை என்றால் இவ்வாறு நீண்ட துயில் கொள்வது நவியாவுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கமாகப் போய்விட்டது. தாயும் அதற்கு அனுமதி யளித்தாள். காலை பத்துமணிவரை நித்திரை செய்துவிட்டு, காலைக்கடன்களை முடிக்காமலே தனது அறைக்குள்ளிருந்து ஏதோ புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்தாள்.

"பெட் காப்பி" கொண்டு வந்த தாய், அதைப் பார்த்துவிட்டு,

"நவியா! நீ படியம்மா!.. நான் வீட்டு வேலைகளையும், சுத்தம் செய்யும் வேலைகளையும், செய்கிறேன். வீட்டுப் பாடங்களை ஒழுங்காகச் செய் கண்ணே! என்ர பிள்ளை. இந்த ஜேர்மன் மொழியை எவ்வளவு கஸ்டப்பட்டு, விளங்கிப் படிக்கிறாள். எங்களுக்கு என்றால் ஜேர்மன் சொற்கள் வாய்க்குள் வர பல் உடைந்து, நாக்கும் வளைந்து போய்விடுகிறது. என்ன மாதிரி இந்த மொழியை என் பிள்ளை பிக் அப் பண்ணி விடுகிறாள், கெட்டிக்காரி... மூளைக்குச் சரியான வேலை அல்லவா?" என பச்சதாபப்பட்டு விடும் தாய் மனம். ஆனால் அவள் என்னென்ன புத்தகம்? எவ்வகையான புத்தகம்? படிக்கிறாள் எனத் தாய்க்கு விளங்குமா?

வீட்டில் சகல வேலைகளையும் தாய்தான் ஓடியாடிச் செய்வாள். வயது வந்த பிள்ளையாக நவியா இருந்தாலும், அவள் படிக்கின்ற பிள்ளை- அவளைக் குழப்பக் கூடாது; என்று விட்டு விடுவாள். நவியா டொச் கதைப்பதைப் பார்த்து, தாய் பிரமித்து நிற்பாள். அத்துடன் ஆண்கள், பெண்கள் என்றும் பாடசாலை நண்பர்கள் அவளைத் தேடி வீட்டுக்கு வருவதைப் பெருமையாக நினைப்பாள். ஜேர்மன் மங்கை போன்ற நவியாவின் பழக்க வழக்கங்கள், மற்ற ஜேர்மன் பிள்ளைகள் இவளையும் தம்முடன் இணைத்து நட்புக் கொண்டாடுவது, தங்கள் வீட்டுக்கும் இவளை அழைப்பது என்பவற்றை எல்லாம் அப்பா பார்த்து, தன் முயற்சி வெற்றி பெற்றது போல் பூரிப்பில் களிப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவும் அதற்கு ஒத்தூதி சாடிக்கேற்ற மூடியாக வார்கின்றாள்.

ஆண் பிள்ளைகளின் படிப்புப் பற்றிப் பரவாயில்லை. ஏதோ என்றாலும் படிக்கட்டும். இல்லாவிட்டாலும் வேறு எந்த வேலைகளையும் அவர்கள் செய்யலாம். ஆனால் நவியா பெண்பிள்ளை. அவளை நன்றாகப் படிப்பிக்க வேண்டும். உயர்ந்த பதவி வகிக்க வேண்டும் என்பது பெற்றோரின் ஆசை.

நாட்கள் நகர்ந்தன... நகர்ந்துகொண்டே இருக்கின்றன...

❖ ❖ ❖

"றிங்... றிங்.. றிங்.. ங்..." என வீட்டின் அழைப்பு மணி ஓசை கேட்கவே, நவியாவின் அம்மா லட்சுமி கதவைத் திறந்து -

"வாங்க! வாங்க!... கனநாளைக்குப் பிறகு... திடீரென இந்தப் பக்கம்? இப்போதுதான் எங்கள் ஞாபகம் வந்ததோ?" என்று உரிமையோடும், புன்சிரிப்போடும் வரவேற்றாள் தனது மைத்துனியை.

"அண்ணி! நவியா எங்கே? அண்ணன் எங்கே?" எனக் கேட்டாள் மைத்துனி, நவியாவின் தந்தை சகோதரி மீனாட்சி.

"இங்கு சிங்கப்பூர் நகைகள் மலிவாக விற்கிறார்கள் என்று கேள்விப்பட்டோம். அத்தோடு உங்களையும் பார்த்து விட்டுப் போகலாம் என்று இருந்தாற் போல திடீரென ஐடியா வந்து வெளிக்கிட்டு வந்துவிட்டோம். என் அண்ணன் வீடு தானே. எதற்கு முன்னறிவிப்புக் கொடுக்க வேண்டும்? என எமது வருகையைத் தொலைபேசியில் கதைக்காமல் விட்டு விட்டேன்.. எங்கே? பிள்ளைகள் ஒருவரையும் காணவில்லை. இண்டைக்கு லீவு நாள் அல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையும் இல்லை... எங்கே போய்விட்டார்கள்? அவர்களையும் நீண்டநாளாகக் காணவில்லை... அதுதான்..."

"ஓ... ஓ... இன்று பாடசாலை லீவு நாள்தான். பொடியன்கள் இங்கால பார்க்கில விளையாடப் போய்விட்டார்கள். காலையில் போனவர்கள்... 4.00 மணியாகியும் இன்றும் வரவில்லை... இப்ப வந்து விடுவார்கள் "எனச் சமாளித்தாள் லட்சுமி. "அதோட... நவியா தன் சிநேகிதி வீட்டுக்குப் போய்விட்டு வாறேன் என்று காலையில் போனவள்."

"அவள் வருவாள்... வருவாள்... என்று பார்த்தால் அவளின் டெலிபோன்தான் வந்தது.

"இப்ப சற்றுநேரத்திற்கு முன்புதான் நவியா டெலிபோன் எடுத்து, நாளைக்கு காலை வருகிறேன் என்று சொன்னாள். இரவு சிநேகிதி வீட்டில் தங்கப்போகிறாளாம். நானும் "ஓம்" என்று அவளின் ஆசைக்கு விட்டுவிட்டேன். ஜேர்மன்காரரர் வீட்டில் எங்கள் கறுப்புத்தோலுக்கு தங்க அனுமதி கிடைப்பது என்றால் சொல்லவா வேண்டும்? ஜேர்மன் பிள்ளைகளுடன் பழகினால், படிப்பில் உள்ள சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ள அவளுக்கு வசதியாக இருக்கும். ஜேர்மன்மொழியை மேலும் அதிகம் கற்றுக் கொள்ளலாம். நல்ல பழக்கவழக்கங்களையும் அவர்களிட மிருந்து பழகுவாள் என்று நான் அனுமதி கொடுத்துள்ளேன். வளர்ந்த பிள்ளைகளுக்கு கட்டுப்பாடு போடுவது ஒரு அவமதிப்பு என்று இங்கு வாழும் உங்களுக்குத் தெரியும் தானே!"

"ஓ... லட்சுமி! அப்படியா விடயம்? என்ன நல்ல பழக்கமா? எங்களிடம் இல்லாத எந்த நல்ல பழக்கத்தை ஜேர்மன்காரரிடமிருந்து உன் மகள் பழகப் போகிறாள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு ஒன்றும் புரியவில்லை. எங்கள் உறவுகள், பழக்கங்களை விடவா? உயர்ந்த பழக்கம். அதுவும் இந்த ஜேர்மன் நாட்டிலா?" என கோபத்துடன் நவியாவின் மாமியாரின் வார்த்தைகள் படபடத்தன. "அண்ணனும் சேர்ந்துதான் இப்படிப் பெண்பிள்ளையை வளர்க்கிறாரா? ஜேர்மனியில் குடியுரிமை கிடைத்தாற்போல ஜேர்மன்காரர் மாதிரியே வாழவேண்டும் என ஒற்றைக்காலில் நிற்கிறீர்களே. அதற்காக என்னென்னவோ செய்கிறீர்கள்? எப்படி எல்லாம் செலவு செய்கிறீர்கள்? எல்லாம் செய்து பார்க்கிறீர்கள்! உங்கள் நிறத்தை எப்படி ஜேர்மன்காரர் மாதிரி வெள்ளை நிறத்தோலாக மாற்றுவீர்கள்? எனக்கு தலையைச் சுற்றுகிறது" எனக் கூறிக்கொண்டு அருகில் இருந்த கதிரையில் அமர்ந்துவிட்டாள்.

மீனாட்சி சிறிது நேரம் அசையாது இருந்துவிட்டு, ஏதோ யோசனை வந்ததுபோல், அண்ணன் வீடு, மருமகள் என்ற இரத்த பாசத்துடன், உரிமையோடு, வீட்டை நோட்டமிட்டாள். ஜேர்மனிய வீடுபோல் அலங்கரிப்புச் செய்யப்பட்டிருந்தது. விலையுயர்ந்த தளவாடங்கள், பொருட்கள் யாவும் கண்ணைப் பறித்தன. பார்ப்பதற்கு அழகாகத் தோற்றமளித்த வீட்டு அலங்காரங்களைக் கண்டதும் மீனாட்சிக்குப் பொறாமையும், ஒரு வெறுப்பும் வந்தது. ஏனெனில் இப்படி காசைக் கொட்டிச் செலவு செய்பவர்கள் தாய்நாட்டிலுள்ள எமது அகதிகளுக்கு ஏதாவது ஒரு பங்களிப்புச் செய்கிறார்களா? இல்லையே. அப்படிப்பட்டவர்களின் வீடுகளில்...? அண்ணன் வீடாக இருந்தாலும் அவளது பாதங்கள் கூசின.

நவியாவின் மேல் தனிப்பற்று வைத்திருந்த மீனாட்சிக்கு ஏதோ ஒன்றைப் பறிகொடுத்தது போன்ற உணர்வு ஏற்பட்டது. மெல்ல மெல்ல... யோசனையுடன் அந்த வீட்டில் உலவிவரும்போது, நவியாவின் அறையையும் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் போலிருந்தது. உரிமையோடு எவருடையை அனுமதியையும் எதிர்பார்க்காது நவியாவின் அறைக்குள் நுழைந்தாள். நான்கு சுவர்களிலும் பாடகர்களின் பெரிய போஸ்டர் படங்கள், கார்ட்டூன் படங்கள், big brothers படங்கள், Titanic கப்பலில் உள்ள காதலரின் ஸ்ரில் போட்டோ.. என்பன ஒட்டப்பட்டிருந்தன. ஒரு மூலையில் ரேடியோவும், ஜேர்மன் மொழியிலுள்ள ஒலிநாடாக்களும், தேடுவாரற்றுக் கிடப்பது போல் பரவிக்கிடந்தன. ஜீன்ஸ் உடுப்புகள் போட்டுக் கழற்றியபடியே கட்டிலிலே அலங்கோலமாகக் கிடந்தன. அலமாரி நிறைய உள்ள மற்றைய உடைகள் பத்துப்பேருக்குப் போதுமான அளவில், அளவுக்கு அதிகமான தொகையில் இருந்தன. ஒரு தமிழ்மங்கை இந்த அறையில் இருப்பதற்கு அறிகுறியாக ஒரு பொருளும் அங்கு இருக்கவில்லை. பஞ்சாபி, சேலை, பொட்டு, குங்குமம்.. என எதுவித பொருட்களும் அங்கிருக்கவில்லை.

ஒழுங்கின்றிப் பரவிக்கிடந்த உடுப்புகளைக் கதிரையிலாவது தூக்கிப்போட வேண்டும் போல் மீனாட்சி மனமும் தசையும் ஆடியது. தானாடாவிட்டாலும் தசையாடும் என்பது போல் நவியாவின் உடைகள் நவியாபோல் இருக்கவே அவ்வுடைகளைத் தொட்டு எடுத்துக் கதிரையில் போட்டாள். கதவின் மூலையில் ஒதுக்கமாக இருந்த புத்தக அலமாரிக்குள் பல புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. எல்லாம் ஜேர்மன் மொழிப் புத்தகங்கள். ஒரு சில ஆங்கிலப் புத்தகங்கள்.

தமிழ் அரிச்சுவடியின் அடிச்சுவடு எதுவேனும் அங்கிருக்கவில்லை. அந்த அலமாரியின் அடித்தட்டுப் பகுதியில் அசிங்கமான படங்களுடன் "வயது வந்தவர்கள் பாவனைக்கு" என மட்டுப்படுத்தப் பட்ட புத்தகங்கள் வயது வந்த பெற்றோர்களுக்குக் காட்சி கொடுக்காமல் ஒளிந்து பதுங்கிக் கிடந்தன. அலமாரியின் இன்னொரு பகுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுசாதனப் பொருட்கள், விலையுயர்ந்த முகப் பூச்சு வகைகள் காணப்பட்டன. அதற்குப் பக்கத்தில் ஒரு தோற்பை காணப்பட்டது. அது என்னவாயிருக்கும் என மீனாட்சி நோட்டமிட்டாள். அதற்குள் மஞ்சள் வர்ணத்துடன் (Camel) ஒட்டகப்படம் பொறித்த ஒரு சிகரெட் பெட்டி இருந்தது. மீனாட்சி ஆச்சரியப்பட்டாள். இது ஏன் வந்தது? மருமகளின் வாழ்க்கையை இப்படி மண்ணாக்குகிறார்களே..! நான் என் மகனுக்குரியவள், மருமகள், என மனதில் கற்பனை தீட்டி இவ்வளவு காலமும் இருக்கிறேன். என மனதுக்குள் பெருமூச்சு விட்டு... மைத்துனியை, "லட்சுமி!... லட்சுமி!" என ஆக்ரோசத்துடன் கூச்சிலட்டாள். "லட்சுமி!" இங்கே வாங்கோ! இது என்ன அநியாயம்? இதை நீங்களா வாங்கிக் கொடுத்தீர்கள்? என் அண்ணனே என் அறிவுக்கும் அகவைக்கும் எட்டியவரையிலும், இதுநாள் வரையிலும் இன்னும் நான் காணவில்லை. சிகரெட் தொடாத என் அண்ணனின் மகளா? நம்ப முடியவில்லையே!" அப்போது மீனாட்சியின் பலத்த சத்தம் கேட்டு அங்கே வந்த நவியாவின் தந்தை சற்று அதிர்ச்சியடைந்தவர்போல் காணப்பட்டார். அதிலிருந்த புத்தகங்களையும், சிகரெட் பெட்டியையும் அறைவாசலில் எடுத்து எறிந்தாள். "லட்சுமி இதோ பாருங்கள்! ஜேர்மனிய கறுப்புக்குடும்பமே பாருங்கள்! இவை என்ன? சொல்லுங்கள்!"

"நீங்கள் சொன்ன மாதிரி உங்கள் நவியா நல்ல பழக்கம் பழகவேண்டும். அதில் ஒன்றுதானே இவை. இதுவும் ஜேர்மன் பெண்களின் முக்கிய பழக்கங்களில் ஒன்று. அதுதான் நவியாவும் உடனே பின்பற்றி விட்டாள். உங்கள் விருப்பமும் அதுதானே! அண்ணே! உன்னை எனது சகோதரன் என்று சொல்லவே எனக்கு வெட்கமாக இருக்கின்றது. என் தந்தையின் இரத்தம்தான் உன் உடம்பில் ஓடுகிறதா? அல்லது ஜேர்மனியின் ஊட்டச்சத்துள்ள உணவுப்பதார்த்தங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊறிய இரத்தமா உன்னுடலில் ஓடுகின்றது? இப்படிப் பொறுப்பற்றுப் பிள்ளையை வளர்க்கிறாயே. தமிழர்கள் என்ற பெயருக்கும், தமிழ்க்கலாச்சாரத்துக்கும் ஒரு சாபக்கேடாக உன் சந்ததிகளை உருவாக்கி வருகிறாயே? ஜேர்மன் கலாச்சாரம், நல்ல பழக்கங்கள் என்று நீங்கள் எண்ணி மகளை கடைப்பிடிக்கச் சொன்னவை எல்லாம் இவைதானா? பிள்ளைகளைப் பெற்று, அவை போக்கில் விட அனுமதிப்பது விலங்கினம்தான். ஆனால் மனித இனம் தனது கட்டுப்பாட்டுக்குள் தம் பிள்ளைகளை வளர்க்க விரும்புகின்றது. நீங்கள் என்னவென்றால் பிள்ளைகளைப் பெற்றுவிட்டால் போதும் என்று நினைக்கிறவர்களில் ஒருவர்தான்.

"உங்கள் மகளின் அறைக்குள் இன்று சிகரெட் பெட்டி உரிமையுடன் இருந்தது. இன்னும் கொஞ்ச நாட்கள் போக கருத்தடை மாத்திரைப் பெட்டியும் அந்த அறைக்குள் நவியாவால் கொண்டுவரப்படும். நவியாவுக்கு அதுவும் இனித் தேவையான பொருட்களில் ஒன்றாகிவிடுவது விந்தை அல்ல. ஏனெனில் அதுவும் ஜேர்மன் இளம் பெண்களின் மிக முக்கிய பழக்கம் அல்லவா? அத்தோடு இங்குள்ள சில பாடசாலை களில் ஏதாவது சுற்றுப்பிரயாணம் செய்வதற்கு (ஆண்களும் பெண்களும்) மாணவமாணவிகள் சேர்ந்து செல்வார்கள். அப்போது மாணவிகளின் பாதுகாப்புக்கு முன்கூட்டியே கருத்தடை மாத்திரைகளையும் கொண்டுவரும்படி பாடசாலைச் சட்டம் அனுமதி கொடுத்து அங்கீகரிக்கின்றது என்பது உங்களுக்குத் தெரிந்த விடயம்தானே. எனவே நவியாவும் இந்தப் பழக்கத்தை மேற்கொள்ளத்தானே, நல்ல கலாச்சாரம், பழக்கவழக்கம் என்று ஜேர்மன் பிள்ளை களுடைய தொடர்பை விரும்பினீர்கள். அதன் பயன் மெல்ல மெல்ல வரும். இதுதானே உங்கள் கனவு. இது விரைவில் நிறைவேறும். சீ... சீ... சீ... கேடு... கெட்ட குடும்பங்கள்.

நவியாவைப் பாழாக்கிவிட்டீர்கள். எனது மகனுக்கு மனைவியாகக் கற்பனை பண்ணினேன். எல்லாம் மண்ணாய்ப் போச்சு!" என ஏசிவிட்டு,– "இனி நீங்கள் தமிழ்ப் பெற்றோரின் கலாச்சாரக் கட்டுப்பாட்டு மனத்தைத் தூக்கி எறிந்து விட்டு, ஜேர்மன் பெற்றோரின் மனத்தைப் போல உங்களை "எதுவும் பரவாயில்லை" என்ற மனநிலைக்கு மாற்றினால்தான் இங்கு நீங்கள் நிம்மதியாக வாழமுடியும். - இனி உங்களிடமிருந்து ஒரு பச்சைத் தண்ணியும் குடிக்கமாட்டேன், இன்றுடன் உங்கள் வாழ்க்கையை அறிந்துவிட்டேன்... ஏதோ உங்கள் வெளிநாட்டு மோகத்தின் பலாபலனை காலம் செல்ல உணர்வீர்கள். தமிழ்க்கலாச்சாரத்தின் தார்ப்பரியத்தை இழந்துவிட்டோம் எனக் கலங்கும் நாட்கள் வெகுதூரத்தில் இல்லை. நான் வருகிறேன்." என அகன்றாள்.

லட்சுமி வாயடைத்து நின்றாள்.

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டி அல்ல

ஊர்காவற்றுறை வைத்தியசாலைக் கட்டிடம் தீவுப்பகுதியின் மக்கள் பிணிபோக்கும் நடுநாயகமாகப் பெருமிதத்துடன் காட்சியளித்தது. நாலா பக்கமும் நிழல் மரங்கள் காலைச் சூரியனின் ஒளியிலே தரையில் வெள்ளிக் கோலங்கள் போட்டுக் கொண்டிருந்தன. காற்றின் அசைவோடு இவைசாகிய மரக்கிளைகள் கணத்துக்கு கணம் கோலங்களை மாற்றிக் கொண்டிருந்தன. சூரியனின் இளவெயில் உடம்புக்கும் உள்ளத்துக்கும் உற்சாகத்தைக் கொடுத்தது. காலை 8 மணி என்பதனால் மக்கள் வருவதும் போவதுமாக வைத்தியசாலை களைகட்டியிருந்தது. பார்வையாளர் நேரம் என்பதனால் நோயாளிகளைப் பார்வையிட விரும்புவோர் கையிற் பொருட்களுடனும் காலை உணவுகளுடனும் வைத்திய சாலையை நெருங்கிக் கொண்டிருந்தனர். வைத்தியசாலைக்குள் பணியாளர்கள், தாதிகள், கண்காணிகள், வைத்தியர்கள் ஆகியோர் தத்தம் பணிகளுக்குள் மூழ்கியிருந்தனர். நோயாளிகள் சிலர் காலைக் கதிரவனின் ரம்மியமான சூழலை இரசித்துக் கொண்டு வெளிவறாந்தைகளில் அமர்ந்திருந்தனர்.

அன்று நேரத்துடனேயே வைத்தியசாலைக்கு வந்திருந்த குமாரசாமி 215ம் இலக்க அறைக்கு முன்னால் பரபரத்த மனத்துடன் ஒரு இடத்தில் இருக்க மனமின்றி சுவர் ஒன்றை நோக்கி நடப்பதும், பின் பக்கத்தேயுள்ள தூணை நோக்கி நடப்பதுமாக இருந்தார். மணிக்கூட்டை அடிக்கடி பார்த்து, அந்தரச்சூழலில் காணப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் ஓடிக்கொண்டிருந்தது, வைத்தியசாலையிலும் ஆரவாரம் நிறைந்த வண்ணமே இருந்தது. குமாரசுவாமியின் மனமும் மணிக்கூட்டுக் கம்பி போல் "டிக் டிக், டிக்" என அடித்துக் கொண்டிருந்தது. அவருக்கு வயது ஐம்பது இருக்கும். ஆனால் தோற்றத்தைப் பார்த்தால் நாற்பது வயது என்றுதான் மதிப்பிடுவார்கள். எதற்கும் சளைக்காத மனம், உழைத்து உரமேறிய உடம்பு, நேர்மைக்குணம், இரக்க சிந்தை இவ்வளவும் அவரது பிறப்போடிணைந்த பொக்கிஷங்கள். இன்று ஏனோ குமாரசுவாமி மனத்தளம்பலுடன் காணப்படுகின்றார். அவரது சிந்தனை எதையோ ஒன்றை நோக்கிவட்டமிட்டுக் கொண்டிருக்கிறது.

"என்ன குமாரசுவாமி அண்ணை! விடியற்காலையில் ஆஸ்பத்திரி விறாந்தையில் ஒரு மாதிரியாக நிற்கிறீங்க? என்ன விடயம்?" என்று அவரது தூரத்து உறவினர் நாகநாதன் கேட்டார். மீண்டும் அவர் "உங்களுக்கு ஏதும் சுகமில்லையா? இங்கு 'அட்மிட்' பண்ணி இருக்கிறீர்களா? என்ன?" என்று அன்புரிமையுடன் நாகநாதன் கேட்டார்.

"இல்லை... இல்லை... நாகநாதா! கடவுள் கிருபையால் இந்தக்கட்டைக்கு ஒன்றும் வராது. ஏதோ எனக்கு நோய் என்று இன்றுவரை வந்ததில்லை."

"அப்படியென்றால் யார் இங்கு ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள்? ஆருக்காக காத்திருக்கிறீர்கள்?"

"அதையா கேட்கிறீர்கள்? அதோ அந்த 215ம் இலக்க அறையிலே என் மூத்த மகள் சிவானந்தி பிரசவ வலியால் துடித்துக் கொண்டிருக்கிறாள். சின்னவயதிலிருந்தே தாயில்லாமல் வளர்ந்த பிள்ளை... என் மனைவி உயிருடன் இருந்தால் அவள் மகள் பக்கத்தில் ஆறுதலாக ஆதரவாக இருந்திருப்பாள். அதற்கு நாங்கள் கொடுத்து வைக்காமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வளர்த்து வந்தேன்... ஆனால் இந்த நேரம்.. எனக்கு ஒரே பயமாகவும், யோசனையாகவும் இருக்கிறது.

"என்ன குமாரசுவாமி அண்ணை? இது எல்லாப் பெண்களுக்கும் சாதாரணமாக ஏற்படுகின்ற வலிதானே. இடுப்பு வலி வராமல் எந்தப் பெண் பிள்ளை பெற்றிருக்கிறாள்? அதுக்கு ஏன் மூளையைப் போட்டு அலட்டிக்கிறீங்க? பிரசவம் நல்லபடியாக நடக்கும். நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். டாக்டர்கள் எல்லோரும் கவனமாகப்பிரசவம் பார்ப்பார்கள். சும்மா கொஞ்ச நேரம் அந்தக் கதிரையிலே நிம்மதியாக இருங்கோ அண்ணை!"

"ஓம் நாகநாதன்! நீ சொல்வது எல்லாம் சரிதான். தெய்வசித்தம் அவளுக்கு ஒன்றும் வராது. பிரசவ வேதனையை எண்ணி, வருத்தப்படுவது ஒருபுறமிருக்க, இன்னொரு புறம் பிறக்கப்போகும் குழந்தையை எண்ணி நான் பதட்டப்பட்டேன்."

"பிறக்கப்போகும் குழந்தையைப் பற்றி என்ன பதட்டம்? தாயும் சேயும் ஆரோக்கியமாக இருந்தால் சரிதானே!"

"ஓ... ஓ... அப்படியே ஆகவேண்டும். எனக்கு வரும் பேரக்குழந்தை பெண்குழந்தையாகப் பிறக்கவேண்டும், பேரன் பிறக்கக்கூடாது என்றுதான் கடவுளை வேண்டிக் கொண்டிருக்கிறேன். கடவுளே! எனக்கு ஒரு பேத்தியைத் தந்துவிட வேணும்! தாய்க்கும் அதுதான் விருப்பம். ஆண் குழந்தையைக் கொடுக்காதே முருகா!" எனக் கூறிக் கொண்டிருக்கும் போது, இடைமறித்த நாகநாதன்... "என்ன? நீங்கள்.. இப்படி? எனக்கு ஒன்றும் விளங்கவில்லை... ஊரோடு ஒத்துப்போன எமது சமுதாய வழக்கத்துக்கு மாறாக நீங்கள் கதைக்கிறீர்கள். பொதுவாக எல்லோரும் தம் மூத்த குழந்தை, ஆண் குழந்தையாக இருக்க வேண்டும், அப்போதுதான் தமக்கு கௌரவம், பெருமை என்றும், ஆண்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தைக் காப்பாற்றுவான் என்றும் வாழையடி வாழையாக வளர்ந்த மரபை மறந்து பேசுவது போல் தெரிகிறது. பெண்குழந்தை என்றாலே கேவலம் என்று நினைக்கும் எமது சமுதாயத்தில் ஒருவராக நீங்களும் வாழ்ந்து கொண்டு இப்படிக் கூறுவது எனக்கு வியப்பாக இருக்கிறது."

"அப்படி என்ன வியப்பு நாகநாதன்? என் உண்மையான மன வெளிப்பாட்டை, எனது ஆதங்கத்தைத்தான் உமக்கு வெளிப்படுத்தினேன்... சமுதாயத்தைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை. சமுதாயத்துக்கு ஒரு சவாலாக நான் வாழவிரும்புகிறேன்."

"ஆ.. அம்மா... ஐயோ! அம்மா! ஆ.. ஆ.. கடவுளே!..." அலறல் ஒலி 215ம் இலக்க அறையிலிருந்து பலமாக ஒலித்தது. திடீரென அந்த அறையின் கதவருகே விரைந்தார் குமாரசுவாமி. அவ்வறையினுள்ளே இருந்து வாடிய முகத்துடன் வெளியே வந்த தாதி ஒருவித வெறுப்புடன் "உங்களுக்கு ஒரு பேர்த்தி பிறந்துள்ளாள். போய்ப்பாருங்கள்!" எனக் கூறிவிட்டு ஏதோ அலுவலாகச் சென்று விட்டாள். பெண் குழந்தை என்றதும் தாயின் முகத்திற்கூட ஏதோ ஒரு வெறுமை தோன்றி மறைந்ததைக் குமாரசுவாமி கவனிக்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

"கந்தா! கடம்பா! உனக்கு என் நன்றி! நீ என்னைக் கைவிட மாட்டாய் என்று எனக்குத்தெரியும்" என்று மலர்ந்த முகத்துடனே அந்த அறைக்குள் நுழைந்தார்.

சிவானந்தியோ வேதனையிலும் மகிழ்ச்சியுடன் புன்னகைத்து, "பேத்தி பிறந்திருக்கிறாள் அப்பா!" எனக் கூறவே தந்தையும் இரட்டிப்பு மகிழ்ச்சியடைந்தார். பின்னர் மகளைப் பார்த்து, "நீ ஓய்வு எடுத்துக் கொள்! நான் வீட்டுக்குப் போய் வருகிறேன்... மருமகனுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றையோருக்கும் இந்த மகிழ்ச்சியான செய்தியைக் கூறவேண்டும்," எனக் கூறி விடைபெற்றுக் கொண்டார்.

குமாரசுவாமி வைத்தியசாலையைத் தாண்டிச் செல்லும்போது மீண்டும் நாகநாதனைச் சந்தித்தார். "நாகநாதா! நான் கேட்டுக் கொண்டபடி எனக்குப் பேத்திதான் பிறந்துள்ளாள். எல்லோரும் 'சொக்லேட்' வாங்கிக் கொடுக்க வேண்டும். நான் போய்விட்டு வாறேன்..."

"நில்லுங்கள்! நில்லுங்கள்!! என்ன அவசரம்? சுகப்பிரசவம்தானே! பின்னேரம் வாங்கிக் கொடுத்து உங்கள் மகிழ்ச்சியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் தானே! உங்களுடன் ஏதோ ஒன்று கேட்கவேண்டும் என்று தொண்டைக்குள் வந்து சிக்கிக் கொண்டு நிற்கிறது. எப்படிக் கேட்கிறது? அல்லது இதைக் கேட்கலாமா? விட்டுவிடலாமா? என்று என் மனம் பின்னிற்கிறது. நான் இப்படிக் கேட்கிறேன் என்று குறை நினைக்க வேண்டாம்."

"என்ன நாகநாதா! புதிர் போடாமல் கேட்க விரும்பியதைக் கேள்! எனக்கு ஒன்றும் வராது. உன்னைத் தவறாகவும் எண்ண மாட்டேன்."

"இல்லை... பெரிதாக ஒன்றும் கேட்கவில்லை... உங்களுக்கே முன்பே ஐந்து பெண்பிள்ளைகள் இருக்கிறார்கள் என்று தெரியும். அவர்களில் மூவர் இப்போது குடியும் குடித்தனமுமாகச் சிறப்புடன் வாழ்கிறார்கள் என்றும் அறிந்துள்ளேன். ஆனால் இவர்களை வளர்த்து, ஆளாக்கிப் படிக்க வைத்து தனிமரமாக நின்று அவர்களுக்குப் பெரிய பெரிய இடங்களில் திருமணமும் செய்து வைத்துள்ளீர்கள். இவர்களை வளர்த்துக் கரை சேர்க்க என்ன பாடுபட்டிருப் பீர்கள்! அதைவிட இன்னும் இரண்டு பெண் பிள்ளைகள் திருமணத்துக்காகக் காத்திருக்கிறார்கள்... இந்த நிலைமையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் உங்கள் குடும்பத்திற்குப் பெண் பேரக்குழந்தையே வேண்டும் என்று, ஆசைப்பட்டு, ஆண்டவனிடம் அழுது அவ்வாறே பேத்தியும் கிடைத்து விட்டாள். என்ன ஆச்சரியம்? "ஐந்து பெண் உண்டானால் அரசனும் ஆண்டியாவான்" என்று தொன்றுதொட்டே எம்மிடத்தில் ஒரு பழமொழி வழங்கிவருகிறது. அதை எல்லாம் மீறி.. நீங்கள் செல்வம் செல்வாக்கோடு மட்டுமன்றி மனப்பூரிப்புடனும் வாழ்ந்து வருகிறீர்களே!"

"ஐந்து பெண் பிறந்தால் அரசனும் ஆண்டியாவான் என்பதெல்லாம் அந்தக் காலம். என்னைப் பொறுத்தவரையில் ஐந்து பெண்ணால் தான் ஐஸ்வரியக்காரனாக இருக்கின்றேன்." "என்ன சொல்கிறீர்கள்? ஐஸ்வரியக்காரனா?"

"உண்மையைத்தான் சொல்கிறேன். ஏதோ என்னிடம் உழைப்பும் திறமையும் இருந்தபடியால், என் தந்தை வழிவந்த நிலங்களை மூலதனமாகக் கொண்டு விவசாயத் தொழிலை மேற்கொண்டேன். வரும்படி பெருக நவீன பாணியில் விவசாயம் செய்யவே வருவாய் என்னைத் தேடி வந்தன. எனது பெண்களையும் படிப்பித்தேன். படிப்புத்தவிர்த்த நேரங்களில் அவர்களும் எனது தொழிலுக்கு உதவியாக இருந்தார்கள், காலம் தனது செட்டையை விரித்துக் கடுகதியில் பறக்க... எனது மூத்த மகளை ஆசிரியை ஆக்கிவிட்டேன். இரண்டாம் மகள் பவானந்தியும் ஆசிரியை ஆகிவிட்டாள். மூன்றாது மகள் வைத்தியராக கொழும்பில் வேலை பார்க்கிறாள். நாலாவது மகள் A/L உயர்வகுப்பு வரை படித்து விட்டு, எனக்கு உதவியாக, வீட்டு வேலைகளைக் கவனிக்க வேண்டும் என்று மேலே படிக்காமல் நின்றுவிட்டாள். ஐந்தாவது மகள் தேவானந்தி இப்போது "யூனிவசிற்றியில் என்ஜினியரிங் படித்துக் கொண்டிருக்கிறாள். எல்லோரையும் என்னால் இயன்றவரை படிப்பித்துள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களும் தமது திறமையால் படித்து ஒரு உன்னத நிலைக்கு வந்து விட்டார்கள். அதனால் எனக்கு பெண்கள் என்ற யோசனையும் இல்லை. தொந்தரவுகளும் இல்லை. அவர்களால் நான் கஸ்டப்பட்டதும் இல்லை. தலைகுனியவும் இல்லை. மாறாகத் தலை நிமிர்ந்துதான் நிற்கிறேன்" என்று கூறிய குமாரசுவாமி, "மேலும் ஒரு விடயம்..." என..." ஏதோ எனது அதிர்ஸ்டம் என்று தான் சொல்லவேண்டும். என் பெண் பிள்ளைகளுக்குச் சீதனம் என்று நான் கஸ்டப்பட்டுச் சேர்த்துக் கொடுக்கவும் இல்லை. என்னால் கொடுக்க முடிந்த சீதனம் அவர்களைப் படிப்பித்து விட்டதுதான். மூத்த மகள் சிவானந்தி படிப்பிக்கும் பாடசாலையிலே, படிப்பிக்கும் ஒரு ஆசிரியர் நேரில் என்னிடம் வந்து, சிவானந்தியைப் பெண் கேட்டார். நானும் அவர் பற்றி விசாரித்து, சிவானந்தியின் சம்மதத்துடனே திருமணத்தைச் செய்து வைத்தேன். அந்த ஆசிரியரோ எம்மிடம் சீதனம் ஒன்றையும் எதிர்பார்க்க வில்லை. இவ்வாறே மற்றைய இரு பெண்களுக்கும் திருமணம் எம் வீட்டையே நாடி வந்தது. இப்போது ஓரளவு சுமூகமாக முடிந்து எல்லோரும் சிறப்பாக வாழ்கிறார்கள். என் கண் குளிர அவர்களைப் பார்க்கிறேன். எனக்குத் தமது அன்பையும் அள்ளிக் கொட்டுகிறார்கள். இதைவிட எனக்கு வேறு சந்தோஷம் என்ன இருக்கிறது? எனவே எனக்கு எதுவித யோசனையும் இல்லை, பிரச்சினையும் இல்லை."

"ஆண்பிள்ளைகள் ஒன்றாவது இல்லையே! உங்கள் பெயர் சொல்ல ஒருவரும் இல்லையே... ஆண் பிள்ளை போல உதவிக்கு யாரும் இல்லையே என்று நீங்கள் யோசிப்ப தில்லையா?"

"அப்படி எனக்கு யோசனை எதுவும் இல்லை. ஏனென்றால் எனக்குத்தானே ஐந்து ஆண்கள் மருமக்கள் என்ற பெயரில் வரப்போகிறார்கள். அவர்களில் மூவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது வந்துவிட்டார்கள். மருமகன் என்பது என்னைப் பொறுத்தவரையில் "மருமகன்" ஆக, மற்றமகன் என்பதுபோல இருக்கிறார்களே."

"என்ன நீங்கள் சொல்லுகிறீர்கள்? மருமக்கள் எப்படி மகன்களாக வரமுடியும்? அண்ணே!"

"நாகநாதா! இந்தக் காலத்திலே நீ உண்மையைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உனக்கு ஒரு சங்கதி தெரியுமோ? நான்கு ஆண்பிள்ளை பெற்ற தியாகலிங்கத்தின் நிலைமை பற்றிக் கேள்விப்பட்டனீரே?"

"இல்லை... இல்லை... என்ன அவருக்கு இப்போ? ஒன்றும் தெரியாதே...!"

"தியாகலிங்கத்தின் குடும்பம் நல்லாத்தான் இருந்தது. நான்கு ஆண்பிள்ளைகள் என்று பெருமைப்பட்டுக் கொண்டிருந்தார். ஏதோ அவர்களை நன்கு படிப்பித்து விட்டவர்தான். அவர்களும் படித்து வேலை பார்த்து, நல்ல நிலையில் இருக்கும் போது, அவர் மனைவியுடன் புகழுடன் வாழ்ந்தார். பிறகு... பெரிய பெரிய இடம் என்று சீதனம் எக்கச்சக்கமாக வாங்கித் திருமணம் செய்து வைத்தார். காலம் செல்லச் செல்ல... நிலைமை மாறத் தொடங்கியது. சீதனம் வேண்டித் தம்மை விற்றுக் கொண்ட மாப்பிள்ளைகளை வாங்கிய பெண்வீட்டுக்காரர்கள் சும்மா விடுவார்களா? தம் பக்கத்துக்கே அவர்களை இழுத்துவிட்டார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தனிக்குடித்தனமாக, தத்தம் மனைவியரின் தலையணை மந்திரத்தில் மயங்கி வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள். இப்போதைய நிலையில் நீ இப்படியான உலகத்தைப் பார்! நூற்றுக்கு எண்பது வீதமானோர் திருமணமாகியவுடன் ஆண்கள் பெண்வழிச் சொந்தத் திலேயே அதாவது மனைவியின் பக்கத்தினரிலேயே அக்கறையுடன் இருக்கிறார்கள். தன் குடும்பச் சொந்தத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்ல மெல்ல மறந்து மனைவியின் குடும்ப உறவிலேயே சுற்றி நிற்கும் காலமாக மாறிவிட்டது. அதனால் ஆண்கள் என்று பிள்ளைகளைப் பெற்றும் அவர்கள் மனைவி வழிச் சார்பான சொந்தங்களை உருவாக்க முயலும்போது, தனது பிறப்பு வழிச் சொந்தத்தையும், நலனையும் சற்றுப் பின்தள்ளிவைக்க வேண்டிய நிலையில் உள்ளது. சிலவேளை மறக்கவேண்டியும் வருகின்றது. இந்நிலைக்கு தியாகலிங்கமும் தள்ளப்பட்டுவிட்டார். அவருடைய மக்கள் இடையிடையே வந்து குசலம் விசாரித்துவிட்டுப் போவார்கள். இப்படி இருக்கும்போது ஆண்பிள்ளைகளால் எமக்கு இறுதிக் காலத்தில் அன்பையும் ஆதரவையும் பெறமுடியும் என எதிர் பார்க்கிறீர்களா?... எல்லா ஆண்மக்களையும் நான் இப்படிக் கூறவில்லை. நான் என் அனுபவத்தில் கண்டவற்றையே, நான் அறிந்தவற்றையே கூறினேன். இவை எல்லாம் எனது சொந்த அபிப்ராயம். என் மனத்தில் உதித்தவை இவை.

"இன்னும் ஒன்று... என்னைப் பார்! எனக்கு ஐந்து பெண்கள்தான். ஐந்து பெண்களுக்கும் மருமகன்கள் ஐவர் வருவார்கள். இவர்கள் ஆரம்பத்தில் தாய் - தந்தை, சகோதரர்கள், என்ற பாசவலையிலிருந்து... காலம் செல்லச் செல்ல மனைவி - பிள்ளைகள் என்ற உறவுகளில் பாசம் ஒட்டிவிடுவது இயற்கையாகிவிடுகின்றது. அதாவது பாசம் இங்கே கை மாறிவிடுகிறது எனலாம். இவ்வாறு புதிதாக வந்த புது உறவுப் பாசத்தால் மனைவியைச் சேர்ந்த உறவுகளில் அக்கறை காட்டும்போது, அவர்களின் மனைவிமாரை மகள்களாகப் பெற்ற எனக்குப் புதிய உதவிகள், ஆதரவுகள், என ஐந்து வழிகளிலிருந்தும் வரப்போகின்றன. ஏன் வேறு உதாரணங்களுக்குப் போகவேண்டும்? என் கடைசி மகளின் "திருமணத்தை நான் பொறுப்பேற்று நடத்துவேன், என்னை யோசிக்க வேண்டாம் என்று அடிக்கடி எனது மூத்த மருமகன் சொல்லியுள்ளார். இது ஒருவகையில் "ஒரு மகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தைக்குச் சொல்லிய வாக்குறுதி போல்" இல்லையா? என்னைப் பொறுத்தவரையில், இன்றைய கால மாற்றமோ, என்னவோ? எங்கள் குடும்பத்தில் அக்கறையுள்ளவர்களாக வாழ்ந்து வருகிறார்கள். எங்களது குடும்பம் கூட்டுக் குடும்பமாக விரிந்துள்ளது. எனது பெண்கள் என்னில் உயிராக உள்ளார்கள். ஆண்பிள்ளைகளைவிட பெண் பிள்ளைகளுக்குத்தான் இரக்கமும் பாசமும் அதிகம் உண்டு. அது போலவே அவர்கள் என்மீது அன்பாக இருக்கிறார்கள். அவர்கள் என்னில் வைத்துள்ள அன்பையும் அக்கறையும் கண்டு மருமக்களும் எனக்காக இல்லாவிட்டாலும் தமது மனைவிமாருக்காகவாவது, என்னில் அக்கறையாக இருக்கிறார்கள். இப்போது நான் "இராசா" மாதிரி இருக்கிறேன். ஐந்து புதல்விகளைப் பெற்றெடுத்த திருப்தியையே என் மருமக்கள் எனக்குத் தருவார்கள்... தந்து கொண்டும் இருக்கிறார்கள். எனவேதான் நான் எனது பேரக்குழந்தையும் பெண்ணாக வரவேண்டும் என விரும்பினேன். அது ஆணாக இருந்தால் வயது வந்தவுடன் மனைவி வழிச் சென்றுவிடுவான்... பின் சிலவேளை தாய் தந்தையரை மறந்து வாழத் தொடங்கிவிடுவான்..."

"ஓம்... அண்ணை! நீங்கள் சொல்வதும் உண்மை போலத்தான் தெரியுது. நல்ல ஒரு உண்மையைக் கண்டு பிடித்துள்ளீர்கள். இந்தக் காலத்தில் பெண்பிள்ளைகளால் பிரச்சினை என்று நாம் எண்ணக்கூடாது. நாமே தான்" அது பிரச்சினை என்று எமக்குள்ளே உருவாக்கிக் கொள் கின்றோம். நாம்தான் பெண் குழந்தைகளைச் சுமையாகவும், கேவலமாகவும் கருதுகிறோம். ஆண் பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் சமம் என்ற எண்ணம் எம்மத்தியில் எப்போது உருவாகுமோ அப்போதுதான் எமது சமுதாயம் உருப்படும். எனவே ஆண்பிள்ளைகளையும், பெண்பிள்ளைகளையும் சமமாக எண்ணி வளர்க்க வேண்டும். இனி வருங்காலங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாவது இதைக் கடைப்பிடிக்கட்டும்" எனக் கூறி மேலும், ஏதோ கூற வாயெடுத்த போது...

"என்ன மாமா!... மாமா! குழந்தை பிறந்துவிட்டதா?" என்ற ஒரு கேள்வியை எதிர்பக்கத்திலிருந்து வந்து கொண்டிருந்த மருமகன் சுரேஷ் கேட்டார்.

"ஓம் தம்பி! பேத்தி பிறந்திருக்கிறாள்... தாயை உரித்து வைத்தாற்போல்... இருக்கிறாள்... போங்க! போங்க! போய்ப் பாருங்க!"

"நாகநாதன்! நானும் வருகிறேன். நேரம் போனதே தெரியாமல் கதைத்துக் கொண்டு நின்றுவிட்டேன். தலைக்கு மேலே வேலைகள் இருக்கிறது. ஏதோ நீ தான் என்னைப் பற்றிக் கேட்டாய். சொல்லச் சொல்ல... நேரம் போனதும் தெரியவில்லை. நான் கூறியவற்றை நீயும் சிந்தித்துப் பார்!"

"எல்லாம் உலகம் மாறிக்கொண்டு வருகிறது. கணினியுகம்... எல்லாமே அவசரமாற்றம்... நேரம் கிடைக்கும்போது வாருங்கள் எங்கள் வீட்டுக்கு."

"ஓகே! குமாரசுவாமி அண்ணை! பிறகு வருகிறேன்.. சரி இப்போது போய்வருகிறேன்'' எனக்கூறி இருவரும் விடைபெற்றுக் கொள்கின்றனர்.

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூவைக்குள் பூகம்பம்

ஈழத்தில் நடுத்தரக்குடும்பம் ஒன்றில் தோன்றிய பிரசாந், நாட்டுப் பிரச்சினை என்ற போர்வையுடன் பொருளாதார வசதி கருதி, ஜேர்மனிக்கு வந்து எட்டு ஆண்டுகளாகிவிட்டன. கலாச்சாரத்துக்கு முற்றாகத் தலை சாய்க்கும் குடும்பப் பின்னணியில் வாழ்ந்த இவன் வெளிநாடு என ஜேர்மனிக்கு வந்ததும், கேட்பாரின்மையால் தன்மனப்படி வாழச் சுதந்திரம் கிடைத்தது. பொதுவாக எமது இளைஞர்களுக்கு வெளிநாட்டு வாழ்வு சுதந்திரமாக இருந்தபோதும், மறுபக்கம் தனிமை அழுத்தும் ஏக்கமும் இருக்கத்தான் செய்கிறது. சிலருக்கு இது விரக்தி வாழ்க்கையாகவே இருக்கிறது என்பதையும் மறுக்க முடியாது.

தமது கலாச்சாரத்தைக் கைவிட முடியாமலும், வெளிநாட்டுக் கலாச்சாரத்தைப் பின்பற்ற முடியாமலும் "இரண்டும் கெட்டான்" நிலையில் வாழ்ந்து வந்த பிரசாந்த் தான் தொழில் செய்யும் அச்சுக்கூடம் ஒன்றில் மக்டலேனா என்ற ஜேர்மன் மங்கையைச் சந்தித்தான். இவர்கள் இருவரும் ஒரேபகுதியில் வேலை செய்வதால் அடிக்கடி சந்திக்கவும் கதைக்கவும் போதுமான சந்தர்ப்பங்கள் கிடைத்தன. மக்டலேனா (ஜேர்மன் கலாச்சாரம்) தான் பிறந்து வளர்ந்த கலாச்சாரத்துக்கு ஏற்ப பிரசாந்துடன் தொட்டும் முட்டியும், கேலி செய்தும், சிரித்தும் மிக நெருக்கமாகப் பழகினாள். அதாவது சாதாரண ஒரு சிநேக முறையிலேயே பிரசாந்துடன் பழகினாள். இவர்களின் இத்தகைய சந்திப்பு இரு வேறுபட்ட கலாச்சார நாடுகளின் அறிமுகங்களாகவே ஆரம்பத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தன. ஆனால் நாட் செல்லச் நாட் செல்ல, இளம் உள்ளங்களின் இன்பக் கனவுகளாக மாறின.

பிரசாந்த், மக்டலேனாவின் பேச்சுக்களையும் துடிதுடிப்பான சுபாவத்தையும், கீழைக்கலாச்சாரத்தில் உள்ள அவளது ஆர்வத்தையும் பெரிதும் நேசித்தான். இறுதியில் அவளையே நேசிக்கத் தொடங்கினான் பிரசாந்த். "ஆம்" உண்மையான காதலுக்கு மொழி என்ன? நாடென்ன? நிறம் என்ன? எதுவுமே எதிர்நிற்க முடியாது என்பது போல் ஏறக்குறைய நான்கு வருடங்களாக இவர்களுடைய காதல் வாழ்வு வசந்தகீதம் பாடி அவர்களை இன்பக் கடலுள் ஆழ்த்தியது.

மக்டலேனாவுக்கு தமிழ்க்கலை, கலாச்சாரத்தில் ஈடுபாடு கொண்டு அவை பற்றிப் பிரசாந்துடன் அடிக்கடி உரையாடுவாள். தமிழ்ச்சினிமாப் படங்கள், பரதக்கலை என்றாலே அவளுக்கு மிகவும் பிடித்தனவாக மாறிவிட்டன.

பிரசாந் - மக்டலேனா காதல் தளிர்விட்டு மரமாகிக் கிளை பரப்பும் வேளையில், ஒரு நாள் மக்டலேனா பிரசாந்தை நோக்கி, "நாம் திருமணம் செய்து ஒரு வீட்டில் சேர்ந்து வாழ்வோம், இதனால் ஒருபக்கம் நாம் இணைந்து வாழ்வது மட்டுமன்றி, எமது செலவுகளையும் ஒருமுகப்படுத்திக் குறைத்துக் கொள்ளமுடியும்," என்றும் தன் மனக்கிடக்கையை அவனிடம் கூறியபோது, பிரசாந் அவற்றைக் காதில் வாங்கியும் வாங்காதது போல் நடந்து கொண்டமை மக்டலேனாவுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. உடனே அவள், "பிரசாந்! என்ன பேசாமல் இருக்கிறீர்கள்? எமது உற்ற நண்பர்களுடனும் எனது குடும்பத்தினருடனும் பதிவுக்கந்தோரில் திருமணத்தை முடித்து விடுவோம். ஏனெனில் என்வயிற்றில் உருவாகும் கருவுக்குத் தாய் தந்தையர் பெயரைக் கொடுக்க வேண்டும் அல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாண எழுத்துக்கு முதல் குழந்தை பிறந்தால் எனது பெயரில்தான் பிள்ளையின் பதிவு இருக்கும். அதை நான் விரும்பவில்லை. திருமண எழுத்து முடிந்ததும் பிள்ளை பிறந்தால் அதன் பிறப்புப் பதிவில் நம் இருவரின் பெயரும் பெற்றோர்கள் என்ற ஸ்தானத்தில் இடம் பெறுவதையே நான் விரும்புகிறேன். பின்னர் பிள்ளைப் பதிவை மாற்றி எழுதும் தேவை இருக்காது. எனவேதான் திருமண எழுத்தை எதிர்வரும் நமது விடுமுறை நாட்களில் வைத்துக் கொள்ள திருமணப்பதிவுக் காரியாலத்தில் ஒரு முன்னேற்பாட்டுத் திகதியை (Appointment) எடுத்துக் கொள்வோம்" என விபரமாக யாவற்றையும் கூறி முடித்தாள் மிக்டலேனா.

இந்தக் காதல் பயணத்துக்கு முற்றுப்புள்ளியாக அல்லது ஒரு தரிப்பிடமாக திருமணம் என்றதும் பிரசாந்துக்கு தூக்கிவாரிப்போட்டது. தனக்குப்பின் இரு தங்கைகள் இருக்கிறார்கள் என்பதும், தமது கலாச்சாரத்தின் கட்டுப்பாடு எத்தகையது? என்பதும் இப்போதுதான் ஞாபகத்துக்கு வருவதுபோல் அவனுக்கு வந்தது. காதல் மயக்கத்தில் காடு, வெளி, பூங்கா, சினிமா, டிஸ்கோ ஹோட்டல், கடைகள் என்று அவளோடு உல்லாசமாகக் கை கோர்த்து, சுதந்திரப் பறவைகளாகத் திரியும் போது வீட்டு ஞாபகமோ, தங்கைமார் ஞாபகமோ அவன் மனத்திரையில் எங்கோ ஓர் மூலையிலும் வரவேயில்லை. இப்போது மக்டலேனா திருமண எழுத்து, திருமணம் என்றவுடன் பிரசாந்துக்கு சஞ்சலத்தை உருவாக்கியது.

இதற்கு இன்னொரு காரணம் அவனுடைய தந்தையிடமிருந்து வந்திருந்த கடிதமாகும்.

தனது பெற்றோருக்கு மாறாக மக்டலேனாவைத் திருமணம் செய்வதா? விடுவதா? என்ற போராட்டம், பொருத்தமான பெண்ணைப் பார்த்து, முற்றாக்கிவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த மாதமளவில், ஜேர்மனிக்கு வருவாள் என்றும் எழுதப்பட்டிருந்தது. அடிக்குறிப்பாக கடிதத்தில் "கொழுத்த சீதனம் கிடைக்கிறது" எமக்கு விமோசனம் கதவைத் தட்டுகிறது, என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன் அப்பெண்ணின் போட்டோவும் இணைக்கப்பட்டிருநத்து. பிரசாந் அப்போட்டோவிலுள்ள உயிரோவியமான அழகோவியத்தை உற்றுநோக்கினான். காஞ்சிபுரச்சோலையுடன் மல்லிகைப்பூ நிறைந்த நீண்ட கூந்தலுடன் இருப்பது அவனை நிலைகுலைய வைத்தது. எப்போதும் இறுக்கமாக ஜீன்ஸ் மினிப்பாவாடை, என பலரும் பலவாறு பார்த்து இரசித்த மக்டலேனாவின் உடலழகைவிட சாறியில் முடங்கி, வெளிப்படாதிருந்த அழகை மனக்கண்ணால் அனுபவித்தான் பிரசாந்.

தந்தையின் கடிதத்தால் சில தினங்களாக எதிலும் ஒரு பற்று அற்றவன் போல் திரிந்த பிரசாந்தின் போக்கு மக்டலேனாவுக்கு திகிலையும் ஒரு ஏக்கத்தையும், ஐயத்தையும் ஏற்படுத்தியது. உயிராக நான் விரும்பும் இவருக்கு என்ன பிரச்சினை வந்துவிட்டது? என எண்ணியவளாய், "என்ன பிரசாந்! சில நாட்களாக என்னுடன் முகம் கொடுத்துப் பேச மறுக்கிறீர்கள், எப்போதும் தனிமையை விரும்புகிறீர்கள்? என்ன நடந்தது? என்னில் விருப்பம் இல்லையா? என்ன? சொல்லுங்கோ!"

மக்டலேனாவின் தொந்தரவு தாங்கமுடியாமல் சொல்வதா? விடுவதா? எனத்தவித்து, தனிமையில் மனப்போராட்டத்துடன் உழன்றான். இறுதியில் அவளது விடாப்பிடி வென்றுவிட தன் வீட்டில் இருந்து வந்த கடிதத்தையும் போட்டோவையும் காட்டினான். கலாச் சாரத்தில் ஊறிய தந்தையின் இறுக்கமான பிடிவாதத்தையும் பிரசாந் இப்போது தான் வெளியிட்டான்.! என்னை மன்னித்துவிடு! மறந்து விடு! மக்டலேனா! எனக்கூறி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையின் கலாச்சாரக் கட்டுப்பாட்டை மீற முடியாமல் இந்த முடிவை எடுக்கிறேன்... என்னை மன்னித்துவிடு!" என்று மேலும் ஏதோ கூற முயன்றபோது...

"பிரசாந்! என்ன கலாச்சாரம்? உங்கள் கலாச்சாரம்? நல்லாக பேசுகிறீர்கள். ஒரு பெண்ணின் மனதிலே காதல் விதைகளைத் தூவிவிட்டு, அது வளர்ந்து வரும் போது அவற்றோடு வேரோடு பெயர்ப்பதுதான் உங்கள் இனத்துக்குணம் என்பதையா உங்கள் கலாச்சாரம் போதிக்கின்றது? நல்ல நாடகம் ஆடுகிறீர்கள்! கலாச்சாரம் என்று கத்துகிறீர்கள். அதன் தாற்பரியம் நான் "திருமணம் செய்வோம்" என்று கேட்டபோதுதான் வெளிச்சமாகின்றதா?"

"எங்களுக்கும் கலாச்சாரம் என்று ஒன்று உண்டு. எமது கலாச்சாரத்தின் பெரும்பான்மைத் தாக்கத்தைக் கொண்டு என்னையும் அதற்குள் தள்ளிவிட்டு எடைபோட முடியாது. நான் ஏற்கனவே உங்கள் கலாச்சாரம் ஒருவன் - ஒருத்திக் கோட்பாடு, என்பவற்றை அறிந்து அதுவே நல்லது, அப்படித்தான் நான் வாழவேண்டும் என்று எண்ணிய வேளையில் நீங்கள் என்வாழ்வில் குறுக்கிட்டீர்கள். அப்போது என் கனவு வெற்றி என எண்ணி அந்நியோன்ய மாகப் பழகினேன். கணவனாக உங்களை என் நெஞ்சில் நிறுத்தினேன். ஆனால் இப்போது நீங்கள் தான் "உங்கள் கலாச்சாரம், இறுக்கமான கலாச்சாரம்" என்று காலம் கடந்து கடைப்பிடிக்கப்போய் உங்கள் கலாச்சாரத்தையே மாசுபடுத்துகிறீர்கள்.

ஒரு பெண்ணை விரும்பி அவளுடன் நெருங்கிப் பழகிவிட்டு, ஒன்றி வாழ்ந்து விட்டு, இன்னொரு பெண்ணை விரும்பி, அவளை அணைத்து இன்பம் துய்க்க எப்படி உங்கள் கலாச்சாரம் சம்மதம் தந்தது? இந்த விடயத்தில் உங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாச்சாரத்துக்கும் எங்கள் கலாச்சாரத்துக்கும் வித்தியாசம் இல்லையே. இதே மாதிரி உங்கள் கலாச்சாரத்தில் உங்கள் இனப் பெண், ஒருவனைக் காதலித்து நெருங்கி வாழ்ந்துவிட்டு, பின் இல்வாழ்க்கை என உங்களைத் திருமணம் செய்ய வந்தால், ஏதோ குலத்தைக் கெடுத்தவள், குடியைக் கெடுத்தவள், மானங்கெட்டவள், காமப்பிசாசு, என நீங்களே பிரசாரம் செய்கிறீர்கள். ஆனால் இதே வேலையை நீங்களோ உங்கள் இனத்து ஆண்களோ செய்துவிட்டால் காந்திகள் ஆகிவிடுகிறீர்கள். ஏன் இராமன் ஆகேவ மதிக்கப் படுகிறீர்கள்! பெண்ணுக்கு வாழ்வளித்த தெய்வமாகி விடுகிறீர்கள். உங்கள் கலாச்சாரத்தைப் பார்த்தால் "பிணமாகக் கிடந்த மங்கைக்கு உயிர் கொடுத்து உயிர்ப்பித்த ஆண்டவனைப் போல் உங்களை வாழ்வு கொடுத்தவர் என்று ஏற்றிப் போற்றுகிறது உங்கள் சமுதாயம்." இது கலாச்சாரமா? அல்லது கலாச்சாரம் என்ற போர்வைக்குள் நீங்கள் நடாத்தும் களியாட்டமா? கலாச்சாரம் என்பது மனிதன் தன்னுடைய வாழ்க்கையை வளமாக, ஒழுங்காக, செவ்வனே வாழ்வதற்கு உருவாக்கியதேயன்றி, கண்ட கண்ட இடங்களில் பாம்பு செட்டையைக் (சட்டையை) கழற்றிவிடுவது போல் கழற்றிவிடுவதல்ல கலாச்சாரம்.

"நானும் ஒரு பெண்தான். பெண் என்றால் உங்களுக்கு ஏளனமாகத் தெரிகிறதா? அப்படி இருந்தால் அதற்கு நீங்கள் வளர்ந்த வளர்ப்புமுறையும், ஆணாதிக்கமும்தான் காரணம். ஜேர்மனியில் உள்ள எல்லாப் பெண்களும் ஒரு மாதிரி என ஒரே தராசுத்தட்டில் எடைபோட முடியாது. இதுவரை இப்படித்தான் புரிந்து கொண்டிருக்கின்றீர்கள் என்று இதயத்தைத் திறந்து காட்டியும் எனது மனோநிலை உங்களுக்கு இதுவரை புரியவில்லையே. பெண்களின் மனதிலே மிகவும் ஆழமான, கருத்தொருமித்த காதல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறைதான் தூய்மையுடன் பகமையாய் பிறக்கும் என்ற உணர்வில் ஊறியவள்தான் நான். நீங்கள் நினைப்பதுபோல் நான் இலகுவில் மனம் மாறித் திருமணம் செய்யலாம் என நினைக்கலாம். அப்படியான ஒரு எண்ணம் இதுவரை என்னிடம் இல்லை. உங்கள் வித்தான என் வயிற்றில் வளரும் குழந்தை ஆணாக இருந்தால், உங்கள் நாட்டிலேயே உங்கள் கலாச்சாரத்தைப் பயிற்றுவித்து வளர்க்க என்னால் முடியும். அப்படியே செய்வேன். இது உறுதி. உங்களால் பாதிக்கப் பட்ட எனக்கு இந்த முடிவுதான் ஒரு விமோசனம் ஆகும்.

தாய்நாடு தாய்மொழி, சக்தி எனப் பெண்களுக்கு மதிப்புக்கொடுக்கும் உங்கள் தெய்வீகக் கலாச்சாரம் இதுதானா? பேசுவது ஒன்று, நடப்பது ஒன்றாகவும் போலி வாழ்க்கை வாழ்வதும், வீட்டில் உணவுக்கு வழியில்லாத போதும் ஆடம்பரமான வெளிவேடத்துக்கு மதிப்புக் கொடுப்பதும்தான் உங்கள் கலாச்சாரத்தன்மை என எனக்குப் புரிகிறது.

கதையாலும் போலி நடப்பாலும் உங்கள் கலாச்சாரம் என்று வாழாமல் உண்மையாக வாழுங்கள்! அதுதான் உங்களுக்கு நான் இறுதியாகக் கூறும் வார்த்தை என ஆவேசத்துடன் கூறிவிட்டு அகன்றாள் மக்டலேனா.

மக்டலேனாவின் கடுமையான வார்த்தைகளால் மனம் குழம்பிய பிரசாந், எனக்கு ஒரு பெண்ணுமே வேண்டாம் என்ற விரக்தியின் விளிம்பில் இருந்தான். தனது நண்பனை நாடி மனப்பாரத்தைக் குறைக்க எண்ணி அவர்களிடம் தனது இக்கட்டான நிலையை வெளிப்படுத்தினான். அவனது குழம்பிய மனதுக்கு ஆறுதல் கூறினார் குடும்பஸ்தனான அவனது நண்பனும் மனைவியும் "நீர் உமது வீட்டுக் கட்டுப்பாடு, கலாச்சாரம் தெரியாமல் மக்டலேனா உன்னைவிரும்ப, நீ இடமளித்தது உனது மாபெரும் தவறு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்களான நீங்கள் சுத்தமாக இல்லாமல் நீங்கள் எதிர்பார்க்கும் பெண்கள் சுத்தமாக வரவேண்டும் என நினைக்க முடியுமா? இந்தத் தன்மையைப் புதிதாய் வரப்போகும் புதுமணப் பெண்ணுக்கு உன்னால் கொடுக்க முடியுமா? இல்லையே. இது எல்லாம் எமது சமுதாயத்தி லிருந்து ஒழிய வேண்டும்" என்று கூறி அவனை ஆசுவாசப் படுத்தினர்.

"இனி என்ன செய்வது? முடிந்தது முடிந்தவையாக இருக்கட்டும்! எமது மரபின்படி நாம் வாழவேண்டும் என்றில் நீ உனது அப்பா விருப்பப்படியே திருமணம் செய்வதுதான் நல்லது" என்றும் தமது எண்ணத்தைத் தெரிவித்தனர்.

தனது பிழையை உணர்ந்து கொண்ட பிரசாந்தின் திருப்பம் மக்டலேனாவைப் பொறுத்தவரை பூச்சியம்தான். ஆனால் பிரசாந்துக்கோ ஒரு பெரிய பூகம்பத்திலிருந்து தப்பிய தற்காலிக நிம்மதி.

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பார்ப்புக்கு எதிர்

"ஆ... ஊ... ஆ... மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்குது... வயிறு முட்டாக இருக்குது... "இந்தா வந்திடுவன்" என்று கூறி மரக்கறி வாங்கச் சந்தைக்குப் போனவரை இன்னும் காணேல்ல. ஏன் இந்த மனுஷன் இவ்வளவு நேரமும் அங்கு நின்று தாமதிக்கிறார்? ஆ... ஆ... பொறுடா தம்பி!... வயித்தில இந்த இடி இடிக்கிறாயே, ஆம்பிளை என்றதைக் காட்டுகிறாயே, என்ர ஆண் குஞ்சு! நான் நினைக்கிற மாதிரி நீ உனது கரு உலகத்தை விட்டு வெளியில வந்துவிட வேணும். உன்னுடைய சந்தோஷத்தில் நான் என்னுடைய நோவெல்லாம் மறந்துடுவன். கொஞ்சம் பொறு மகனே! நீ பூமியில் ஜனனிக்க இன்னும் ஒரு மாதம் இருக்கு. அதற்குள்ள இந்தப் பாடு படுத்துகிறாய், பொல்லாத சுட்டிபபையன் போல இருக்கு..." என்று கருவறைக்குள் இருக்கும் மகவுடன் பேசிக் கொண்டிருந்தாள் சிந்தாமணி. தனக்கு ஆண் குழந்தை தான் வேணும், அவனால்தான் தலை நிமிர்வு, குடும்ப முன்னேற்றம் இருக்கிறது என்ற பெரிய அவாவினாலே... அந்த ஆதங்கத்தினாலே கருவில் இருப்பது ஆண்குழந்தையே எனத் தீர்க்கமான முடிவு எடுத்துவிட்டு, அந்த நாளையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

நாட்கள் கிழமைகளாகக் கடந்து செல்ல, சிந்தாமணி எதிர்பார்த்தபடி குறிப்பிட்ட நாளிலே அழகான ஆண்மகவைப் பெற்றெடுத்தாள். ஆனந்தக்களிப்பில் பாலூட்டிச்சீராட்டி பாசத்தைக் குழைத்தூட்டி வளர்த்து வந்தாள். ஆண் குழந்தை பிறந்ததினால் தனக்கு சமூகத்திலே உயர் அந்தஸ்து கிடைத்து விட்டது போன்றதற் பெருமையுடன் இருக்கும் போது, அதை மேலும் வளர்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவது போல் அக்கம் பக்கத்திலுள்ள பெண்கள் "உனக்கு ஆண்பிள்ளை முதற்பிள்ளையாகப் பிறந்திருக்கிறான், இனி உனக்கென்ன பஞ்சம்?" எனக் கூறினர். சமுதாயத்தில் ஊறிப்போயிருந்த அந்தப் போலித் தத்துவத்தை அவர்களின் வாய்கள் தாராளமாக அசைபோட்டுக் கொண்டிருந்தன.

சிந்தாமணியின் கணவனும் அவளைப் பாராட்டி, "ஆண்குஞ்சு பெற்று என் வம்சத்தை வளர்த்துவிட்ட என் பத்தினி!" என்று கூறித் தனது மகிழ்ச்சியையும் தெரிவித்தான்.

காலங்கள் உருண்டோடின. சிந்தாமணி மீண்டும் கருவுற்றாள். அப்போதும் அவள் தன் வயிற்றில் ஆண்குழந்தையே உதயமாக வேண்டும், பெண்ணைப் பெற்று என்ன பயன்? எனவும் எமக்குத்தான் சுமை சுமை? அவர்களால் எமக்கு எந்நேரமும் மனவுளைச்சல்தான், என்றும் அசையாத நம்பிக்கை அவள் மனதில் ஏனோ வேரூன்றி இருந்தது. அதற்கு அவள் வாழ்ந்த குடும்பச் சூழலும் எமது தமிழ்க் கலாச்சாரப் பண்பும் காரணமாக இருந்திருக்கலாம்.

சிந்தாமணியின் எதிர்பார்ப்பின்படியே இரண்டாவது மகனையும் பெற்றெடுத்து விட்டாள். சிந்தாமணியின் மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. ஆண் குழந்தைகளாற்தான் பிற்காலத்தில் சுகமாக வாழலாம், அவர்களின் நிழலில் இளைப்பாறலாம் என்று எண்ணியெண்ணி குழந்தைகளுக்கு வறுமையின் சுவடு தெரியாமல் வளர்ப்பதே அவளது வாழ்க்கையாகிவிட்டது. அப்பிள்ளைகள் வளர்வது போல் காலங்களும் வளர்ந்து செல்லும்போது, சிந்தாமணி எதிர்பார்க்காமல் மூன்றாவது குழந்தை ஆணாகவும் நான்காவது குழந்தை பெண்ணாகவும் பிறந்தன. பெண் குழந்தை ஒன்று பிறந்தாலும் மூன்று ஆண்கள் இருக்கிறார்கள் என்ற இறுமாப்பில் அது பெரிய குறையாகவோ அல்லது சுமையாகவோ அவளுக்குத் தெரியவில்லை. தனக்கு ஒரு உதவியாகச் சமையலுக்கும் வீட்டுவேலைகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணையாக இருக்கும் என்ற ஒரு காரணத்துக்காக மட்டுமே பெண் குழந்தையை ஏற்றுக் கொண்டாள். ஓரளவுக்கு விரும்பினாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

சிந்தாமணி தன் நான்கு பிள்ளைகளையும் நல்ல முறையில் வளர்க்கவேண்டும், நல்ல நிலைக்கு உருவாக்க வேண்டும் என்று அயராது பாடுபட்டாள். பிள்ளைகள் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து வந்தார்கள். பெண் பிள்ளையைப் பற்றி அவள் அதிக அக்கறை எடுக்கவில்லை. நன்கு படிக்காவிட்டாலும் பரவாயில்லை. ஏனெனில் கொஞ்ச காலத்துக்குள் இன்னொருவனிடம் போய் வாழப்போகிறவ என்ற மனப்பான்மை அவளிடம் குடிகொண்டிருந்தது. இதற்கு ஏற்பவே மகளை வளர்த்து உரிய பருவம் எய்தவே தகுந்த வரனைத் தேடி அவனிடம் ஒப்படைத்துவிட்டாள். மூன்று மகன்களின் வளர்ச்சியிலும் உழைப்பிலும் பெருமிதமாய் சிந்தாமணி வளர்ந்து கொண்டிருக்கும்போது, காலம் செய்த சதியால் இலங்கை இராணுவத்தின் துப்பாக்கிக்கு இரையாகிவிட்டார் அவளது கணவன். கணவனின் பிரிவால் தன்னையே மறந்து சிலகாலம் நடைப்பிணமாகத் திரிந்தவளை மகன்மாரின் ஆறுதல்வார்த்தைகளும், "நாங்கள் இருக்கிறோம் உங்களுக்கு ஒரு குறையும் விடோம்" என்ற தேறுதல் மொழிகளும் அவளை ஓரளவுக்கு ஆசுவாசப்படுத்தின.

"அம்மா! ஏன் நெடுவும் இப்படியே யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள்? நாங்கள் துணையாக, ஆறுதலாக இருக்கிறோம்"

"நீங்கள் ஆறுதலாக இருப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். அது நீங்கள் பிறக்கு முன்னே நான் எடுத்த முடிவு தானே. மகன்கள் என்னைப் பார்ப்பார்கள் என்ற முடிவுதான்."

"என்ன இருந்தாலும் ஒரு பெண்ணுக்கு அவளது கணவனை விட வேறு ஆறுதல் இல்லையே. பூவையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொட்டையும் விட வேறு பிரத்தியகமான அழகும் ஒரு பெண்ணுக்குத் தேவையில்லை. அதுதான்...."

"என்ன செய்வது? இப்படி இறைவன் செய்துவிட்டான் அம்மா! நாங்கள் உங்களுடனேயே இருப்போம்."

"வேண்டாம்... வேண்டாம்! நீங்களும் இராணுவத்தின் துப்பாக்கிக்கு இரையாகப் போகிறீர்களா? இப்பொழுதே வெளிநாட்டுக்கு போங்கள். இங்கு ஒருவரும் நிற்கவேண்டாம். முதலில் நீங்கள் போய் என்னையும் கூப்பிடுங்கோ! தம்பி! பெரியமகன்! நீ விரும்பித்திருமணம் செய்யப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்த பெம்பிளையைக் கூட்டிக் கொண்டு போக ஆயத்தப்படுத்து."

"ஓம் அம்மா! நீங்கள் செய்வது சரிதான். எல்லோரும் ஒன்றாய்ப் போவதற்கும் காசுப் பிரச்சினை."

"என்ன காசுப்பிரச்சினை? இருக்கிற நிலபுலன்களை விற்றுவிட்டுப் போவோம்."

சிந்தாமணியின் திட்டப்படியே மூத்த மகன் பிரான்ஸ்க்குத் தன் வருங்கால மனைவியுடன் போய்ச்சேர்ந்து விட்டான். இரண்டாவது மகன் சுவிஸ்சலாண்டில் ஏதோ ஒரு வேலையில் சேர்ந்துவிட்டான். அவன் தாயின் அனுமதி இல்லாமலேயே சுவிஸ் நாட்டுப் பெண்மணியை விரும்பித் திருமணம் செய்து கொண்டான். இவ்வாறு குடித்தனப் பதவியை ஏற்றுக் கொண்ட இருமகன்களும், தாங்களும் தங்கள் குடும்பமும் என வாழ்ந்து கொண்டிருந்தனர். "தாயைப் பார்ப்பேன் என்றவர்கள்" தாரத்தையும் தன் சுமைகளையும் பேணவே அவர்களுக்குக் கால நேரம் சரியாக இருந்தது. இருந்தாலும் தன் கடமை என உணர்ந்த மூத்தமகன் தாயைத் தன்னுடன் வைத்திருக்கவேண்டும் என நினைத்துத் தன்னுடன் இருக்கும்படி தாயை அழைத்தான். அவரும் அதற்கு உடன்பட்டு, சிலகாலம் அங்கிருக்கவே மாமியாரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குகள் மருமகளுக்குப் பிடிக்கவில்லை. சில சமயங்களில் இருவருக்கும் பலத்த தகராறு ஏற்படவே, மகன் தாயையே சிறிது கண்டிக்கும் பாவனையில் வார்த்தைகளை உதிர்த்தான். நம்பிப் பெற்ற மகனின் வாயிலிருந்து வெளிப்பட்ட வார்த்தைகளால் மனம் சுக்கு நூறாகிப் போன நிலையில் அவள் அங்கிருக்க முடியாமல் இரண்டாவது மகனிடம் போவதாக வற்புறுத்தி, அவனிடமே வந்து சேர்ந்துவிட்டாள். அங்கும் சில நாட்கள் செல்ல இதே பிரச்சனை தலைதூக்கத் தொடங்கியது. மருமகள் வேலைக்குப் போவதால் வீட்டுவேலைக்காரி, சமையற்காரி, பிள்ளை பராமரிப்புக்காரி என்ற பதவிகளை இவள் ஏற்க வேண்டியதாயிருந்தது. இருந்தாலும் இதுபற்றி மனம் நோகாது சிந்தாமணி சந்தோஷத்துடன் செய்து கொண்டிருந்தாள். சிந்தாமணிக்கு வயது சென்றுவிட்ட காரணத்தால் விசேஷ உணவுகளிலும் கைமருந்து வகைகளிலும் கொஞ்சம் ஆசையாக இருக்கவே அந்தச் சாப்பாடுகளைச் செய்து அவள் சாப்பிட வேண்டியிருந்தது. இந்த உணவு வகைகளைச் சமைப்பதால் வீட்டிலே மணம், பிள்ளைகளுக்கு "அலர்ஜி" வருகிறது என்று மாமியாருக்கும் மருமகளுக்கும் சிறு பிரச்சினை ஏற்பட ஆரம்பமாயிற்று.

"உங்கட அம்மாவால எனக்குப் பெரிய தொல்லையாக இருக்கிறது, எத்தனை நாளைக்கு நாங்கள் இவை வைச்சிருக் கிறது? என்று முறையிடத் தொடங்கினாள். சிந்தாமணியால் இருவருக்கும் வார்த்தை பலத்து அடிதடியிலும் போய் முடிந்தது. இதனால் மகனது படுக்கை தனியானது. இதைக் கண்டதாய் மனம் பொறுக்கமுடியாமல், அங்கிருக்கப் பிடிக்காதவளாக மனமுடைந்து காணப்பட்டாள்.

இனி என்ன செய்வது? கடைசி மகனுடனாவது இனி போயிருப்பம் என அங்கு போய்ச் சேர்ந்தாள். அங்கு சந்தோஷமாகச் சில மாதங்கள்தான் சென்றன. மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய நிலைதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தாமணிக்கு ஏற்பட்டது. அங்கிருக்கவும் பிடிக்காமல் போகவேதான் தன் மகளின் அருமை அவளுக்குப் புரிந்தது. தனது நாட்டுக்குப்போய்த் தன் மகளுடன் கடைசிக் காலத்தைக் கழிப்போம் என்ற முடிவு எடுத்து, தன்னைத் தன் மகளிடம் அனுப்பிவிடும்படி மகனை வேண்டி ஊருக்கு வந்து சேர்ந்தாள். அவளுக்கும் மகளுக்கும் தொடர்பு இல்லாதபடியால் மகளின் வாழ்க்கை நிலைபற்றி, சிந்தாமணி அறியாவிட்டாலும் ஊருக்குப் போனால் அவளிடம் போகலாம்தானே என்று நம்பிவந்தாள். அவ்வாறு நம்பி ஊருக்கு வந்தவளை ஏமாற்றமே வரவேற்றது. மகள் தனது குடும்பத்துடன் கனடா போய்விட்டதாக அறிந்து தலையிலே கைவைத்து ஒப்பாரி வைத்தாள். பின்னர் அவளது மருமகனின் உறவுக்காரர்கள் மூலம் விடயத்தைப் பூரணமாக அறிந்து, தான் இங்கு வந்து நிற்பதாகவும், மகளிடம் போகப் போவதாகவும் அறிவிக்கும்படி அவர்களை வேண்டினாள்.

மகளுக்கு இச்செய்தி எட்டவே மனம் பதைத்து தாய்ப்பாசம் மேலிடவே தன்னிடம் அம்மா இருக்கவேண்டும், தனிமரமாக அம்மா தவிப்பதை என்னால் சகிக்கமுடியாது" என எண்ணியவளாய், இது பற்றிக் கணவனிடம் முறையிட்டு இரங்கி வேண்டினாள். மனைவியின் தொந்தரவையும், அவளது பாசத்துடிப்பையும் பார்த்துச் சகிக்க முடியாமல் கணவன் சகல ஒழுங்குகளையும் பல சிரமங்களின் மத்தியில் செய்தான். இதன் பயனாக சிந்தாமணி ஐரோப்பிய நாடு சென்று பின் அமெரிக்க நாட்டுக்கும் பயணமானாள். மகள் விமான நிலையத்தில் தாயைக்கண்டு, கட்டித் தழுவி, உச்சிமோந்து, தன்னுடன் இறுக அணைத்துக் கொண்டாள். தாயாருக்குப் பூப்போடாத குறையாக அவளை வரவேற்று, உபசரித்தாள். மகளின் உபசரிப்பிலே... நடைமுறையிலே... சிந்தாமணியின் பழைய கொள்கையான பொம்பிளைப் பிள்ளையால என்ன உதவி என்ற மனப்பான்மை நொறுங்கித் தவிடுபொடியானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகள் மல்லிகா ஒரு தாதியைப் போல தன்னைப் பராமரிப்பதை உணர்ந்த சிந்தாமணி, "இந்த உண்மையை இப்போதுதானே உணர வைத்தாய் இறைவா! என இறைவனை நொந்து கொண்டாள். அங்கே தனது வீடு போல் நடமாடி, உண்டு உறங்கி, மகளது வீட்டில் சுதந்திரத்தை அனுபவித்த சிந்தாமணி மனதில் பலவாறான எண்ணங்கள் உண்மையைப் போதித்து மறைந்தன. ஆண்பிள்ளைகளால் கிடைக்கும் உதவியும் பெருமையும் அரவணைப்பும், அன்பும் அவர்கள் திருமணமாகும் வரைதான். அதன்பின் கடைசிக் காலத்தில் அவர்களிடமிருந்து எதையும் எதிர்பார்க்க முடியாது. அப்படி நினைப்பது தவறு. ஆண்பிள்ளை, ஆண்பிள்ளை என்று தவமிருந்து பெற்றாலும் கிடையாய்க் கிடக்கும் காலத்தில் சகல உதவிகளையும் மனம் கோணமற் செய்வது பெண் பிள்ளைதான். தாயை மட்டுமல்ல, தந்தையையும் அதே அன்போடு பராமரிக்கும் கருணையுள்ளம் பெண்ணுக்குத்தான் உண்டு. விரும்பிய உணவை உரிமையுடன் கேட்கவும் கிடையாய் இருந்து கொண்டு, அனைத்து உதவிகளையும் மனம் கூசாது, கேட்கவும் தாம் பெற்ற மகளிடம்தான் முடியும். இதை எல்லாம் உணராமல் தடுத்தது இந்தப் பாழாய்ப்போன சமூகம்தான். போலிக் கௌரவத்துக்காக ஆண் குழந்தை, ஆண் குழந்தை என்று விரும்பிப் பெறுகிறோம். பெண்ணை ஒதுக்குகிறோம், "பெண் குழந்தை பிறந்திருக்கிறது" எனத் தாழ்வாகப் பேசிக் கொள்கின்றோம். பின் கடைசிக் காலத்தில் பெண் பிள்ளையிடம் தஞ்சம் அடைகின்றோம். இந்த உண்மையை இன்னும் உணராமல் பெண்கள் என்றால் இரண்டாம் தரப்பிரஜையாக சமூகம் மதிக்கிறதே. மூடச் சமூகமே! இதை ஏன் இன்னும் உணராமல் இருக்கின்றாய்? இந்தச் சமூகமே என்னையும் வளர்த்தெடுத்தது. ஆதலால் என்னில் குற்றமில்லையே, நான் என்ன செய்யமுடியும்? என்று பல கோணங்களில் அவளது சிந்தனை பறந்து, இறுதியில் "மகளின் நிழலில் நின்று இளைப்பாறு;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளின் நிழலில் இருந்து இளைப்பாறு," என்ற தத்துவத்தை அனுபவமாக உணர்ந்து கொண்டாள்.

அப்போது சிந்தாமணியைப் பார்க்கவந்த அவளது உறவினரும், அவளது வயதை ஒத்தவருமான பாக்கியம் வந்து.. என்ன சிந்தாமணி! மகன்மாரோடு இருந்துவிட்டு, இங்காலப் பக்கம் வந்துவிட்டாய்!" என்ற குரல் கேட்டு, தன் சுயநினைவுக்கு வந்தவளாக...

"ஓம்... அப்படியே மகளையும் பார்த்துவிட்டுப் போவம் என்று வந்தனான். மகளையும் பார்த்து என் கண்ணுக்குள் வைக்கவேண்டாமா?"

"ஓ... ஓ... கண்ணுக்குள் வைக்கவா? அல்லது கண்ணில்லாதவர்கள் போல் வாழ்ந்துவிட்டோம் என்பதை நிரூபிக்கவா? இப்படித் திடீர் விஜயம்?

இல்லை... பாக்கியம்! அங்கு மகன்மாருக்குப் பல சோலி கள். அவர்களுக்கு என்னைப் பார்க்க எங்கே நேரம்?"

"அது இப்போதுதானே உனக்குப் புரியுது. இப்போதாவது நீ உணர்ந்து விட்டாய் என்று சந்தோஷப்படு கிறேன். உனது கொள்கை எல்லாம் அந்தக்காலம். பெண்கள் தம் உழைப்பாலேயே பெற்றோரையும் பார்க்க முடியும் என்பது இந்தக் காலம். இதைத் தடைசெய்ய முன்னிற்பதும் எம் சமூகம்தான். போலி மகிழ்ச்சிக்காக ஆண்பிள்ளை, ஆண்பிள்ளை என்று மகவுகளை விரும்புகிறார்கள். ஆனால் பெண் பிள்ளைகளாலும் பெருமையுண்டு. ஆதரவு உண்டு. கடைசிக்காலத்தில் அரவணைப்பு உண்டு, என்பதை ஏனோ மறந்துவிடுகிறார்கள். இது எங்கள் சமூகத்துக்கும் இன்னும் தெரியவில்லையே என்று கவலையாக இருக்கு. இது போலி களின் உலகம். போலிக் கௌரவம் நிறைந்த உலகம். உதாரணத்துக்குச் சொன்னால், ஒரு வீட்டில் அன்றாடச் சாப்பாட்டுக்கே அன்னக் காவடி எடுக்கிறார்கள். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே வீட்டில் மகளின் பிறந்த தினத்துக்கோ, பூப்புனித நீராட்டு விழாவுக்கோ பணத்தைக் கடன்பட்டுச் செலவு செய்கிறார்கள். பின்பு வட்டி தலைக்கு மேலே ஏற ஆலாய்ப் பறந்து செய்வதறியாது கவலைப்படுகிறார்கள் இதை எல்லாம் போலிக் கௌரவம் என்று சொல்லாமல் வேறு எப்படிச் சொல்ல முடியும்?

"ஓம்.. பாக்கியம் இப்படி இருக்கு. எமது சமூகம்.. நீ வந்ததிலிருந்து இதெல்லாம் கனத்ததில் நேரம் போனதே தெரியவில்லை. நான் கோயிலுக்கு ஒருக்கா. போகவேணும். நீயும் வர்றியோ?"

"என்ன நேர்த்தி இப்ப?"

"இனி என்ன? எல்லாப் பிள்ளைகளும் சுகமாக இருக்கவேண்டும். எனக்கும் நோய் நொடி வராமல் உதவி செய்யவேணும்... என்று இறைவனை வேண்டத்தான்... அதோட... ஒருவிடயம்.. என்னண்டால் இப்ப எனது மகள் வாயும் வயிறுமாக இருக்கிறாள். அவளது கருவில் ஒரு பெண்குழந்தை உதிக்கவேண்டும் என்றும் பிரார்த்திக்கப் போறேன்."

"சரி. சிந்தாமணியக்கா... நானும் போயிட்டு வாறன், வீட்டில் தேடப் போகிறார்கள்.

நாளை வசதி இருந்தால் எங்கள் வீட்டுப்பக்கம் வா... பாக்கியம்...!"

"ஓம்... வருவேன்..."

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தன்மானத்தின் தவிப்பு

காலைக் கதிரவன் தன் பொன்னொளியைப் பரப்பி பனிப்படலத்தை விரட்டி அடித்துக் கொண்டிருந்தான். ஜேர்மன் மக்களின் வாழ்க்கை யந்திரமேதான் என்பதை நிரூபிப்பது போல் அமைந்த காலைக் காட்சிகைளயும், மக்களின் சுறுசுறுப்பான அசைவையும், வாகனங்களின் விரைவையும் யன்னல் வழியாகக் கவனித்துக் கொண்டு இருந்தாள் ராதிகா. ஜேர்மனிக்கு தனது குடும்பத்துடன் ராதிகா வந்து ஏறக்குறைய மூன்று மாதங்களுக்கு மேல் இருக்கும். ஜேர்மனிய சட்ட திட்டங்கள், கலாச்சாரங்கள் ராதிகாவுக்கு விரக்தியையும், ஒரு வித வெறுப்பையும் ஏற்படுத்தின. தனது திறமையால் படித்து முன்னேற நினைத்தவளுக்கு ஜேர்மன் வாழ்க்கை மன ஊனத்தையும், மழுங்கிய அறிவு நிலையையும் அளிப்பதை அவளே உணர்ந்து கொண்டாள்.

உணர்வுகள் இருள் அடைந்த நிலையிலே, அவளால் வாழாவிருக்கவும் முடியவில்லை. காரணம் குடும்பம் என்ற தொடர்பையும் உறவையும் அவள் தன்னுடன் இணைத்துக் கொண்டிருந்தாள். ஆறு வயது நிரம்பிய மகள் நர்மதாவின் கல்வியைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு, அவளை வளர்க்க வேண்டிய கடமை, கணவனைப் பேண வேண்டிய கடமை என்ற சங்கிலிக்குள் அவளது உணர்வுகள் இயங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. நர்மதாவின் படிப்பில் கவனம் எடுத்து, அவளுக்கான பாடசாலை அனுமதி வேலைகளைக் கவனித்தாள். ஏதோ வந்து சேர்ந்து விட்டோம். ஆனபடியால் அந்த நாட்டு மொழியைக் கற்கவேண்டும். அது தவிர்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாத ஒன்றுதான் என்பதை உணர்ந்த ராதிகா முறைப்படி சகல அலுவல்களையும் செய்து, ஜேர்மன் பாடசாலை ஒன்றிலே நர்மதாவைச் சேர்ப்பித்தாள்.

தாய் மொழியிலே ஓரளவு பாண்டித்தியம் பெற்ற ராதிகாவால் அந்நிய நாட்டு மொழியான ஜேர்மன் மொழியைக் கிரகித்துக் கொள்ளும் தன்மை குறைவாகத்தான் காணப்பட்டது. ஜேர்மன் மொழியை ஓரளவாவது பயில வேண்டும் என்ற ஆர்வம் ராதிகாவுக்கு இருந்த போதிலும் - அவளது வயது, மூளையில் நிரம்பிய வேலைகள் போன்றவற்றால், அம் மொழியிலே கருத்து ஊன்றிக் கவனிக்க முடியாமல் இருப்பதை அவளே உணர்ந்து கொண்டாள். இருந்தும் ஜேர்மன் வகுப்புகளுக்குச் சென்று வரத் தவறவில்லை. நர்மதா ஆரம்பப் பாடசாலை ஒன்றிற்கு போய்க் கொண்டிருந்தாள். ராதிகாவின் கணவன் ரமேஷ், தாயகத்தில் தான் படித்துப் பெற நினைத்த வேலைக்கு முரணாக ஏதோ வேலைக்காக பக்ரறியை நாடிச் சென்று வந்தான்.

காலச் சக்கரம் தனது வேலையை ஒழுங்காகக் கவனித்துக் கொண்டிருந்தது. ஜெர்மனியில் வாழும் வெளி நாட்டவர்களுக்கு பெரிய பதற்றத்தையும், கலக்கத்தைதையும் திடீரெனக் கொடுப்பது எது என்றால் அவர்களை நாடி வரும் வெள்ளை நிற, சாம்பல் நிறக் கடிதங்கள்தான் என்றால் ஓரளவுக்குப் பொருந்தும். ஒரு நாள் ராதிகா மகளைப் பாடசாலைக்கும், கணவனை வேலைக்கும் அனுப்பி விட்டு, உணவுப் பொருள் வாங்கும் நோக்கத்தில் கடைக்குச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள். கதவு மணி "கிறிங்... கிறிங்... கிறிங்..." என்று அலறவே, பொத்தானை அழுத்திக் கதவைத் திறந்தபோது,

"குட் மோகன், அயன் சிறைபன் போஸ்ற், பிற்ற உன்ரசிறைபன் கியர்" எனக் கூறி அவளது கையொப்பத்தை வாங்கிக் கொண்டு சென்றார் தபாற்காரர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரபரப்புடன்.. இக் கடிதம் என்னவாக இருக்கும் என எண்ணியவளாய் கடிதத்தைப் பிரித்தாள். பரிட்சயமான ஆங்கில எழுத்துகள் போல இருந்தாலும், அதன் உள்ளடக்கத்தை அவளால் அறிய முடியவில்லை. அழுகையும் ஆத்திரமும் வந்தது. 'எனது அம்மாவைப் போன்ற நிலை எனக்கு வரக் கூடாது என்றிருந்தேன். ஆனால் நான் இன்று அதற்கு ஆகாளி விட்டேனே. இக் கடிதத்தை யாரிடம் கொடுத்து வாசிப்பது? இந்த நிலைமை வரக் கூடாது என்றுதானே கஸ்டப்பட்டு தாய் நாட்டில் படித்தேன். இக்கடிதத்தை மகளிடம் காட்டினால், அதை அவள் ஓரளவு வாசித்தாலும் அதன் பொருளை விளங்கிக் கொள்ளும் அறிவு இன்னும் அவளிடம் இல்லை. இவ்வளவு காலமும் படிப்பு, படிப்பு என்று என் காலத்தையே கரையவிட்ட நாள், இந்தக் கடிதம் ஒன்றைக் கொண்டு ஜேர்மன் மொழி தெரிந்த இன்னொருவரிடம் போக வேண்டுமே எனப் பலவாறு மனதுக்குள் புலம்பிக் கொண்டு இருக்கும்போது...

அப் புலம்பலை மீறி அவள் மனம் கடந்த முப்பது வருடங்களுக்கு முன்னே போனது.

காலைத் துயில் நீத்த விசாலாட்சி, ஒருவித புத்துணர்வுடன் காலைக் கடமை முடித்து, அன்றாடத் தொழிலில் ஈடுபட ஆரம்பித்தாள். "கணவனின் கடிதம் கொழும்பில் இருந்து இன்றைக்கு வருமோ? சிலவேளை வரும்.' மனம் ஜோதிடம் கூறிற்று. வீட்டு முற்றத்து மர நிழல் ஒன்றைப் பார்த்து, நேரம் ஏழு மணியைத் தாண்டிவிட்டதை உணர்ந்து கொண்டாள். பரபரப்புடன் மகள் ராதிகாவை எழுப்பி, பாடசாலைக்கு அனுப்பத் துரிதப்படுத்தினாள். அப்போது சைக்கிள் மணிச் சத்தம் கேட்கவே, "தபாற்காரன்... கடிதம் வந்திருக்கு.." எனக் கத்தியவண்ணம் வீட்டுக் 'கேட்'டை நோக்கி ஓடினாள் ராதிகா.

தபாற்காரனிடம் இருந்து கடிதம் ஒன்றைப் பெற்றுக் கொண்டு வந்த ராதிகா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பா கடிதம் போட்டிருக்கிறார்' என்று தாயிடம் கொடுத்தாள். கடிதத்தைக் கண்களில் ஒற்றிவிட்டு, மார்புச் சட்டைக்குள் வைத்தாள். இதைக் கவனித்த ராதிகா..

"அம்மா, என்ன எழுதி இருக்கெண்டு பாருங்களேன் அம்மா...." என அடம்பிடித்து எட்டு வயதுச் சிறுமியான ராதிகாவைச் சமாளிப்பதற்காக,

"நீ முதலில் பள்ளிக்குப் போக ஆயத்தமாகு!" என அதட்டி பாடசாலைக்கு அனுப்பி வைத்தாள்.

விசாலாட்சி தமிழ் வாசிக்கக் கற்றுக் கொள்ளும் அளவுக்கு, அவள் வாழ்ந்த அந்தக் காலச் சூழ்நிலை இடம் கொடுக்க இல்லை. இதுபற்றி ராதிகாவுக்கு ஒன்றுமே தெரியாது.

அன்று காலையில் கிடைத்த கடிதத்தை மாலைவரை வாசிக்காமல் இருந்தது விசாலாட்சிக்குப் பெருவேதனையாக இருந்தது. மாலையில் பக்கத்து வீட்டு மாமி வேலையால் வரும்வரை காத்திருந்து, மாலையானதும் ராதிகாவுடன் அங்கு சென்றாள். மாமியின் கணவர்தான் "வாருங்கோ" என வரவேற்றார்.

"அவ தங்கச்சி வீட்டை போயிட்டா.. என்ன விசயம் சொல்லுங்கோ" என வற்புறுத்தினார். தனது கணவனின் கடிதத்தை இன்னொரு ஆணிடம் காட்ட விரும்பாத விசாலாட்சி தயங்கி நின்றாள்.

"கடிதம் ஏதாவது வாசிக்க வேண்டுமா.. தாருங்கள்" என அவரே கேட்டார். கடிதத்தில் உள்ளதை அறியும் ஆவலுடன் கடிதத்தைக் கொடுத்தாள்.

அன்புக் கண்மணி விசாலம்!

என விழித்து வாசித்தது.. அவளுக்கு நெஞ்சில் 'சுருக்' என்றது. 'அந்த மாமா' தன்னை விளித்துக் கூப்பிடுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற உணர்வினைப் பெற்றாள். அவர் வாசித்த தொனியும், பார்வையும் அப்படி இருந்ததுதான் காரணம். மாமா நம்பிக்கைக்குத் துரோகம் செய்யாமல் உள்ளதை உள்ளபடியே வாசித்துக் காட்டினார். விசாலாட்சியும், ராதிகாவும் அவரிடம் விடை பெற்றனர்.

வழி நெடுக... ராதிகாவின் சிறு மனதிலே ஏதேதோ சிந்தனைகள். அம்மாவுக்கும் அந்த மாமிக்கும் ஒரே வயது போலத்தான் இருக்கு. மாமி வாசிக்கிறா. அம்மா ஏன் வாசிக்கிறா இல்லை... என அலை பாய்ந்த அவளது மனதில் ஒரு துணிவு ஏற்பட்டது. தாயையே கேட்டாள். விசாலாட்சியின் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்தது.

"ஏனம்மா அழுகிறீர்கள்? நான் என்ன கேட்டுவிட்டேன்? அழாதேதிங்கோ அம்மா!..."

"இல்லை... கண்ணே... என் ராசாத்தி... உனது கேள்வி என்னை, .. என் தவற்றை உணரச் செய்தது. என் குஞ்சு ராதிகா! நான் பள்ளிக்குப் போகவில்லை. அ... ஆ... படிக்கேல்லை. படிக்கக் கூடிய வசதியும் எங்களுக்கு அப்போது இல்லை..."

தனது தாயார் கடிதத்தை வாசிக்க மற்றவர்களின் உதவியை நாடுவதை எண்ணிக் கவலைப்பட்டாள் ராதிகா. அம்மா மாதிரி நான் வரக் கூடாது.

தான் படித்துப் பெரியவளாக வந்து, அம்மாவுக்குப் பெருமை தேடிக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் அவளில் உறுதியாக, பள்ளியில் முதல் மாணவியாகி, பல்கலைக் கழகம் சென்று, தமிழ் மொழியில் தாய் பட்ட வேதனைகளை அனுபவத்தில் கண்ட ராதிகா, தமிழ் மொழியைச் சிறப்புப் பாடமாகப் பயின்று, 'மொழியியலை' ஆய்வுக்குரிய பாடமாக எடுத்து, எம்.ஏ. பட்டம் பெற்றாள்.

காலங்கள் ஓடிக் கொண்டிருந்தன. ராதிகாவுக்குத் திருமணம் முடிந்து ஒரு குழந்தைக்கும் தாயாகிவிட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிலே... வீட்டிலே கொடூரக் காற்று வீசுவது போல் விடுதலைப் போராட்டம் வெடித்தது. பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள் போன்ற நிறுவனங்கள் முறைப்படி இயங்காமல் நிற்கும் சூழ்நிலைகளும் ஏற்பட்டன. போராட்டம் உக்கிரம் அடையவே தனது தொழிலை, சேவையை தொடர்ந்து நடத்த முடியாத ராதிகா, ஜேர்மன் வருவதற்கான ஒழுங்குகளைச் செய்தாள்.

அம்மாவையும், அப்பாவையும் தனியே ஊரில் விட்டு வரும்போது... "ராதிகா! ராதிகா!" எனத் தாய் மனம் கலங்கியதை நினைத்து... "அம்மா, அம்மா" என அவளது வாய் முணுமுணுத்த போது... "அம்மா, அம்மா" என்று அழைத்த நிஜமான குரலினால், பழைய நினைவுகள் கலைந்தன. நர்மதா பாடசாலையில் இருந்து வந்து விட்டாள்.

எவ்வளவு கஸ்டங்கள் மத்தியில் படித்து, தாய்மொழியைக் கற்று, அதிலேயும் ஆய்வு செய்த எனக்கு இதுவா பிரதிபலன்? இப்படியான சூழ்நிலையில் இங்கே நான் வாழ முடியாது. அதே நேரம் இந்த மொழியை ஓரளவுக்குப் படித்தாலும் அது பூரண மொழி அறிவைத் தராது. மற்றவர்களின் உதவியை நாட வேண்டிய நிலை இருக்கும். எல்லாமே அந்நியமாக இருக்கும். எனது மகள் எங்களுக்கு உதவியாக வருவாள் என்பதும் தெரியும். ஆனால் எனது அம்மா வாழ்ந்த அன்றைய படிப்பறிவற்ற சமுதாயத்தைப் போல, இன்றைய விஞ்ஞான யுகத்திலே, பெண்விடுதலை வளர்ச்சிக் கால கட்டத்திலே... படிக்காத பெண்போல் இங்கு வாழ நான் தயாராக இல்லை... என்று மனதுக்குள்ளே பலவாறு எண்ணியவளாக, தாயகம் திரும்பி விட வேண்டும் என்ற முடிவுடன் மனவோலங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டாள்.

வேலையில் இருந்து வீடு திரும்பிய கணவனுக்கு தன் கருத்துக்களைக் கூறி, நாங்கள் இலங்கைக்குப் போவோம் எனக் கெஞ்சிக் கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியின் மன மாற்றத்தையும், அதற்கான காரணத்தையும் படித்தவனான ரமேஷினால் ஊகித்து விளங்கிக் கொள்ள அதிக நேரம் எடுக்கவில்லை.

"ரதி! என்ன இப்படி? நீ.. குழம்பி இருக்கிறாய். திடீரென ஊருக்குப் போனால் எங்கள் கடன்கள் யார் அடைப்பது? அங்கும் நாட்டுப் பிரச்சினை அப்படி இப்படி இருக்கிறது. அங்கு போய் என்ன செய்வது?"

"... நீங்கள் சொல்வதும் சரிதான். கடனும் கட்டி முடிக்க வேண்டும். ஆனால் நாட்டுப் பிரச்சினை என்று சொல்லி நான் இங்கு மனப்போராட்டத்துடன் வாழ ஒரு மாதிரியாக இருக்கிறது. ரமேஷ், பிளீஸ்! நீங்கள் இங்கு இரண்டு மூன்று வருடங்கள் இருந்து விட்டு வாங்கோ, உங்களைப் பிரிந்து என்னால் சந்தோசமாக வாழ முடியாது. இங்கேயும் நிம்மதியாக வாழ மாட்டேன். அங்கு சந்தோசம் இல்லாவிட்டாலும் ஒரு நிம்மதி. ஆத்ம திருப்தி. இங்கு அதன் சுவடுகளே இல்லை. நானும் பிள்ளையும் ஊருக்குப் போக ஒழுங்கு செய்யுங்கோ.." என்று அன்புடன் பணித்தாள்.

மனைவியின் ஆதங்கத்தை மறுக்க முடியாமல் தவித்த ரமேஷ், மனைவியையும் மகளையும் அனுப்புவதற்கான முயற்சியில் கிறங்கினாள்.

குறிப்பிட்ட நாளும் வரவே, மனைவியையும் மழலையையும் பிராங்போட் விமான நிலையத்தில் பிரியும் துக்ககரமான காட்சி நடந்தது. ரமேஷ் அவர்களை விமானத்தில் ஏற்றி விட்டு, "தன்மானம் கம்பீரமாகப் பறந்து செல்கிறது" என மனைவியை எண்ணிப் பெருமைப்பட்ட போதும் அவன் கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் உருண்டோடின.

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தங்கள்

காலைப் பொழுதின் ஆரவாரங்கள் அவர் காதில் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்திவிட, கதிரவன் கீழ்வானில் உதயமாகிவிட்டான் என்பதை உணர்ந்து கொண்டார் சிற்றம்பலம். அவர் தனது கண்களால் எதையும் பார்க்க முடியாவிட்டாலும், ஆங்காங்கே என்ன நடைபெறுகின்றன என ஊகித்துக் கொண்டு, நேரத்தையும் மதிப்பிடும் திறமை பெற்றிருந்தார். வயது எழுபதைத் தாண்டியபோதும், இன்னும் பூமியிலே நீண்டகாலம் வாழ்ந்தால் என்ன? என்றும், பழைமையைப் புதுப்பிக்கும் நினைவு மீட்டலுடனும் அவரது வாழ்வு ஓடிக்கொண்டிருக்கிறது.

கோவில் மணிச்சத்தம், காகம் கரையும் சத்தம், ஏனைய பறவைகளின் சத்தம் என்பவற்றை வென்றுவிடும் ஆங்காங்கே ஒலிக்கும் ஆமிக்காரனின் துப்பாக்கிச் சத்தங்கள். காலையின் இயற்கைக் காட்சிகளை உணர்ந்து இரசித்துக் கொண்டிருந்த அவருக்கு பீரங்கிகளின் சத்தம் கேட்டதும் மனம் கலக்கமடைந்து சுருண்டு கேள்விக்குறிபோல் படுத்து விட்டார். காலங்கள் எப்படிப்பறந்தனவோ, என்னவோ, சிற்றம்பலத்தார் அண்மையில் ஆக்கிரமித்துக் கொண்ட பாரிசவாதப் பிடிப்பால் படுத்த படுக்கையாகி விட்டார். ஆனால் மனம் இன்றும் துயிலவில்லையே. வீட்டின் ஒரு அறையில், அவருக்கு ஒதுக்கிய இடத்தில் இரவு பகல் பேதமின்றிக் காலத்தைக் கடத்துவதுதான் சிற்றம்பலத்தாருக்குப் பெரிய திண்டாட்டமாய்ப் போய்விட்டது. எத்தனை நாட்களுக்கு நான் இப்படிக்கிடப்பது? நான் முன்பிருந்த நிலை என்ன? வாழ்ந்த வாழ்க்கை என்ன? இப்படியே என்னைக் கடவுள் கிடத்திவிட்டார்... என அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனைப்பட்டார். அவரது நினைவுகளில் மனைவி தங்கம் அடிக்கடி வந்துபோகவே இதென்ன? மாய உலகம்? பகடைக்காய் விளையாட்டுப்போல இருக்கிறது எனச் சலித்துக் கொள்வதும், உடல் வேதனையைச் சமாளிப்பதும், ஆமிக்காரரின் பீரங்கிச் சத்தத்தைக் கேட்டு, காது அடைபடுவதுமாக வாழ்க்கை ஊர்ந்து கொண்டு போவதை உணர்ந்து சலித்துக் கொள்வதுமாக இவரது வாழ்க்கை வண்டி உருண்டு கொண்டிருக்கிறது.

மனைவி உயிருடன் இருக்கும்போது அதிகாரத் தொனியோடு, செல்லப்பிள்ளையாகத் திரிந்த இவர் இப்போது ஆதரவற்ற நிலையில் இருப்பதை எண்ணி வேதனைப்பட்டார். மனைவியின் இழப்பு வெகுவாக அவரைப் பாதித்துவிட்டதன் விளைவுதான் திடீரென ஆக்கிரமித்துக் கொண்ட பாரிசவாதமாகும். பக்கத்து வீட்டிலுள்ள அவரது உறவினரான கந்தசாமி இடைக்கிடை வந்து அவருக்கு உதவி செய்வதும், சுகம் விசாரிப்பதும் வழக்கம். வழமைபோல சுகம் விசாரிக்க வந்த கந்தசாமி, "என்ன அப்பு? இன்னும் எழும்பவில்லையோ? ஏதும் தேநீர்... பாண் கொண்டு வந்து தரட்டா? பசியில்லையா? எழும்பி கால்முகத்தைக் கழுவுங்கோ! அப்பு..."

"வேண்டாம் தம்பி!... இப்ப சற்று முன்னர் மல்லித் தண்ணீர் குடிச்சனான் வயிறு பொருமிக் கொண்டிருக்கிறது. சம்பாடு அடையவில்லைப் போல இருக்கிறது. பிறகு பார்ப்பம்! கொண்டு வந்த தேநீரையும் பாணையும் வைச்சிட்டுப் போ தம்பி! எனக்காக நீ உன் வேலையையும் ஒதுக்கிக் கவனிக்கிறாய்! உனக்கும் இடைஞ்சலாக நான் எத்தனை நாட்களுக்கு முட்டுக் கட்டையாக இருக்கப் போகிறேனோ தெரியாது. கண்கெட்ட அந்தக் கடவுள் என்னைக் கொண்டு போகுதும் இல்லை..."

"பெரியவரே! நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். யோசிக்காமல், மனதை அலைத்து வருந்தாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு சாப்பிடுங்கோ. இதில் சாப்பாட்டை வைச்சிட்டுப் போகிறேன்."

"ஓம் தம்பி! அந்தப் பெட்டிக்கு மேலே வைச்சு விடு! அதுதான் எனக்குப் பழக்கப்பட்ட இடம்... தம்பி! போய் வா!" எனக்கூறி விட்டு தலையணையில் தலையைச் சாய்த்துக் கொண்டார். சரிந்த நிலையிலிருந்த கால்களை நிமிர்த்த முயன்றபோது, "ஐயோ!" என அவரது வாய் அலறியது.

"என்ரை தங்கம் இருந்தால் நான் இப்பிடியா இருக்கப்போறன். பாவி, பாதியிலே என்னை நிர்க்கதியாக்கி விட்டுப் போய்விட்டாளே. குழந்தைப் பிள்ளைமாதிரி என்னைக் கவனிப்பாளே, தங்...கம். என்று வாய் திறந்து கூப்பிட்டு முடிக்குமுன்னர் எனது காலடியில் வந்து நிற்பாளே. என் தேவை அறிந்து, குறிப்பறிந்து செய்யும் என் தங்கத்தை நினைக்க நினைக்க... வயிறு பற்றி எரிகிறதே. நான் கோபத்துடன் சிலவேளை அடித்தாலும் எதிர்ப்பேச்சுப் பேசாமல் வாய்பொத்தி நிற்பாளே. அவள் தங்கமான மனைவி. தங்கமான பெண். பிள்ளையிலோ அவளுக்குத் தனிப்பாசம். அதற்கீடாக என்னிலோ ஒரு பிரத்தியே பாசம். பாவம் பிள்ளைகள் என்று இவங்களைப் பெற்று, "என்னைப் பார்ப்பார்கள்" என்று நம்பிப் பெத்து எல்லாம் உதவாத காலமாக இப்போது மாறிவிட்டது. பிள்ளைகளில் தங்கி வாழ்வதும், அவர்களை நம்பி வாழ்வதும் என்ற வாழ்க்கை எல்லாம் இப்போது மலையேறி விட்டதே" என மனம் புழுங்கினார்.

"என்ன் கலியுக காலம்? ஒன்றுக்கு ஐந்து பிள்ளைகள் என்று எனக்கிருந்தும் அனாதையாக நான் இருக்கிறேனே. இது யார் செய்த பாவமோ தெரியாது. இரண்டு பெண்பிள்ளைகளும், மூன்று ஆண் பிள்ளைகளும் இருக்கிறார்கள், தள்ளாத காலத்தில் உல்லாசமாக வாழலாம் என்று என்னென்னவோ கற்பனையில் மிதந்தோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது ஏதும் அற்ற எதிரியாக இருக்கிறேனே கடவுளே! எல்லாம் என் தலை எழுத்து.

"அவன் பெரியவனில் எனக்கு எத்தனை பிரியம். அவனைப் படிப்பிக்க எவ்வளவு கஸ்டப்பட்டனான். உத்தியோகத்தனாக வந்து என்னைப் பார்ப்பான். அவனது நிழலில் நான் இளைப்பாறலாம் என்றுதானே நம்பி, ஆளாக்கி, அறிவூட்டி வளர்த்தேன். என்னவோ எனக்கு பெரியமகனில் கொள்ளைப் பாசம்தான்.

உழைத்துக் காசு கொண்டு வாறேன் என்று வெளிநாடு வெளிக்கிட்டான். எனக்கும் விருப்பம் இல்லைத்தான். இருந்தும் பணத்தை வெளிநாட்டில் வெட்டி அள்ளு கிறாங்கள், என்று கேள்விப்பட்டு அவனை வெளிநாட்டுக்கு அனுப்பி வைச்சேன். காசுகளும் மாதாமாதம் கனக்க அனுப்பினவன்தான். பிறகு... பிறகு... தனது சகோதரர்களை எல்லாம் வெளிநாட்டுக்கு அழைத்துவிட்டான். படிப்படியாக இந்த ஐந்து பிள்ளைகளும் பணம், பொருள், தேடலாம் என்றும் செல்வாக்கோடு வாழலாம் என்றும் ஆசைப்பட... நானும் ஆசைப்பட்டு எல்லோரையும் அனுப்பி விட்டேன்.. கிழடுகள் என்று என்னையும் தங்கத்தையும் அங்கு கூப்பிடாமல் விட்டுவிட்டார்கள். நல்லாக காசு அனுப்பினார்கள்; பொருட்களை அனுப்பினார்கள். சந்தோஷமாகத்தான் இருந்தோம். பிள்ளைகளைப் பிரிந்திருக்கும் கவலை நாளுக்கு நாள் கூடியபோதும் ஏதோ பிள்ளைகள் நல்லா இருந்தாற் சரி. அவர்கள் திருப்திதான் எங்கள் திருப்தி என்று எண்ணியது தப்பு என்பது இப்போதுதான் புரிகிறது. இப்ப... காசு பொருள் எதுவும் வேண்டாம். பிள்ளைகளின் முகங்களைப் பார்க்க வேண்டும் போல இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் யாவரும் வெளிநாடு போய்விட்ட கொஞ்சக் காலத்தில் அவர்களின் பிரிவைப் பொறுக்க முடியாமல்.. மனதைக் கல்லாக்கி வாழ்ந்த தங்கம் குண்டு வீச்சுக்குப் பலியானதை எண்ணிப்பார்க்கவே முடியாது. மக்கள் இல்லாமல் மரணக்கிரிகையை நான் நடாத்தினேன்... அப்போது எனது மனம் ஓலமிட்ட சத்தம் யாருக்குப் புரியும்? யாருக்கு கேட்டிருக்கும்? எல்லாம் கனவாகப் போய்விட்டது.

எனது இந்த இறுதிக்காலத்தில் என் பிள்ளைகளின் முகத்தை நான் பார்க்க வேண்டும். நான் பெற்ற என் வம்சத்தை நான் கண் குளிரப் பார்க்க முடியாதா? உயிருடன் நான் இருந்தும், என் பிள்ளைகள் இருந்தும் பார்க்க முடியாமல் இருக்கிறதே. இது எதற்காக? யார் அமைத்த சட்டம் இது? ஒன்றுமே புரியவில்லை. நம்பி நான் பெற்ற செல்வங்களை நான் இப்ப பார்க்கவேணும்... ஐயோ! கடவுளே! பல லட்சம் காசு, பல கோடி சொத்துக்களை நான் பார்க்க முடியாது. உண்மைதான். என்னைப் பொறுத்தவரை அது இயலாத ஒன்று. ஆனால் நான் பெத்த பிள்ளைகளை நானே பார்க்கமுடியாதா? இதென்ன கொடுமை? இதென்ன உலகம்? இப்படி ஒரு நியதி எமக்கு ஏற்பட்டதேன்?

டுமீல்... டுமீல்... டுமீல்... டும்.. டும்.. சத்தம் சத்தங்கள் சிற்றம்பலத்தாரின் நினைவலைகளில் கற்களாக விழவே, சுய நினைவுடன் காதுகளை இறுகப் பொத்திக் கொண்டார். இந்தா... ஐயோ! இந்தா வெளிக்கிட்டிட்டாங்கள். இந்தச் சந்தங்களுக்கு எவ்வளவு பலம்? உள்ளம் படபடக்கிறதே. இச்சத்தங்கள் எத்தனை மாற்றங்களை உலகில் ஏற்படுத்து கிறது? சத்தம் வெறும் சத்தம்தான். ஆனால் அவை பிரசவிக்கும் இடங்கள், அதன் தாக்கம் எங்கே போய்ச்சேரப் போகின்றன? என்று அவர்களுக்குத்தான் தெரியும். மிருகங்களை வேட்டையாடும்போது சுடப்படும் துவக்குச் சத்தம், கிணறு வெட்டும்போது பாறையைப் பிளக்க வைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடியின் சத்தம் எல்லாம் ஒரு ரகம்தான். ஆனால் இந்தப் பாழாய்ப்போன ஆமிக்காரரின் சத்தத்தினாற்தான் என்னுடைய பிள்ளைகள் வெளிநாடு என்று வெளிக்கிட அவர்களைப் பார்க்காமல் இருக்கிறன்... அவர்களுக்கு என்னைப் பார்க்கவேணும் என்ற துடிப்பு இல்லாமல் இருக்கலாம். எனது இந்தச் சாகிற வயதிலே... என்ர வம்சத்தைப் பார்க்க முடியாமல் இருக்கிறன். இந்த ஆதங்கம் எல்லாம் அவர்களுக்கு எங்கே விளங்கப் போகிறது? அவர்களும் நினைத்தவுடன் இங்கு வரமுடியுமா? வந்தும் இங்குள்ள பிரச்சினைக்குள் அகப்பட்டுவிட்டால் என்ன செய்வது?

பசித்த நாய் கூட நக்கிப் பார்க்க முடியாத இந்தக் கடதாசிக் காசுகளைப் பிள்ளைகள் எனக்கு அனுப்புறாங்கள்? அது அனுப்பினால் தங்கள் கடமை முடிஞ்சுது என்று நினைக்கிறார்களாக்கும்... இந்தக் காசுக்கு எனது துடிப்பை நீக்கும் வழி உண்டா? இந்தச் சத்தம் ஓய்ந்தபாடில்லை... அவர்களும் வந்தபாடில்லை. பூலோகத்தில் இருந்து கொண்டு எனது பிள்ளைகளைப் பார்க்க முடியாத நான் மேலோகத்தில் எப்படி எனது தங்கத்தைப் பார்க்கப்போகிறேன்? சிலவேளை இதுதான் மெய்யாக நடக்கும் போல இருக்கிறது.

இந்தா... எங்கட வீட்டுக்கு அருகில் சரசரத்து, கேட்குது... சப்பாத்துச் சத்தம் கேட்குது... கதைத்துக் கேட்குது... அதால அந்தப் பாதையால் ஆமிக்காரன்கள் போறாங்கள்... என்னவோ... செய்யுது? என்னை இழுத்தெறிகிறாங்களோ தெரியாது... துவக்கி வைத்து வேட்டையாடிய எனக்கு, துவக்குச்சத்தத்தைக் கேட்டுச் சரீரம் சுருங்கி மடிகிறது. அப்பவும் இச்சத்தத்தை நானே உண்டாக்கி இரசித்தேன். இப்பவும் அதே மாதிரிச் சத்தம்தான். ஆனால் ஒரு வித்தியாசம்... ஆ... இடப்பக்கம் சரிய முடியவில்லை... காலும் விறைத்து விட்டது... நான் துவக்குத் தூக்கின கை இயக்கமின்றி... ஆ... வேதனையாக இருக்குது... நானும் துவக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைச்சிருந்தனான்... சத்தம் இரண்டும் ஒன்றுதான். ஆனால் குறிதான் வேறு. இந்தச் சத்தங்களின் நோக்கமும் வேறுமாதிரியல்லவோ? என்னுடைய வாயும் அடிக்கடி சத்தம் போடும்... மகனே! தம்பி! மக்களே! என்று மனம் ஊனமாக முனகுகின்றது. இச்சத்தங்கள் வெளியில் இருக்கும் எனது மக்களுக்குக் கேட்குமா?.. சிலவேளை எனது இச்சத்தங்கள் அடங்கிவிட்டால் எனக்குப் புதிய வலு பிறக்குமாம். அப்போது நான் வானிலும் பறக்கலாமாம். கடலையும் கடக்கலாமாம். ஆமித் தொல்லையும் தடைகளும் இல்லையாம். தனிமனித சுதந்திரம் அனைத்தும் உண்டாம்... அதுதான் எனக்கு வேண்டும்.

"பூமியில் உயிருடன் பார்க்காததை இனி நான் செத்தபிறகுதான் பார்க்கலாம் என்ற நியதிக்குட்பட்ட முதல் ஆள் நானாகத்தான் இருக்கப் போகிறேன். அதாவது உயிரோடு இருந்து காணமுடியாத என் பிள்ளைகளை நான் செத்தபிறகு ஆவியாகப் போய்ப் பார்க்கப் போகிறேன் என்ற திருப்தி என் மனதை நிறைக்கிறது.

நான் பெத்த மக்களை மட்டுமா? அதற்குக் காரணமான தங்கமான என் மனைவியையும் மேலோக்கத்தில் சந்திப்பேன், என் மூச்சுச் சத்தம் அடங்கியதும் எனக்குச் சுதந்திரம். எங்கும், எந்த நாட்டுக்கும் போய் வருவேன்... விசாப்பிரச்சினை இல்லை. நோய் இல்லை. மூப்பு இல்லை... எனக்கு என்னவோ மனைவி முகம்... மக்கள் முகம் மங்கலாகத் தெரிகிறது... தங்கம்! என் தங்கம்! மகனே!.... உங்களைப் பார்க்க வருகிறேன்...

"அப்பு! சாப்பிட்டியளே!" என்ற கந்தசாமியின் கேள்விக்கு, சிற்றம்பலத்தாரிடமிருந்து எதுவித பதிலுமில்லை. இவர் உயிருடன் வாழ்ந்து காணமுடியாததைக் காண்பதற்கு ஆவியுருக்கொண்டு காணப்புறப்பட்டு விட்டாரோ? சிற்றம்பலத்தார் மட்டும் அல்ல... எத்தனை பாச உறவுகள் எத்தனை? எத்தனையோ?

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரும்பு தந்த திருப்பம்

காலைப் பனிக்குளிரின் தாக்கத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முயன்ற பிரகாஷ், போர்வையை மீண்டும் இழுத்துப் போர்த்திப் படுத்துக் கொண்டான். பின் ஏதோ திடீர் நினைவு அவனை எழுப்பவே, தலையைத் திருப்பி எத்தனை மணி என மணிக்கூட்டை நோட்டம் விட்டான். மணிக்கூட்டின் சிறியமுள் 5.30ல் நிற்கவே, இன்னும் 6.00 மணிக்கு நேரம் இருக்கிறது என்பது அவனுக்கு நீண்டநேரம் போல் தோன்றவே கண்ணை இறுக்கி மூடிக்கொண்டான். தன் மனைவி தேவகி, உள்ளாடை முதல் காலணி வரை எடுத்து வேலைக்குப் போவதற்கான சகல ஆயத்தங்களைத் தனக்குச் செய்து வைப்பாள் என்ற எண்ணமே பிரகாஷை இன்னும் படுக்கையில் நிறுத்தி வைத்தது.

தேவகி காலை 4.30 மணிக்கே எழும்பி, பிரகாஷ் வேலைக்குக் கொண்டு செல்வதற்கான உடைகளையும், காலை உணவாக இடியாப்பம் அவித்துப் பார்சல் செய்தும், விசிற்றிங் கோலில் உள்ள மேசையில் தயாராக வைத்தாள். பின் தேநீர் வைத்து தானும் அருந்தியபின் கணவனுக்கும் கொடுப்பதற்காக கட்டிலை நோக்கிச் சென்றாள். ஆழ்ந்த நித்திரையில் மூழ்கியிருந்த பிரகாஷை எழுப்புவதற்கு மனம் உடன்படாமல் அவனைக் கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள். பின் மணிக்கூட்டை ஒருமுறை பார்த்து விட்டு, "நேரம் ஆகிவிட்டது என" அவனது முகத்தைத் தடவித் தடவி எழுப்ப முயன்றாள். தேவகியின் கரங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்பரிசத்தால் திடுக்கிட்டுக் கண்திறந்த பிரகாஷ் "என்ன நேரமாகிவிட்டதா? இவ்வளவு நேரமும் ஏன் என்னை எழுப்பவில்லை?" எனச் சிறிது கடிந்தவாறே, அவள் கொடுத்த தேநீரையும் ஒரே மிடறில் பருகிவிட்டு, பாத்ரூமை நோக்கி ஓடினான். பாத்ரூமில் தடதடவென பொருட்கள் வரும் சத்தம் கேட்டன,

"இதென்ன இந்த மனுஷன்? கிடக்கும் வரையும் கிடந்துவிட்டு, எல்லாவற்றையும் தட்டிக் கொடுக்கிறார்," என எண்ணியவளாய் வேறு வேலையில் ஈடுபட்டிருக்கும்போது,

"தேவகி! எங்கேயப்பா ரூத் பேஸ்ற்? இந்தப் பிள்ளையளுக்கு விளையாட வேறு விளையாட்டுப் பொருட்கள் இல்லாமல் இதையா எடுத்து விளையாடுதுகள்? தேவகி! எங்கே ரூத் பேஸ்ற்?" என்று சத்தம் போட்டான்.

பிரகாஷின் அவசரத்தையும் கோபத்தையும் உணர்ந்த தேவகி, "ஏனப்பா கத்துகிறீர்கள்? பிள்ளைகள் எழும்பப் போகிறார்கள்," எனக்கூறியவாறு, "பாத்ரூமைத் திறவுங்கோ! நான் எடுத்துத் தருகிறேன், என்று கூறி உள்ளே நுழைந்தாள். அங்கே ரூத் பேஸ்ற், ஸ்பிநேரின்களுக்குப் பின்னால் இருந்ததைக் கண்டு எடுத்துக் கொடுத்தாள்.

"இங்கே தாரும்? அதை ஏன் பின்னால் ஒளித்து வைத்தனீர்? யாரும் விசிற்றேர்ஸ் எடுத்துவிடுவார்கள் என்றா?" என்று கூறியது தேவகியின் காதில் விழுந்தபோதும், அதை அவள் பொருட்படுத்தவில்லை.

பிரகாஷின் சத்தத்தால் நித்திரை குழம்பி எழுந்த தினேஷ், "அம்மா! அம்மா!! தேத்தா... பால்...." என அழத் தொடங்கவே அவனுக்குக் கொடுப்பதற்காக பால் காய்ச்சுவதற்குச் சட்டியை அடுப்பில் வைத்தாள். அப்போது, "எங்கேப்பா எனது துவாய்? அதையும் காணவில்லை?" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகாஷ் குரல் கொடுக்க, "இந்தா வருகிறேன்," எனக்கூறிக் கொண்டு அவனது துவாயை எடுத்துக் கொடுத்தாள். பின் அடுப்பில் வைத்த பாலைப் பார்த்த போது, இன்னும் பொங்க ஆயத்தமாகவில்லை... ''சுடும்''... என இடுப்பில் இருந்த தினேசுக்கு, பராக்குக் காட்டிக்கொண்டு இருந்தாள். பின்னும் கோலில் இருந்து... "தேவகி..." எனது சொக்ஸ் எங்கே? இதுகள் எல்லாம் எங்கே மாயமாக ஓடி மறையுதுகள், வீட்டில் இருந்து கொண்டு இதை எல்லாம் எடுத்து வைக்காமல் என்ன செய்கிறீர்?" என்று ஏசியவாறு, கால் நிலத்தில் நில்லாத அவசரத்தில் நின்றான் பிரகாஷ்.

கையில் பிள்ளை பாலுக்கு அழுதுகொண்டிருக்கிறது. மறுபக்கம் கணவன், ''நேரமாகிவிட்டது'' எனக் கத்திக்கொண்டு நிற்கவே, "என்னடா, சனியன் பிடித்த வாழ்க்கை?" எனத் தன்னையே வெறுத்துக் கொண்டாள்.

இந்த மனுஷன் கிடக்கும் வரையும் நிம்மதியாக நித்திரை செய்துவிட்டு, இப்போது "நேரத்தைப் பிடித்து நிற்பாட்டு" என்று சொல்வது போல் நிற்கிறார். "ம்... வெளிநாட்டு வாழ்க்கையும் ஒரு வேலையும்" எனச் சலித்துக் கொண்டாள். ''பின் இந்தாங்கோ.. சேர்க்ஸ்'' என்று கொடுத்துவிட்டு, மற்றைய பொருட்களையும் எடுத்துவந்து அவனுக்கு அருகில் வைத்தாள். கையிலிருந்த பிள்ளையை இறக்கிவிட்டபடியால் பிள்ளை அழுது கொண்டிருந்தது.

''இந்தாங்கோ... கார்த்திறப்பு. வேலைத்திறப்பு.. மணிபேர்ஸ் - பாக்... எல்லாம் இருக்கின்றன" எனக் கூறிவிட்டு அழுத பிள்ளையைத் தூக்குவதற்காகச் சென்றாள்.

பிரகாஷ், அவசர அவசரமாக எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு... "இனி நிம்மதியாக இரு தேவகி!" எனக் கூறிக் கொண்டு சென்றுவிட்டான். தேவகியோ அவளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியனுப்ப வந்தபோது - காரின் பின்பக்கத்தைத்தான் அவளால் பார்க்க முடிந்தது.

"வேலை... வேலை... என்று இவர் ஓடுகிறார்.... ஏதோ மற்றவர்கள் செய்யாத ஒரு வேலையை இவர்தான் செய்வது போன்ற எண்ணம். ஜேர்மனியில் தான் மட்டும் வேலை செய்கிறேன் என்ற எண்ணமோ, என்னவோ... எப்போதும் இதே நிலைமைதான் பிரகாஷ்க்கு! என்று எண்ணிய தேவகி மற்றப்பிள்ளையை எழும்பி, கிண்டர் காடினுக்குக் கொண்டு போக ஆயத்தமானாள்.

தாயகத்தில் இருக்கும் போது பாங் ஒன்றில் வேலை செய்த தேவகி, இங்குவந்து அவள் படும் அவஸ்தைகள் பற்பல. படித்தபடிப்பால் பயனற்ற நிலை, அவளை என்றும் வருத்தியது. இங்கு வாழ் தமிழ்மக்களிடையே உள்ள ஒற்றுமை யற்ற தன்மை, போட்டி, பொறாமை, வதந்திகளுக்கு உயிரூட்டி வளர்த்துவிடும் சாமர்த்தியம், வீண் ஆடம்பரங்கள், எதிலும் பிரிவினைகள், எல்லாம் இவளுக்கு வேப்பங்காய்களாக இருந்தன. அப்படியிருக்கும்போது, வெளிநாட்டிலே பேசி முற்றாக்கித் திருமணம் செய்து கொண்ட கணவனின் சோம்பேறித்தன்மை, பொறுப்பற்ற தன்மை மேலும் அவளைச் சலிப்புக்குள்ளாக்கின. தாயகத்தில் பிரச்சினை என்றாலும் இதைவிட நிம்மதியாக இருந்திருக்கலாம் எனவும் எண்ணினாள்.

பிரகாஷ், ரெஸ்டாரண்ட் ஒன்றில் வேலை செய்தாலும் அவனுக்கு சிலோன் சாப்பாடுதான் தேவை. சாப்பாட்டுக் கடையில் வேலை செய்து கொண்டு, வீட்டி லிருந்து சாப்பாடு கட்டிக்கொண்டு போகும் ஒருவன் பிரகாஷ் ஆகத்தான் இருக்கும். தேவகி இங்கு வந்த புதிதில் கணவனுக்காக, விரும்பிய சிலோன் சாப்பாட்டைச் செய்து கொடுத்து... தேவகி மகிழ்ச்சியடைந்ததுண்டு. அப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவகிக்கு பிள்ளைகள் என்ற பொறுப்பு இல்லை. தனக்குப் பிடித்ததையும், பிரகாஷுக்குப் பிடித்ததையும் மிக்க ஆசையோடு தேவகி செய்து கொடுத்தாள். அதையே இப்போது மூன்று பிள்ளைகளுக்குத் தாயான பின்பும் பிரகாஷ் எதிர்பார்ப்பது அவளுக்குச் சிரமமாக இருந்தது. தேவகி இப்பழக்கத்தைச் சற்றுத் தளர்த்த முயன்றபோதும், பிரகாஷ் விட்ட பாடில்லை. ஒவ்வொரு நாளும் காலைச் சாப்பாடாக தோசை, இட்லி, பிட்டு, இடியாப்பம் என்பன கட்டிக் கொடுப்பது வழக்கமாகிவிட்டது. இதனால் அவதிப்படுவது தேவகி என்பதை பிரகாஷால் ஒருபோதும் உணரமுடியவில்லை. காலை 6.00 முதல் மாலை 15.00 மணி வரை ரெஸ்டாரண்டுக்கு வேலை செய்துவந்தவுடன், உலகத்து வேலை எல்லாவற்றையும் செய்துவிட்ட நினைப்பும் ஒரு களைப்பும் பிரகாஷ்க்கு வரும். ஆனால் நாள் முழுக்க வீட்டிலே- வீட்டு வேலை, பிள்ளைகளின் வேலை, கணவனின் வேலை, சமையல் வேலை என்று பம்பரமாய் நிற்கும் மனைவி- வீட்டில் சும்மா இருக்கிறாள் என அவன் நினைத்துக் கொள்வான். மற்றவர்களுக்குச் சொல்லும் போதும் "தேவகி வீட்டுல... சும்மாதான் இருக்கிறா..." என்று சொல்வான் ஆனால், அவன் தன் வேலை தவிர மற்றைய நேரங்களில் அவன் சும்மா இருப்பது அவனுக்குத் தெரிவதில்லை. இது அவனது குற்றம் அல்ல. எமது சமுதாயம் பெண்ணின் மேல் போர்த்திய மேலாடை இது.

பிரகாஷ்... ரெஸ்ரோறண்டில் ஓய்வு நேரம் கிடைத்தால் "பாட்டி" என்று ஜேர்மன்காரர்களுடன் பாடி ஆடி மகிழ்ச்சியாகக் களித்துக்கொள்வான். ஆனால் தேவகிக்கே வீடு, குடும்பம், குழந்தைகள்.. என்ற வட்டத்துக்குள்ளேயே மகிழ்ச்சி இருந்தது. தேவகி தாயகத்தில் இருக்கும்போது மணக்கப்போகும் கணவனுடன் எப்படி எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியாக இருக்கப் போகிறேன் என்று தான் கண்ட கனவு இப்போது ஞாபகத்துக்கு வந்தது.

நாட்டுப்பிரச்சினை என்று வந்து நரகவேதனை வாழ்க்கை- சிறைவாழ்க்கை. ஒரு அந்நிய வாழ்க்கை.. அவளைச் சோர்வடையச் செய்தாலும், சோம்பேறித்தனமும், முற்கோபமும் உடைய கணவனிடம் உள்ள வேறு நல்ல பண்புகளால் அவள் வாழ்க்கைப் படகு தளம்பலின்றிச் சென்று கொண்டிருந்தது.

நாட்கள் நகர்ந்தன. மூத்தவன் தினேஷுக்கு இப்போது வயது எட்டு ஆகிவிட்டது. வேலைக்குப்போகும் காலை நேரப் பல்லவி, வழமைபோல் நடந்து கொண்டிருந்தது. தேவகி பம்பரமாகச் செயற்பட்டாள். கடைக்குட்டி கீர்த்தனா. அமுதவண்ணம் அம்மாவுக்குப் பின்னும் முன்னுமாக ஓடிக்கொண்டிருந்தாள். அப்பா தடல்புடலாக அவசரமாகச் சத்தமிட்டபடி காணப்பட்டார். மெல்லக் கண் திறந்து எழும்பி வந்து கண்களைக் கசக்கிக் கொண்டு நின்றான் தினேஷ். அவனைக் கண்டதும் தேவகி, 'கண்ணா' நீயும் எழும்பி விட்டாயா? அந்தச் சோபாவில் இருங்கோ, பிள்ளைக்குப் பால் தர்றேன்" என்றுகூறி, பிரகாஷின் வேலைக்குரிய பாக்கை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தாள். அப்போது... தினேசுக்குப் பக்கத்தில் இருந்து சப்பர்ததை அணிய முற்பட்ட பிரகாஷ், சேர்கஸில் ஓட்டை இருப்பதைக் கண்டுவிட்டு, நேரம்போகிறது என்ற கோபத்துடன், "தேவகி! இதென்ன செர்கஸில் பீத்தல் இருக்கிறது. நீர் காணவில்லையா? வேறு ஒன்றைக் கெதியாகக் கொண்டு வாரும்! நேரம் போகுது.. கெதியா வாரும்..." என உரத்துக் கத்தினான். அப்போது பக்கத்தில் இருந்த தினேஷ், தகப்பனைச் சிறிது நேரம் நோட்டம் விட்டு, பின்னர், "அப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா! இது உங்கட சொக்ஸ்தானே... நீங்கள் தானே போடுறனீங்கள்? அப்பா!"

"ஓ... அதுக்கு என்ன? கரைச்சல் கொடுக்காமல் இரு குட்டி!" என்று கூறியபடி தேவசியை எதிர்பார்த்தபடி இருந்தான். மீண்டும் தினேஷ், "அப்பா! உங்கடை சொக்னில ஓட்டை இருக்கு என்று இப்பதான் உங்களுக்குத் தெரியுது... அம்மாவுக்கு எப்படியப்பா தெரியும்? இதில இருந்து அம்மாவைப் பார்த்துக் கொண்டு இருக்கிற நேரம் நீங்களே போய் வேற சொக்ஸை எடுக்கலாமே அப்பா! அம்மாவுடன் நெடுகவும் சத்தம் போட்டுக் கொண்டிருக்கிறீங்கள்" என்று தினேஷ் கூறியவை பிரகாஷின் நெஞ்சிலே ஆணிகளாக் குத்தின. இந்தப் பிஞ்சுமனத்தின் அறிவு இவ்வளவு வளர்ந்த எனக்கு இல்லாமல் போய்விட்டதே என எண்ணினான். தேவையில்லாமல் தேவகி மீது எரிந்து விழுவதன் காரணம் தனது சோம்பலே என்பதை உணர்ந்து கொண்டபோது, தேவகி சொக்ஸை அவனிடம் நீட்ட, அதை அணிந்து கொண்டு தேவகியிடம் என்றுமில்லாதவாறு அன்புடன் விடை பெற்றுச் சென்றுவிட்டான்.

இன்றைக்கு இவர் ஒருமாதிரியாக இருக்கின்றார். மகன் பக்கத்தில் இருந்தால் சந்தோஷமாக இருக்கலாம் எனத் தன் மனதில் எண்ணியவளாக அன்றாட அலுவல்களில் ஈடுபட்டாள். தேவகியின் மனமோ அன்று மகிழ்ச்சியால் துள்ளியது. தனது குழந்தையை அள்ளி அணைத்து ஆசையுடன் முத்தமிட்டாள்.

வழமையைவிட நேரத்துக்கு வந்த பிரகாஷ் தனது உடைகளைக் களைந்துவிட்டு, தன் வேலைகளைத் தானே செய்யத் தொடங்கினான். ஆச்சரியமாகப் பார்த்த தேவகியை அரவணைத்து, "என் மீது கோபமா? எந்த வேளையும் உம்மீது எரிந்து விழுந்து வேதனைப்படுத்தியிருக்கிறேன். வேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரத்தாலும் நித்திரை அவாவினாலும் உம்மைப்பற்றிச் சிந்திக்காமல் வாழ்ந்த எனக்கு, தினேஷ் பாடம் புகட்டி விட்டான் தேவகி! எனது சோம்பலே எனது கோபத்துக்குக் காரணம், எதையும் நீர் செய்வீர்தானே என்று உம்மீது எல்லா வற்றையும் சுமத்திவிட்டு, எனது வேலைகள், தேவைகளுக்கு, எந்நேரமும் உம்மை எதிர்பார்ப்பது எவ்வளவு தவறு.. எனது தேவைகளை நானே செய்யவேண்டும்" எனக்கூறி, தினேஷ் கூறியவற்றை தேவகிக்குச் சொன்னான். தேவகியோ, மகனின் கூர்மைப் புத்தியால் திருத்திவிட்ட தன்மையை எண்ணிப் பெருமிதம் அடைந்து, "இந்தக் காலத்துப் பிள்ளைகள் எல்லாவற்றிலும் கெட்டிக்காரர்கள். அதுவும் வெளிநாட்டில் பிறந்தவர்களின் மனோநிலையோ அறிவோ தனியானது."என அவள் கூறிமுடிக்குமுன், பிரகாஷ் அவளை அணைத்து வெளிநாட்டில் - "நீர்வாழ்ந்தாலும் எமது குடும்பப் பெண்களின் பாணியே நீ" எனத் தன்னருகில் அமர்த்திக் கொண்டான்.

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தியோகம் கிடைத்தது

சூரியக் கதிர்கள் பூமாதேவியைத் தழுவ ஆரம்பிக்கும் அந்தப் பொன்னான காலைப்பொழுது. பறவைகளின் ஒலிகள் நாலாபக்கங்களிலிருந்தும் ஒலித்தன. காலைப் பூசை நடந்து கொண்டிருப்பதற்கு அறிகுறியாக கோவில் மணி 'டாங் டாங்' என காதிற் புகுந்து இறையுணர்வை மனத்திலேற்றின. சூரியக்கதிர் ஓரளவுக்கு வெப்பமேற்ற தொடங்கும் நேரத்தில் சமையலறை வேலை முதல் பாத்ரூம் வேலைகள் வரை சகலவற்றையும் விரைவாக முடித்துவிட்டு வெளிவேலைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருந்தாள் தங்கமணி. முற்றத்தைக் கூட்டிப் பெருக்கி, பூங்கன்றுகளுக்குத் தண்ணீர் வார்த்துவிட்டுப் பின் துணிமணிகளைச் சலவை செய்து சூரிய ஒளிபடக் கூடியதாக அவற்றைக் கயிற்றிலே காயவிட்டு, கால்களில் ஒட்டியிருந்த மண்ணைக் கழுவுவதற்காக கிணற்றடிக்குச் சென்றாள். அப்போது அவள் நெஞ்சம் மீண்டும் வேதனையால் சுருண்டது. அவளது கண்கள் நேற்றிரவு நனையவிடப்பட்ட தென்னோலைகளை நோக்கின. அவற்றை அழகாகப் பின்னி உலரவைத்து, மீண்டும் அவற்றை வீட்டுக்குப் பின்னே இறக்கிவைக்கப்பட்ட விசாலமான தாழ்வார அறையில் அடுக்கிவிட வேண்டும்.

தென்னோலையைப் பின்னிக் கொண்டிருக்கும் போது, தங்கமணிக்கு பசியும் களைப்பும் ஒன்றையொன்று மோதின. அதனால் ஓடிப்போய் "அவக் அவக்" என்று அள்ளி அள்ளிச் சாப்பிட முடியுமா? அல்லது கதிரையில் போயிருந்து களைப்பாற முடியுமா? ஒன்றுமே செய்ய முடியாத நிலையில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வேலைகளை முடிக்காமல் செல்லக்கூடாது என அவள் எண்ணிக் கொண்டாள். களையோடு களையாக, கழித்து விடப்பட்ட பாலை முதிரை, வேம்பு, மா மரங்களின் வெட்டுக்குற்றிகளைக் கொத்தி விறகாக்க வேண்டும். சின்னஞ் சிறியதாக கொத்திய சிராய் விறகுகளுடன் சென்றுதான் உலையேற்றி மதிய உணவைத் தயார்படுத்துவாள். மதிய உணவு முடிவடைந்ததும் சமையலறையைச் சுத்தம் செய்து பழைய நிலைக்கு மாற்ற வேண்டிய பொறுப்பும் தங்கமணிக்குத்தான் உண்டு. மாலையானதும் அவளது கைகளைச் சும்மா இருக்கவிடுவார்களா? இரண்டு கொத்து மூன்று கொத்து என்று சிவப்பரிசி நினையவிடப்பட்டுப் பதமாக, இடிபட்டு மா ஆவதற்குத் தயாராக அவளை எதிர்பார்த்திருக்கும். இரவுச் சமையலை முடித்து விட்டு இரவு பதினோரு மணிக்குப்பின்தான் ஒரு நிம்மதியான நிலையில் உடல் ஓய்வு எடுத்துக் கொள்ள நித்திரையில் மூழ்குவாள் தங்கமணி.

தங்கமணி, பார்ப்பதற்கு துருதுருவென்ற விழிகளுடன் அழகாக இருப்பாள். ஓய்வின்றி வேலை செய்வதனால் ஏற்படும் களைப்பு அந்தப் பிஞ்சு முகத்தில் தெரிந்தது. இத்தனை வேலைகளையும் செய்யும் பெண் வாழ்க்கையின் இன்பதுன்பங்களைக் கண்டு பழகிப்போன பெண் அல்ல. வாழ்க்கை என்றால் என்ன? என்று கற்றுக் கொள்ளத் துடிக்கும் பன்னிரண்டு வயதுச் சிறுமி அவள். ஏழ்மையின் கோரப்பிடிக்குள் அகப்பட்டதும், மலையகத்தைத் தாயக மாகக் கொண்டதும்தான் இவளை இந்நிலைக்குள்ளாக்கியது.

அன்றொரு நாள், "ஆத்தா! நான் இரண்டாம் வகுப்பு படிச்சிட்டேன். இன்னும் ரண்டு மாசத்துல நான் மூண்டாம் வகுப்புக்குப் போவேன். என்னைக் கெட்டிக்காறி என்று எல்லா டீச்சரும் மாஸ்டரும் சொன்னாங்க. ஆத்தா! நான் கனக்கு படிப்புப் படிச்சு இந்தத் தேயிலைத் தோட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய உத்தியோகம் பாப்பன். நீ கவலைப்படாதை. தங்கச்சியையும் தம்பிகளையும் நான் கவனிப்பேன். இந்த லயத்திலேயே நாங்கள் நெடுகவும் சீவிக்காமல் ஒரு தனி வீடு வாங்குவேன். இந்த தேயிலைத் தோட்டத்தில் கங்காணியாக, அல்லது கணக்கு எழுதுற வேலைக்காரராக நான் பெரிசாக வளர்ந்து வருவன் ஆத்தா..." என்று தங்கமணி தாயாருக்குச் சொன்னாள்.

காமாட்சி தனது மூத்த புதல்வியின் பேச்சுக்களை மனதில் ஜீரணித்துப்பொருமினாள். ஐந்து குழந்தைகளின் வயிற்றைத் தமது வருமானத்தால் எப்படி ஆற்றிவிட முடியும்? தேயிலைக் கொழுந்து எடுக்கும் வேலையில் தன்னை முழுதாக ஐக்கியப்படுத்திவிட்ட அவள் வாழ்க்கை எப்போதும் இருண்டதாகவே இருந்தது. அவள் கணவன் கண்ணப்பன் மூட்டை தூக்குபவனாக, நடமாடும் சுமைதாங்கியாகி விட்டான். இருவரின் வருமானமும் அவர்களின் ஒரு நேரச் சாப்பாட்டிற்குத்தான் போதுமானதாக இருந்தது. இந் நிலையில் பிள்ளைகளைப் படிப்பிக்க வேறு செலவுகளுக்கு எங்கே போகிறது? அவற்றை அவர்களாற் செய்ய முடியுமா? தேயிலைக் கொழுந்து பறிப்பதற்குப் படிக்க வேண்டுமா? என்ற எண்ணம் காமாட்சியின் மனதில் உதிக்கும் "எங்களுக்கு என்ன படிப்பு? பணக்காரவர்க்கத்தினரின் பிடிப்பான வாழ்க்கைக்கு எங்கள் படிப்பு இடையூறாகிவிடுமல்லவா?' என்று ஏதேதோ சிந்திப்பாள். "அடிமைகள் போல் நாம் இங்கு. நமக்கெதுக்குப் படிப்பும் அறிவும்?' என்று மனம் குமைவாள். காலையில் எழும்பி அரைவயிறு கால் வயிறு என நிரப்பி தேயிலைப் பெண்களுடன் கதை பேசி, அவர்களது மேனித் தளிரைக் கொய்து விட்டு மலையானதும் லயத்துக்குச் செல்வதும் துயில்வதும் பின் எழும்பிக் கொழுந்து கொய்யச் செல்வதுமாக அவளது வாழ்க்கை சுழன்று கொண்டிருந்தது சுழற்சிச் சக்கரமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கமணியின் ஆவலையும், படிக்க வேண்டும் என்ற ஆசையையும் கண்ட தாய் கவலைப்பட்டு விட்டு, "மணி! நீ என்ன இனியும் படிக்கப்போகிறாயா? இவ்வளவும் காணும் தானே. தம்பி, தங்கச்சியை நீ பாக்கவேணும். ஓய்வான நேரத்தில் நீயும் தோட்டத்துக்கு வந்து தேயிலைக் கொழுந்து கொய்யுறதைப் பழக வேணும். நான் ஏலாமல் இருந்தால் நீ போகவேணும். இந்தத் தொழிலை விட்டால் எமக்கு வேறு என்ன உழைப்பு?"

"இல்லை ஆத்தா! நான் படிப்பேன். நான் பள்ளிக்குப் போவேன்."

"என்ன மணி! உனக்கு என்ன தெரியும். நீ உத்தியோகம் பாப்பியா? அதை நாம் சொல்ல எம்பிட்டு தகுதி இருக்கா? சும்மா பேசாமல் இரு... எதற்கும் நயினார் வரட்டுமே..." என்று சொல்லி முடிக்க முன் அந்த லயத்தின் முன்னே... அவர்களின் இருப்பிடத்தின் எதிரே... இருந்து யாரோ ஒருவரின் புதிய கனமான ஒலியாக, "யார் வீட்டில்?" என்ற தொனி கேட்டது. குரலைக் கேட்டு காமாட்சி வெளியில் வரவே தங்கமணி சிறு கயிற்றுத்துண்டுடன் மறுவழியால் எங்கோ சென்றாள் சிட்டுக்குருவி பறப்பதைப்போல. அவளை அந்த மனிதரும் கவனிக்கவில்லை.

காமாட்சி... "நாங்கதான் சாமி" எனக் கூறி அந்தப் பெரியவர் முன்னே குறுகி நின்றாள்.

"சாமி, இந்தப்பக்கம்... என்ன விஷயமுங்க?"

"உங்களிட்ட தான் ஒரு அலுவலாக வந்தனான்..."

"எம்புட்ட என்ன ஐயா இருக்கு?" மனம் பதை பதைத்துக் கொண்டு, "நான் தனியத்தான் இருக்கிறேன். நயினார் இன்னும் வரல்ல. வந்த பிறகு வாங்க சாமி... எங்களிட்ட என்ன ஐயா இருக்கு."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கட பிள்ளைகள் எங்கே? இருக்கினமா?"

மேலும் காமாட்சி பயப்பீதியுடன்... "ஓ.. வூட்டுல இருக்கினம்."

"மூத்த மகளுக்கு எத்தனை வயது?"

ஏன் அதைக் கேட்கிறாரு இப்ப என நினைத்தவளாக, "இந்த ஆடியோட பதினொன்றாகப் போகுதுங்க.."

"அதுதான் நல்லது."

"என்னங்க பேசுறீங்க?"

"உம்முடைய மகளை எனது வீட்டுக்கு அழைச்சுப் போகலாம் என்று நினைக்கிறேன். என்னுடைய மனைவிக்கு உதவியாக ஆட்கள் தேவை. அதுதான் இந்தப் பொம்பளைப் பிள்ளையைக் கூட்டிக் கொண்டு போகக் கேட்கிறேன். சம்பளம் எல்லாம் தருவோம். சாப்பாடு, துணி மணி எல்லாம் எங்கட பொறுப்பு. நாங்க கவனமாகப் பார்த்து உமது பிள்ளையை வளர்த்து விடுவோம். எங்களுடைய பிள்ளைகக்கு இவ உதவியாக இருப்பா. என்ன சொல்கிறீர்?"

"பச்சைப் பிள்ளை சாமி! என்னை விட்டுப் பிரியிறதை நினைக்க வயிறு எரியுது.. என்னோட இருந்தால் தான் எனக்கு சந்தோஷம் சாமி.."

"ஏன்? உங்களுக்கு மாதா மாதம் நான் காசு அனுப்புவேன். மற்றப் பிள்ளைகளும் இருக்கிறார்கள். எல்லோரும் ஏன் ஒன்றாக இருந்து கஸ்டப்படுகிறது? நீங்கள் அனுப்பி விடும்."

"ஆமா, நீங்க சொல்றது சரி... ஆனால் அந்த பிஞ்சு மனதை எண்ணித்தான் யோசனையாய்க் கிடக்கு. தாய் முகத்தைக் காயாது எத்தனை நாள் சாமி? உங்க விட்டில இருக்கிறது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுக்கு நீர் யோசிக்கத் தேவையில்லை. நான் உமது மகளை இடைக்கிடை நல்ல நாள் பெரு நாளுக்கு கூட்டிக் கொண்டு உங்களுக்கு காட்டுவேன். கவலைப்பட வேண்டாம்."

"என்ன சாமி! என்னவோ? மனசு சரிப்படுகுதில்லை."

"இல்லை... இல்லை.. நீர் யோசிக்க வேண்டாம்.. நாங்கள் கவனமாகப் பார்ப்போம். எங்கட பிள்ளையள் மாதிரி கவனிப்போம்."

இவற்றுக்கு மேல் காமாட்சியால் மறுப்புத் தெரிவிக்க முடியவில்லை. பட்டினியும், பஞ்சமும் அவளை அவ்வாறான முடிவுக்குத் தள்ளியது. "மணியாவது அந்தப் பெரியவரிடம் போய் நாலு வேளை சாப்பிட்டு வாழட்டும். எங்கிருந்தாலும் அவள் நிம்மதியாக வளரட்டும். மற்றப் பிள்ளைகளை நான் பார்த்துக் கொள்ளுவேன்'' என்று எண்ணியவளாக, இருதலைக்கொள்ளி எறும்புபோல் நின்றாலும், பின் மகளை அனுப்பி வைக்கச் சம்மதப்பட்டுவிட்டாள்.

"ஆண்டவன் தான் சாமி பொறுப்பு" என்று கூறிவிட்டு, "நயினார் வந்தவுடன் அவருடன் கதைச்சு வைக்கிறேன். நாளைக்கு மவவை (மகளை) அழைச்சிட்டுப் போங்க" எனக் கூறினாள்.

அந்தப் பெரியவர் நாளை வருவதாகக் கூறி விட்டுச் சென்றார். அவர் போய் சில மணி நேரங்களுக்குப்பின் தங்க மணி பெரிய விறகுக் கட்டுடன், தூக்கமுடியாத சுமையுடன் வந்து சேர்ந்தாள்.

"ஆத்தா! இந்தா, அஞ்சு நாளைக்கு நான் விறகு கொண்டு வந்திட்டேன்." என்று சிறு பெருமை கலந்த களிப்புடன் கூறினாள்.

"ஆமா கண்ணு! அஞ்சு நாளைக்குப் பிறகு எனக்கு யார் விறகு பொறுக்கித் தரப் போகினம்?" என்று கூற, அவளது பெற்ற வயிறு புகைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் ஆத்தா? நான் சும்மா சொன்னேன். நான் பிறகு பொறுக்கிக் கொண்டு வருவேன் ஆத்தா."

"இல்லை மணி! இனி நீ பொறுக்கமாட்டாய்."

"ஏன் ஆத்தா எனக்கென்ன? வயித்துப்போக்கு, வருத்தம் எதுவும் இல்லையே."

"ஆமா, கண்ணு! வருத்தம் உனக்கு இல்லை. நீ சுகதேசிதான். இல்லாட்டி இந்த உத்தியோகம் உனக்கு கிடைக்குமா?"

"எனக்கு உத்தியோகமா?"

"ஆமா மணி! உனக்கு உத்தியோகம் கிடைச்சிட்டுது? நீ படிக்காமலேயே உத்தியோகம் கிடைச்சுட்டுது... நீ உழைச்சுத் தரப் போறியாம்..."

"என்ன ஆத்தா! நீங்க புதுசா இப்போ சொல்றீங்க,"

"நானு சொல்றது உண்மைதான் மணி! உனக்கு வடமாகாணத்தில், யாழ்ப்பாணத்தில, இம்பிட்டு தூரத்துக்கு அப்பால் உத்தியோகம் கிடைச்சிருக்கு..."

ஒரு பெரியவர் வீட்டில கிடைச்சிட்டுது. ஒரு பிள்ளை, பிள்ளையைப் பராமரிக்கும் உத்தியோகம்தான் மணி. இதுக்கு ரண்டாம் வகுப்பே போதுமாம். என்னவோ பிள்ளை அந்த உத்தியோகத்தைச் செய்து நீயாவது நாலு வேளை சாப்பிட்டுச் சந்தோஷமாக பணக்காரர்கள் வீட்டில இரு. எங்களைப் பற்றி நீ கவலைப்படாதே. உன்னை இங்கு எங்கட வீட்டுக்கு அவர் சிலநேரங்களில் கூட்டிக் கொண்டு வருவாராம். அப்ப நீ, எங்களைப் பார்க்கலாம், தம்பி தங்கையைப் பார்க்கலாம். நாங்களும் உன்னைப் பார்ப்போம். நீ சிரிச்சுக் கொண்டு அந்தப் பெரிய ஐயாவுடன் போக வேணும் என்ன கண்ணு!"

"ஆத்தா! நான் போகமாட்டேன். தெரியாத ஆட்கள் வீட்டில் நான் எப்படி போய் இருப்பது? எனக்கு உங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுப் போக மனமில்லை ஆத்தா! தனியாக நான் எப்படி அங்கு இருப்பது? நீங்கள் எல்லாரும் இங்கு இருக்கிறியள். ஆரு விறகு பொறுக்கிறது. எங்கட தம்பி தங்கையைப் பார்ப்பது? எனக்குப் பயமாக இருக்கும் ஆத்தா!"

"மணி! நீ ஏன் பயப்படுகிறாய். அங்கு பெரியவர் வீட்டில் அம்மா, பிள்ளைகள் எல்லாரும் இருப்பினும். அவையளுடன் விளையாடலாம். நல்ல நல்ல சாப்பாடு கிடைக்கும். வகையான தின்பண்டங்களைக் காணலாம். காரில ஏறி இடங்களைப் பார்க்கலாம்."

பிஞ்சு மனதில், பேதை மனதில் அன்பை ஆசையை ஊட்டி தன்மனதை இரும்பாக்கி, அந்தப் பெரியவருடன் தன் அன்புக் கண்மணியை அனுப்பி வைத்தாள் யாழ்ப்பாணம் நோக்கி. இதுதான் மகளுக்குக் கிடைத்த உத்தியோகம்!... உத்தியோகம்!!.. என்று மணி சொன்ன பாணியை எண்ணி யெண்ணி ஏங்கினாள்.

யாழ்ப்பாணத்தில் பெரிய கல்வீடு... நகை முதலாளியின் வீடு. அது தான் அந்தப் பெரியவரின் வீடு... அங்குள்ள நவீன சாதனப் பொருட்கள், அலங்காரங்கள், வீட்டின் சுற்றுப்புறங்கள், தங்கமணிக்கு ஆச்சரியத்தையும், மகிழ்ச்சியையும் கொடுத்தன. இந்தச் சூழ்நிலைகளால் அவளது வீட்டு நினைவு வருவதற்குக் காரணமில்லையே. இந்தச் சூழ்நிலைகள் அப்பிஞ்சு மனதில் ஒரு புதுவித மகிழ்ச்சியைக் கொடுத்தது. நல்ல இடம் முன் பின் காணாத பொருட்கள் என்பவை அவளுக்குத் தாயின் நினைவை ஓரளவு மறக்கச் செய்தன. இதை இன்னும் வலுப்படுத்துவது போல இருந்தது. அந்த வீட்டுக்கார அம்மா தனது மகளின் பழைய தரமான நாலைந்து சட்டைகளைத் தங்கமணிக்கு கொடுத்து அவளை அணியும்படி சொன்னாள். அச்சட்டைகள் யாவும் தங்கமணிக்கு வைர, இழையோடு நெய்த சட்டைகள் போல், புத்தம் புதிய சட்டைகள் போல் அவளின் சிறிய மனம் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் மாதங்களாக உருண்டோடின. ஆரம்பத்தில் அந்த வீட்டுக்காரர்கள் காட்டிய ஆதரவு, கண்காணிப்பு என்பவை தங்கமணிக்கு, தாயின் நினைவை மறக்க வைத்தன. தங்கமணியின் வயதுடைய அந்தமுதலாளியின் மூத்தமகள் குமுதா விலையுயர்ந்த சட்டைகளும், கையில் நகைகள் அணிவதையுமே வேலையாகக் கொண்டிருந்தாள். குமுதாவும் தங்கமணியுடன் அன்பாக, ஆசையாகப் பழக முற்பட்டாள். தான் சாப்பிட்டுவிட்டு அவளுக்கு கொடுப்பதும் அவளிடமிருந்து தான் பறிப்பதுமாக இளமனங்கள் ஒன்றுடன் ஒன்று வேற்றுமையின்றி, கலந்து பேச, பழக முற்பட்டன. ஆனால் அங்கே உயர்வு தாழ்வு, அசுத்தம், என்ற அந்தஸ்துகள் இடையில் ஓடி வந்து பெற்றோரிடம் ஒட்டிக்கொண்டு விடுமே என அந்த உள்ளங்கள் உணர நியாயமில்லை.

தவமணியின் கைபட்டுத்தான் சமையல், என்றால் என்ன வேறு ஏதாகினும் முழுமைபெறும். அப்படியிருக்கும் போது தங்கமணிக்குத் தனியான, கோப்பை, பேணி, படுக்கை விரிப்பு?.. இதில் என்ன சுத்தத்தை இங்கே எதிர்பார்க்கிறார்கள் இந்தப் பணக்காரக் கும்பல்கள். தங்கமணியின் கைகளால் தான் மா இடிபட்டு பிட்டு, இடியாப்பம், ஆகிறது. தண்ணீரும் கோப்பித்தூளும், பாலும், சீனியும் தங்கமணியின் கைகளின் செயற்பாட்டிலே பாற்கோப்பி ஆகிறது. இங்கே தங்கமணியின் அசுத்தம் படுவதில்லையா? என்ன பேதமை? தனியான பாத்திரம் கொடுத்து அவளைச் சாப்பிட வைக்கும் போது, அவளது கைபட்டுத் தயாரான உணவில் அசுத்தங்கள் இல்லையா? சிந்தித்துப் பார்க்க வேண்டிய விடயமாக அவர்களின் எஜமானர்கள் சிந்திக்காமலிருப்பதேன்?

அவர்களின் வீட்டுக்கு தங்கமணி வந்தவுடனே அவளைக் குளிப்பாட்டி நல்ல உடையணிவித்து, தன் பிள்ளைகளில் ஒன்று போல் ஆக்கிக் கொள்ள முடியாதா? அசுத்தம் என்பது அவளுடன் ஒட்டிக் கொண்டதா? அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்புடன் ஊறிக் கொண்டதா? அவ்வாறு தான் ஒட்டிக் கொள்ளும்படி நடந்து கொள்ளக் காரணம் யார்? தங்கமணியா? அல்லது அவளது எஜமானர்களா? தங்கமணியைத் துப்புரவாக வைத்து வளர்த்தால் அவள் அசுத்தமாகப் பார்ப்பவர் கண்களுக்குத் தென்பட மாட்டாளே. இவ்வாறு ஏன் ஒவ்வொரு எஜமானர்களும் சிந்திப்பதில்லை. பணத்தின் சிந்தனைதான் இவர்களுக்கு மேலோங்கி விடுகின்றதோ?

தங்கமணி தனது உத்தியோகத்திற்கு வந்து வருடங்களாகின. கவனமாகப் பார்ப்போம் தங்கமணியை என்றவர்கள், அவளைக் கசக்கிப் பிழிய ஆரம்பித்தனர். இயந்திரமாக இயங்கிக் கொண்டிருந்தாள் தங்கமணி. இவளுடைய வயதுடைய குமுதாவின் கரங்கள் படிப்பு, பாடசாலை என்று பேனை பிடிக்க, தங்கமணியின் காந்தள் கரங்கள் பானை பிடித்துக் கொண்டிருக்கின்றன. குமுதாவைப் போல் தானும் படிக்க வேண்டும் என்று தங்கமணிக்கு ஆசையாக இருந்தது. அத்துடன் ஒரு ஏக்கமாகவும் இருந்தது.

காலைமுதல் மாலைவரை அந்தப் பெரிய பங்களா வீட்டுக்குள்ள சகல வேலைகளுக்கும் தங்கமணி எஜமானியாகிவிட்டாள். கழுவித் துடைத்து, கூட்டிப் பெருக்கி, எனப் பல வேலைகள். தங்கமணி சும்மா ஒரு கணம் இருந்துவிட்டால் போதும். உடனே வீட்டுக்கார எஜமானியம்மா ஏன் உனக்கு வேலைகள் இல்லையா? "சாப்பிட்டுவிட்டு சும்மா இங்க இருந்து என்ன பராக்குப் பார்க்கிறாய்?" இப்படியான பல கடுஞ்சொற்கள். தங்கமணியின் உடலில் அவர்களுக்கு அக்கறை இல்லை. ஆனால் வாரத்துக்கு மூன்று தடவை அவன் குளிக்க வேண்டும் என்று அவளுக்கு உத்தரவு. காரணம் தங்கமணியின் தேக ஆரோக்கியத்தில், சுத்தத்தில் அல்ல. தங்கமணி தங்களுக்குச் சமையல் செய்வதால்தான் இந்த ஏற்பாடேயொழிய தங்கமணியின் தேக சுத்தத்தில் அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமுதாவிற்கு எப்போதும் பால் காய்ச்சி ஆறவிட்டுக் கொடுக்க வேண்டும். ஏனெனில் அவளது சின்னவிரல்களில் சுட்டு விடும் என்பது அவளது எஜமானியின் கட்டளை. ஆனால் தங்கமணி அதிகாலை எழுந்து சுடுசாம்பர் ஆறுமுன்பே சாம்பாரைக் கைகளால் அள்ளி அடுப்பைச் சுத்தம் செய்த பின்னர் பால் காய்ச்சிக் கொடுக்கிறாள். அப்போது அவள் விரல்களில் சூடு படாதா? அவை இரும்பா? இப்படியான கொடுமைகள் இந்தச் சின்னஞ்சிறிய தளிர்களுக்கு நடப்பதை மனிதாபிமானக் கண்கொண்டு ஒவ்வொரு எஜமானர்களும் நோக்குவதில்லையா? இந்தப் பிஞ்சு நெஞ்சங்கள் எத்தனையோ, பணக்கார வர்க்கக் குடும்பங்களில் இருந்து உயிர் பதைக்க வாழ்கின்றன. வறுமைக் கோட்டைத் தாண்ட முடியாத நிலையில் இந்த இள உள்ளங்கள் வதைபடுகின்றன. தங்கமணி காலை முதல் இரவு பதினொரு மணி வரை மணிக்கூடு போல் ஓடிக்கொண்டிருக்கிறாள். மாடாக உழைக்கின்றாள். அவள் என்ன பாவம் செய்தாளோ? பாவம் செய்தது என்று சமூகம்தான் மன ஆறுதலுக்காக அப்படியொரு தேற்று நிலையைச் சொல்கின்றதேயன்றி வேறொன்றுமில்லை. பாவமாவது புண்ணியமாவது... எல்லாம் சமுதாயம் தன் நன்மை நாடி ஏற்படுத்திக் கொண்டவை. சமவுடமையை விரும்பாத சமூகம் கற்பித்துள்ள ஒரு வாய்ப்பாடுதான் இது.

ஒரு மாட்டிடம், வேலை வாங்குவதற்காக அதன் எஜமானர் கொஞ்சமாவது கவனிப்புடன் நடந்து கொள்வார். சாப்பாடுகள் கொடுத்து விசேட கவனிப்புடன் பராமரிப்பார். ஆனால் தங்க மணிக்கு மாட்டிலும் கேவலமான நிலை தானோ? இதுதான் தங்கமணி ஆசைப்பட்டு நினைத்த உத்தியோகமா? அவள் பிஞ்சு மனதில் உதித்த உத்தியோகம் என்பது இதுதானா? அவளது அபிலாசைகள் எங்கே? அவை புதைக்கப்பட்டு விட்டன.

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலந்தாழ்த்திய தெளிவு

"தங்கச்சி! பிள்ளை மோனே!!... என்ர கைத்தடியைக் காணேல்ல... அவன் தம்பி தீபன் எடுத்துக்கொண்டுபோய் விளையாடிவிட்டு எறிந்து விட்டானா? எங்கே அவன்?.... கூப்பிடு பிள்ளை!" எனத் தன் மருமகளை நோக்கிக் கூறிக் கொண்டிருந்தாள் காமாட்சி.

விடியற்காலையில் மாமியாரின் பூபாளராகத்தைக் கேட்கச் சகிக்காத சித்ரா, "எங்கே போகும் தடி?" அவன் தீபன் எடுக்கவில்லை. வைத்த இடத்தில தேடிப்பாருங்கோ, கிடக்கும் என்று சற்றுக் கோபத்துடன் கூறினாள். விடியற்காலை தலைக்கு மேலே வேலை நிறையக் கிடக்கின்றன. பிள்ளைகள் மூன்று பேரையும் பாடசாலை, நேசறிக்கிளாஸ் என்று அனுப்பவேணும். அவர்களுக்குச் சாப்பாடு செய்து, அவர்களை அனுப்பிவிட்டு மாமியாரின் பணிவிடைகளையும் செய்த பின்னர்தான் சித்ராவுக்கு ஓய்வு கிடைக்கும். பின்னர் மத்தியானச் சமையல், மாலைச் சிற்றுண்டி, இரவுச் சாப்பாடு, பிள்ளைகளுக்குப் பாடம், சொல்லிக் கொடுப்பது, நேரம் கிடைத்தால், தையல் வேலை செய்வது, கடைக்குப் போவது, வைத்தியசாலைக்குப் போவது, எல்லாம் சித்ராதான் செய்யவேண்டியிருந்தது. குடும்பச் செலவுக்குப் பணம் தவறாமல் ஜேர்மனியிலிருந்து வந்து கொண்டிருந்தது. அந்தப் பணத்தைக் கொண்டே சீவியம் நடாத்திய சித்ரா, சிறிது மிச்சம் பிடித்து சீட்டும் பிடித்து வந்தாள்.

சித்ராவின் கணவன் ரவிசங்கர் தனது தாயாரை மனைவியின் பாதுகாப்பிலேயே இருக்கச் செய்து விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேர்மனிக்குச் சென்றுவிட்டான். தன்னுடைய தாய் தன்னுடன் இருக்க வேண்டும், என்பதும் சித்ராவுக்குப் பிள்ளைகளைப் பராமரிக்கும் முறையிலாவது தாய் உதவியாக இருப்பாள்" என்ற நோக்கிலும், சித்ராவுடனே இருக்கும்படி பணித்தான். அதன்படியே காமாட்சிப் பாட்டியும் தன்னுடைய வேலைகளைத் தேவைகளைத்தானே பார்த்துக்கொண்டு, வாழ்ந்து வந்தாள். தான் மருமகளின் ஆதரவில் வாழ்ந்து வருவது அவளுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. இருந்தாலும் என்ன செய்வது? எனது விழி இப்படி என்ற சமாதானத்தோடு வாழ்ந்தாள்.

சில வேளைகளில் கடைக்குப் போவது, சந்தைக்குப் போவது, மீன்வாங்குவது, பிள்ளைகளுக்கு கதைகள் - விடுகதைகள் சொல்வது, போன்ற வேலைகளையும் இயன்ற நேரங்களில் காமாட்சி செய்யத்தவறுவதில்லை. மகன் மாதம் ஒரு முறை பணம், கடிதங்கள் என்று அனுப்புவான் என்றும், அதில் தான் சாப்பிட்டு வருவதாகவும் அவளது மனச்சாட்சி அவளுடன் பேசிக்கொள்ளும் அதனால் மருமகளின் ஆதரவில் அவளிலே தங்கி வாழ்வதாக எண்ணவில்லை காமாட்சிப்பாட்டி. எனவே மருமகளுடன் கருத்து பேதங்கள் ஏற்பட்டாலும் காமாட்சிக்கு அதிகம் கோபம் வருவதுண்டு. பின் தனது மகனையும் பேரப்பிள்ளைகளையும் நினைத்து, எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்வாள். பேரப் பிள்ளைகள் என்றால் பவளத்துக்கு உயிராக இருந்தனர். அவர்களும், "அப்பம்மா.. அப்பம்மா!" என்று அவளையே சுற்றிச் சுற்றிக் கதை கேட்டு, தங்கள் கதைகளை அவளுக்குக் கூறி அன்பாக இருந்தனர். "அப்பம்மா! அப்பம்மா. இந்தாங்கோ! இனிப்பு" என்று தமது சாப்பாடுகளிலே அப்பம்மாவுக்கு எனப்பங்கு வைத்து விடுவார்கள்.

காலங்கள் உருண்டன. ஒருநாள் திடீரென இருந்தாற்போல ஐந்து வயது நிரம்பிய வாகீசனுக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்ச்சல் பிடித்துக்கொண்டது. மழையில் நனைந்த காரணத்தினால் அவனுக்குத் தடிமன், இருமல், காய்ச்சல் என்று அவனைப்படுக்கையிலே படுக்க வைத்துவிட்டது. காமாட்சிப்பாட்டி தான் பேரப்பிள்ளையின் அருகில் இருந்து அவனைக் கவனித்து வந்தாள். மருந்து வேண்டிக் கொடுத்தாலும் வந்த காய்ச்சல் தனது கைவரிசையை மூன்று நான்கு நாட்கள் வரை காட்டிச் செல்லும் என்பது பாட்டிக்குத் தெரியாததல்ல.

"வாகீசு! என்ன ராசா! தலை இடிக்குதே? என்ன செய்யுது? பிள்ளைக்குத் தண்ணி விடாய்க்குதே?" என்று கேட்டு அவனது முகத்தைத் தடவி, தலையையும் கோதிக் கொண்டிருந்தாள்.

சித்ரா எல்லா வீட்டு வேலைகளையும் செய்துவிட்டு, மற்ற இரு பிள்ளைகளையும் பாடசாலைக்கும், நேசறிக்கும் விட்டுவிட்டு, சந்தைக்கும் 'பாங்'க்கும் போகிறேன் எனக் கூறி... "மாமி! இந்தாங்க.. தோடம்பழம் இருக்கு. வாகீசன் எழும்பினால் வெட்டிக்கரைத்துக் குடுங்கோ, அல்லது சுளை சுளையாக உரிச்சுக் குடுங்கோ... காலையில் கொத்தமல்லித் தேத்தண்ணிதான் குடிச்சவன். (விசுக்கோத்தும்) பிஸ்கட்டும் வேண்டாம் என்று சத்தி எடுத்தவன். வயிறு வெறும் வயிறாக இருக்கும்... அதுதான் இதைஉரிச்சுக் குடுங்கோ..." எனக் கூறிச் சென்றுவிட்டாள்.

"ஓ.. நான் வடிவாகப் பாக்கிறேன் என்ர குஞ்சுவை. நான் கவனமாகப் பார்ப்பன். நீ யோசியாதை. உன்னுடைய வேலைகளைப் பார்த்து ஆறுதலாக வா மோனை!"

காய்ச்சலால் உடம்பு அனல் வீசுவது போல் இருந்தது. வாகீசன் மெல்லத் தனது உடலைபுரட்டி, பின் இருமிவிட்டு, கண்களைத் திறந்து பார்த்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன ராசா! பசிக்குதா? தலையில நோகுதா? என்ன செய்யுது?'' இந்தா தோடம்பழம் உரிச்சுத்தரட்டா? பிள்ளைக்கு இனி காய்ச்சல் பறந்திடும். நாளைக்கு எல்லாம் சரியாகப் போய்விடும்."

"... அ-- அப்பம்மா!... எனக்குத் தண்ணி விடாய்க்குது..."

''தண்ணிகுடிக்கக் கூடாது என்று டாக்குத்தர் சொன்னவர் ராசா! சோடா தரட்டா?"

"ஓ... தாங்க... அம்பம்மா! உறைக்குமா?"

"இல்லை... இல்லை... உறைக்கவே மாட்டாது. இது குடிச்சால் காய்ச்சலுக்கு நல்லது..."

''பிள்ளைக்குத் தோடம்பழம் உரிச்சுத்தாறேன்... சாப்பிடுகிறாயா தம்பி!"

"வேண்டாம்... வேண்டாம்.. புளிக்கும் அப்பம்மா!"

"இல்லை ராசா! இது நல்ல தேன்தோடம்பழம்.. இனிக்கும். நான் உரிச்சுத்தாறேன்" என்று கூறிக்கொண்டு, காமாட்சி தோடம்பழத்தை உரித்துச் சுளை வேறு, தோல்வேறு ஆக்கி ஒரு தட்டில் வைத்தாள். அவனுக்குக் கதை சொல்லி ஒவ்வொன்றாகக் கொடுப்பது சுலபம், என்று எண்ணியே அவ்வாறு செய்திருந்தாள்.

"இந்தா... வாயை "ஆ" என்று காட்டுங்கோ... தோம்பழம் வைத்து விடுகின்றேன்" என்று கூறி அவனது வாயைத் திறக்கச் சொன்னபோது, "ம்... ம்... ம்... எனக்கு வேண்டாம்..."

"இப்ப வேணும் எண்டல்லா... கேட்டனீ தம்பி?"

"வேணும்தான். முதலில் நீங்கள் ஒன்று சாப்பிடுங்க... அப்பதான் நான் சாப்பிடுவேன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்குக் காய்ச்சல் இல்லை... பிள்ளைக்குத்தான் காய்ச்சல்... நீங்கள்தான் சாப்பிட வேண்டும்" என்று கூற, வாகீசன் விடாப்பிடியாக, "நீங்க சாப்பிட்டாத்தான் நான் சாப்பிடுவேன், அல்லாவிட்டால் எனக்கு வேண்டாம்" என்றான்.

பிள்ளை தோடம்பழம் சாப்பிட்டால் அவனது வேறு வயிற்றுக்கு நல்லம். அவன் சாப்பிடுகிறானில்லை. அப்படி அவன் சாப்பிடுகிறதென்றால், நான் முதலில் சாப்பிட வேணும் என்றான். நான் சாப்பிட்டு என்னுடைய உடலை வளர்த்து என்ன பயன்? உன்ர உடலும் வளரப்போகுதா? இவன்தான் பாவம். நான் சாப்பிட்டாத்தான் அவனும் சாப்பிடுவான். நான் சாப்பிடும்போது யாரும் நினைத்தால்... என்று பலவாறு யோசித்துவிட்டு, பின் சில கணத்தில் அவற்றை மறந்துவிட்டு... ஒரு சுளையைத் தன் வாயிலும், மறுசுளையை வாகீசன் வாயிலும் வைத்துக் கொண்டு.. யார் முதலில் சாப்பிடுவது? எனக்கூறிக் கொண்டு தானும் கடிக்க முற்பட்டாள் காமாட்சி.

அந்த நேரம் பார்த்து கடையில் களைத்து விழுந்து வந்த கொண்டிருந்த சித்ரா மாமியார் வாயிலே தோடம் பழச்சுளையைக் கண்டதும் கோபமும் எரிச்சலும் போட்டி போட்டு வரவே, கொண்டுவந்த பொருட்களை அப்படியே விறாந்தையில் வைத்துவிட்டு, உட்கார்ந்துவிட்டாள்.

"சாகப்போகிற கட்டைக்கு தோடம்பழம் என்ன? இன்னும் என்னென்ன சத்துணவு வேணுமோ? அங்க மகனுக்கு எழுதிப்போடுங்கோ! காய்ச்சல்காரப் பிள்ளையின் வயித்தில ஏன் அடிக்கிறியள்? உங்களை நம்பி நான் எப்படி பிள்ளையை விட்டுச் செல்வது?" என்று வாயில் வந்தபடி திட்டிக் கொண்டிருந்தாள் சித்ரா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மருமகளே! ஏன் என்னில் எரிஞ்சு விழுகிறாய்! நானும் பிள்ளை பெத்து வளர்த்தனான்தான். "நான் சாப்பிட்டாத் தான் தான் சாப்பிடுவேன் என்று அடம்பிடித்தான் வாகீசன். அதுதான் பாசாங்குக்கு வாயில வைத்துக் கடித்தனான்" என்று சொல்ல... அதிலிருந்த உண்மையையும் சித்ரா அந்த நேரத்தில் உணரமுடியாமல் கோபம் மறைத்துவிட்டது. பின் அவள் தனக்குள்ளே... தான் அறியாமல் மாமியார்மீது கோபப்பட்டு, கொட்டிய வார்த்தைகளின் பொருளை மீண்டும் அலசி ஆராய்ந்து வேதனைப்பட்டாள்.

"என்ன அம்மா! அப்பா காசு அனுப்பி, எனக்குப் புது சப்பாத்து வாங்கி வருவதாகச் சொன்னீர்களே, வாங்கிவிட்டீர்களா? எனக் கேட்டுக்கொண்டு, மகள் ஜீவிதா தாயை நோக்கிச் சென்றாள். அவ்வாறு போகும்போது அப்பம்மாவின் கண்கள் கலங்கி, முகம் வாடியிருப்பதை அவதானித்துவிட்டு, அப்பம்மாவிடம் நேரே ஓடி, "ஏன் அப்பம்மா அழுகிறீர்கள்? தம்பிக்கு காய்ச்சல் என்றா? அது மாறும்தானே."

"இல்லை ராசாத்தி- இந்தக்கட்டை இன்னும் ஏன் இங்கு கிடந்து இழுபடுகுதே என்று தான் கவலையாக இருக்கிறேன்." என்று கூறியது சித்ராவுக்குக் கேட்டது.

கணவனை இழந்து தன் ஒரே மகனையும் வெளிநாடு அனுப்பிவிட்டுத் தன்னந்தனியனாக அவள் இருப்பது மாமியாரைப் பொறுத்தவரையில் வேதனையாகத்தான் இருக்கும் என்பதைச் சித்ரா உணராமல் இல்லை. தானும் மாமியாருக்குத் தவறு விடுவதுபோல அவள் மனம் உறுத்தியது. தன்னை நம்பித்தானே அந்த உயிரும் என்னுடன் இருக்கிறது? நான் இப்படி இனி ஏசக்கூடாது என அவள் முடிவெடுத்தாள். பிள்ளைகளின் பிழையாலும் சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரங்களில் மாமியாரில் தீர்த்துக் கொள்ளும் தனது தவற்றையும் அவள் உணரத் தொடங்கினாள்.

'கணவன் வெளிநாட்டில் நான்கு வருடங்களாக வாழ்கிறார். போய் ஒன்று - இரண்டு வருடத்தில் சிலபேர் தமது குடும்பம் முழுக்க எடுத்துவிட்டார்கள். எங்களையும் அங்கு கூப்பிட்டால் நல்லதுதானே. இங்கு நாட்டுப் பிரச்சினை, பட்டினி என்று எவ்வாறு நிம்மதியாக வாழ்வது?' என்று தானே எண்ணி ரவிக்கு கடிதம் எழுதிப் போட்டாள். தாங்கள் ஜேர்மன் வர விருப்பம் என்றும் அதற்கு ஆவன செய்யும்படியும் அடிக்கடி எழுதத் தொடங்கிவிட்டாள். ஆனால் ரவியோ, மனைவி மக்களைக் கூப்பிட்டால் அம்மா தனித்துப்போய்விடுவா, என்ற காரணத்தை மனதில் வைத்து, நாட்களை இழுத்துக் கொண்டிருந்தான். இதுவும் ஓரளவுக்கு சித்ரா ஊகித்துக்கொண்ட விடயம்தான். இவ்விடயத்தில் தனக்கு மாமியார் முட்டுக்கட்டையாக இருப்பதையும் உணர்ந்து பெருமூச்சுவிட்ட சந்தர்ப்பமும் உண்டு.

என்றும் இல்லாதவாறு மார்கழி மாத மழை தனது உக்கிரத்தினைக் காட்டிவிட எங்கும் வெள்ளம் நிரம்பி யிருந்தது. காமாட்சியின் கெடுகாலமோ என்னவோ, ஒருநாள் வீட்டு முற்றத்திலே தடியோடு சறுக்கி விழுந்துவிட்டாள். விழுந்ததுதான் அவளால் எழுந்திருக்க முடியவில்லை. "ஐயோ! கடவுளே! மகனே ரவி!" என்று அவள் கூப்பிட்டது சித்ராவின் காதிலே விழ அவள் ஓடி வந்து, அவளைத் தூக்கிக் கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டுபோய் விறாந்தையிலே இருக்க வைத்தாள். அன்று விழுந்ததிலிருந்து இடது கால் தனது பழைய வேலைகளைச் செய்ய மறுத்துவிட்டது. எத்தனை வைத்தியம் செய்தும் முன்புபோல காமாட்சியால் நடமாடமுடியவில்லை. அத்துடன் அவள் தான் மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமையாகிவிட்டேன் என நினைத்து வருந்தினாள். உடலில் சிறு தெம்பு இருந்தாலும் கால் அவளுக்கு ஊனமாகிவிட்டது.

காலங்கள் உருண்டோடின. வீட்டுக்குள்ளேயே மாமியார் முடங்கிக் கிடப்பதை எண்ணிக் கவலைப்பட்டாள். சித்ரா. அங்குபோய் - இங்கு போய் பொழுதைக் கழித்து வந்த மாமியாருக்கு இப்போது பொழுது போவதே பெரிய போராட்டமாக இருப்பது அவளுக்குத் தெரிந்தது. அன்று ரவியின் கடிதம் வரவே ஆவலுடன் பிரித்துப்பார்த்தாள். சித்ரா. அதில் முக்கியமாக "அம்மாவை சின்னம்மாவின் (தாயின் சகோதரி) வீட்டில் இருக்கச் சொல்லிவிட்டு, நீங்கள் எல்லோரும் இங்கு வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள். பின்பு மனைவி - மக்களை எடுக்க ஏலாது என்று கதைக்கிறார்கள். அதனால்தான் திடீரென முடிவு எடுத்தேன்" என எழுதியிருந்தான்.

கடிதத்தை வாசித்த சித்ரா, முதலில் பரபரப்பும் மகிழ்ச்சியும் அடைந்தாலும் பின் ஒருவாறு ஓய்ந்து, தன் மனச்சாட்சியுடன் கதைக்க ஆரம்பித்தாள். நானும் பிள்ளைகளும் அவரிடம் போனால் மாமியார் அநாதைபோல ஆகிவிடுவார். தனது மகனின் முகத்தைப் பேரப்பிள்ளைகளின் முகத்திலே அவர் கண்டு வந்தார். நாங்கள் இறைவன் அருளால் இன்னும் சில காலம் வாழலாம். ஆனால் மாமி அப்படி அல்ல. எப்போது இறப்பு என்று கதவைத் தட்டிக் கொண்டு நிற்கிற வயதில் இருக்கிறா. நாங்கள் பொறுத்து ஜேர்மனி போகலாம். அல்லது அவர் எங்களை வந்து பார்க்கலாம். ஆனால் ஒருவரையும் காணாமல் கண்ணை மூடிவிட்டால் அவர் ஆத்மா படும் வேதனை என்ன? எனது அம்மா மாதிரித்தானே இவவும்? இவவை நான் இறுதிவரை பார்த்துப் பணிவிடை செய்யவேண்டும் என உறுதி கொண்டாள் சித்ரா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எனக்கும் ஆண் மக்கள் இருக்கிறார்கள். நானும் ஒரு காலத்தில் மாமியாராகப் போகிறேன். நான் இப்படிப் புரியாமல் நடந்தால் எனது மருமக்களும் இவ்வாறு நடத்தினால் என் மனம் பொறுக்குமா? இல்லை.. இல்லை.. மாமியாரை ஏன் நான் அம்மாவாக நினைக்கக் கூடாது?' என்று எண்ணியவளாக "பட பட" என ஒரு பேப்பரையும் பேனாவையும் எடுத்து, ரவிக்குக் கடிதம் எழுதினாள். "நாங்கள் அங்கு வருவதற்கு முன்பு முதலில் அம்மாவைக் கூப்பிட்டு, அங்கு வைத்தியம் செய்யுங்கள். அங்கிருப்பவர்களுக்குத் தாயை எடுப்பதில், ஸ்பொன்ஷர் பண்ணுவதில் அதிக ஸ்டமும் செலவும் இல்லையாம். குடும்பத்தில் தாய் - மனைவி - பிள்ளைகள் ஆகியோரை எடுக்கலாம் என்று இங்குள்ளோர் கதைக்கிறார்கள். தாய் - மனைவி - பிள்ளை என்ற மூன்று உறவுகளிலே தாய் முன்னுக்கு நிற்கின்றாள். எனவே முதலில் அம்மாவை எடுக்க ஆயத்தப்படுத்துங்கள். பின்னர் நாங்கள் வரமுயற்சிக்கிறோம்" என எழுதிய கடிதத்தை உடனே அன்றைய தபாலில் சேர்த்தபிறகுதான் நிம்மதி அடைந்தாள் சித்ரா.

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊனமுற்ற மனம்

சூரியன் தனது கிரகணங்களைச் சுதந்திரமாக மலை, பள்ளம் கடல் என்ற பேதமின்றி எங்கும் பரப்பிக் கொண்டிருந்தான். இன்று "மாப்பிள்ளை வீட்டார் பெண் பார்க்க வருகிறார்கள்" என்று தரகர் ஏற்கனவே அறிவித்தல் தந்திருந்தார். இது பெண்ணுக்கு முதல் முறை அல்ல. இத்தோடு எத்தனை தரம், எத்தனை ரகமான மாப்பிள்ளை வீட்டார் அவளை வந்து பார்த்துவிட்டு, தேநீர் குடித்துக் கதைகள் பரிமாறிவிட்டு எதற்கும் போய்க்கடிதம் போடுகின்றோம், என்று நாகரீகமாகச் சொல்லிச் சென்று விட்டனர். ஆனால் அவ்வாறு கடிதம் எழுதினார்களா? அதுவும் பூச்சியம்தான். தமிழர் பண்பாடு நல்ல தரமான பண்பாடுதான் அதாவது விருப்பமில்லை என்று முகத்தில் அடித்தபடி திரிச் சொல்லாமல், மனம் நோகாதவாறு தாமும் தப்பிக்கொள்ளக் கூடியமுறையில் கடிதம் எழுதுகிறோம் என நழுவிவிடுவதில் தமிழருக்கு அடுத்தபடி தான் ஏனையோர்கள். தாம் இவ்வாறு சொன்னதால் அவர்கள் காத்திருக்கப் போகிறார்களே என்ற எண்ணம் அவர்களுக்கு அறவே வராமற் போவதும் விந்தைதான். இது அவளின் பெண்பார்க்கும் படலங்களில் அவள் அனுபவித்து அனுமானித்துக் கொண்டவை.

இன்னும் மாப்பிள்ளை வீட்டார் வருகிறார்கள் என்று வீட்டில் அவளது அம்மா, அதுதான் ரேணுகாவின் அம்மா, அப்பா, சகோதரர்கள் இதுதான் முதல் தடவை மாதிரி ஓடியாடி வேலை செய்து கொண்டிருக்கின்றனர். அவர்களின் பரிதாப நிலையைப் பார்த்த ரேணுகா, மனதிற்குள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மாப்பிள்ளை வீட்டார் வந்தால் வந்துவிட்டுப் பார்த்து விட்டுப் போகட்டுமே... அதற்கேன் இந்தத் தடல் புடல்? அவர்களும் பூலோகவாசிகள் தானே!' என அவள் வெறுத்தாள்.

என்னவோ பெற்றோரின் திருப்திக்காக பெண் பார்க்கும் படல்தலுக்கு அவள் ஒப்புக்கொண்டாள். தன்னை அலங்கரித்து அவர்கள் முன்னே போய் இருப்பதும், மாப்பிள்ளைவீட்டார் தன்னைக் கால் முதல் தலை வரை ஒவ்வோர் அங்கமாகப் பார்ப்பதும், பின்னர் பக்கத்தில் இருப்போருடன் சுரண்டிக் கிசுகிசுப்பதும், அவளுக்கு வெறுத்தேவிட்டது. சிலர் சீதனத்தை எதிர்பார்த்து வந்து, அது பற்றாமல் போகவே பதில் தராது மறுப்புத் தெரிவித்தல் எல்லாம் அவளுக்குச் சாதாரணமாகப் போய்விட்டது.

அன்று ரேணுகாவுக்குப் பதினேழு வயதிருக்கும். அதாவது இன்றிலிருந்து பத்து ஆண்டுகளுக்கு முன்பு, பிரபல கல்லூரி ஒன்றிலே A/L செய்து கொண்டிருந்தாள். அவளது தந்தையின் சகோதரி மகன், முறைமாப்பிள்ளையானவர். மருதானையில் உள்ள ரேணுவின் தந்தையின் கடையில் வேலை செய்தான். தீபாவளி, வருடம், பொங்கல் என ஊருக்கு வந்து போவான். அப்படி வரும்போது மாமா, மாமி, ரேணு என்று அவளது வீட்டிற்கும் வருவான். ரேணுகாவை விட அவன் எட்டு வயதுக்கு மூத்தவன். ரேணுவுக்கு அவனைக் கண்டால் பிடிக்காது. எந்நேரமும் அவளைக் கண்டால்,"மச்சாள்! மச்சாள்! என் பெண்டாட்டி" என்று கூப்பிட்டுக் கேலி செய்வான். ரேணுவே இவனைக் கண்டால் ஏதும் பேசாது தன் நண்பி வீட்டுக்குச் சென்றுவிடுவாள். ரேணுகாவின் பெற்றோர்களுக்கும் அவனில் அவ்வளவு விருப்பம் என்றில்லை. தங்கையின் மகன் என்பதற்காகத் தந்தை தன் கடையில் வேலைக்கு அமர்த்தியிருக்கிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் அவளுக்குத் தெரியும். "தான் ஒரு சின்ன முதலாளி" என்றும், தனக்கு எத்தனைபேர் பெண்கொடுக்க வருவார்கள்" என்றும் தம்பட்டம் அடித்துக் கொண்டு திரிவான். அவரிடம் காசும் போதியளவு இருந்தது. அதற்காக எல்லாப் பெண்களும் தன்னை விரும்புவார்கள் என எதிர்பார்க்க முடியுமா? இது அவனின் அறியாமை என்றுதான் சொல்ல வேண்டும். காலங்கள் உருண்டோடின.

ரேணுகாவின் மேற்படிப்புக்கு அவளது தாயார் முழுக்குப் போட்டு, தனக்குஉதவியாக வீட்டிலிருக்கும்படி செய்துவிட்டார். ரேணுகாவுக்குத் தாயை மீற முடியவில்லை. வீடே கதியென்று இருக்கவும் முடியவில்லை. தையல் வேலையில் ஈடுபட்டு. பல பிள்ளைகளுக்குப் பயிற்சி கொடுத்தாள். ரேணுகாவின் வளர்ச்சியிலும் மனமாற்றங் களிலும் அக்கறை கொண்ட தாய் அவளுக்குத்திருமணம் செய்வதற்கான ஆயத்தங்களை முன் வைத்தாள். திருமணப் பேச்சு என்றவுடன் அவளது மாமா மகன் தயாளன், "ரேணுகாவைக் கட்ட நான் இருக்கிறேன் ஏன் திருமணப் பேச்சு என்று அலைகிறீர்கள்?" என அவளின் தந்தையிடம் நேரடியாகவே கதைத்து அவரைத் தன்வசமாக்கிவிட்டார். தங்கையின் மகன் என்ற பாசமும் அக்கறையும் ரேணுகாவின் அப்பாவுக்கு இருந்தது. சீதன பாதனம் எதுவும் இன்றி ரேணுவைக் கொடுத்துவிடலாம் என்ற எண்ணம் அவரை ஆக்கிரமித்துவிடவே. இத்திருமணத்தை அவர் தனக்குச் சாதகமாக்கிவிட்டார்.

ரேணுவின் முடிவு.. விருப்பம்.. எதுவுமின்றியே ஆணாதிக்கம் முடிவெடுத்துச் செயலிலும் இறங்கிவிட்டது. ரேணுகா விரும்பாமலேயே வாழ்க்கைத் துணையாகிவிட நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஒரு பெண் ஒருவரை மாப்பிள்ளையாக ஏற்கும்போது, முன்பின் தெரியாதவராக இருக்கவேண்டும், அல்லது பழகி மனதுக்குப் பிடித்தவராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கவேண்டும். அப்போது ஒரு பெண்ணுக்கு அவரை மாப்பிள்ளையாக ஏற்க மனம் வரும். ஆனால் அவளுக்கோ அவரை எந்நேரமும் கண்டு, அவன் குணநலன்களை அறிந்து, பழக்கவழக்கத்தில், ஒரு பிடிப்பின்மை ஏற்பட்டபின் மாப்பிள்ளை என்றே தனது கணவர் என்றோ ஏற்க அவளது மனம் கஸ்டப்பட்டது. இருந்தாலும் பெற்றோரின் விருப்பத்தை அவர்களது ஏற்பாட்டை அவளால் மீற முடியாமல் இருந்தது.

கல்யாணமும் சிறப்பாக நடைபெற்றது. நாட்கள் கிழமைகளாக ஓடி ஒரு மாதமாகிவிட்டது. தயாளனும் தொழிலைக் தொடர்வதற்கு மருதானைக்குச் செல்ல ஆயத்தமானான். புதுமனைவியிடமும் மற்றோரிடமிருந்து விடைபெற்றுச் சென்றான். மருதானைப் புகையிரத நிலையத்திலிருந்து தனது கடைக்குப் போகும் தெருவைக் கடக்க முற்பட்டபோது, எங்கிருந்தோ இருந்து வந்த லொறி ஒன்று அவனுக்கு எமனாக மாறியது. ஸ்தலத்திலேயே தயாளனின் ஆவி பிரிந்தது. தனது இல்வாழ்க்கையுடன் பூவுலக வாழ்க்கையையும் (இல்வாழ்க்கையையும்) முடித்துக்கொண்டான். தூண்டிய திரிதூண்டி சுடர்விடும் முன் எண்ணெய்க்குள் அமிழ்ந்ததுபோல ரேணுகாவின் வாழ்க்கையும் முடிந்துவிட்டது. மணமாகி ஒருமாதமாகியதும் வாழ்க்கையை இழந்தாள் என்ற பட்டப்பெயரும் அவளுக்குக் கிடைத்துவிட்டது. அன்று தொடங்கிய "பெண்பார்க்கும் படலம்" இன்றுவரை நடந்துகெண்டு இருக்கிறதே தவிர ஒருவரும் அவளை மனைவியாக ஏற்க முன்வருவதில்லை. தாலி அறுத்தவள், என்ற ஒரு சொல் அவள் கல்யாணப்பேச்சுக்கு முன்னின்றுவிடும்.

ஆனால் அன்றைய திருமண நாளன்று அரசியற்கலகம் காரணமாக, அவர்களின் கிராமத்து நகைக்கடைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரக்கணக்கில் பூட்டப்பட்டிருந்தன. இதனால் தாலிக்கொடி குறிப்பிட்ட தேதிக்கு அவர்களுக்கு கிடைக்காமற் போனதால் ஆறுமாதம் கழித்துக் கட்டலாம் என ஒத்தி வைக்கப்பட்டது. தயாளனின் வற்புறுத்தல் காரணமாகவும், நாட்டுச் சூழ்நிலைகள் காரணமாகவும் திடீர்க்கல்யாணம் நடந்தேறியது.

ரேணுகாவுக்குத் தாலி கழுத்தில் ஏறாமலே "தாலி அறுத்தவள்" என்ற பெயரைச் சுமக்க வேண்டி ஏற்பட்டது. ரேணுகாவுக்கோ மனதில் ஒரு சந்தேகம். நான் களங்கப் பட்டவள் என்று சமுதாயம் கருதுகிறது. இயற்கையளித்த தீர்ப்பு. கடவுளின் செயல் என்றும், இவள் என்ன செய்வாள்? என்று ஒருவராவது எண்ணுகிறார்களா? என்பதே "வேண்டா வெறுப்பாக நீ சம்மதித்தாய்; அதுதான் இப்படி ஆயிற்று" என்று தாயாரின் நச்சரிப்பு. மறுபக்கம் ஊராரின் கதைகள். இவையெல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு அவள் எப்படி வாழ்வது? இருந்தும் அப்பா ரேணுகாவை எவனாவது கட்டவருவான் என, தனது முயற்சியைத் தளரவிடாது செயற்பட்டு வந்தார். அதன் பிரதிபலிப்பு இன்று மாப்பிள்ளை இன்னும் வீட்டுக்கு வருகிறார்கள்.

மாப்பிள்ளை A/L படித்துவிட்டு யூனிவசிற்றிப் பிரவேசம் கிடைத்தும், படிக்காமல் ஜேர்மன் போய் விட்டாராம். இப்போது பிரச்சினைகள் கொஞ்சம் முடிந்ததும் முடியாததுமான நிலையில் ஊருக்குத் திரும்பியுள்ளாராம். வயது 37 என்றும் சொன்னார்கள். தரகர் சாதகமும் பொருந்தியிருக்கின்றது என்றார். மாப்பிள்ளை வீட்டார் சீதனத்தைப் பேசினர். ரேணுகாவின் பூர்வீகத்தையும் தந்தையார் மேலாகச் சொல்லி வைத்தார். உடனே மாப்பிள்ளையின் பெற்றோர் துள்ளிக்குதித்து, எழும்பி பிறகு சொல்கிறோம் எனச் சென்றுவிட்டனர். இது ரேணுகாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்ப்புக்கு, அவளின் வாழ்க்கைத் தளிரைக் கிள்ளியெறிந்தது போன்றிருந்தது.

இரண்டு கிழமைக்குப் பின்னர் ரேணுகாவுக்கப் பேசிய மாப்பிள்ளையைப் பற்றிய செய்தி அவளின் பெற்றோருக்கு எட்டியது. மாப்பிள்ளை ஜேர்மனியில் இருக்கும்போது, ஒரு ஜேர்மன்காரியுடன் நட்பாக, இருந்தவராம். கல்யாணமும் செய்ய என்று இருக்கும்போது, அவள் மாறிவிட்டாள் என்று, ரேணுகாவின் தூரத்து உறவினர் ஒருவரின் மகன் சொல்லி யிருந்தார். இதைக்கேட்ட ரேணுகாவோ, தன்மனதுக்குள், அவர் ஜேர்மனியில் என்ன ஆட்டம் ஆடினாலும் புதுமாப்பிள்ளை, அவர்கள் தெரிந்தும் விழைவிடலாம், தவறுவிடலாம்; ஆனால் பெண்கள் தற்செயலாகவோ, அவர்களை அறியாமலோ பிழைவிடக்கூடாது. என்ன சமுதாயம் இது? தவறுதலாக ஒரு பெண் வாழ்க்கையில் பிசகினாலும் அதைத் தூற்றித் திரிவதற்கு எங்கே சந்தர்ப்பம் உண்டு என சமுதாயம் எதிர்பார்த்திருக்கும் என்று எண்ணியவளாக மீண்டும் தன் தையல் வேலையை ஆரம்பிக்கத் தொடங்கினாள்.

இந்நிலையிலே, ரேணுகாவின் பாடசாலைத் தோழி மாலதி அவளிடம் வந்தாள். மாலதி திருமணமாகி இரண்டு பிள்ளைக்குத் தாயாகிவிட்டாள். தன் உயிர் நண்பி ரேணுவின் வாழ்க்கை இப்படிப் பூத்துக் குலுங்காமல் இருப்பது அவளுக்கு வேதனையைக் கொடுத்தது.

"என்ன ரேணு! இன்று மாப்பிள்ளை வீட்டார்கள் வந்தார்கள் என்று கேள்விப்பட்டேன், என்னவாம்?"

"அதை ஏன் பேசுவான்? ஏதோ என்னுடைய குறையைச் சொல்லி நழுவிவிட்டார்கள். என் தலைஎழுத்து இது. அதற்கு நீ ஏன் வருத்தப்படுகிறாய்? மாப்பிள்ளை ஜேர்மனியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தபோது, ஜேர்மன்காரியைத்தான் கல்யாணம் கட்ட இருந்தவராம். பின்னர் சரிவரவில்லை என்று இங்கு வந்திருக்கிறாராம்."

அதைக்கேட்ட மாலதி, "ரேணு! நீ என்ன சொல்கிறாய்?"

"தானும் தப்புச் செய்துவிட்டு, மகாலட்சுமி மாதிரி உன்னைக் குறையாக நினைத்து, மறுத்துவிட்டார்களே. மாப்பிள்ளைமாருக்கு தவறுகள் பிழைவிட்டாலும் அது அவர்களுக்கு மேலதிக நன்னடத்தைச் சான்றிதழைத்தானே இந்தச் சமூகம் கொடுக்கின்றது" என்று கோபத்துடன் பேசினாள். "ஜேர்மனியில் எட்டுவருடம் இருந்தார் என்றால், அங்குள்ள பண்பாட்டை அறிவை அவர் கற்கவில்லையா? உணரவில்லையா? பெண்களுக்கு மேல்நாட்டார் காட்டும் மரியாதை, சமத்துவம் என்பவற்றைக் கவனிக்கவில்லையா?" என்று ஏசினாள்.

"மாலதி! ஏன் கோபப்படுகிறாய்? என் தலைவிதி இப்படி இருக்க, அதைப்பிரமனாலும் அழித்து எழுதமுடியாது... மாலதி!"

"இல்லை! ரேணுகா, பிரமன் எழுதியதாகச் சிலவற்றை, எம் சமுதாயம் சேர்த்துவிட்டுப் பிரமனைச் சாட்டுகின்றது. உனக்குத் தெரியாது. என் கணவரும் ஐந்து வருடங்களுக்கு முன்பு ஜேர்மனியிலிருந்து உழைத்துவிட்டுத்தான் வந்தவர்." என்று கூறிய மாலதி, "எத்தனை ஆண்கள், எத்தனை பெண்கள் பிழைவிடுகிறார்கள். அது சிலவேளை அறியாப் பருவம், விதி, தலையெழுத்து என்பனவாகவும் இருக்கலாம். அறியாமல் தற்செயலாக ஏற்பட்ட தவறுகளுக்காக ஒருபெண் ஆயுள் தண்டனை மாதிரி அதனை அனுபவிக்க வேண்டுமா?"

"எத்தனையோ காதல் ஜோடிகள், சில தருணங்களில் காதல் முறிந்து வெவ்வேறு திசைக்குப் போகவில்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் மிக அருமையாக சில ஆண்கள் விதவைகளைத் திருமணம் செய்யவில்லையா? என்று யோசித்துப் பார்! இங்கே ஒருபெண் வேறொரு ஆணுடன் வாழ்க்கை நடத்தி யிருக்கிறாள்தானே. மேலும் சொன்னால், திருமணமாகிய பின் ஒரு மனைவியைக் கணவன் இல்லாத வேளையில், யாரோ ஒருவன் வந்து பலாத்காரம் செய்துவிட்டு சென்றானாகில், அக்கணவன் மனைவியை வெறுப்பானா? அல்லது களங்கப்படுத்தியவனைக் கொல்ல வாள் தூக்குவானா? எதைச் செய்வான்? வாளைத்தான் தூக்குவான். "அப்படியென்றால் அந்த மனைவி களங்கப்பட்டவள் என்று அவன் நினைப்பதில்லையே"

"ஆனால் நீயே யோசி! அவள் களங்கப்படவில்லையா?"

"கல்யாணத்துக்கு முன் தவறுதலாக ஏதும் நடந்தால் அது களங்கப்பட்டவள். கல்யாணத்தின் பின் தவறுதலாக நடந்தால் அது களங்கப்படாதவள்; கற்பைக் காப்பாற்றப் போராடினாள் என்று சமுதாயம் சொல்லும். ஆனால் ஒட்டுமொத்தமாக இரண்டு நிலையையும் நோக்கினால் ஒரு பெண் கெடுக்கப்பட்டிருக்கிறாள் என்பது முடிவாக இருக்கிறது. இவ்வாறிருக்க முன்னுக்கு ஒருமாதிரி, பின்னுக்கு ஒருமாதிரியாக சமுதாயம் பெயரைக் கொடுத்திருப்பது நியாயமா? என்று ஒரு சட்டத்து ராணி போல வாதங்களை முன்வைத்த மாலதி, "பொறுமையாக, ரேணு! உனக்கு நல்வாழ்க்கை அமையும். கவலைப்பட வேண்டாம்" எனக்கூறினாள். மீண்டுஅவள், "ரேணு! நான் ஒரு ஆணாக இருந்தால், உன்னை மணந்திருப்பேனடி! உன்னுடைய உள்ளம், நல்லகுணம், அமைதியான சுபாவம் என்பவற்றுக்கு யார் என்ன கொடுத்தாலும் ஈடாகுமா?"

"ரேணு! உன்னிடம் ஒரு விடயம் பேர்ஷனலாகக் கதைக்கவேண்டும் போலிருக்கிறது. கேட்கவும் பயமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறது. நீ என்ன நினைப்பாயோ தெரியாது, என்னைத் தவறாக எடை போட்டுவிடுவாயோ, அதனால் நமது அன்பு கெட்டுவிடுமோ என்றும் அஞ்சுகிறேன் ரேணு! உனக்கு விருப்பம் என்றால் நான் செய்வேன்! அல்லாவிட்டால் அதை இருவரும் மறந்துவிடுவோம்"

"என்ன மாலதி? பீடிகை போடுகிறாய். விடயத்தை நேரடியாகச் சொல்லேண்டி! எமக்குள் என்ன பேதம்? சொல்லு... சொல்லு..."

"இல்லையேடி ரேணு! உன் விடயங்கள் சூழ்நிலைகள் பற்றி எனது ஒன்றுவிட்ட அண்ணாவிடம் சொல்லிக் கவலைப்படுவேன். அவர் ஒரு கடையொன்றில் வேலை செய்கின்றார். பொதுநலவாதியும்கூட. நல்ல மனம் படைத்தவர். ஆனால் அவருக்கும் கல்யாணம் செய்யும் நோக்கம் எதுவும் இன்றி இருக்கிறார். ஏனெனில் அவருக்கு ஒரு கால் ஊனம். தன்னை ஒருவரும் விரும்பமாட்டார்கள் என்று கல்யாணம் செய்வதில்லை என்று இருக்கின்றார். உனக்கு... அவரைத்... திருமணம் செய்ய விருப்பம் என்றால் நான் அவரை வழிக்குக் கொண்டுவருவேன். முடியுமா உன்னால்? யோசித்துப்பார்! நான் இப்படிக் கேட்கிறேன் என நினைக்காதே! அவரும் பாவம்! அவர் வேண்டாம் என்று இருந்தாலும் அவருக்கு ஒரு துணை தேவை என்று நான் கவலைப்படுவதுண்டு. உன்னையும் நினைத்துக் கவலைப்படுவேன். என் சுயநலம் இது என்று நீ நினைக்காதே. இரண்டும் இணைந்தால் எனக்குக் கவலை இல்லை" என்று சொல்லி முடிக்குமுன் ரேணுகா, அழுதுகொண்டு, "மாலதி! நீ சொன்னவற்றை நான் மனப்பூர்வமாக ஏற்கிறேன் எத்தனையோ ஆண்மகன் வந்து பார்த்துப் பார்த்து என்னைக் கோயில் மாட்டை விலைபார்ப்பது போல் பார்த்து, கொழுத்த சீதனமும் கேட்டு.. இதுவரை சென்றுவிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தநிலையில் என்னைப் பார்க்காமல், பெண்பார்க்கும் படலத்தையே உடைத்து, ஒருயிர் என்னைத் திருமணம் செய்ய உடன்படுமேயானால் அந்த உயிருக்கு என்னை அர்ப்பணிக்க நான் தயார். தைரியமான இரண்டு கால்களிலே நின்றுகொண்டு, மனம் ஊனமுற்ற ஆடவரைத் திருமணம் செய்வதிலும் பார்க்க சாதாரண கால் ஊனமுற்றவரை நான் மணப்பது ஆயிரம் மடங்கு சிறந்தது. இப்படியான ஒருவருக்குத் தொண்டுசெய்து என்வாழ்நாளைப் போக்குவேன்...

"அவருக்கு ஒரு கால் இடையிட்டு வந்த ஊனம் என்றாய்! அவ்வாறு ஊனமுற்றாற்போல, நமக்குப் பிறக்கும் ஆண்குழந்தையும் ஊனமுற்ற காலுடன்தான் பிறக்குமா மாலதி?"

"இல்லையே அவருக்கு அது இடையில் ஏற்பட்ட ஊனம். ஆனால் எனக்கோ என் உடம்புக்கோ சமுதாயம் இடையில் சொல்லிய ஊனம் அப்படித்தானே"

ரேணுகா தன் வாழ்க்கையை இந்த உத்தமனுக்கு அர்ப்பணித்து அவனுக்கு ஊன்றுகோலாய் போய் நிற்கப் போகிறாள். இனி இந்த மூடச்சமூகம் என்ன சொல்லி அவளை வாய்க்குள் அசைபோடப் போகிறது?

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடுத்து வைத்தவன்

நிம்மதியைத் தொலைத்துவிட்டு அதைத்தேடி அலைவதுபோல் வேலை... வேலை... வீடு, குடும்பம், பிள்ளைகள் என்று ஒரு பம்பரமாக எனது வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கின்றது. உடலுக்குப் பரிட்சயப்படாத வெளிநாட்டுக் காலநிலை, அந்நியமண், அந்நியபாஷை இவற்றை எல்லாம் எதிர்நீச்சல்போட்டு, அவற்றை எனக்கு இசைவாக்கிக் கொண்டாலும் மனதில் ஏதோ வெறுமை குடிகொண்டிருக்கும். போதுமான உணவு, வசதியான வாழ்வு, இவை இருந்தும் புலம்பெயர்ந்த எம்மவர்க்கு ஏதோ ஒருவகையில் மனதில் வெறுமை, விரக்தி இல்லாமல் இல்லை. இங்குள்ள வசதியான வாழ்க்கையை அனுபவித்துவிட்டு, தமது இளமையைத் தொலைத்துவிட்டோமே எனத் தேடிக் கொண்டிருக்கின்றனர் சிலர். மனிதத்தைக் காணவில்லை. அது மரித்து விட்டதோ? என அங்கலாய்த்துக் கொண்டிருக் கின்றனர். இன்னும் சிலர், சொந்தநாடு, சொந்தமண், சொந்தக் கலாச்சாரம் என்பவற்றை எவன் விட்டு வேற்றுநாடு செல்கிறானோ அவன் பல்வேறு வித்தியாசமான அனுபவங்களை அனுபவிக்கத்தான் வேண்டும். அந்தவகையில் நானும் ஒருத்தி என்றுதான் சொல்லவேண்டும்.

அன்று ஜூலைமாதம். காலை 7.00 மணி. வழமைபோல நானும் வேலைக்குச் செல்வதற்கு என (TRAM) இழுவண்டித் தரிப்பிடத்தில் நின்றேன். ஜூலைமாதம் பாடசாலை விடுமுறை மாதம் என்றபடியால் தெருவீதி, இழுவண்டித்தரிப்பிடம் என்பன இன்னும் உறங்கிக் கொண்டிருந்தன. பாடசாலை நாட்கள் என்றால் கூட்டம் கூட்டமாக மாணவர்களின் கும்மாளம், சத்தம் என்பன இழுவண்டியன்னலையே அதிரச் செய்துவிடும் போலிருக்கும். ஆனால் அன்று அமைதியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. அதிகாலைக்குளிர் இன்னும் லேசாக உடம்பை வருத்தியது. TRAM தனது கடமையைத் தவறாது செய்வது போலக்குறிப்பிட்ட நேரமான 7.09க்கு தரிப்பிடத்தில் வந்துநின்றது.

முதல்நாள், வேலைப்பளு, வீட்டுவேலைகள், நித்திரைச் சோம்பல் என்பன எனக்கு சோர்வைக் கொடுத்தது. உடலிலும் உற்சாகம் இருக்கவில்லை. என்றாலும் வேலைக்குப் போகத்தான் வேண்டும். அவ்வாறான கட்டுப்பாடு. தாய் இறந்தாலும்கூட.. வேலைதான் முக்கியம். அதுதான் முதல் அதற்குப் பின்னர்தான் அடுத்தவை எல்லாம் என்ற இரக்கமற்ற உணர்வு இங்குள்ள சுதேசிகளின் எண்ணம். அதாவது இங்கு வேலைக்குத்தான் முதலிடம். வேலை செய்வோர்களே அந்தஸ்து உள்ளவர்களாக கணிக்கப் படுவார்கள். வேலை செய்பவர்களுக்கே, வங்கி உட்பட ஏனைய அரசு அலுவலகங்கள் எல்லாம் முன்னுரிமை வழங்குவது என்பது இங்கு வாழ்கின்ற சகல வெளிநாட்டினர்களும் அறிந்த உண்மை. ஆதலால் நானும் வேலையே முக்கியம் என்று உடல்நிலையையும் பொருட்படுத்தாது வேலைக்குச் சென்றுவிட்டேன்.

எனது வேலைத்தலத்துக்குச் சென்றதும், வேலைக்குரிய உடையைத் (யூனிபோர்மை) தரித்துக்கொண்டு எனது பிரிவுக்குச் சென்றேன். நான் சென்றபோது என்னுடன் சேர்ந்து வேலைசெய்யும் பெண் இஷபெல்லா, ஏற்கெனவே அரைமணித்தியாலத்துக்கு முன்னரே வந்துவிட்டாள். அவ்வாறு வந்தவள் தான் செய்யவேண்டிய வேலையைச் செய்துகொண்டிருந்தாள். ஆனால் எனது வேலைகளோ அனாதையாய் அங்கு காத்திருப்பது போல எனக்குத் தோன்றியது. நான் வழமைபோல இஷபெல்லாவுக்கு "காலை வணக்கம்!" என்றேன். அவளும் பதிலுக்கு "காலை வணக்கம்" என்றாள். அடுத்த எனது பொதுவான கேள்வியாக எப்படிச் சுகம்?" என்று கேட்டேன். அப்போது அவளது முகம் திடீரென மாறியது. கண்கள் கலங்கின. குழந்தை ஒன்று விம்மி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுவதுபோல வாய் கோணலாக மாறி வார்த்தைகள் வெளிவரத் தயங்கின.

"எனக்கோ..."

"ஏன் தேவையில்லாமல் ஏதும் கேட்டுவிட்டேனோ" என்று என்னையே நான் நொந்துகொண்டேன். அவளின் துக்கத்தைக் கிளறிவிட்டேனோ என்று என்னுள் யோசித்தேன். ஆனால் இப்படிக் காலைவணக்கம் கூறி சுகம் விசாரித்து வேறு ஏதும் கதைகளைப் பரிமாறிக்கொள்வது எமது பொது வழக்கம். அந்த ரீதியிலேதான் எப்படி சுகமாக இருக்கிறீரா? என்ற கேள்வி என்னிடமிருந்து எழுந்தது.

இஷபெல்லா இன்னும் என்ன விடயம் என்று எனக்குச் சொல்லவில்லை. ஆனால் "விக்கி விக்கி" அழுதுகொண்டிருக்க அவளது கைகள் வேலையைச் செய்து கொண்டிருந்தன. ஆனால் எனக்கோ அது என்ன கவலை? ஏன் பரிமாறிக் கொள்ளாமல் இருக்கிறாள்? அவளது கவலைக்குரிய காரணம் என்ன? என்று அறியவேண்டும்போல் எனக்கு இருந்தது. அவளது வீட்டில் ஏதாவது பிரச்சினையோ, அல்லது அவளது உறவினர் யாரும் கடுமையாக வருத்தமாக இருக்கிறார்களோ? என்று நினைத்தேன். அவளுக்கும் அவளது கணவனுக்குமிடையே ஏதும் தகராறோ? பிரச்சினையோ என்று நான் கேட்க விரும்பினேன். காரணம், அவள் என்னுடன் இணைந்து ஐந்து வருடங்கள் தொடர்ந்து வேலை செய்கிறாள். இப்படி ஒருநாளும் அவள் கவலையாக இருந்ததை நான காணவே இல்லை.

இஷபெல்லாவுக்கு 45 வயது இருக்கும். அவள் இளவயதில் திருமணம் செய்து ஒரு பெண் மகவுக்குத் தாயானாள். அந்த மகளுக்கு இப்போது 28 வயது. அந்த மகள் இன்னும் திருமணமாகாது அவளுடைய நண்பனுடன் தனியாக வேறு வீடொன்றில் வசித்து வருகின்றாள். பதினெட்டு வயதுக்கு மேல் திருமணமாகாமலே ஒரு பெண்ணும் ஆணும் தனித்து வாழ இங்கு அனுமதி உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர்களுமே இதற்கு பூரண அனுமதி வழங்குவார்கள். இது இங்குள்ள வாழ்க்கைமுறை. இஷபெல்லா தனது முதல் கணவனை ஐந்துவருட இல்வாழ்க்கையின் பின் விவாகரத்துப் பெற்றவள் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். சிலகாலம் செல்ல தன் வாழ்நாளைத் தனிமையாகக் கழிக்க விரும்பாமல் இரண்டாவது திருமணம் செய்துகொண்டாள்.

இவர்களின் இல்லறம் நான்கு வருடம் நீடித்து, பின் விவாகரத்தில் முடிந்தது. சிலவருடங்கள் செல்ல, மூன்றாவது திருமணம் செய்துகொண்ட இஷபெல்லாவின் இல்லறம் ஆறு வருடங்கள் நீடித்தது. மூன்றாவது கணவனும் வெறுப்பாகிவிட மீண்டும் விவாகரத்துக்கு அடிகோலினாள்.

இவ்வாறு மூன்றுமுறை மணம் செய்து, பிரிவுற்றுத் தனியாளாக இருக்கும்போதே என்னுடன் வேலைக்குச் சேர்ந்து கொண்டாள். காலங்கள் செட்டை விரித்துப் பறந்தன. தனக்கு ஒரு துணையின்றி தனிமையான வாழ்க்கை விரக்தியைக் கொடுக்கவே, அவள் ஒரு ஆடவனுடன் நட்பாக இருந்தாள். அந்த ஆடவனோ ஒரு அறுவைச் சிகிச்சை வைத்தியர். இவர்களுடைய நட்பு இரண்டு வருடங்கள் வளர்ந்து செடியாகியது. இந்த வைத்தியர் ஏற்கெனவே திருமணமாகி மூன்று பிள்ளைகளுக்கத் தந்தையாக இருந்தார். இவருக்கும் மனைவிக்கும் ஏற்பட்ட குடும்பப் பிணக்கினால் விவாகரத்துக்கு மனுப்பண்ணிவிட்டு தனியாக வாழ்ந்தார். இந்த அறுவைச்சிகிச்சை வைத்தியருக்கும் தனிமைவாட்டவே இஷபெல்லா ஆதரவாக அகப்பட்டாள்

நாற்பத்தைந்து வயதாகியும் "தான் என்றும் இளமையானவள்" என்ற எண்ணம்; அவளது நடையுடைபாவனையிலும், அலங்காரத்திலும் நான் அறிந்து கொண்டவை. எமது நாட்டைப் பொறுத்தவரையில் நாற்பத்தைந்து வயதுப் பெண் என்றாலே வயோதிபமாது என்றும், சகல ஆசைகளும் கடந்தவள்; என்றும் பிள்ளைகளின் அலங்காரத்தைப் பார்த்துப் பார்த்து இரசிப்பவள் என்றும், எண்ணி வாழும் நிலையே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது ஆசாபாசங்கள் முடிவடைந்து விடுகின்றன என்பது எமது இனக்கொள்ளை. பொதுவாகப் பெண்களுக்கு மாதவிடாய் நாற்பத்தைந்து வயதிலே நின்றும்,.. நிற்கும் பருவகாலமாகவும் வந்துவிடவே அவள் வயோதிக கோட்டிற்குள் பிரவேசித்துவிட்டாள் என்று எண்ணும் மடமைத்தனம் எம்மிடையே இல்லாமல் இல்லை. இது பெண்ணடக்குமுறையின் ஒரு பிரிவு என்றுதான் சொல்லவேண்டும். ஆனால் இங்கு வாழ்கின்ற இஷபெல்லா இரண்டு வருடங்களாக நண்பனாகப் பழகும் வைத்தியருடன் ஒரே வீட்டில் இருந்துவிட்டு, கடந்த ஆறுமாதங்களுக்கு முன்னர்தான் நான்காவது தடவையாகச் சட்டப்படி திருமணம் செய்துகொண்டாள். நானும் அவளது நான்காவது திருமணத்துக்குரிய திருமணப் பரிசாக ஒருசோடிப் பறவை உட்கார்ந்திருப்பது போன்ற சிலையொன்றைக் கொடுத்த போது என் மனதில் "இனியாவது இப்படியே இருங்கள்" என்று நினைத்துக் கொடுத்தேன்.

நாற்பத்தைந்து வயதானாலும் இஷபெல்லாவுடைய உடற்கட்டு முப்பது வயதுப் பெண்போலவே இருந்தது. உடலழகுக்கு ஏற்ற மருந்துகளைப் பூசியும், உட்கொண்டும் தன் எடையிலே என்று கவனமாக இருப்பாள். உடலை மெல்லிதாக வைத்திருக்கவேண்டும் என்று சாப்பிடாமல் "டயற்" பண்ணிக் கொண்டிருப்பாள். சிலவேளை என் கண் எதிரேயே வேலைசெய்யும் நேரங்களிலே சிலவகை மாத்திரைகளைச் சாப்பிடுவாள். நான் அதைக்கண்டு "உமக்கு என்ன வருத்தம்? ஏன் மாத்திரைகளைச் சாப்பிடுகிறீர்? இது என்ன மாத்திரை?" என்று முன்னர் ஒருமுறை கேட்டபோது, "நான் இந்த மாத்திரைகளைச் சாப்பிடுவது வருத்தம் என்று எவற்றுக்கும் அல்ல. எனக்குப் பசி வராமல் இருப்பதற்காகவே இந்த மாத்திரைகளைச் சாப்பிடுகின்றேன்" என்றாள். "பசி வராமல் இருந்தால் நான் சாப்பிட வேண்டும் என்ற உணர்வு வருத்தாது. அவ்வாறு சாப்பிடாமல் இருந்தால் உடம்பு பருமனாக வராமல் மெலிவாகவே இருக்கும்..." என்று பெரியதொரு விளக்கம் தந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கோ... 'இது என்ன விந்தை?' என்று சிந்தனை சுழன்றது. பஞ்சம், பசிக்கொடுமை, பட்டினி நிறைந்த வளர்ந்துவரும் நாடுகளிலும், மூன்றாம் உலகநாடுகளிலும் உள்ள மக்கள் சாப்பாடு கிடைக்காமல் இருக்கும்போது பசிவராமல் செய்கின்ற மாத்திரைகளைச் சாப்பிடலாம். அது ஓரளவுக்கு நியாயமானது. ஆனால் எல்லா வசதிகளும் நிறைந்த, பல ரகத்தில் பலசுவை உணவுகள் நிறைந்து வழியும் நாட்டில் வாழ்ந்தும், பசிவராமற் செய்கின்ற மாத்திரைகளை இப்பெண் சாப்பிடுகிறாளே! என்று இறைவனின் விளையாட்டை எண்ணினேன். இவளது இச்செய்கை எமது நாட்டு மக்களையும், ஏனைய வறிய மக்களையும் என் கண்முன் நிறுத்தியது. சாப்பாடு இல்லையே என்ற கொடுமையால், அங்கு வயிறு கருகி வாழ்கிறார்கள். இவளோ சாப்பாட்டு மீதியால் சாப்பாடுகளை வயிறுநாடாமல் இருக்க குளிசைகளைச் சாப்பிடுகிறாள். என்ன விந்தை? என என் மனம் வியப்புற்றது. கவலையின் சுவடே அவளிடமிருந்து இதுவரை நாளும் கண்டிராத நான், அன்று அவளது முகத்திலிருந்த நீல மை தீட்டிய விழிகள் கண்ணீர்க் குளமாக முட்டித் துளிகளாக உருளுவதைக் கண்டு எனக்கு ஒருபக்கம் கவலையாகவும், மறுபக்கம் வியப்பாகவும் இருந்தது. உடனே நான் அவளது கையைப் பிடித்து, முதுகில் தடவி என்ன நடந்தது? என்ன பிரச்சினை? எனக்குச் சொல்லக்கூடாதா? என்றேன்.

உடனே அவள் ஓ... ஓ... என்ற அழுது, சற்றும் எதிர்பார்க்காதிருந்த என்னையே இறுகக்கட்டியணைத்து, விம்மி விம்மி அழுதாள். உடனே நானும் அவளை அனுசரணையாக அணைத்து, ஏதோ பாரதூரமான துயரம் இவளை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது என நானும் பதிலுக்கு இறுக அணைத்து "அழ வேண்டாம்; எல்லாம் ஆண்டவன் செயல்; மனத்தைத் தேற்றிக்கொள்" என்றேன். "இஷபெல்லா! நீர் இப்படி அழுவதைப் பார்த்தால் எனக்கும் கவலையாக இருக்கிறது. வேலையும் செய்யமுடியாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறது. எமது முதலாளியும் வரப்போகிறார். உன்னைத் தேற்றிக்கொள்!" என்று கூறிய என்னை நோக்கி, "நவீனா! நான் இனி தனிமையில் வாழப்போகிறேன்" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே வார்த்தைகள் முழுமையாக வராமல் விழுங்கி விழுங்கி... "என்னுடைய.. என்னுடைய... ரொபினுக்கு சீரியஸ்" வருத்தம் என்றாள். "இன்றோ நாளையோ என்று வைத்தியர்கள் சொல்லிவிட்டார்கள். ஒரு கிழமையாக வைத்தியர் கண்காணிப்பிலேயே வைத்தியநிலையத்தில் இருக்கிறான். ஒவ்வொரு நாளும் நான் போய்ப்பார்த்து வரும்போது அவனுக்குச் சுகமாகிவிடும். புதன்கிழமை வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போகலாம் என்றார்கள். நானும் நிம்மதியாக உறங்கினேன். ஆனால் இன்று காலை வேலைக்குப் புறப்படத் தயாரானபோது, வைத்தியர் தொலைபேசியில் "உங்கள் ரொபினுக்கு சீரியஸ் ஆக இருக்கிறது, உயிர்வாழ்வதற்கு வாய்ப்பில்லை என்ற துயரச் செய்தியைச் சொன்னார். உடனே வரவும். இதுபற்றி நேரில் கதைக்கவேண்டும் என்று கூறினார். அதைக்கேட்டதும் எனக்கு கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை. ஐயோ! கடவுளே! என்று இருந்துவிட்டேன். எனது கணவர் தனது விடுமுறையைக் கழிக்க மூன்று கிழமை லீவில் ஸ்பானியாவுக்குச் சென்றுவிட்டார். "இந்த எதிர்பாராத சோகத்தை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. என் கணவர் என்னுடன் இருந்திருந்தால் வைத்தியருடன் விபரமாகக் கதைத்திருப்பார். நானோ "உயிர்பிழைக்க வாய்ப்பில்லை" என்றதும் மேலதிக கேள்விகள் கேட்க மனமற்று அப்படியே தொலைபேசியைத் துண்டித்துவிட்டேன் நவீனா!" என்றாள்.

அவளது இந்தச் செய்தியைக் கேட்டதும்... "யார் அந்த ரொபின்?" என்று ஆழ்ந்த அனுதாபம் நிறைந்த குரலில் இதமாகக் கேட்டான். உடனே! அவள்.."ஐயோ" உமக்குத் தெரியாதா? நான் சொல்ல மறந்துவிட்டேன்.. அவன்... என் பிள்ளை போன்ற... அன்பான என்னுடைய செல்வமான என்னுடைய நாய்" என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு ஆச்சரியமாகவும் உள்ளூர வேடிக்கையாகவும் இருந்தது. தான் வளர்த்த நாய்க்குச் சுகமில்லை என்றும், அந்த நாய் உயிர்வாழ்வது குறுகிய நாட்கள் என்றும் அறிந்து இந்தப்பெண், தனது சொந்த மகனை இழந்ததுபோல் பெரிய பிரிவுத் துன்பத்தால் வருந்துகிறாளே, ஒரு சாதாரண நாய்; ஒரு வளர்ப்பு மிருகம்; அதற்கு, மனிதருக்கு கொடுக்கும் அந்தஸ்தை அவள் கொடுத்து வளர்த்தது மட்டுமின்றி, அளவுக்கு அதிகமான பாசத்தையும் கொட்டி வளர்த்திருக்கிறாள்; என்று எனக்குப் புரிந்தது. ஐந்தறிவுள்ள நாய்க்காக இவள் இவ்வளவு வேதனைப்படுகிறாளே, அதன் உயிரைக் காப்பாற்ற எவ்வளவு பணம் என்றாலும் செலவு செய்வேன்; என்றும் அதற்காகக் காப்புறுதியும் செய்வேன், என்றும் கூறி அழுது புலம்பிப் புலம்பித் துடிக்கிறாளே... பொதுவாக நாம் வளர்த்த ஏதாவது ஒன்று பிரிந்தால் அல்லது இறந்தால் கவலை இருக்கும். அதை மறக்க முடியாதுதான். ஆனால் இப்படி இஷபெல்லா மாதிரியா. வேதனைப்படுவது? தனது குழந்தை இறந்துவிடப் போகிறது போலல்லவா? இவள் வேதனையாக இருக்கிறாள்.

இஷபெல்லா இவ்வளவும் சொன்னபோது எனது ஆச்சரியத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நானும் வேதனைப்படுவது போல" என்ன செய்வது? இறைவன் தீர்ப்பு. எல்லோரும் ஒருநாள் இதைச் சந்திக்க வேண்டியவர்கள் தானே. கவலைப்படாதீர்!" என ஆறுதல் கூறினேன்.

எனது ஆறுதல் வார்த்தை மேலும் அவளது துயரத்தைத் தூண்டவே, "நவீனா! இனி நான் தனிமையில் தான் வீட்டில் இருக்கப் போகிறேன். எனது கணவன் வேலைமுடிந்து மாலை ஆறுமணிக்குப் பிறகுதான் ஒவ்வொரு நாளும் வீட்டுக்கு வருவார். அவர் வருவதற்கு முன் நான் என் வேலைமுடிந்து, வீட்டுக்குச் செல்லும்போது, வாலையும் காலையும் ஆட்டி, துள்ளி முத்தம் கொடுப்பது "ரொபின்" என்ற என்னுடைய நாய்தான். அவனுக்கு இப்படி ஆகப்போகிறது என்று நினைக்க எனக்கு நித்திரையும் வர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுக்கின்றது. அவனது இழப்பை நான் எப்படித் தாங்கப் போகிறேனோ? எவ்வாறு நான் அவனின்றி தனிமையாக இருக்கப் போகிறேனோ? என் கணவர் வேலை.. மற்றும் கருத்தரங்கு என்று வெளியே செல்லும்போதெல்லாம் எனக்குத்துணை என் ரொபின்தான். ரொபின் இருக்கும் போது கணவனில்லாத தனிமையும் எனக்குத் தோன்றுவ தில்லை. ரொபினுடன் விளையாடும்போது, அவனை வெளியில் கூட்டிக்கொண்டு செல்லும்போது, அவன் என்மீது பாய்ந்துவிளையாடும் போதும், நான் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஐயோ! கடவுளே! ரொபினைக் காப்பாற்று! என் வேண்டுகோளை நிறைவேற்று!!" என்று எனக்கு முன்னாலே கிறிஸ்தவ முறைப்படி கைகளை நெற்றியிலும் மார்பிலும் வைத்துப் பிரார்த்தித்தாள். அந்நேரம் எமது வாடிக்கையாளர்கள் எம்மை நோக்கி வரவே எமது வேலையில் இணைந்துவிட்டோம். அன்றைய நாள் ஒரு துக்கநாளாகக் கழிந்தது. எனக்கும் ஒரு துக்கநாள் போல சலனமற்றுக் கழிந்தது.

மறுநாள் வழமைபோல இருவரும் வேலைக்கு வந்துவிட்டோம். இஷபெல்லா வழமைப்படி அரைமணித் தியாலத்துக்கு முன்னேயே வந்துவிட்டாள் என்பதை நான் வேலைப்பதிவு அட்டையில் எனது நேரத்தை எனது நேரத்தைப் பதியவைத்தபோது, இஷபெல்லாவின் அட்டை அவள் வந்த நேரத்தை எனக்குக் காண்பித்தது. வழமைபோல நான் உடைகள் மாற்றி வேலைக்குரிய யூனிபோமைத் தரித்துக்கொண்டு எனக்குரிய வேலையிடத்துக்குச் சென்றேன். இஷபெல்லாவைப் பார்த்து "காலைவணக்கம்!" என்றேன். அவளும் பதிலுக்கு காலைவணக்கம் கூறினாள். அப்போது அவளது முகத்தை நான் நோட்டமிட்டேன். 'ஏதாவது திருப்பம் இருக்கிறதா?' என்று நோக்கினேன். முகம் அப்படியே துக்க சாகரமாகத் தோற்றம் அளித்தது. வழமையான அலங்காரம் இன்று இல்லை. இப்போதுதான் அவளது முகத்தில் வயோதிகத்தின் சிறுசிறு கோடுகள் மின்னி மறைவதைக் கண்டேன். மௌனமாகத் தனக்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைகளைச் செய்து கொண்டிருந்த இஷபெல்லாவை நான் நோக்கி "எப்படி உனது ரொபின் இருக்கிறான்? வைத்தியர்கள் என்ன சொல்கிறார்கள்?" என்று மேலெழுந்தவாரியாக ஒரு பேச்சுக்குக் கேட்டேன். உடனே அவள் மீண்டும் அழத்தொடங்கி விட்டாள்."

அழவேண்டாம்! இஷபெல்லா! ஏதோ நடப்பது நடக்கத்தானே வேண்டும் என்றேன். அதற்கு அவள் "நான் எப்படிச் சொல்வேன்? நேற்று எனது ரொபினைப் பார்க்கச் சென்றேன். அவனது முன்னங்கால் உரோமம் வழிக்கப்பட்டு அலங்கோலமாக இருந்தது. எனது ரொபினின் அழகு எல்லாம் போய்விட்டது. பார்த்தபோது என் வயிறு பற்றி எரிகிறது, இப்போதும் எரிகிறது" என அழுதாள்.

இன்னும் சில கேளிவிகள் கேட்கவேண்டும் போல் இருந்தது. ஆனால் கேட்கப் பயப்பட்டேன். ஏனெனில் நான் சில கேள்விகளைக் கேட்க, தனது துக்கத்தைப் புரியாமல் விடுப்புக் கேள்விகள் கேட்கிறேன் என என்மேல் ஏறிவிடுவாளோ என்று பின்வாங்கினேன். இப்படியான சுபாவம் அவளுக்கு உண்டு என்பதை நான் ஏற்கெனவே அறிவேன். இருந்தாலும் கேட்டுவிடுவோமே என எண்ணி "நாய்க்கு என்ன வருத்தம்? எவ்வளவு காலமாக உன்னோடு இருக்கிறான்? எத்தனை வயது?" என்ற கேள்விகளை மெல்ல மெல்லக் கேட்டேன். அவளும் நான் எதிர்பார்த்தது போலில்லாமல் மனம் கோணாது கவலையுடன், "அவனுக்கு எட்டுவயது. பிறந்த ஒருமாதம் முதல் என்னுடன் வாழ் கின்றான். அவனை ஒவ்வொரு வருடமும் மிருக வைத்தியரிடம் கூட்டிச்சென்று, அவனது உடம்பைச் "செக்கப்" பண்ணிக் கொள்வேன். அதற்கென பெருந் தொகையான பணம் செலவு செய்து வருகின்றேன். ஆனால் இப்படி ஒரு வருத்தம் வரும் என்று நான் எதிர் பார்க்கவில்லை" என்றாள் அழுகையுடன்.

"இஷபெல்லா! உமது நாய்க்கு என்ன வருத்தம்? என்று டாக்டர் கண்டுபிடித்துவிட்டாரா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓ.. மை கோட்! எனது ரொபினுக்கு பிளட் கான்ஸர் என்று, இன்றுதான் டாக்டர் சொனனார். அப்போது நான் எவ்வளவு பணமானாலும் என் ரொபினைச் சுகமாக்தித் தாங்கோ! என்றேன். அதற்கு டொக்டர்ரொபினுக்கு ஒரு அறுவைச்சிகிச்சை செய்யவேண்டும் என்றும், அதிக செலவு ஆகும் என்றும் சொன்னார். உடனே நான் ஸ்பெயினில் தன் விடுமுறையைக் கழித்துக் கொண்டிருக்கும் எனது கணவருடன் தொலைபேசியில் கதைத்தேன். அவர் அறுவைச் சிகிச்சை செய்யவேண்டாம் என்றும், ரொபின் பிழைக்க மாட்டான் என்றும் பெருந்தொகைப் பணம் செலவாகும் என்றும் மறுத்துவிட்டார். எனக்கு என்னசெய்வது என்று தெரியவில்லை. எனது உணர்வுகளையும் துடிப்புகளையும் ஒருவரும் புரிகிறார்களில்லை. எனது ரொபினுக்கு இனி கொஞ்ச நாட்கள் என்று மிருகவைத்தியர் மரணத்துக்க நாள்குறித்து விட்டார். ஆனால் ரொபினோ நேற்று என்னுடன் துள்ளித் துள்ளி விளையாடினான். மாறிமாறி வாலை ஆட்டி முத்தம் கொடுத்தான். என்னைக் கண்டதும் சிரித்துக்கொண்டு என்மீது பாய்ந்து வாலை ஆட்டியாட்டி என்னைச் சுற்றிக் கொண்டிருந்தான். வடிவாகச் சாப்பிடுகிறான். வருத்தக்காரன் மாதிரி எனக்குத் தெரியவில்லை. இந்த டாக்டர் இப்படி ஏன் சொல்கிறாரோ? என்று டாக்டர் மீது எனக்கு கோபமாகவும் சந்தேகமாகவும் இருந்தது என்றாள். மீண்டும் அவள் "நான் டாக்டரைக் கண்டு ரொபினைப் பற்றிக் கதைத்தேன். அப்போது அவர் ரொபினுக்கு நாங்கள் மருந்து எதுவும் இனிக் கொடுக்கமாட்டோம் என்றனர். அவை ஒன்றும் இனிமேல் வேலைசெய்யாதாம். ரொபினுக்கு "மோர்வியம்" என்ற ஒரு மருந்து கொடுக்கப் போகிறோம் என்றும், அது ரொபினின் உடலில் உள்ள வேதனையைக் குறைக்கும்; பின் அவனை மெல்லமெல்ல இயக்கமற்றுச் செய்து பின் மரணிக்கச் செய்யும்" என்று சொன்னார்" என இஷபெல்லா எனக்குக் கூறியபோது எனது தாயாரின் ஞாபகமே திடீரென என் மனத்திரையில் ஓடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது தாயார் இங்கு ஜேர்மனியில் ஏழு வருடங்கள் வாழ்ந்தவர். அவருக்கு வயது எண்பத்தொன்று. கடந்த 20.2.2000 அன்று அவர் நம்மைவிட்டுச் சென்றார். அவர் சுகவீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது உடலைப் பரிசீலித்து, குடலில் புற்றுநோய் என்று வைத்தியர் கூறினர். பின்பு ஒருமாதம் சிகிச்சை நடந்தது. ஐந்தாவது கிழமை இவர் இனி உயிர்வாழ்வது மூன்று நாளாக இருக்கலாம், அல்லது முப்பது நாளாக இருக்கலாம் என்றனர். இனி உயிர்வாழ்வதற்குச் சாத்தியமில்லை. இவருக்கு கொடுக்கும் மருந்துகளும் இவரது உடலைப் பொறுத்த வரையில் வேலை செய்யாது, எனவே இனி நாம் மருந்துகள் எதுவும் கொடுக்கப் போவதில்லை. ஆனால் அவர் உயிர்வாழும் வரை வேதனை, வலியால் வருந்தாமல் இருப்பதற்குரிய மருந்துகள் எதுவாயினும் கொடுக்கப் போகிறோம். அம்மருந்துகளின் பக்கவிளைவுகள் பற்றி நாம் அக்களைபடத் தேவையில்லை. சாகிற இறுதி நிலையில் உடம்பில் கவனம் தேவையில்லை என்று கருத்துப்பட கூறினார்கள். பின் ஏதோ மருந்துகளைக் கொடுத்து, வயிற்றில் ஒரு அறுவைச்சிகிச்சையும் உடன் செய்தார்கள். ஆனால் ஒரு சந்தேகம் இறந்து கொண்டிருக்கின்ற உடலில் ஏன் அறுவைச்சிகிச்சை செய்தார்கள்? உயிர்பிழைக்க மாட்டார் என்ற உடம்பில் அறுவைச்சிகிச்சை செய்து, உயிர்ப்பிக்கும் நம்பிக்கை இருந்ததா? அல்லது தங்களின் பரிசோதனைக்கா? என்பது ஆண்டவனுக்கே வெளிச்சம். அறுவைச்சிகிச்சை செய்து மூன்றாம்நாள் எமது தாயார் சிவலோகம் சென்றுவிட்டார்...

இஷபெல்லா தனது நாயின் சுகவீனம், வைத்தியம் என்பது பற்றிக் கூறும்போது மனிதருடனே ஒப்பிட்டுப் பார்க்கும் அளவுக்கு இங்கு நாய்க்குள்ள மரியாதையை எண்ணி வியப்புற்றேன். இந்நாட்டில் நாய்க்கு எவ்வளவு பராமரிப்பு! பணச் செலவு! மனிதருக்குள்ள மரியாதையும், பராமரிப்பும், பொறுப்பும் நாய்க்கும் உண்டு என்ற உண்மையை நான் இஷபெல்லாவின் உணர்வுகளிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்துகொண்டேன். எனது உணர்வலைகள் அதிர என்மனம் எம்நாட்டை நோக்கிப் பறந்தது.

எத்தனையோ மனித உயிர்கள் மருத்துவம், பராமரிப்பு எதுவும் இன்றி அங்கு ஊஞ்சலாடிக் கொண்டிருக்கின்றன. எத்தனையோ பிணங்கள் அந்திமக்கிரிகை செய்யாது அனாதையாய்க் கிடக்கின்றன. சிறுகுழந்தைகள் எத்தனை, எத்தனை? நாய்க்கு எவ்வளவு வைத்தியச் செலவு? எவ்வளவு பராமரிப்பு? எவ்வளவு துயரம்? என்று என் மனம் எண்ணிக் கொண்டிருக்க, எனது கைகள் செய்யவேண்டிய வேலைகளை அன்று செய்து கொண்டிருந்தன. என்மனம் எம்நாட்டையும், எம்மினத்தையும், ஏன் என் பந்தங்களையும் சுற்றி வட்டமிட்ட வண்ணமே இருந்தது. இஷபெல்லாவும் தனக்குரிய அன்றைய நாள் வேலைகளைச் செய்து கொண்டிருந்தாள்.. பின் ஏதோ ஒரு யோசனை வந்தது போன்று, என்னை விளித்து, "நவீனா! எனக்கு ரொபின்பிரிவு ஒரு கவலை; மறுபக்கம் அவனுக்குரிய செலவுகள் என எனது மனநிம்மதியைக் குலைக்கின்றன. ஒரு கிழமைக்கு மேலாக மிருகவைத்திய நிலையத்தில் ரொபின் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றதற்கு ஆயிரக்கணக்கில் பணம் கட்டவேண்டும். இனி அவனுக்கு ஏதும் மரணம் நிகழ்ந்தால் அடக்கம் செய்யும் செலவு என்று இன்னோர் செலவு.. அவனை மிருகங்களுக்குரிய விசேஷ சவச்சாலையில் தான் அடக்கம் செய்யவேண்டும். அந்த இடமும் நான் வசிக்கும் இடத்தில் இல்லை. ஏறக்குறைய 150கி.மீற்றர் தூரத்தில் மிருகங்களுக்கு என விஷேட சவச்சாலை உண்டு, என அறிந்தேன். எனது மகன் போன்ற ரொபினை நான் அனாதையாக விடாமல் நல்லமரியாதையோடு அலங்கரித்து, வாசனைத் திரவியங்கள் பூசி, இறுதி மரியாதை செய்யவேண்டும்.." என சிறுபிள்ளைபோல் அழுதாள்.

மீண்டும் அவள் என்னை நோக்கி, "நவீனா! ரொபின் என் மகன் போன்றவன், அவனை நான் ஒரு மிருகமாக, நாயாக நினைக்கவில்லை. என் குடும்பத்தில் ஒருவனாகவே நான் எண்ணுகிறேன்" என்று பலவாறு கூறிப் புலம்பி, தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயரை என்னுடன் தீர்த்துக் கொண்டாள். நானும் ஆறுதற்படுத்தி "ஒரு வளர்ப்பு நாய், இவளை இந்தளவுக்கு ஆட்கொண்டு அவளைத் துயரத்துக்குள்ளாக்குகிறதே" என்ன உலகம்? எனச் சலிப்பும் வந்தது. அத்துடன் அந்த ரொபின் என்ற நாய் எவ்வளவு பாக்கியவான்; புண்ணியவான் செய்த பிறவி; என நினைத்தேன். ஒரு மனித உள்ளத்தின் பாசத்தை அள்ளி எடுத்து, அரவணைப்பையும் பெற்று, வாழ்ந்த இந்த நாய் பாக்கியசாலி என்றுதானே உயர்திணையில் சொல்ல வேண்டும். உலகின் பல்வேறு மூலைகளில் எத்தனையோ மனித உடல்கள் அடக்கம் செய்வாரின்றி, வீதிக்கு வீதி கிடக்கின்றன. அனாதைப் பிணங்களாக மண்ணோடு மண்ணாகின்றன. ஆனால் இங்கு நாய்க்கு சீரான இறுதி மரியாதையும் சவ அடக்கமும் செய்யப்போகின்றாள் இஷபெல்லா.

பொதுவாக ஜேர்மனியை நோக்கும் போது, நாய் வளர்ப்பு மிருகமாக இருந்தாலும், அது ஒரு வீட்டு அங்கத்தவர் போலவே கருதப்படுகின்றது. குழந்தைகளுக்குக் கொடுக்கும் பராமரிப்பு, இங்குள்ள நாய்களுக்கு உண்டுதான். ஒரு நாய் என்று ஒதுக்கப்படமாட்டாது. சுருக்கமாகச் சொன்னால் மனிதருக்குள்ள அன்பு, பாசம் போல் நாய்மேல் பிரியமாக இருப்பதைநாம் காணக்கூடியதாக இருக்கிறது. பிறப்புச் சான்றிதழ் முதல் வைத்தியக் காப்புறுதி வரை நாய்க்கு உண்டு.

நாய் பேதமின்றி மனிதரின் கையிலும் மடியிலும் அமர்ந்து விளையாடும், அழகாக உணவுண்ணும்; ஆசையோடு அரவணைப்பும் தேடும். இந்த நிலைமைகளை நோக்கும்போது, எம்சமய நம்பிக்கைப்படி நாய்ப்பிறப்பு என்பது கீழான பிறப்பு என்றும், ஏழாவது பிறப்பு என்றும், நாயிற் கடையேன் என்றும், பாவப்பிறப்பாகவே கருதப்படு கின்றது. தாம் செய்த ஊழ்வினைப்படி, கர்மவினைப்படி ஒருவர் நாயாகப் பிறந்தால் ஜேர்மனியிலே நாயாகப் பிறக்கவேண்டும் என இறைவனைக் கேட்கவேண்டும் எனத்தோன்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ இவ்வாறு பற்பல சிந்தனையில் மூழ்கிக்கொண்டு வேலை செய்வதைக் கண்ட இஷபெல்லா என்னுடன் கதையைத் தொடர்ந்தாள். "நவீனா! எனது நாய் அடக்கம் செய்யும் நாளன்று லீவு எடுப்பேன். ஆதலால் எனக்குரிய சிலவேலைகளை நீ முன்கூட்டியே செய்!" எனப் பரிதாபமாகப் பார்த்துக் கூறினாள்.

அதற்கு நானும், "பரவாயில்லை; நீர் உமது நாயின் சவ அடக்க வேலையைக் கவனியும்!" என்றுகூறி மேலும் ஏதோ அவள்கூற வாயெடுத்தபோது... எமது முதலாளி வருவது கண்டு, அப்படியே வார்த்தைகளை விழுங்கிவிட்டாள்.

முதலாளி வந்து எமது வேலைகளை ஒரு நோட்டம் விட்டு, எல்லாம் ஒழுங்காக நடைபெற்றிருப்பதைக் கண்டு திருப்திபட்டவராக, நாம் இன்னும் செய்ய வேலை விபரங்கள் கண்டு திருப்திப்பட்டவராக, நாம் இன்னும் செய்ய வேலை விபரங்கள் பற்றி முன்கூட்டியே எமக்கு அறிவித்தார். பின்னர் இஷபெல்லாவை நோக்கி, ''நாய்க்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்'' என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டகன்றார். பின்னர் நாமும் மும்முரமாக வேலையில் ஈடுபட, நேரமும் சென்றது. பின்னர் நானும் இஷபெல்லாவும் விடைபெற்றுக் கொண்டோம்.

இஷபெல்லா இனி நாயின் இறுதிக் கிரிகைக்காகக் காத்து, ஏங்கிக் கொண்டிருக்கிறாள். டாக்டர்கள் கைவிரித்தபடியால் இன்றையோ நாளையோ என நாட்களை எண்ணிக் கொண்டிருக்கின்றாள். எனக்கு அவள்மூலம் கிடைத்த தகவல்களை உங்களுக்கும் அறியத் தருவதில் மகிழ்ச்சி. ஏனெனில் இப்படியும் உலகம் இயங்குகிறது; இப்படியான மக்களும் வாழ்கிறார்கள் என்று என் மனதில் சதா எண்ணிக் கொண்டிராமல் உங்களுடன் பகிர்ந்து கொள்ளும்போது எனக்கும் பரமதிருப்தி. இவ்வளவும் கற்பனை அல்ல.

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறியது நெஞ்சம்

அதிகாலை ஆறு மணிக்கு கிறிங்..ங்..ங் என்ற பெரிய சத்தத்துடன் மணிக்கூடு தனது வேலையைக் கிரமமாகச் செய்தது. அலாரத்தின் சத்தத்தால் திடுக்கிட்டு விழித்த கோகிலா, அதற்குள் விடிந்துவிட்டதே என்று நினைத்தவாறு கண்களைக் கசக்கி, சோம்பலை முறித்துக்கொண்டு எழுந்தாள்.

அருகில் துயின்று கொண்டிருந்த கணவன் மாதவனை "இஞ்சாருங்கொப்பா, நேரமாச்சு எபம்புங்கோ" என எழுப்பிவிட்டு தனது கடமைகளைச் செய்ய ஆயத்தமானாள். மாதவனோ மனைவியின் குரலைக் கேட்ட பின்பும் "பத்து நிமிஷம் இருக்குத்தானே, ஆறுதலா எழும்புவோம்" என மறுபக்கம் புரண்டு படுத்தான்.

கோகிலா கணவன் வழமையாக வேலைக்குக் கொண்டுபோகும் 'பாக்கிற்குள்' காலைச்சாப்பாடு, மதியச் சாப்பாடு என இரண்டாகப் பகுத்து 'பார்சல்' கட்டி வைத்தாள். சுடுதண்ணீர்ப் போத்தலில் நிறைய தேநீர் வார்த்து வைத்தாள். இன்னும் இடைநேரங்களில் சாப்பிடுவதற்கென ஆப்பிள், ஆறேஞ்ச் என்றும் போட்டு வைத்தாள். பின்னர் சுடச்சுட பாற்கோப்பி போட்டுக்கொண்டு போய் "இந்தாருங்கோ" என்று கணவனிடம் கொடுக்க, அவனும் வாங்கி அருந்திவிட்டு "ஆ அப்பாடா" எனக் கொட்டாவி விட்டுக்கொண்டு இருந்தான்.

"என் கண்மணி" எனக்கூறி அவளின் கன்னத்தில் கிள்ளிவிட்டு விறுவிறுவெனப் போய் பல்துலக்கி, முகம் கழுவிவிட்டு "எங்கே லோங்ஸ்? எங்கே சப்பாத்து? சொக்ஸ்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என இருந்த இடத்திலேயே கேட்க கோகிலாவும் ஓடியாடி எடுத்துக் கொடுத்து அவனை வேலைக்கு அனுப்பிவிட்டு, வீட்டு வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினாள்

மாதவன் தொலைக்காட்சிப் பெட்டி உற்பத்தி நிறுவனம் ஒன்றில் இரண்டு வருடங்களாக வேலை செய்து வருகிறான். ஓரளவுக்கு சரளமாக டொச்சில் கதைப்பான். நல்ல இனிதான இல்லற வாழ்க்கையின் ஆரம்பப்படியில் வாழ்ந்து வந்தான். ஓரளவு வசதியான குடும்பத்தில் பிறந்தவன் என்றபடியால் வீட்டுப் பிரச்சினைகள் அவ்வளவாகப் பாதிப்பதில்லை. அத்தி பூத்ததுபோல கடிதம், பணம் என்பன வீட்டுக்கு அனுப்புவான்.

கோகிலாவும் அவனுடைய எந்தச் செயலுக்கும் மறுப்புத் தெரிவிப்பதில்லை. தன் இலட்சியக் கணவன் அவன் என்று அவனைச் சந்தோஷமாக வைத்திருப்பதே தனது வேலையென நினைத்து வாழ்ந்து வந்தாள்."

இளஞ்சோடிகள். திருமணமாகி மூன்றுவருடங்கள் தான். கடவுள் ஏதோ ஒருவகையில் ஒவ்வொருவருக்கம் ஒவ்வொரு கவலையைக் கொடுப்பவர்தானே. அதேமாதிரி இவர்களுக்குக் குழந்தை இல்லாத கவலையைக் கொடுத் திருந்தான். ஆனாலும் அது பெரிதாக அவர்களுக்குத் தோன்றவில்லை. இளம் தம்பதிகள் என்றபடியால் திடீரெனக் குடும்பச் சுமையை ஏற்றிக்கொள்ள விரும்பவில்லை எனவும் சொல்லலாம். கோகிலாவுக்கு இது கவலைதான். ஆனால் காட்டிக் கொள்வதில்லை.

கணவன் வேலைக்குப் போய்விட, வீட்டிலே கோகிலா தனிமையிலேயே காலத்தைப் போக்கி, மாலையானதும் அவனை எதிர்பார்த்து மகிழ்ந்து உரையாடுவதுமாக. வாழ்ந்தாள். தனியே இருக்கும்போது டொச் புத்தகங்களை வாசிப்பதில் அக்கறை செலுத்தினாள். மீதி நேரங்களில் டி.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பதும், இங்கு உருவாகும் தமிழ் சஞ்சிகைகளுக்கு ஆக்கங்கள் எழுதுவதுமாகப் பொழுது போக்கினாள்.

மாதவன் தொழிற்சாலையில் மற்றவர்களைக் கவரக்கூடிய முறையில் வேலை செய்தான். தக்க ஊதியமும் அவனுக்குக் கிடைத்தது. அவன் ஆசியன் என்ற காரணத்தினால் தொழிற்சாலை முதலாளி அவன்மேல் தனிப் பற்று வைத்திருந்தார். சிலநேரங்களில் அவனைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று உரையாடுவதுமுண்டு. ஒருமுறை முதலாளி அவனிடம் மனைவியையும் கூட்டி வரும்படி சொன்னார். "அவவுக்கு டொச் தெரியாது. சில காலம் செல்லக் கூட்டிவருவேன்" என்று அவன் கூறியிருந்தான். முதலாளியின் மனைவி, மக்கள்கூட மாதவனில் அன்புடனும், அவனுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற ஆர்வத்துடனும் பழகி வந்தார்கள். மாதவன் தனது முதலாளி குடும்பம் பற்றியும், அவர்கள் காட்டும் பரிவு பற்றியும் கோகிலாவுக்கு அடிக்கடி சொல்வான். கணவனுக்குக் கிடைக்கும் மரியாதையை எண்ணி அவள் சந்தோசப்படுவாள்.

ஒருநாள் மாதவன் வேலைமுடிந்து முதலாளியின் அழைப்பின் பேரில் அவருடைய வீட்டுக்குச் சென்றான். இதை முன்கூட்டியே கோகிலாவுக்கும் தெரிவித்திருந்தான்.

முதலாளியின் வீட்டுக்குப் போனபின்தான் அவருடைய கடைசி மகனின் பிறந்தநாள் என அறிந்தான். அங்கு முதலாளியின் உறவினர் பலர் வந்திருந்தனர். கொண்டாட்டத்திற்கு முதலாளியின் மனைவியினுடைய சகோதரியும் வந்திருந்தாள்.

பார்ப்பதற்கு அழகான தோற்றம். அவளுக்கு இன்னும் திருமணமாகவில்லை. வங்கியொன்றில் காசாளராக வேலை பார்க்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பேர்த் டே பார்ட்டி' ஆரம்பமாகி சிறப்பாக நடந்து கொண்டிருந்தது. உணவுகள், குடிவகைகள் எல்லோருக்கும் பரிமாறப்பட்டன. மாதவனுக்கு ஒரு புது அனுபவம்தான். அவன் குடிவகைகளை அறிந்திருக்கிறானே தவிர, குடிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவனாக இதுவரை காலமும் வாழ்ந்தது கிடையாது. மேலால் ருசி பார்த்த நாட்களுமுண்டு.

அந்த பிறந்தநாள் கொண்டாட்டத்தில் குடிக்க வேண்டிய நிலையில் அவன் குடித்துவிட்டான். முதலாளி, அவரின் மனைவி, மனைவியின் சகோதரி மிலானி எல்லோரும் நகைச்சுவையாகப் பேசி, கிளாசை வைப்பதும் தூக்குவதுமாக குடித்து மகிழ்ந்து கொண்டிருந்தனர். நேரம் போக வந்தவர்கள் மெல்ல மெல்ல விடைபெற்றுப் போனார்கள்.

இறுதியில் மாதவன் மட்டும்தான் இருந்தான். சிறிதுநேரத்தின் பின் அவனும் போவதற்காக எழுந்தான். அதிகம் குடித்திருந்தபடியாலும், பழக்கம்குறைவு என்றபடியாலும் அவன் தள்ளாடினான். 'எப்படித்தான் குடித்தாலும் ஜேர்மன்காரன் நிதானமிழப்பது அருமை' எனத் தனக்குள் நினைத்துக்கொண்டான். அவனது தள்ளாட்டத் தைப் பார்த்த முதலாளி அவனுடைய நிலைமையைப் புரிந்துகொண்டார். மாதவனை வீட்டில் கொண்டுபோய் விடும்படி மிலானியைக் கேட்டுக் கொண்டார்.

மிலானி மாதவனின் கையைப் பிடித்துக் கூட்டிக்கொண்டு போய் காரின் முன்இருக்கையில் அமரவைத்தாள். சாரதி இருக்கையில் அமர்ந்து காரைச் செலுத்தினாள். அவளுக்கு பாதை தெரியாதபடியால் தூங்கிக்கொண்டிருந்த மாதவனைத் தட்டித் தட்டிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையைக் கேட்டுக்கொண்டே போனாள். அவளுக்கு தாறுமாறாகச் சொல்லிக் கொண்டிருந்ததால் அவளுக்கு சிரமமாக இருந்தது.

தற்செயலாக மிலானியின் கண்களில் மாதவனின் சேட் பொக்கற்றிலிருந்த கடிதஉறை தென்பட்டது. அவள் அதை எடுக்கும்போது அவளுடைய கை மாதவனின் மார்பில் உராய்ந்தது. அப்போது அவன் 'கோகிலா' எனக்கூப்பிட்டு அவளை அணைத்தான். அவனிலிருந்து சிரமப்பட்டு தன்னை விடுவித்துக்கொண்ட மிலானி கடிதஉறையில் எழுதப்பட்ட முகவரியைப் படித்து அவனுடைய முகவரியைத் தெரிந்துகொண்டு வீட்டில் கொண்டுபோய் இறக்கிவிட்டாள்.

கோகிலா மாதவனை எதிர்பார்த்த வண்ணம் நித்திரை கொள்ளாதிருந்தாள். "நேரம் சென்றுவிட்டது. மன்னிக்கவும்" என மிலானி காரில் ஏறிச் செல்ல, மாதவன் வீட்டிற்குள் வந்தான். அவன் நடக்கும்போது விழப்போவதைக் கண்ட கோகிலா அவனைத் தாங்கிப் பிடித்துக்கொண்டாள். கூட்டிக்கொண்டு போய் படுக்க வைத்தாள். அவனது சப்பாத்துகளைக் கழற்றிவிட்டு தானும் சரிந்துகொண்டாள். அன்றுதான் அவள் கண்களில் நீர்முட்டி வழிய ஆரம்பித்தது. சிந்தனைகள், கற்பனைகள் எல்லாம் சிதறிப்போயின.

மறுநாள் மாதவன் வேலைக்குப் போவதற்கு முன் முதல்நாள் பிறந்தநாள் விழாக் கொண்டாட்டத்தில் நடந்தவற்றைக் கூறினான்.

"என்ன செய்வது? அவர்கள் தருவதைக் குடிக்க வேண்டிய கட்டாயம். நான் குடிக்க மறுத்தால் நாகரிகமற்றவன் என்று நினைப்பார்கள். அவர்கள் உண்டு, குடித்து மகிழும்போது நான் அதில் பங்குபெறாமல் விடுவது சரியா? சேர்ந்து உழைப்பதுதானே நாகரிகம். உமக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியும்தானே. அதனால்தான் குடித்தேன். இனிமேல் இப்படிக் குடிக்கமாட்டேன். உமது முகமே வாடிவிட்டது. உமக்கு விருப்பம் இல்லாதவற்றை இனிமேல் நான் செய்யமாட்டேன். சும்மாதானே குடிச்சனான். குடியில ஆசைப்பட்ட? நீர் கவலைப்படக்கூடாது." என மாதவன் அவளைத் தேற்றினான். கோகிலாவும் திருப்தியடைந்தாள். முதலாளி இனிமேல் கேட்டால் தனக்கு ஒத்துவரவில்லை எனச் சொல்லிவிடுவதாகவும் மாதவன் அவளுக்குக் கூறினான்.

சொன்னது போலவே மாதவன் குடிக்காமலிருந்தான். தன்மீது அவன் காட்டும் அன்பு, மரியாதையை எண்ணி கோகிலா உருகிப்போனாள்.

மாலைநேரங்களில் மாதவனுடன் கதைப்பதற்காக மிலானி தொழிற்சாலைக்கு வரத்தொடங்கினாள். மாதவனும் வீட்டிற்குப் போவதற்று முன் அவளுடன் கதைத்து மகிழ்வான்.

ஒருநாள் மாலை மாதவன் மிலானியை தனது வீட்டிற்கு கூட்டிக்கொண்டு போனான். தனது தொழிற் சாலையில் வேலைசெய்பவள் என்று அவளை மனைவிக்கு அறிமுகப்படுத்தினான். கணவனுடன் வேலை செய்பவள் என்ற மரியாதையுடன் கோகிலா மிலானியை உபசரித்தாள். பொச்சில் அவளுடன் உரையாடினாள்.

மாதவனின் கதிரைக்குப் பக்கத்திலேயே மிலானி அமர்ந்துகொண்டு அவனது முதுகில் தட்டுவதும், கையைப் பிடிப்பதுமாக குறும்புகளுடன் கதைத்துக் கொண்டிருந்தாள். மாதவனுக்குச் சங்கடமாக இருந்தது. கோகிலாவுக்கும் ஏதோ மாதிரி இருந்தது.

"ஜேர்மன் பெண்கள் இப்படித்தான் சரிசமமாகப் பழகுவார்கள். ஆண்கள் என்று வெட்கப்பட மாட்டார்கள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று மிலானி போனபின் மாதவன் கோகிலாவை சமாதானப்படுத்தினான். கணவன் மேல் வைத்திருக்கும் அன்பு, நம்பிக்கை என்பவற்றால் கோகிலா அவனைத் தவறாக எடைபோடவில்லை.

அதன்பின் மிலானி தொடர்ந்து அவர்கள் வீட்டுக்கு வந்து உரையாடி, இலங்கைச் சாப்பாடு என்று சாப்பிடத் தொடங்கினாள். கோகிலா அதைப்பற்றி கொஞ்சமும் சந்தேகப்படவில்லை. சிலநாட்களில் அவள் மிலாணியின் சிநேகிதியாகிவிட்டாள். ஒருநாள் கோகிலா மிலானியிடம் தனக்கு "ஒரு வேலை எடுத்துத்தர முடியுமா?" என்று கேட்டாள். "வீட்டில தனிய இருக்கப் பொழுது போகுதில்லை. குழந்தைகளும் இல்லை. வேலை செய்தால் நல்லது என்று நினைக்கிறேன்." என்று காரணம் சொன்னாள். தன்னுடைய சகோதரன் வைத்திருக்கும் 'ரெஸ்ரோரண்டில்' வேலை வாங்கித்தருவதாக மிலானி உறுதியளித்தாள்.

வேலைக்குப்போக விரும்பும் தனது எண்ணத்தை மாதவனுக்கு தெரிவித்தாள் கோகிலா. "நல்லது. உமது பொழுதுபோக்குக்காவது நல்லது" என்று அவன் சம்மதித்தான்.

இரண்டு மாதங்களின் இறுதியில் கோகிலா 'ரெஸ்ரோரண்டில்' வேலைக்கு அமர்த்தப்பட்டாள். காலையில் மாதவனும், கோகிலாவும் ஒன்றாகவே வேலைக்குக் கிளம்புவார்கள். வேலைக்குப்போவது கோகிலாவுக்குத் திருப்தியாக இருந்தது. தான் வேலைக்குப் போனாலும் தனது கணவனுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளை அவள் தவிர்க்கவில்லை. இருவரும் உழைத்ததனால் பணமும் சேர்ந்தது. எதிர்கால வாழ்க்கையை சந்தோஷமாக அமைக்கலாம் என்று அவள் கற்பனை பண்ணினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகிலா வேலைசெய்யும் ரெஸ்ரோரண்டின் ஒரு வருடப் பூர்த்தியை முன்னிட்டு ஒரு கொண்டாட்டம் நடைபெறும் என ஒரு மாதத்திற்கு முன்பே அறிவிக்கப்பட்டு ஆயத்தங்கள் செய்யப்பட்டன. கொண்டாட்டத்திற்கு ஒரு கிழமைக்கு முன் அங்கு வேலை செய்வோருக்கு மேலதிக வேலை இரவு பத்து மணிவரை கொடுக்கப்பட்டது.

அந்த ரெஸ்ரோரண்டில் கோகிலாவுடன் வேறு பெண்களும் வேலை செய்தார்கள். அவர்கள் களைத்திருக்கும் போது பீர், வைன் என்பன இலவசமாகக் கொடுக்கப்பட்டன. ஒருநாள் கோகிலா நன்றாக களைத்திருந்தபோது அவளுடன் வேலைசெய்யும் பெண் ஒருத்தி அவளிடம் கைநீட்டினாள். "குடித்தால் களைப்பெல்லாம் போய்விடும்" என்று ஆலோசனை கூறினாள்.

கோகிலா முதலில் மறுத்துவிட்டாள். அப்போது அவள் கணவன் "நாகரிகமில்லை என்று நினைப்பார்கள். தரும்போது மறுக்காமல் குடிக்கவேணும். அதுதான் நானும் குடித்தேன. அவர்களுடன் சேர்ந்து நடக்க வேண்டும்" என்று ஒருநாள் அவளுக்கு சொன்னதை நினைத்துக் கொண்டாள். அதன்பின் மறுக்காது அதனை வாங்கிக் குடித்தாள். புதுப் பழக்கமாதலால் அவளால் தொடர்ந்து வேலை செய்யமுடியவில்லை. அவளுடைய நிலைமையைப் பார்த்த சக வேலையாள் பிலிப் தன்னுடைய காரில் ஏற்றி அவளை வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போனார்.

மனைவியை எதிர்பார்த்துக் காத்திருந்த மாதவன் அவளைக் கொண்டுவந்து இறக்கிவிட்ட பிலிப்புக்கு நன்றிகூறி அனுப்பி வைத்தான். "நீங்கள் சாப்பிட்டு விட்டீர்களா? எனக்கு களைப்பாய் இருக்கிறது" என்று கோகிலா போய்ப் படுத்துவிட்டாள். சாப்பிட்டபின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுக்கைக்கு வந்த மாதவன் கோகிலாவிடமிருந்து மது வாடை அடிப்பதை உணர்ந்து அதிர்ச்சியடைந்தான். உடனே அவளை உலுப்பி விசாரித்தான். கோகிலா நடந்ததைச் சொன்னாள். மாதவனுக்கு கோபமாகவும், வெறுப்பாகவும் இருந்தது. என்றாலும் பேசாமல் படுத்துக்கொண்டான்.

மறுநாள் காலையில் இருவரும் கதைக்காமலேயே வேலைக்குப் போனார்கள். இரவுவேலையால் வந்ததும் மாதவன் துள்ளிக் குதித்தான்.

"இரவு என்ன களைப்பு?"

"நீங்கள்தான் சொன்னீர்கள் நாகரிகமில்லையென்று. அதனால் நான் மருந்துபோல குடித்தேன்" - கோகிலா.

மாதவனுக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வர காலால் உதைத்தான். கோகிலா தடுமாறி விழுந்தாள்.

"உன்னை யார் குடிக்கச் சொன்னது?"-மாதவன்.

"நீங்கள்தான் சொன்னீர்கள்" - கோகிலா

"குடிக்கச் சொல்லியா?"

"தருவதை மறுக்கப்படாது என்று..."

கோகிலா சொல்லி முடிப்பதற்கு முன் அவள் கன்னத்தில் பளார் என்று ஒரு அடி. "நீ இனி வேலைக்குப் போகவேண்டாம். போகக்கூடாது'' என்று மாதவன் கத்தினான்.

''அதெப்படி உடனே நிற்பது. முதலாளிக்குச் சொல்லிப் போட்டுத்தான் நிற்கலாம்" கோகிலா கன்னத்தை தடவியபடி சொன்னாள். "ஏன் வேலைக்குப் போகக்கூடாது?" என்று கேட்டாள்.

"ஏன் குடிக்கவா?' மாதவன் கோபத்தில் வெடித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் குடிக்கேக்க பிழையில்லை. எனக்கு அந்த நிலமை வந்து நான் குடித்தால் பிழை. வேலைக்குப் போகக்கூடாது. சரி இப்ப வரப்போற ஆண்டுவிழாவோட நான் வேலைக்குப் போவதை நிறுத்துகிறேன்."

ஆண்டுவிழா வந்தது. கோகிலா மாதவனையும் கூட்டிக்கொண்டு ரெஸ்ரொரண்டுக்குப் போனாள். இசைநிகழ்ச்சி நடந்துகொண்டிருந்தது.

கோகிலா உள்ளே சாப்பாடு தயாரிக்கப்படும் இடத்தில் ஓய்வில்லாமல் வேலை செய்துகொண்டிருந்தாள்.

முன்பகுதியிலிருந்து இசையை ரசித்துக்கொண்டிருந்த மாதவன் தாகம் எடுக்க கோகிலாவைத் தேடிக்கொண்டு உள்ளே போனான். அங்கே பிலிப் கோகிலாவின் முதுகில் தட்டி, தோளில் தட்டி அதைஎடு, இதைச்செய் என்று சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருந்தான்.

கொஞ்சநேரம் அப்படியே நின்று அவர்களைக் கவனித்துக் கொண்டிருந்த மாதவனால் பொறுக்க முடியவில்லை. தன்னை மறந்து கோகிலா என உரத்துக் கத்தினான். கோகிலா ஆச்சரியத்துடன் திரும்பினாள்.

அவளை நெருங்கிய மாதவன் "சரசமாடவா இங்கு வந்தாய்?" என்று கேட்டான். கோகிலா வாயடைத்துப் போனாள். 'என்னையா? என் கணவரா இப்படிக் கேட்பது?' அவள் உள்ளம் நொறுங்கியது. மாதவன் அந்த இடத்தை விட்டுப் போய்விட்டான்.

கோகிலா வேதனையுடன் தனது வேலையை முடித்துக்கொண்டு மாதவனைத் தேடினாள். அவன் அப்போதே போய்விட்டதாக சகவேலையாள் ஒருவர் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகிலா வீட்டுக்கு வந்தாள். மாதவன் அங்கு இல்லை. சிறிதுநேரம் கழித்து வந்தான்.

"உனக்கு வெட்கமில்லை. அவனோடு முட்டிக் கொண்டு வேலை செய்ய? நீயும் அதற்கு ஒப்புக் கொண்டாயா? என்னைவிட அவனது அழகு உனக்குப் பிடித்துவிட்டதா?" என்று பொரிந்தான்.

கோகிலா என்ன சொல்வதென்று தெரியாமல் தலையில் கை வைத்தாள். 'சீ இந்த ஆண்களே சுயநலவாதிகள். சந்தேகக்காரர்கள். தான் எந்தப் பெண்ணுடனும் பழகலாம். அவள் கையைப் பிடிக்கலாம். அதை மனைவி பொறுக்க வேண்டும். வெறும் நட்புதான் என்று மனைவி நினைக்க வேண்டும். சந்தேகம் கொள்ளக்கூடாது. விசாரிக்கக்கூடாது. அவன் கூட்டிவரும் பெண்களுக்கு மரியாதை கொடுத்து மனைவி வரவேற்க வேண்டும். இதுதான் ஆண்களின் நோக்கம்.'

'ஆனால் ஒரு பெண் வேலைக்குப் போய், வேலை செய்யும் இடத்தில் ஆண்களுடன் பழக்கம் ஏற்பட்டால் அவள் அவனைக் கணவனாக அடைய ஆசைப்படுகிறாள் என்று அர்த்தம் கொள்கிறார்கள். சந்தேகத்துடன் நேரடியாக விசாரிக்கிறார்கள். ஆணின் கை தெரியாமல் பட்டாலும் பெண் அதை வலிந்து செய்ததாகவே கணவன் நினைக்கிறான். தனக்கு பெண்களின் நட்பு ஏற்படுவதுபோல மனைவிக்கும் வேலை செய்யும் இடத்தில் ஆண்களின் நட்பு, பழக்கம் ஏற்படும்தானே என சகித்துக்கொள்ளும் மனப்பக்குவம் புரிந்துணர்வு, பொது அறிவு ஆண்களுக்கு இலலையா' என கோகிலா தன் மனதுக்குள்ளேயே குமுறினாள்.

'எவ்வளவோ நம்பிய என்னை இவர் இப்படி சந்தேகப்பட்டார் என்றால் இனியும் இவருடன் வாழ்வது போலிதான். கணவன் மனைவிக்குள் சச்சரவு இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் சந்தேகம் இருக்கக்கூடாது. குடும்பம் எனும் இலையை அரித்துத் தின்னும் புழுப் போன்றது சந்தேகம்' என்று அவள் மனவேதனைப்பட்டாள். தனது வாழ்க்கைய இந்த அத்திவாரத்தில் அமைக்க முடியாது என்று எண்ணினாள்.

'மிலானி என்ற பெண்ணுடன் என் மனசுக்குப் பிடிக்காத மாதிரி அவர் நடந்துகொண்டார். அதை நான் தப்பாக எண்ணவில்லையே. அவரில் எனக்கு அசையாத நம்பிக்கை இருந்தபோது நான் சந்தேகப்பட அவசியமே இல்லை. அப்படியிருக்க என்னில் நம்பிக்கையுள்ள கணவன் எப்படி என்னில் சந்தேகப்பட முடியும்? பணம், தொழில் என்று வேலைக்குப் போனேன். இப்படி உருவாகும் என்று நினைக்கவில்லையே. பணம் இனி எனக்கு எதற்கு? இப்படி வரும் என்று முன்கூட்டியே அறிந்துதான் கடவுள் எமக்குப் பிள்ளைப் பாக்கியத்தைக் கொடுக்கவில்லை என்று பலவாறு சிந்தித்தபின் வீட்டைவிட்டு வெளியேறினாள் கோகிலா.

இந்த உலகத்தில் ஒரு பெண்ணுக்கு தன்னம்பிக்கை, துணிவு இருக்குமேயானால் தனித்து வாழலாம் என்ற எண்ணமுடைய புரட்சிப் பெண் இவள். இவளது மனப்பான்மைக்கு ஊன்றுகோலாக இனி ஒரு ஆண்மகன் அவள் வாழ்வில் சந்திக்கலாம். விடலாம். அவளின் மனோபாவத்தைப் பொறுத்தது.

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்பிற் களிம்பு

முற்கூட்டியே அறிவித்தபடி அன்று சர்வகலா சாலையில் கவியரங்கத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனக்குக் கவிதைகளை ரசிக்கத் தெரியும். ஆனால் கவிதைகளை என்னால் எழுத முடியாமலிருந்தது. எதுகை, மோனை சொற்களைப் புகுத்தி சீர், அடி, தளை தவறாமல் கவிதை இயற்றுவது பாவலர்க்குரிய கலைதான் என்பது எனது எண்ணம். பார்வையாளனாகவே மண்டபத்துக்கு வந்து அமர்ந்தேன்.

கவிதைபாட மேடைக்கு ஏறிக்கொண்டிருந்தவளைப் பார்த்தபோது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அவள் ராதா என்ற பெயருடைய மாணவி. அமைதியான பேர்வழி. என்னைப் பொறுத்தவரையில் அவளுடைய நடையுடை பாவனைகள் ஆச்சரியமானவையே. சக மாணவர் எவ்வளவு கேலி செய்தாலும் அதையிட்டு உணர்ச்சிவசப்பட்டு ஏறிவிழ மாட்டாள். குனிந்த தலை நிமிர மாட்டாள். அவளுக்குக் கவிதை எழுதக்கூடத் தெரியுமோ? வகுப்பில் பூனைமாதிரி, பொம்மை மாதிரி இருப்பாளே? கவிதைபாட எப்படி துணிச்சல் வந்தது? புதுமையாயிருக்கே என்று ஆச்சரியமடைந்தேன்.

ராதாவின் கவிதைகளை ரசிக்க நான் மட்டுமல்ல, மற்றைய மாணவர்களும் ஆவலாய் இருந்தனர். மண்டபம் முழுமையாக நிறைந்திருந்தது.

மேடையில் நின்ற ராதா இந்தியப்படைகளின் துப்பாக்கி வேட்டுக்கு இரையான தனது தாயையும், தந்தையையும், துடிதுடித்து இறந்த சகோதரனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்துக் கொண்டாள். நட்டாற்றில் நிற்கும் தன்னிலையையும் எண்ணிப் பார்த்தாள். போராட்டத்தில் சங்கமித்த உயிர்களை, ஆத்மாக்களை நினைத்தாள். பாட ஆரம்பித்தாள்.

சுதந்திரமாய் வாழ்ந்திட்ட என்னைக்
கதி கலங்க வைத்துச் சென்றுவிட்டீரே
விதி என்று நான் எண்ணுவதா? இல்லை
சதி என்று மனம் மாறுவதா?
ஈன்ற பெற்றோர் உயிருடன் துடித்ததை
ஏங்கிப் பார்த்து நான் பதறி
நின்று துடித்த என் நெஞ்சிலே
ஊன்றிவிட்ட சோகத்தைச் சொல்லவா?
உங்கள் முன்னே சோக கீதம் படிக்கவா?
என் வாழ்க்கைச் சரித்திரம்தான்
இன்று கவிதையாய் பாயுதே
இன்று நாம் இங்கே நாளை என்று
ஒன்று நமக்குண்டோ?

வாழ்க்கையில் அனுபவித்த சோகத்தையே ராதா கவிதையாகப் புனைந்துவிட்டாள். அவளின் கவிதையில் கட்டுண்டு அந்த அரங்கம் மயான அமைதியானது. கவிதையை முடித்தவுடன் கைதட்டலில் கூட தயக்கம் ஏற்பட்டது. பலரது கண்களில் நீர்த்துளிகள் உருண்டன. அவளையே அங்குள்ளோர் கண்கொட்டாது பார்த்தனர். சிறிது நேரத்தின் பின் மாணவர்கள் உரையாடி ஆரவாரித்தனர்.

நானும் ராதாவின் நேரடியான முழுமையான ஆவேசக் குரலை இன்றுதான் கேட்டேன். அவளுடைய அமைதியான தோற்றம் அவளின் அறிவுப் பொக்கிசத்தைக் காட்டியது. அதற்குள் அவளது வாழ்க்கைச் சோகங்கள் நிறைந் திருப்பதையும் அவளது வார்த்தைகள் உணர்த்தின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியரங்கம் முடிந்து எல்லோரும் வெளியேறிக் கொண்டிருந்தனர். நான் ராதாவை நோக்கிச் சென்றேன். என்னைக் கண்டவுடன் தலையை நிமிர்த்தி என்னைப் பார்த்தாள். அவளுடைய சோகக் கண்களின் பார்வையிலிருந்து மீளமுடியாத நான், "உங்களுடைய கவலையான வாழ்க்கைக்கு எனது அனுதாபங்கள். வேறு எதை நான் சொல்லமுடியும். வாழ்வில் நீங்கள் நிறையவே துன்பச் சக்கரத்தில் சுழன்றுள்ளிர்கள் என்பதைக் கவிதைகள் மூலம் எடுத்துக் காட்டியுள்ளீர்கள். உண்மையானவையே இன்று அரங்கத்தில் பாராட்டையும் பெற்றுள்ளது. உங்கள் கவிதை உண்மையில் என்னை அதிகமாகவே பாதித்துள்ளது" என்று சொன்னேன்.

நான் இப்படி அவளுடன் கதைப்பேனென்றோ, பாராட்டுவேனென்றோ அவள் நினைத்திருக்க மாட்டாள். தனது சோகத்தைப் பகிர்ந்து கொண்ட திருப்தியில் அவள் அமைதியாக நடந்து கொண்டிருந்தாள். எனது வார்த்தைகளுக்கு மறு வார்த்தைகள் அவளிடமிருந்து வர சிறிது நேரம் எடுத்தன.

"என் சோகத்தைச் சிலர் உண்மையென்றுணராது கற்பனைக்கவிதை என ரசித்தனர். பாராட்டினர். அவர்களுக்குள்ளே நீங்கள் ஒருவர்தான் புரிந்துகொண்டுள்ளீர்கள்." என்று அவள் நாத்தழுதழுப்புடன் கூறினாள்.

அன்றைய ராதாவின் துயரப்படம் எனக்கு அவள்மீது ஒரு இனம்புரியாத அனுதாபத்தைத் தோற்றுவித்தது. மறுநாள் வகுப்பில் ராதாவுக்காகக் காத்திருந்தேன். அவள் புன்னகைத்தாள். நான் பதிலுக்கு "குட் மோர்னிங்" என்றேன். "உங்களிடம் வேறு கவிதைகளும் உண்டா? இருந்தால் அவற்றை நான் படித்துப் பார்க்கலாமா?" என்று அன்புடன் கேட்டேன் ஆதரவுடன் கூடிய நட்புடன்.

"என் கவிதைகளைப் படிப்பது என் வாழ்க்கை ஓட்டங்களை நீங்கள் அறிந்து கொள்வதற்கு ஒப்பானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோகமயமான வாழ்க்கையை நீங்கள் படித்து கவலைப்பட விரும்புகிறீர்களா? உங்களுக்கு ஏன் வீண் சிரமம்" என்றாள் ராதா.

"எனக்கு சிரமம் இல்லை. உங்களுக்கு என்னால் இயன்றதை உதவலாம். உங்களுக்கு வாழ்வில் ஒரு பற்றை ஊட்டலாம் என்றுதான் படிக்க விரும்புகிறேன்."

"அப்படியென்றால் தருகிறேன்".

அடுத்தநாள் அவளின் கவிதைகளை வாங்கிப் படித்தேன். அவள் தன் வாழ்க்கையில் தனித்த பிறவியாக, தாய், தந்தையை இழந்து தனிமரமாக வாழ்ந்துவருவதும், திருமணப் பேச்சின்போது சீதனம் வந்து நின்று தடுப்பதும், சித்தியின் ஆதரவால் இன்றுவரை உயிர்வாழ்வதும், நாட்டின் விடிவுக்கு ஏங்குவதுமான அவள் நிலமைகள் யாவும் எழுதப்பட்டு சோகத்தைக் கொட்டிக் கிடந்தன. எவ்வளவோ துயரப் புயலுக்கள் இந்தப் பூ நின்று திராணியற்று ஆடிக்கொண்டு நிற்கிறது என உணர்ந்தேன். என் நெஞ்சம் உருகியது.

ராதா என்னும் பூங்கொடிக்கு ஒரு கொழுகொம்பு வேண்டும் என உணர்ந்தேன். அவளை நினைக்கவும் பரிதாபமாக இருந்தது. முன்பொருநாள் சீதனத்தால் திருமணம் தடைபட்டதையும், இடையே சாதி என்ற பாறாங்கல்லினால் அவள் திருமணம் தடைப்பட்டதையும் அவளின் கவிதைகள் மூலம் ஊகித்துணர்ந்தேன். அவளுடைய வாழ்க்கைக்கு உற்ற துணை எவரும்இல்லை.

நான் ராதாவுடன் பழகுவதை மற்ற மாணவர்கள் கேலியாகப் பார்த்தனர். "சாதி குறைந்த பெண்ணிடம் எப்படிக் காதலாம்?" என்று பல கதைகள் என்காதில் அடிபட்டன. அதை நான் அப்போது பெரிதுபடுத்தவில்லை. "எனது வாழ்க்கை இது. நான்தானே வாழப்போகிறேன். உங்களுக்கு என்ன'' என்பதுபோல அவர்களுடன் ஏட்டிக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டியாகக் கதைத்துவிடுவேன். ராதா மேல் எனக்கு அனுதாபக் காதல்தான் ஏற்பட்டது. நாட்கள் பல பழகினோம். அவளும் என்னில் தன்னுயிரையே வைத்திருந்தாள்.

உத்தமமான பெண். அறிவிலும் சிறந்து விளங்கும் அடக்கமான குடும்பப்பெண் என்பது மட்டும் அவளின் சீதனமாக இருந்தது. நான் பிச்சைப்பணமான சீதனத்தை எதிர்பார்ப்பவன் அல்ல. இவ்வளவு இயற்கை கொடையான சீதனம் இருந்தும் இவளைத் திருமணம் செய்ய பின்நின்ற மாப்பிள்ளைமாருக்குக் கைமாறும் பணத்தில், ரொக்கத்தில் கண்ணாயிருந்தனரேயன்றி, வாழ்வு இறுதிவரைக்கும் ஒத்துழைக்கும் ஒரு அறிவுள்ள மங்கை என்று எண்ண அறிவில்லையே என்று கோபப்பட்டேன்.

எங்கள் படிப்பும் முடிந்தது. பிரிய மனமின்றி பிரிந்துசென்றோம். அதிக காலம் கடிதத் தொடர்புகளுக்கும், செலவுகளுக்கும் இடம் வைக்காமல் என் பெற்றோர் சம்மதமின்றியே ராதாவைத் திருமணம் செய்துகொண்டேன். எவ்வளவுதான் படித்தாலும், வளர்ந்தாலும் பண்பாட்டுக் கோப்புக்குள் வாழும் பெற்றோர்களுக்கு முன்னே நிற்கும் தைரியம் எனக்கு இல்லையே. திருமணம் முடிந்து காலம் செல்லச் செல்ல உற்றார், சுற்றம், அக்கம், பக்கம் ஒதுக்குவதை நான் உணர்ந்துகொண்டேன்.

இதற்கு என்ன காரணம்? ஆதரவற்ற மங்கைக்கு, சாதி குறைந்த என்று மனிதனே பாகுபடுத்திவிட்ட பெண்ணுக்கு நான் வாழ்க்கை கொடுத்துவிட்டேனாம். இது என்ன விசித்திர சமூகம்? தாங்கள் வாழ்வு கொடுக்கவும் மாட்டார்கள். கொடுப்பவர்களையும் விடமாட்டார்கள். அப்படியே அந்தப் பெண் அபலைப் பெண்ணாக வாழ்வதைப் பார்த்துக்கொண்டு வெறும் முதலைக்கண்ணீர் வடிக்கவே இச்சமூகம் விரும்புகிறதென முற்றாக உணர்ந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது சொந்த இடத்தில் நான் வாழமுடியாதென உணர்ந்து வேறு இடத்தில் குடிபுகுந்தேன். அந்த ஊருக்குப் புதுசு என்றபடியால் அங்குள்ளவர்கள் எம்மில் ஆதரவு காட்டினர். நாட்கள் நகர எம்மைப் பற்றிய செய்தி எங்கிருந்தோ பறந்து வந்து இவர்களுக்கும் கிடைத்துவிட்டது. பின் எம்மைக் கொஞ்சம் கொஞ்சமாக அந்நியோந்நியப் படுத்தினார்கள்.

எனக்கு வெறுத்தே விட்டது. ராதாவை அல்ல. எமது சமுதாயத்தை. சாதி ஒழிப்புக்கு என்னைப் போன்ற ஒருவன் மட்டும் சீர்திருத்தவாதியாக நின்றால் போதாது என்பதைதத்தான் எனது வாழ்க்கைப் பாடமாகப் பெற்றுக்கொண்டேன். ராதாவோ "என்னால்தானே உங்களுக்கு இவ்வளவு கஷ்டங்கள், வேதனைகள்" என்று கூறியவண்ணமிருந்தாள்.

சிலநாட்களாக பலத்த யோசனை செய்தேன். வெளிநாட்டுக்குப்போய் நிம்மதியாக வாழலாமா என எண்ணினேன். நாட்டில் பிரச்சினை தலைதூக்கிவிட, எல்லா மக்களும் வேற்றுமைகள் மறந்து உயிரைப் பாதுகாக்கும் தருணத்திலும் சாதிப்பற்று குறைவதாயில்லை. எல்லா வற்றையும் யோசித்துவிட்டு மேற்கு ஜேர்மனிக்குப் போவோம் என வந்து சேர்ந்துவிட்டேன்.

ஜேர்மனி வந்து ஒரு கிழமை இருக்கும். எமது தஞ்சப் பதிவு அலுவல்களை ஒரு நண்பர் வந்து உதவினார். சகலத்தையும் ஓடியாடிச் செய்தார். ஒருநாள் வெயில்நேரம். பசியும், தாகமும் வயிற்றைக் கிள்ளியது. ராதாவும் புது இடங்கள், பிரயாணங்கள் என்பவற்றால் சோர்ந்துவிட்டாள். எங்காவது இளைப்பாற விரும்பினாள்.

எங்களுடன் வந்த நண்பர் எமதினத்தவர்தான். என்றாலும் முன்பின் தெரியாதவர். ராதாவின் பரிதாபத்தைப் பார்த்து "காப்பிக் கடைக்குப் போறதென்றாலும் கையில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசில்லை. உங்களுக்கும் சோசல் காசு நாளைக்குத்தான் கிடைக்கும். இப்ப காசில்லாம என்ன செய்யிறது?" என வருந்திவிட்டு சிறிது தூரத்தில் இருந்த தமிழ்க்குடும்பத்தின் வீட்டுக்கு எம்மைக் கூட்டிச் சென்றார்.

வீட்டிலிருந்தவர்கள் "உட்காருங்கள்" என்று அன்புடன் கூறினார்கள். ராதாவும் கதிரையில் அப்பாடா என்று அமர்ந்தாள். அங்கு வசித்தது ஒரு நடுத்தர வயதுக்குடும்பம். கணவர் மனைவியைக் கூப்பிட்டு தேநீர் வைக்கும்படி ஜாடையாலே தெரிவித்தார். அவர் மனைவியும் தேநீர் வைப்பதற்காக சமையலறைக்குச் சென்றுவிட்டாள். கணவர் என்னுடன் கதைத்துக் கொண்டிருந்தார். நாட்டுப் புதினங்களை விசாரித்தார்.

நாங்கள் கதைத்துக் கொண்டிருக்கும்போது சமையலறையில் இருந்து வந்த உரையாடல் கிசுகிசுவெனக் கேட்டது. எனக்கு வலிக்காது என அம்மா சின்ன வயசிலேயே சொல்வாள். அது உண்மைதான். ஏனெனில் இவருடைய மனைவியின் குரல் எனக்கு மெல்லியதாகக் கேட்டது. அட்டாவதானியாக நின்று அதை நான் கிரகித்தேன்.

"இவர்களை எனக்குத் தெரியும் போல இருக்கு. இவர்களின் கதையிலிருந்து அறிந்து கொண்டேன். அந்தப் பொம்பளை யார் தெரியுமோ? மீன்பிடிக்கும் பொன்னர் இருக்கிறாரே அவரின் பேத்தி, மீனவ ஆட்கள். சின்ன வயசில நீ கண்டிருப்பாய் பிள்ளை. தண்ணி ஊத்துவம், கப்புகளைக கழுவு. இல்லை. இல்லை. பொறு! இதைப் பாவிக்கவேண்டாம். பழைய கப்புகள் கொஞ்சம் கிடக்கு. அதில ஊத்திக்குடுப்பம்" என அம்மா மகளுக்குச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

இந்த வார்த்தைகள் நாராசமாய் என் காதுகளில் ஒலித்தன. ராதாவுக்கு இவை கேட்க நியாயமில்லை. கண்மூடியபடியே களைப்பிலிருந்தாள். எனக்கோ பசி, தாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் பறந்துவிட்டது. எங்கள் நாட்டில்தான் சாதி என்று ஏதோ பூச்சாண்டி காட்டுகிறார்கள். இங்காவது நிம்மதியாக இருக்கலாம் என வந்தேனே. நிலவுக்குப் பயந்து பரதேசம் போன கதைபோல் இருக்கிறதே என மனம் குமைந்தேன்.

வயிறு நிறைந்தது. களைப்பு நீங்கியது. சாதி, சாதியென்று எம்மக்கள் எங்கெல்லாம் கொண்டு திரிகிறார்கள். இங்கு கூடப் பாராட்டுகின்றார்களே. இங்கும் அது தேவையா? ஏன் தேவை? யார் யாருக்கு இங்கே சேவகம் செய்யவேண்டும்? எமக்கும், இவர்களுக்கும் ஓடும் இரத்தத்தில் வேற்றுமையா? ஐயோ மூடச் சமூகமே எனப் புழுங்கினேன். என்ன செய்வது? மானரோசம், பட்டம், பதவி, அறிவு என்பதை இவ்விடத்தில் பார்க்க முடியுமா? தேநீரைக் குடித்துவிட்டு, நன்றிகூறிப் புறப்பட்டோம்.

நடந்துபோகும்போது எமது சமுதாயத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தேன். "எம் சமுதாயம் எங்கு போனாலும் அவர்களின் பரம்பரைக் குணங்கள் போகாது. அதேவேளை மற்ற நாகரிகங்களைப் பார்த்து பிரதி பண்ணும் பழக்கம் எம்மிடையேதான் உண்டு. ஆனால் நல்ல பழக்கங்களை விட்டு சமூகத்துக்கு உதவாதவற்றில் மோகம் கொண்டு பிரதி பண்ணிவிடுவதுதான் வேதனையானது. சாதி, சீதனம், பெண்ணடிமை என்பன செம்பிள்களிம்பு போல அவர்தம் வாழ்க்கையில் ஒட்டிக் கொண்டேயிருக்கும். எம் சமுதாயம் சுடுகாட்டில் சங்கமமாகும்போதுதான் அவையும் அழியும் என்று விரக்தியடைந்தேன். இவை எனது அனுபவத்தில் மட்டும் தோன்றியவை. எனது சகோதர, சகோதரிகளின் உத்வேகக் கொள்கைகள், நடைமுறைச் செயல்கள் இச் செம்பிலுள்ள களிம்பை நீக்கிவிடும் புளியாக மாறும் காலம் எப்போ" என ஏங்குகிறேன்.

★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாயும் வயிறும் வேறு

"என்னைப் பெற்றவள் எங்கே? அந்த முகத்தை எனக்குக் காட்டுங்கள்! துரோகிகள்! பெற்றவளிடமிருந்து என்னைப் பறித்த வஞ்சகர்கள்! எங்கே என்னைப் பத்து மாதம் சுமந்தவள்?" என்று பலவாறான சுடுமொழிகளை ஆத்திரம் தொனிக்கக் கத்திக் கொண்டிருந்தாள் சியாமளா.

மீண்டும் ஒரு ஆவேசம் வந்தவள் போல் ஒரு தடியையும் கையிலெடுத்துக்கொண்டு, "எங்கே என்னைப் பெற்றவள்? அங்கு என்னை அனுப்பிவிடுங்கோ!... இல்லாவிட்டால் நான் உங்களைச் சும்மா விடமாட்டேன்!" என்று தடியைக் காட்டி உறுக்கினாள்.

ஐம்பது வயது நிரம்பிய சிவகாம சுந்தரியையும், ஐம்பத்தாறு வயதுடைய அவளது கணவரையும் நோக்கியே தனது ஆத்திரவார்த்தைகளையும், துன்ப வார்த்தைகளையும் அள்ளி வீசினாள் சியாமளா.

சியாமளா சிறுபெண் அல்ல. பத்தொன்பது வயது நிரம்பிய மங்கை அவள். ஏனோ மனம் குழம்பியவளாக சிலகாலமாக, அவளில் மாற்றம் ஏற்பட்டது. அவளின் பெற்றோர்களான இராஜசேகரமும், சிவகாமசுந்தரியும் அவளது மாற்றத்துக்கான காரணங்களைப் புரியாது தவித்தனர். சியாமளாவின் கேள்விகளுக்கும் பதில் ஏதும் கூறாமல் அடங்கியொடுங்கி மௌனமாகவும் இருந்தனர். அத்துடன் அவர்களுக்கு "சியாமளா தமக்கு ஏதும் செய்துவிடுவாளோ?" என்ற பயமும் கூடவே தொற்றிக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'என்ன இவள் இப்படி இருக்கிறாள்? ஒரு குறையும் விடாமல் ஒரேயொரு பிள்ளையாக அவளை நாங்கள் செல்லமாக வளர்த்தோம். என்ன குறை விட்டனாங்கள்? ஏன் இப்படி எங்களைக் கொல்வதுபோல் காளியாக மாறி நிற்கிறாள்' என்று அவளது பெற்றோர்கள் வேதனையால் விடிவு காணாமல் வருந்தினர்.

ஏறக்குறைய இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு இராஜசேகரத்துக்கும் சிவகாமசுந்தரிக்கும் சம்பிரதாயப்படியே திருமணம் நடைபெற்றது. இல்லறத்தை அவர்கள் செவ்வனே இன்பமாக நடத்தி வந்தனர். இராஜசேகரம் வறக்காப் பளையில் ஒரு புகையிலைக்கடையின் முதலாளியாக இருந்தமையால் செல்வம் செல்வாக்கோடு வாழ்ந்து வந்தார். எதுவிதக் குறையையும் அந்நேரம் ஆண்டவன் அவர்களுக்கு கொடுக்கவில்லை. திருமணமாகி வருடங்கள் ஒன்று- இரண்டு- என ஐந்து வருடங்கள் தாண்டிவிட்டன. இதன் பிறகுதான் இவர்களுக்கு ஒரு வாரிசு இல்லையே என்ற குறை அரும்பத் தொடங்கியது. வாரிசு உருவாகும்- உருவாகும்- என காலங்கள் கடந்து, பல வைத்தியர்களிடமும் சிகிச்சைப் பெற்று விட்டார்கள். ஆனால் இறுதியாகப் பரிசோதித்த ஒரு வைத்தியர்தான் ஒரு உண்மையைச் சொல்லி வைத்தார். "சிவகாம சுந்தரியின் கருவறையில் ஒரு சிறுபாகம் துண்டிக்கப் பட்டுள்ளது, இனி கருத்தரிக்க இடமில்லை." எனக்கூறினார். இது சிவகாமசுந்தரிக்கு, திருமணத்திற்கு முன் செய்த அறுவைச் சிகிச்சையின் ஞாபகம் வந்தது. அந்த அறுவைச் சிகிச்சையின்போது நடந்த தவறு இப்போதுதான் அவளுக்குத் தெரிய வந்தது.

"ஐயோ கடவுளே!" என்று கூறி தலையிற் கைவைத்தாள். அந்த வைத்தியர் மீது அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இனி அவளால் என்ன செய்யமுடியும்? அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியர் எங்கு இருக்கிறாரோ? உயிரோடுதான் இருக்கிறாரோ? இதை எல்லாம் இனிக் கண்டுபிடித்து என்ன பயன்? முடிந்தது முடிந்துவிட்டது. நான் இனித்தாயாக முடியாதே" என்ற கவலையில் மூழ்கி விரக்தியுடன் வாழ்ந்தாள்.

அந்நிலையிலேதான் அவளுக்கு உண்மையை விளக்கிய வைத்தியரும், அவளின் பரிதாபநிலையை உணர்ந்து, இராஜசேகரத்தை நோக்கி, இப்படி யோசித்து வாழ்க்கையை வீணாக்க வேண்டாம், குழந்தையிலே பித்தாக இருக்கும் உங்கள் மனைவிக்கு "ஒரு பிள்ளையைத் தத்தெடுத்துக் கொடுங்கள்" அது அவவுக்கு நிம்மதியாக இருக்கும். உங்களுக்கும் எதிர்காலத்தில் உதவியாக இருக்கும் எனக் கூறினார். இராஜசேகரம் பலநாள் யோசனையின் பின்பு 'ஊரான் பிள்ளைக்கு நாமேன் ஆசைப்படுவான்' என்று மௌனமாக இருந்துவிட்டார்.

சிவகாமசுந்தரிக்கோ வாழ்க்கை பற்றற்றதாகி கோலமழிந்து, மனங்கலங்கி மீண்டும் அதே சிந்தனையில் மூழ்கியிருப்பதைக் கண்டு வருந்திய இராஜசேகரம் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவராக மனைவியை நோக்கி, "சுந்தரி! நீ ஏன் கவலைப்படுகிறாய் என்றும், அதனால் உன் வாழ்க்கையையே அழிக்கிறாய் என்றும் எனக்குத் தெரியுது... நீ தாயாக வேண்டும். அதுதானே உன்னுடைய விருப்பம். அதற்கு நான் வழி செய்கிறேன். பெற்றால்தான் பிள்ளையா?.. பிள்ளையைப் பெறாமலே தாயாக முடியாதா?"

"எப்படி முடியுமுங்க? சொல்லுங்களேன்!" அவளது ஆதங்கத்தைப் புரிந்துகொண்ட இராஜசேகரம், "நீ கவலைப்பட வேண்டாம். எனக்குத் தெரிந்த நண்பரிடம் கூறி, அனாதையாக இருக்கும் குழந்தை ஒன்றை வாங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்க்கலாமே. உனக்கும் குழந்தை கிடைத்தது மாதிரி இருக்கும், அந்தக் குழந்தையும் நல்ல பராமரிப்பில் வளரக்கூடியதாகவும் இருக்கும். என்ன சொல்லுகிறாய்?"

"அது எங்கள் குழந்தை என்று எங்கள் பெயரிலேயே எழுதிச் சான்றிதழையும் தருவார்களா? ஏனென்றால் பிறகு, சிலவேளை குழந்தையை யாரும் வந்து கேட்டால்..." என்று இழுத்தாள்.

"அப்படி ஒன்றும் நடக்காமல்... எல்லாம் எழுத்துமூலப்படி எங்களுக்கே சொந்தமாக்குவேன். நீ அதற்கு யோசிக்காமல் இருந்தால் எனக்கு நிம்மதி" என்று கூறிப் பெருமூச்சு விட்டார் இராஜசேகரம்.

உரிய காலங்கள் வரவே நண்பரின் தேடுதல் காரணமாக, "பிறந்து ஒருமாதச் சிசு ஒன்று உள்ளது, அதை அனாதை மடத்தில் நேற்றுத்தான் போலீசாரால் ஒப்படைக்கப்பட்டதாம். அதை உங்கள் பிள்ளையாக்குவதற்கு வேண்டிய ஒழுங்குகள் எல்லாவற்றையும் நான் செய்துவிட்டேன்" எனக் கூறினார் இராஜசேகரத்தின் நண்பர். உரிய முறைப்படி யாவும் எழுத்து மூலப்படி அந்த ஒருமாதச் சிசுவின் பெற்றோர்களாயினர் இராஜசேகரமும் சிவகாம சுந்தரியும்.

"சியாமளா" என்ற நாமமிட்டு இறைவன் அளித்த வரமென்று நினைத்து, அக்குழந்தையிலே உயிராகிவிட்டாள் சிவகாமசுந்தரி. மழலையின் இன்பத்தை அள்ளிப் பருகினாள் ஈன்றெடுத்த தாயாக. உண்மையிலே அக்குழந்தையின் ஒலியின் பின்னரே சிவகாமசுந்தரி பம்பரம்போல சுழன்று திரியும் உற்சாகத்தைப் பெற்றாள். சுருங்கச் சொன்னால் அவளுக்கு எல்லாமே குழந்தைதான். குழந்தைக்கென்று பணத்தை அள்ளிவீசி அத்தனைப் பொருட்களையும் வாங்கிவிடுவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேநேரம் குழந்தைக்கு நோய் என்று கண்டால் அவளும் நோயாளியாகிவிடுவாள். இவ்வாறு அன்புடனும் ஆசையுடனும் அந்தச் செல்வப்புதல்வியை வளர்த்து வந்தாள். வயது வளர வளர பாடசாலைக்குச் சென்று முறைப்படி கல்வியையும் கற்பிப்பதில் அக்கறையாக இருந்தாள் அந்தத் தாய். மனைவியின் மகிழ்ச்சியைக் கண்டு ஆனந்தப்பட்ட இராஜசேகரம் அந்த மழலையின்பத்தை அனுபவிக்கத் தவறவில்லை. அவருக்கு வியாபாரம், கடை என்ற காரணத்தால் அதிக நாட்டம் அவற்றிலேயே இருந்தது.

"இண்டைக்கு சியாமளா புதுச்சட்டை, புதுச்சப்பாத்து, போட்டிருக்கிறா" என பாடசாலை மாணவி ஒருத்தி சொல்ல, இன்னொரு மாணவி, அவ இண்டைக்கு மட்டுமா? போடுறா, ஒவ்வொருகிழமையும் புதுப்புதுச் சட்டை, சப்பாத்து, தோடு எல்லாம் போடுவா. எவ்வளவு செல்லப்பிள்ளை? எங்களுக்கு இருக்கா?" என்று சகமாணவிகள் பொறாமைப்படுமளவுக்கு சியாமளா உடையணிந்து, அலங்காரமாகச் செல்வது வழக்கம்.

காலங்கள் கடந்தன. சியாமளா பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சையில் தோல்வியடையவே படிப்பை மேலே தொடரமுடியாமற் போய்விட்டது. அவளுக்கு உலகத்தைப் புரியும் பருவம் வந்தவுடன் "தான் யார்? வளர்ப்புப்பிள்ளை" என மற்ற மாணவியரால், சுற்றியுள்ளோரால் அறியவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஆனால் இறக்கை முளைக்காத பறவை என்றபடியால் அச்சொற்களால் அவள் பாதிப்படைய வில்லை, அதற்காக மூளையைக் குழப்பாமல் "நான் நல்லாகத்தானே இருக்கிறேன்" என விட்டுவிடுவாள்.

காலச்சக்கரம் அதிவேகத்தில் சுழன்றுபோக இராஜசேகரத்துக்கு ஏதோ வியாதி பீடிக்கவே... அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியை நோக்கி "எமக்கு இந்த ஒரு பிள்ளைதானே, அவள்தானே எம்மைப் பார்க்கப் போகிறாள், ஆனபடியால் இந்த வீட்டையும், எம்மிடமுள்ள நிலபுலன்களையும் அவள்பெயரில் எழுதிவிடுவோம். அவளுக்குச் சகோதரர்கள் என்று ஒருவரும் இல்லை. அவள் நாம் இல்லாத காலத்திலே கஷ்டப்படக்கூடாது. நொந்தாரைக் கூப்பிட்டு எழுவதும்" எனக்கூறி குறிப்பிட்ட ஒருநாளில் உடமைகள் அனைத்தும் சியாமளாவின் பெயருக்கு மாற்றப்பட்டுவிட்டது, பிள்ளைப்பித்து கொண்ட அப்பாவிப் பெற்றோர்களால்.

சியாமளா உலகறிவு பெற்றுத் தன் காலில் வாழமுடியும் என நினைக்கும் வயதில் இப்போது வாழ்கிறாள். பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஒரு மேஜர் என்பதும் அவளுக்குப் புரியும். இப்போது பெற்றோர்களும் நோயாளியாகி விட்டார்கள்.. முதியவர்களாகியும் விட்டார்கள்.. இவர்களிட மிருந்து எனக்கு இனி என்ன சுகம் வரப்போகிறது? "வளர்ப்புப்பிள்ளை" என்ற ஒரு பெயரை இவர்கள் எனக்குத் தந்துவிட்டார்கள். இது இவர்களாலேதான் வந்தது. என்னைப் பெற்றவளுக்கு தமது காசை விரித்துவிட்டார்கள். பெற்றவளும் அதில் மயங்கி என்னைக் கொடுத்தாளே.. என்று இப்போது வளர்ப்புப் பெற்றோரை அறவே வெறுத்தாள். தடியெடுத்து கொல்லுவேன்.. அடிப்பேன்.. என வெருட்டவும் தொடங்கிவிட்டாள்.

அவளின் கேள்வி இதுதான். "எனது அம்மாவின் முகத்தை எனக்குக் காட்டுங்கள்! அவளிடமிருந்து ஏன் என்னைப் பிரித்தீர்கள்? என்னை வித்த அவளது பெத்தமனம் என்ன பாடுபட்டிருக்கும்? என நீங்கள் யோசிக்கவில்லை? அவளுடைய முகத்தை நான் ஒருமுறை பார்க்கவேண்டும். அவள் உருவம் எப்படி இருக்கும்? என்னைப்போல இருப்பாவா? என்று நான் பார்க்கவேண்டும். அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள்தான் வழிவகை செய்யவேண்டும். இல்லாவிட்டால் உங்களைப் பழிக்குப் பழி வாங்குவேன்" என்று பலவாறாகத் துன்புறுத்தத் தொடங்கிவிட்டாள் சியாமளா.

சிவகாமசுந்தரிக்கு அவள் வார்த்தைகள் ஒன்றும் சுடவில்லை. ஆனால் அவள் இப்போது கேட்பதைச் செய்துகொடுக்க முடியவில்லையே என்றுதான் வேதனைப்பட்டாள். தம்மிடம் உள்ள உடமைகள் அப்படியே இருந்தால் கொஞ்சம் பயபக்தியாகப் பரிந்து நடப்பாள். நமக்கென்று எதுவும் இல்லாமல் எல்லாத்தையும் அவளுக்கு எழுதிக்கொடுத்திட்டோம்!'' எவ்வளவு மடத்தனம்? பிள்ளைகளாக இருந்தாலும் "வாயும் வயிறும் வேறு என்பதை எங்கட பெத்தமனம் மறைச்சுப் போட்டுதே..." என்று வேதனைப்படவேண்டிய நிலையை உருவாக்கிவிட்டாள் சியாமளா.

மறுகணம் சிவகாமசுந்தரி, "மனதுக்குள் இவள் "வளர்ப்புப்பிள்ளை" என்ற பெயரால் வேதனைப்பட்டு... அம்மா எங்கே? அம்மா எங்கே? என்று கேட்டு எங்களைத் தொந்தரவு செய்கிறாள். இவளை என் மகளாக வேண்டாமல் இருந்திருந்தால் நிம்மதியாக நான் இருப்பேனே என எண்ணவும் செய்துவிட்டாள். "சியாமளா! நீ முறைதவறிப் பிறந்த குழந்தை" என்ற அந்த உண்மையை அவளுக்கச் சொன்னால் என்ன பாடுபடுவாள்.?" என்பதை உணர்ந்த சிவகாமசுந்தரி அதைத் தனது வாய்க்குள்ளேயே மென்றுவிட்டாள். தாயைப் பார்க்கத் துடிக்கும் உன்னை, அன்றுதான் வைத்திருந்தாலே தன் நாடித்துடிப்பைப் பாழ்ப்பட்ட சமூகம் அடக்கிவிடுமே என்று அனாதையாய் தெரு வீதியில் விட்டுச் சென்றவளையா? நீ பார்க்கப் போகிறாய்? என்று கேட்கத் துடித்த அந்தத் தாயின் மனம் உடனே உயிரற்றுப் பேசாமல் இருந்தது. இந்த உண்மையைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னால் அவள் தன்னைப் பெற்றவள்மீது வெறுப்படைந்து, தமக்குத் தொந்தரவு தரமாட்டாள் என்று திடமாக உணர்த்தும் அந்தத் தாய்மனம் சொல்ல மறுத்தது.

"சமூகத்தின் கெடுபிடிக்குள் முடங்கி வாழும் எமது பெண்களுக்கு என்றும் பாதகமான தீர்ப்புதான். அதனாலேதான் நியாயம் கேட்கமுடியாமல் சியாமளாவை தெருவீதியில் வைத்தாள் அதைப் பெற்ற இளந்தாய். சியாமளாவின் பிறப்பு உண்மையை இன்று அவளுக்குக்கூறி, அவளை தாழ்வு மனப்பான்மைக்கு உள்ளாக்கக்கூடாது, இவள் புரட்சிகரப் பெண்மணியாக நியாயங்களைத் தட்டிக்கேட்க வேண்டும் என்ற எண்ணத்துடன் எல்லாவற்றையும் மறைத்தது அந்த எழுச்சித்தாயின் மனம்.

தன் கருவிற் தாங்காமலே சியாமளாவை மகளாகப் பெற்ற சிவகாமசுந்தரியின் பெற்றமனம் பித்தாகி, அவள் என்ன சொன்னாலும் சகிக்கத் தயாராகிவிட்டது. இவளுக்கு ஒரு துணையைத் தேடும்வரைக்கும் அவளது துன்புறுத்தல்களை சகிக்கத்தான் வேண்டும். அதுதான் எமக்கு விதி என்றால் நான் ஒன்றும் செய்யமுடியாது, என எண்ணினள்.

சியாமளாவின் திருமணம் முடிந்தால் இராஜசேகருக்கும் சிவகாமசுந்தரிக்கும் பெரிய நிம்மதி.

*(யாவும் கற்பனையல்ல)*

☆☆☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகித ஓடம்

"தீபா! சதீஸ்! வினோத்! எல்லோரும் கெதியா வெளிக்கிடுங்கோ! உங்கட புத்தக பாக்குகள், கொப்பிகள், பென்சில் எல்லாம் சரியாக இருக்குதா? என்று பாருங்கோ, பிறகு கிளாசில இருந்துகொண்டு றேசர் இல்லை, பென்சில் இல்லை; என்று சொல்லாமல் எல்லாம் சரியாக இருக்கோ என்று பார்த்திட்டு, சட்டைகளைப் போட்டு ஆயத்த மாகுங்கள்!" 230மணி ட்ராமை ஓடிப்போய்ப் பிடிக்கவேணும் என்று தன் பிள்ளைகளுக்குக் கூறியபடியே தாய் சுபத்திரா தானும் உடைகளை மாற்றி அவர்களுடன் ஆயத்தமானாள்.

சுபத்திரா தனது பிள்ளைகளுக்கு எவ்விதப்பட்டும் தமிழைப் படிப்பிக்கவேண்டும் என்று, முழுமூச்சாக நின்று அதற்கான ஒழுங்குகளைச் செய்துவந்தாள். தமிழ்ப் பாடசாலை ஒன்றில் பிள்ளைகளைச் சேர்ப்பித்தாள். அப்பாடசாலைக்குச் செல்வதற்கு அவள் ஏறக்குறைய ஒருமணித்தியாலத்தைப் பிரயாணத்துக்காக ஒதுக்கவேண்டும். பிரயாண நேரத்தைவிட பிரயாணச்செலவும் அதிகம்தான். தமிழ்க்கல்வியின், அதாவது தாய்மொழிக்கல்வியின் முன்னே அச்செலவு பெரிய பொருட்டாகத் தெரியவில்லை சுபத்திராவேக்கு. தாய்மொழி பேச, எழுதத் தெரியாத பிள்ளைகளாக தனது பிள்ளைகளை வளர்த்துவிடுவதா? என்ன அறிவீனம்? என்ற கொள்கை கொண்ட சுபத்திரா, தமிழ் வகுப்பில் படிக்கும் பாடத்தைவிட தானும் வீட்டிலே கிரமமாகப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பாள்.

"அம்மா! நாங்கள் எல்லோரும் ஆயத்தம் . சரி... வாங்க போவம் அம்மா!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓ... தீபா! இறங்குங்கள். நேரம் ஆகிவிட்டது" என்று படபடவென அவசரமாக மாடிப்படிகளிலிருந்து இறங்கி ட்ராம் தரிப்பிடத்துக்கு விரைந்து சென்றாள் பிள்ளைகளுடன். அவர்கள் போகவும் ட்ராம் வந்து நிற்கவும் நேரம் சரியாக இருந்தது. சுபத்திராவும் பிள்ளைகள் மூவரும் காலியாக இருந்த இருக்கைகளில் அமர்ந்துக் கொண்டனர். சுபத்திரா அப்போதுதான் 'அப்பாடா' என்று ஒரு பெருமூச்சு விட்டாள்.

காலையில் எழும்பி பிள்ளைகளை ஜேர்மன் பாடசாலைக்கு அனுப்பியபின், வீட்டு வேலைகளைக் கவனித்து, சமையல் வேலையையும் முடிக்கும் தருவாயில் வீட்டு அழைப்பு கணீர் கணீர் என ஒலிக்கத் தொடங்கிவிடும். "அப்பாடா அதற்கிடையில் பன்னிரண்டு மணி ஆகிவிட்டதே... என பரபரப்புடன் கதவைத் திறந்து, கடைக்குட்டி வினோத்தைக் கண்ணில் வைத்து விட்டு,

"வினோத்குட்டி வந்திட்டீங்களா? களைப்பாக இருப்பீங்க... கால் முகத்தைக் கழுவிவிட்டு சாப்பிடவாடி!" என அவனுக்குச் சாப்பாடு போட்டு ஊட்டிவிடுவாள். இதற்கும் சுபத்திராவுக்கு ஒரு மணித்தியாலம் செலவு செய்யவேண்டும்.

என்ன காரணமோ இங்குள்ள சிறு பிள்ளைகளுக்கு சாப்பாட்டைக் கண்டால் ஏதோ மருந்துவகை என்று வெறுக்கிறார்கள். அவர்களுக்கு சாப்பாட்டைப் பற்றிய அக்கறையே இல்லை. சாப்பாடு இல்லாமல் ஒருநாள் முழுவதும் பட்டினியாக இருக்கத் தயாராக இருப்பார்கள். அவ்வாறு சாப்பாடு கொடுத்தாலும் வேண்டா வெறுப்பாகத் தாயின் தொந்தரவு தாங்காமல் சாப்பிடுவார்களேயன்றி, பசி என்று ஒருவரும் சாப்பிடுவதில்லை. இதற்கு இங்குள்ள காலநிலைதான் காரணமோ என்னவோ? பிள்ளைகள் சாப்பிடுவதற்குப் பின்னிற்கிறார்கள். இதற்கு வினோத்தும் விதிவிலக்கல்ல.

"வினோத்! தம்பி! சாப்பிடுங்கோடா! தமிழ் வகுப்புக்கு அ.. ஆ.. படிக்கப் போகவேணும். என்னுடைய குஞ்சு எல்லோ சாப்பிடடி.. நீ சாப்பிட்டால்தான் அம்மாவுக்குப் பிடிக்கும்!" என்று அவனுக்குப் பின்னே ஓடித்திரிந்து சாப்பாட்டை ஊட்டிவிட்டால் அவளுக்கு ஒரு பெரிய வேலை முடிந்தமாதிரி இருக்கும். இதன் பின் மற்றப்பிள்ளைகளுக்கம் கண்டித்து உணவைச் சாப்பிடச் செய்துவிட்டுத் தான், பின்னேரத் தமிழ்வகுப்புக்கு அவர்கள் தயாராகிவிடுவது வழக்கம். இவ்வாறுதான் இன்றும் சுபத்திரா அவசர அவசரமாக எத்தனையோ வேலைகள் மத்தியில் இந்த வேலையையும் செய்துமுடிக்கிறாள். அந்தக் களைப்புதான் ட்ராமில் இருக்கும் ஒருமணி நேரத்தில் பெரிய ஓய்வு எடுத்தமாதிரி இருக்கும்.

சுபத்திரா தனது சிந்தனையில் மூழ்கி, "வகுப்பு முடிய ஆறுமணியாகும். அதுவரைக்கும் அங்குக் காவல் இருந்து பிள்ளைகளைக் கூட்டிவரவேண்டும்; எங்கட தமிழ்நாட்டில் தமிழ் படிப்பது எவ்வளவு சுலபமாயிருக்கும்; இங்கு எங்கட மொழியைப் படிக்க இப்படிக் கஷ்டப்படவேண்டியுள்ளது; சொந்த மொழிகளைப் படிக்க இவ்வளவு அலைச்சலா யுள்ளது; என்ன கொடுமை இது? எப்ப இது தீருமோ? என்ற ஆதங்கத்தில் இருந்தபோது.. "கலோ சுபத்திரா! என்ன தாயும் பிள்ளைகளும் வெளிக்கிட்டிருக்கிறீர்கள்? பள்ளிக்கூட பாக்குகளோட, பள்ளிக்கூடம் விட்ட உடனே இப்படியே இதால வாறீங்களோ?.... எங்க சீ அன்ட் ஏ க்கா (C&A) போறீங்கள்? இப்ப 'சமர் சுலுஸ்' உடுப்புகள் விலை குறையப் போட்டிருக்கு. ஆட்கள் எல்லாம் அள்ளிக்கொண்டு போறார்கள். நானும் அங்கதான் போறன்!! இவங்களுக்கு உடுப்பு எடுக்கவேணும்" என்று தன் இரண்டு பிள்ளை களையும் கண்ணால் காட்டித் தன் பிரயாணக் காரணத்தைத் தெரிவித்தாள் வாணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீர் கிறிஷ்ற டேர்ண கோல்ற்றிலா ஏறினீங்கள்?"

நான் கவனிக்கவில்லை என்றாள், சுபத்தரா.

"ஓ... அந்த கோல்ற்றிலதான் ஏறினான். உம்மைக் கண்டவுடன் சந்தோசப்பட்டு, இருவரும் (C&A) க்குப் போய் உடைகள் செலக்ட் பண்ணலாம் என்று நினைக்கிறேன். அப்படித்தானே?" "வாணி! நாங்கள் (C&A) க்குப் போகவில்லை. இண்டைக்குத் தமிழ்வகுப்பு அல்லவா? உமக்குத் தெரியும் தானே.. அதுதான் அவசரமாகப் போய்க்கொண்டிருக்கிறோம். வீட்டில் நான் சொல்லிக் கொடுத்தாலும், இது பல பிள்ளைகளுடன் வகுப்பில் படிக்கிறது மாதிரி வராது அல்லவா? தாய்மொழி எழுதப்பேசத் தெரியாமல் பிள்ளைகள் வளர்ந்தால் நல்லதா? கட்டாயம் எங்கட பாஷை தெரிந்திருக்கவேண்டும். இதை நான் அவர்களுக்கு எவ்வாறு கற்பித்து, ஒரு மனிதராக்கி விடுவது என்பது எனக்கு இரவுபகல் தீராத யோசனை" என்றாள் சுபத்திரா.

என்ன சுபத்திரா! "உமக்கு வேறு வேலையே இல்லையா? உம்முடைய பிள்ளைகள் டொச் பாட சாலைக்குப் போகிறார்கள் தானே. அங்கு அவர்களுக்கு எவ்வளவு திறமாகக் படிப்பிக்கிறார்கள். எவ்வளவு டெக்னிக்கலாக, மூளைக்கு வேலையாக, எல்லாம் படிப்பிக்கிறார்கள். அவர்களுடைய ரீச்சிங் மெதேட்டு:கக எங்கட வாத்திமார் பிச்சைதான் எடுக்கவேணும்" என்று கூறிக்கொண்டிருக்கம் போதே... இடையில் குறுக்கிட்ட சுபத்திரா ஆச்சரியப்பட்டு போவதுபோற் பாவனைசெய்து...

"டொச் பாடசாலையில் தமிழ் படிப்பிக்கிணா? எங்கே? எந்தப் பள்ளிக்கூடம்?.."

'உமக்கு என்ன விசரே? அங்கு தமிழா? என்ன உம்முடைய கேள்வி? இங்குள்ள எமது பிள்ளைகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை பாடங்களைத் திணிப்பது? டொச் பாடசாலையிலேயே எவ்வளவு வீட்டுப் பாடங்களை அவர்கள் செய்கிறார்கள். அதுகளைச் செய்யவே நேரம்சரி. பிறகு கொஞ்சநேரம் விளையாடுவார்கள்... எட்டுமணியானவுடனே நித்திரைக்கு அனுப்பிவிடுவேன். விடிய எழும்பிற பிள்ளைகள்" என்று கூறிமுடித்தாள் வாணி.

"வாணி! நீர் என்ன சொல்கிறீர்? ஸ்ரெனோகிராப்பாராக கொழும்பில் வேலை பார்த்தனீர் என்று தெரியும்தான். அப்போ உமக்கு யாழ்ப்பாணத்தமிழ், கல்வி, அதன் மகிமைபற்றித் தெரியாதுதான். ஆனபடியால்தான் இப்படிக் கதைக்கிறீர்."

"என்ன சுபத்திரா! கோபமாக இருக்கிறீர் போல... இங்கு டொச் வடிவாகப் பேசத்தெரிந்தால் போதும்தானே என்ர பிள்ளைகள் ஜேர்மன் பிள்ளைகளுடன் டொச் கதைக்கும்போது எவ்வளவு வடிவாக, கேட்பதற்கும் ஆசையாக இருக்கின்றது."

"ஓ... அப்படியா? டொச் எனும்போது தேன் வந்து காதில பாயுதோ?" என மனத்துள் எண்ணியவளாக சுபத்திரா, "வாணி! நீ சொல்வதும் உண்மைதான்... நான் ஒன்று கேட்கிறேன். தவறாக எண்ணமாட்டீர் என நினைக்கிறேன்."

"என்ன சொல்லும்?"

"இல்லை... நீர் உமது பிள்ளைகளுக்கு டொச்சையே படிப்பித்துவிட்டால் காணும் என்று சொல்கிறீர். அவர்கள் வளர்ந்து, பெரியவர்களான பின்பு நீர்வேறு, அவர்கள் வேறு இடத்தில் இருக்கும்போது அவர்கள் உமக்கு டொச்சில கடிதம் எழுதுவார்களா? அல்லது தமிழில் எழுதுவார்களா? சும்மா ஒரு கேள்விக்குத்தான் கேட்கிறன்."

"டொச்சிலதான் எழுதுவார்கள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியென்றால் அவர்கள் டொச்சில எழுதும் கடிதங்களை நீர் வாசித்து, அதற்குப் பதில் எழுதுவீரா? பதில் எழுதமுடியுமா? என்ன? எவ்வாறு உங்கள் சொந்த அந்தரங்க விடயங்களைப் பரிமாறிக்கொள்ளப் போகிறீர்கள்? அல்லது தாய்நாட்டுக்குப் போய் டொச்சை வாசிப்பதற்கு டொல்மேச்சரைத் தேடித்திரியப் போறீரோ? இதைவிடக் கேவலம் வேறு என்ன இருக்கு? தமிழிலதான் அவர்களுக்கு எழுதவராதே, என்ன செய்வீர்?"

"சுபத்திரா? நீர் சொல்வது சரிதான். ஆனால் இப்ப அதை யோசிக்கவில்லை. ஆனால் அதற்கும் ஒரு வழி இருக்கு. அதையும் என் மகன்தான் சொன்னான். நானும் யோசனையில்லாமல் இப்படி நடக்கவில்லை"

"என்ன சொன்னவன் உங்கட மகன்?"

"நான் ஒருதான் அவனிடம் தமிழ் படிக்கும்படி சொன்னபோது, எனக்கு தமிழ்எழுத்துக்களை எழுதக் கஸ்டமாக இருக்கம்மா! புளும (பூக்கள்) மாதிரி எழுத்துக்கள் இருக்கு. என்னால முடியாது என்று சொன்னான். அப்போ நான் கேட்டேன். "எனக்கு நீ டொச்சில கடிதம் எழுதினால் வாசிக்கமாட்டேனே, என்று சொல்ல, 'அதுக்கா யோசிக்கிறீங்க... நான் "ஓடியோ கசட்டில" கதைத்து அனுப்புவன். எனக்கு கொஞ்சம் கொஞ்சம் தமிழ் பேசத்தெரியும்தானே" நீங்களும் கதைச்சு அனுப்புங்கோ என்று சொன்னான். எவ்வளவு சூரன் என் பையன்" எனத் தற்பெருமையுடன் கூறிமுடித்தாள் வாணி.

வாணியின் கதைகளைக் கேட்ட சுபத்ரா, ஒரு வெறுப்புடன் "ஆ... விஞ்ஞானயுகம்தானே டெலிபோனிலேயே கதைக்கலாம்; கடிதத் தொடர்புகளை குறைத்துக்கொள்ளும் உலகம்; மறந்திடாமல் நீர் ரேடியோவையும் கையுடன் கொண்டு திரியவேணும்;" என்றுகூற நினைத்த சுபத்ரா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியும் இதுபற்றி இவவுடன் கதைத்தால் நான்தான் அறிவிலியாகிவிடுவேன் என நினைத்து, "என்னவோ வாணி! நீர் சொல்வதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டன்." தாய்மொழியின் தாற்பரியம் அறியாத வாணியை நோக்கி "நீரும் பிள்ளைகளும் நாளைக்கு தாய்நாட்டிலே இறங்கும்போது, உமது பிள்ளைகள் தமிழ்பேச எழுதத் தெரியாமையால் மற்றப்பிள்ளைகளால் ஒதுக்கப்படுவார்கள், திறமையும் மழுங்கடிக்கப்படும். அப்போதுதான் உம்முடைய பிள்ளைகள் உம்மீது ஆத்திரமும் வெறுப்பும் அடைவார்கள். "எங்கள் அம்மா எங்களுக்குத் தமிழ்பேச, எழுத, வாசிக்க, கற்றுத் தரவில்லையே, எவ்வளவு துரோகம் செய்துவிட்டா எங்களுக்கு? என்று திட்டும் காலமும் வெகுதூரத்தில் இல்லை. ஏனெனில் நாங்கள் பிள்ளைகளாக இருந்த காலமும், நிலையும் வேறு" என்று கூறிக்கொண்டிருக்கும்போதே சுபத்திரா இறங்கவேண்டிய இருப்பிடம் வந்தது.

"நாங்கள் இதில இறங்கப்போகிறோம். நேரம் இருந்தால் எங்கடவீட்டுப் பக்கம் வாரும்" எனக்கூறிவிட்டு சுபத்திரா பிள்ளைகளுடன் விடைபெற்றாள்.

சுபத்திராவுக்கு வாணியின் பேச்சைக் கேட்டதும், "எவ்வளவு வேகத்தில் எங்கட ஆட்கள் மாறிவிட்டார்கள்? தங்கட நாட்டை மறந்து, தாய்மொழியை மறந்து, நிரந்தரக் கொள்கைவகுத்து, அந்தரவாழ்க்கையில் வாழ்கிறார்கள். இது ஒரு காகிதஓட வாழ்க்கை என்று தெரியும் காலம் வெகு அண்மையில் என்று எண்ணிக்கொண்டு பாடசாலையை நோக்கி நடந்தாள்.

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக்கிடக்கை

வெயில், மழை, குளிர் எல்லாவற்றுக்கும் எனது உடல் பழக்கப்பட்டு, அதனுடன் இசைவாக்கிக் கொண்டுவிட்டது. எங்களுக்கு என்று ஒரு நிரந்தர வதிவிடம் இல்லாமல் தெருத்தெருவாக அலைவோம். எனக்கு நான்கு சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் இருக்கிறார்கள். மொத்தம் நாங்கள் எட்டுப்பேரும் தாயின் அரவணைப்பில், அவளது ஸ்பரிஷத்தில், அவநாட்டிலே மனித ஜாதிக்கிடையே ஏற்பட்ட போர்க்கலவரங்களினால் நாங்களும் அங்குமிங்கும் ஓடிப் பதுங்கி.. எமது உயிரைப் பாதுகாத்து, ஏனோ தானோ என்று வாழ்ந்து கொண்டிருந்தோம்.

எங்களுக்கு வயது ஒன்று பூர்த்தியானபோது, நாங்கள் எண்மரும் எமது சொந்தக் கால்களில் நிற்கப் பழகி, எமது உணவை நாமே தேடி உண்ணத் தொடங்கும் கட்டம் ஆரம்பமானது. எட்டுப்பேரும் எட்டுப்பக்கமாக உணவுதேடிச் சென்றபோது, எங்களில் இருவரைக் காணவில்லை. பாதை மாறிப் போனார்களோ என்னவோ தெரியாது. அவர்களைக் காணாமல் எம்மைச் சகோதர பாசமும், அம்மாவைப் பிள்ளைப் பாசமும் வருத்தியது. அன்றாடம் உணவுக்கு ஏங்கி, எச்சில் இலை தடவி, கண்டதைச் சாப்பிட்டு வயிராறி, தெருவீதியில் கைவிடப்பட்ட மனைகளில், இடிந்த வீடுகளில் நாம் படுத்துறங்கி, எமது வாழ்நாட்களைப் போக்கிக் கொண்டிருந்தோம். இதற்குள் என்ன விந்தை என்றால் மனித ஜாதியும் எங்களுடன் உறங்கி விழித்த சந்தர்ப்பங்களும் உண்டு. இவ்வாறு ஒருநாள் நாங்கள் தங்கியிருந்தபோது அன்றிரவு விழுந்த ஷெல் அடியால் நாங்களும் மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டத்துடன் சிதறி ஓடினோம். எங்கள் அம்மா எங்கு போனாரோ? தெரியாது. நான் அறியேன். என் கண்முன்னே எனது சகோதரி மூவர் ஷெல் அடிபட்டு இறந்துவிட்டனர். அவர்களுக்கு அருகில் மூன்று மனித இனப் பெண்களும் (தமிழினம்) இரு குழந்தைகளும் இறந்துகிடந்தனர். சமரசம் உலாவும் இடம்போல எங்கள் இனமும் மனித இனமும் அருகருகே ஒன்றாகக் கிடந்த காட்சி உண்மையிலேயே சமத்துவத்தை எனக்குப் போதித்தது. நான் எனது உயிரைக் கையிற்பிடித்துக்கொண்டு, தலைதெறிக்க ஒரு நோக்கம் இல்லாமல் ஓடிக்கொண்டிருந்தேன். அப்போது எனக்கு ஓடிய களைப்பால் நாக்கு வரண்டது. சாப்பிடுவதற்கு என் கண்ணில் ஒன்றும் தென்படவில்லை. மற்றைய மிருகங்கள் என்றால் இலை, குழை, காய்ந்த புற்கள் என்பவற்றையாவது உண்ணும். ஆனால் என்னால் முடியவில்லை.

என்னுடம்பு திராணியற்று நடக்கவும் முடியாமல் இருந்தது. கல்லையும் கடித்துத் தின்னலாம் என்ற உணர்வுக்கு பசி கொடுமைப் படுத்தியது. சற்றுநேரம் பேசாமல் ஒரு இடத்தில், கட்டிட மறைவொன்றில் பதுங்கியிருந்தேன். அப்போது ஏதோ ஒரு வாடை என் மூக்கைத் துளைத்தது. அந்த நெடிய மணம் என் பசியை மேலும் கிளறவே, அந்த நெடி வந்தத் திசையை நோக்கி ஓடினேன். அங்கே நான் கண்ட காட்சி, என்னை அப்படியே ஸ்தம்பிக்க வைத்தது. இரண்டு மூன்று மனித உடல்கள் அழுகிய நிலையில் சிதறப்பட்டுக் காணப்பட்டன. "நான் நன்றி உள்ளவன்" என்பதனால் அந்த உடல்களைப் பார்த்து என்மனம் பரிதாபப்பட்டது. ஆனால் என் வாயில் ஊறிய நீரும் சுரந்துகொண்டே இருந்தது. ஒன்றும் செய்யமுடியவில்லை. எனவே அன்றைய நாட்பொழுதைப் போக்குவதற்கு என்னால் ஒன்றும் செய்யமுடியாமற் போகவே என் பசி தீரும் வரைக்கும் அந்த மனித உடல்களைப் புசித்தேன். உண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப்பு என்பார்களே... அது வந்து என்னை ஆட்கொள்ளவே மீண்டும் ஒரு எரிந்த பற்றையருகில் சுருண்டு படுத்துறங்கிவிட்டேன். அவ்வளவுதான் தெரியும்.

நான் ஒரு எசமானியின் அரவணைப்பில் மெத்தை ஒன்றிலே நிம்மதியாக நித்திரை கொண்டது போன்ற உணர்வு. எனது பிரச்சினைகள் துன்பங்கள் எல்லாம் மறந்து, சந்தோஷமாக இருந்தேன். இவ்வளவு நான் கஷ்டப்பட்டேன். இப்போது விதவிதமான சாப்பாடுகள் எனக்குக் கிடைத்தன. இவை எல்லாம் நிஜம்தானே என்று மனம் அசைபோட்ட போது, திடீரென ஒரு பெரிய சத்தம் கேட்டுத் திடுக்கிட்டவே நான் ஒரு சாம்பர்மேட்டில் கிடப்பதை உணர்ந்தேன். ஆ- இவ்வளவு நேரமும் கண்டது கனவா? என்று மிக வேதனைப்பட்டு, இது உண்மையாக இருந்தால் எப்படி இருக்கும். ஐயோ! கடவுளே! இப்படி ஏன் படைத்துவிட்டு வதம் செய்கிறாய்? நாதியற்று அலையும் மனிதவுயிர்களின் கதியைப் பார்த்தாயா? நாங்களாவது உடமை சொத்து இல்லாதவர்கள்; எங்கேயாவது ஓடித் தப்பித்துவிடுவோம். உடமை சொத்துக்கள் உள்ளவர்களின் நிலை என்ன? அவை சேதமடைந்தால் அவர் படும் வேதனை எவ்வளவு? என்பதை ஏன் யோசித்துப் பார்க்காமல் இருக்கிறாய் இறைவா? என அவனை நான் நொந்துகொண்டேன்.

இன்று காலையில் எனது உடல் ஏதோ ஒருவித தெம்புடன் இயங்க ஆரம்பித்தது. கால்போன இடமெல்லாம் போய், பதுங்கிப் பதுங்கி ஓடினேன். ஓடிக்கொண்டே இருந்தேன். இவ்வாறு நாட்கள் கிழமைகளாக எங்கே ஓடுவது எனத் தெரியாமலேயே ஓடினேன். பின்னர் ஒரு ஒதுக்கிடமாக, சனசந்தடி நிறைந்ததுமான கட்டிடமொன்றின் ஓரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒதுங்கிக் கொண்டேன். என்னைப்போல் என் இனத்தவர்களும் அங்கே குடியிருந்தார்கள். முதலில் என்னை ஓர் அந்நியன்போல் முறைத்துப் பார்த்தார்கள். நான் தமிழ்ப்பகுதியிலிருந்து வந்தவன் என்று என்னுடைய முகபாவங்களை வைத்து அறிந்துவிட்டார்கள் போலும்.

என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, பின் தம் குரல்வளை அதிரக் கத்திக்கொண்டு, சண்டை பிடிக்க வந்துவிட்டார்கள். நான் பயந்து, எதிர்ச்சண்டை செய்யாமல் கூனிக்குறுகி, மெல்ல நழுவி... இதுதான் சந்தர்ப்பம் என ஓட்டம் பிடித்தேன். சிறிது தூரம் சென்றபின் மிக ஆரவாரம் நிறைந்த இடமொன்றில் ஒதுங்கினேன். அங்கே இரயில்கள் போவதும் வருவதுமாக இருந்தன. மக்கள் நெருக்கமாக அங்கும் இங்கும் சென்று கொண்டிருந்தார்கள். புகையிரத நிலைய அறிவிப்புகள் ஒருபக்கம் காதைப் பிளக்கவே, இது கொழும்பு புகையிரத நிலையம் என ஊகித்துக் கொண்டேன். "அப்பாடா! வடபகுதியிலிருந்து தென்மேற்பகுதிக்கு வந்துவிட்டேன் என அறிந்துவிட்டேன்."

புகையிரத நிலையத்தில் இருந்து போவோர் வருவோரைப் பார்த்து, அங்குள்ள ஒரு மறைவான இடத்தை எனது தங்குமிடமாக்கிவிட்டேன். புகையிரதநிலையத்தைச் சுற்றியுள்ள இடங்களுக்குப் போய் ஏதாவது உணவு தேடி உண்டபின், அந்தத் தங்குமிடத்துக்குத் திரும்புவது என என் வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. சும்மா சொல்லக்கூடாது. யாழ்ப்பாணத்தைவிட கொஞ்சம் சுலபமாக உணவு கிடைக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். இதனால் எனக்கே ஆச்சரியமாக வரக்கூடிய அளவுக்கு என் உடல் பருமனாகவும் மினுமினுப்பாகவும் மாறத்தொடங்குவதை உணர்ந்தேன். இப்போது எனக்கு இரண்டரை வயதுக்கு மேலாகி விட்டது தானே, அதன் தாக்கம் இப்படி இருக்கலாமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் என் வாழ்க்கையை இப்படியே கழித்துவிட வேண்டியதுதான், ஏதோ பிறந்து விட்டோம்; எங்களைவிட மனித இனம் படுகிறபாட்டைப் பார்த்து நான் ஓரளவுக்கு ஆறுதல் அடைந்தேன். இவ்வாறிருக்கையில் எனக்கு ஓரிரு நண்பர்கள் இனத்துவேஷம் காட்டாமல் என்னுடன் நட்பாகப் பழகினார்கள். என்றாலும் உள்ளூரப் பயம்தான். நான் அளவோடு நிதானமாக அவர்களுடன் பழகினேன்.

ஒருநாள் அவர்கள் என்னைப்பார்த்து "நண்பா! எம்முடன் வா! இன்று எங்களுக்குத் தெரிந்த இடமொன்றுக்குப் போவோம். அது உனக்குப் புது இடமாக இருக்கலாம். ஆனால் அது எங்களுக்குப் பரிச்சயமான இடம்தான். ஏதாவது இன்றையப் பொழுதுக்கு வயிற்றை நிரப்பிக்கொள்ளலாம்." என அழைத்துச் சென்றார்கள். நானும் மிக ஆவலுடன் சென்றேன். அங்கு போனபோதுதான் அவர்கள் சொன்னார்கள் அது ஒரு டூரிஷ்ட் ஹோட்டல் என்று. வெளிநாட்டவர்கள் பலர் இங்கு வந்து தங்கி, உணவருந்திப் போவார்கள். இவர்களுக்கு நல்ல உணவுவகைகள் பரிமாறப்படும். நாம் அவ்விடத்தைச் சுற்றி நின்றால் அவர்கள் உண்ட மீதி உணவுகள் இந்தக் குப்பைக் கிடங்கிற்கு வரும். அதை நாங்கள் சாப்பிடும்போது மனித இனத்து அநாதைக் குழந்தைகளும் இந்த உணவுக்கு அலையும் சூழ்நிலையும் ஏற்படும். நாங்கள் ஒற்றுமையாக உணவு உண்போம் என்றனர், எனக்கு எல்லாமே ஆச்சரியமாக இருந்தது. பின் ஒருவாறு எங்களைநோக்கி மீதி உணவுகள் வீசப்பட்டன. நாங்கள் கௌவிக்கௌவிச் சாப்பிட்டோம். காக்கை இனங்களும் எங்களுடன் போட்டி போட்டன. என்ன செய்வது? முந்திக்கொண்டவர்கள்பாடு வெற்றிதான். இவ்வாறு சாப்பிட்டபின் எனக்குச் சிறிது களைப்பு ஏற்பட்டது. என் உடற்பருமனோ என்னவோ? எனக்கு உண்டவுடன் களைப்பு ஏற்பட்டுவிடும். சிறிது தூரம்தள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் ஒரு மரநிழலில் உறங்குவதாகவும், பின்னர் நீங்கள் என்னை வந்து அழைத்துச் செல்லுங்கள்" என நண்பர்களுக்குக் கூறினேன். அவர்களும் சம்மதித்து விடைபெற்றுச் சென்றனர். நான் உறங்கிக் கிடந்த இடம் பிரதானவீதியின் ஓரம் என்பது எனக்குத் தெரிந்தது.

அந்த வீதியில் சுற்றுலாப் போவதுபோல் வெள்ளைக் காரர்கள் ஆண்பெண் உட்பட ஒரு "வோக்கிங்" எடுத்தார்கள். பார்க்க அழகான வெள்ளைப் பூக்கள் போல அங்கே சென்ற பெண்மணிகள் என் கண்ணுக்குக் காட்சியளித்தார்கள். யாழ்ப்பாணத்தில் கருகிய இடங்கள், கருதிற மண்கள், என்பவற்றைப் பார்த்துப் பார்த்துப் பழகிய என் கண்களுக்கு இவர்கள் வெள்ளைப் பூக்கள் போலவே இருந்தார்கள். அவர்களைப் பார்க்க எனக்கும் ஆசையாகத்தான் இருந்தது.

அப்போது இளம் பெண்ணொருத்தியின் பார்வை என் கண்ணிற்பட்டது. எனது கண்களும் அவளது கண்களும் ஒன்றையொன்று சந்தித்துக்கொண்டன. அவளது பார்வையின் குளிர்ச்சியால் நான், எனது உடல்களின் அசைவுகள் மூலம் எனது மகிழ்வையும் தெரிவித்தேன். அவள் என்னை நோக்கி வந்தாள். எனக்கோ பயத்துக்குப் பதிலாகப் புது உற்சாகம்தான் வந்தது. எத்தனை கொடுமைகளைச் சந்தித்த எனக்கு, இந்தப் பெண்மணி என்ன செய்துவிடப் போகிறாள் என்றுதான் தோன்றியது. அவள் என்னை நெருங்கி, என் உடலைத் தன் பட்டு மென்விரலால் தடவிக்கொடுத்தாள். முட்கள் கீறிக் காயப்பட்டு மரத்துப்போன என் தோலுக்கு அவளது ஸ்பரிசம் தேனாக இனித்தது. அவளது தடவலுக்கு நான் அடிமையாகி அவளது கைக்குள் அடைக்கலம் புகுந்தேன். அவள் தனது சந்தோஷ உணர்வு மேலீட்டால் தனது மற்ற நண்பர்களைக் கூப்பிட்டு ஏதோ எல்லாம் புரியாத மொழியிற் கதைத்தாள். பின்னர் ஏதோ ஒன்று சொல்ல நினைத்தவளாக... அவர்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டிவந்த சிங்களவர் ஒருவரிடம் ஏதோ சொல்ல.. அவர் சங்கிலியுடன் என்னைநோக்கி வந்தார். அவனது கையால் சங்கிலியுடன் நான் பிணைக்கப்பட்ட போது, அப்பெண்ணின் அன்பால் பிணைக்கப்படுவதாக உணர்ந்தேன்.

அவனது ஏற்பாட்டுக்கு இணங்க சங்கிலியில் என்னைக் கட்டி, என்னையும் தங்களுடன் அழைத்துச் சென்றார்கள். கைப்பையில் இருந்த வெளிநாட்டு உணவுகளை எனக்குத் தந்தாள். நான் "லபக்" என்று பாய்ந்து பறித்து உண்டேன். ஆகா.. என்றுமே காணாத உருசி. இப்படிக்கட்டி என்னை எங்குக் கொண்டு போகிறார்கள்? பொலீசிடம் ஒப்படைக்கப் போகிறார்களோ என்று பயமாகவும் இருந்தது என்னவோ நடப்பது நடக்கட்டும். அறநனைந்தவனுக்கு குளிரென்ன? கூதல் என்ன? என்ற மனநிலையுடன் இருந்தேன்.

அந்தப் பெண்மனி என்னைப் பார்ப்பதும், என்னைப் பற்றி மற்றவர்களுடன் கதைப்பதும், என்னுடலைத் தடவிக்கொடுப்பதும் எனக்கு இதமாகவே இருந்தன.

அன்று மாலை என்னை அவள் தங்கியிருந்த ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றாள். நான் காலையில் மீதி உணவுண்ட குப்பைக்கிடங்கு வழியாகத்தான் என்னைக் கூட்டிச்சென்றார்கள். அந்த இடத்தில் எனது நண்பர்கள் நிற்பதைக் கண்டேன். கவலையாக இருந்தது. நான் இப்படிப் போவதைக் கண்டால் என்னிடம் ஓடிவந்து விடுவார்கள் என மறைந்து மறைந்து சென்றேன். அவர்கள் என்னை அவதானிக்கவில்லை. ஒருவாறு அந்த இடத்தைக் கடந்துவிட்டேன்.

அந்தப்பெண் என்னை ஹோட்டல் என்று சொல்கிற சொர்க்காபுரிக்கு அழைத்துச் சென்றாள். அதை நான் ஒருபோதும் என் வாழ்நாளிற் கண்டதேயில்லை. இரவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது. இரவுச் சாப்பாடு என அவர்களுக்கு சேவகர்கள் உணவுகளைத் தட்டுக்களில் வைத்துவிட்டுப் போனார்கள். எனக்கு வாயில் நீர் ஊறியது. நிலத்திலே துளிதுளியாக விழுமுன்னர் நான் உறிஞ்சிக்கொண்டேன். நாகரீகமாகப் பழகவேண்டும் என்ற ஒரு எண்ணம் எங்கோ இருந்து என் மனதில் உதயமாயிற்று. அந்தப்பெண் என்னைப் பார்த்து ஓ... மை... கிண்ட்! என்று ஏதோ சொல்லி, என் முகத்தைத் தடவிவிட்டு, உணவுத்தட்டு ஒன்றை (புறம்பான பிளாஸ்டிக் கோப்பை) என் முன்னே வைத்தாள். பின்பு என்னைப் பார்த்து, "பிற்ற பிற்ற டு இற்" என்று கோப்பையைக் காட்டிச் சொல்கிறாள் என்பதனால், உணவு உண்ணச் சொல்கிறாள் என்பதைப் புரிந்து உண்ணத் தொடங்கினேன். புதுவகையான விருந்துகள் அவை. அடடா!... வர்ணிக்க முடியவில்லை எனக்கு. பின்னர் எனக்கு ஒரு கம்பளத்தைப் போட்டு, படுக்கை விரிக்கப்பட்டது. ஐயோ இந்த வசதியால் நான் அனுபவிக்கும் உணர்வலைகளை எப்படி வர்ணிப்பது? என்று எனக்கு வார்த்தையே வரவில்லை. அந்தளவுக்கு ஜொலியாக இருந்தது. உணவுத்தட்டுக்களை எடுக்க வந்த சிங்களவர் ஒருவர் என்னைப்பார்த்து, முகத்தைச் சுழித்துக்கொண்டு போனார். நான் பார்க்காததுபோல் அவரை அவதானித்தேன். பொறாமை யாரைத்தான் விட்டது? தன்னினத்தைப் பார்த்துப் பொறாமைப்படுவது வேறு. என்னைப் பார்த்துப் பொறாமைப் படுகிறாரே என எண்ணினேன்.

இவ்வாறு சுகபோக வாழ்க்கை நான்கு நாட்களாகக் கொழும்பிற் கழிந்தது. பின்பு அந்தப் பெண், அங்குள்ள தூதுவராலயத்தில் என்னைக் காட்டி, ஏதோ காசுகள் எல்லாம் கட்டி, ஒரு துண்டில் கையெழுத்திட்டு, பத்திரம் ஒன்றைப் பெற்றுக்கொண்டதை அவதானித்தேன். என்னைப் புறம்பான ஒரு படுக்கைப் பெட்டியில் வைத்து, எனக்கு வேண்டிய உணவு, பிளேனில் ஒரு இடமும் ஒதுக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளேன் ஏறப்போகிறேன்,'' என்றும் நாட்டைவிட்டு வெளியேறப் போகிறேன் என்றும் ஒரு கவலை என்னை ஆட்கொண்டுவிட்டது. தாய்நாட்டை விட்டுப்போகிறேன். இனி எப்போ காண்பேன்? என்று என் மனம் அலைபாய்ந்தது.

"இங்குள்ள மனிதர்களே வெளிநாடு என்று போய் வாழ்கிறார்கள், நீ போனால் என்ன? உன் உயிருக்கு என்ன உத்தரவாதம் இங்கு உள்ளது?" என்று எனது மனச்சாட்சி என்னைக் கேட்டது. அதன்படி நீ போ! என்று அது வற்புறுத்தவே என்னைத் திடப்படுத்திக் கொண்டேன்.

என்னை வேறுபெட்டியில் வைத்துப் பூட்டியமையால் எனக்கு அந்தபபெண்ணின் முகத்தைக் காணமுடியவில்லை.

இலங்கையைவிட்டு ஒன்றரை நாளுக்குப் பிறகு "ஜேர்மனி" என்ற ஒரு புதிய இடத்துக்கு வந்து சேர்ந்தேன், விமானம் தரித்தவுடன் அப்பெண்மணி மீண்டும் பல பத்திரங்களுடன் அங்கும் இங்கும் ஓடி, அதிகாரிகளைக் கண்டுகதைத்து, என்னை விடுத்து வெளியே வந்தாள். கூடிவந்த யாவரும் அந்த விமான நிலையத்திலே பிரிந்து சென்றுவிட்டனர். நானும், அவள் கணவனும், அப்பெண் மணியும் ரெயில் ஏறி "டோற்மூண்ட்" என்ற நகரத்துக்கு வந்து சேர்ந்தோம்.

அவர்கள் இறங்கும் இடம் வரவே அவர்களுக்குப் பின்னால் இராஜகுமாரன் போல் "ராஜநடை" போட்டுக் கொண்டு சென்றேன். அப்பெண் "கொம்... கொம்... பேபி! என்று அன்புடன் கூட்டிக்கொண்டு சென்றாள். அவர்கள் தங்கள் வீட்டை அண்மித்ததும் வீட்டுக்குள்ளே கூட்டிச் சென்றனர். ஆகா... ஆகா... வீடா? அது? சொர்க்காபுரி. எனக்கு நல்ல மரியாதை. நல்ல உணவுவகைகள் கிடைத்தன. எனக்கென ஒரு தனியான அறை வீட்டின் ஒருபுறம் அமைக்கப்பட்டது. அந்த அறையில் நான் படுப்பதற்கு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெத்தையும் உண்பதற்கான பீங்கான்களும் உட்பட்ட சகல வசதிகளும் செய்யப்பட்டிருந்தன.

அப்பெண்மணி இப்போது என் அன்பு எஜமானி ஆவாள். அவள் தன் உயிரையே என்னில் வைத்திருக்கிறாள். காரில் போகும்போதும், ட்ராமில் போகும்போதும் சிலவேளை அவளின் மடியில் இதமான அணைப்பில் இருப்பேன். குளிர்காலம் வரும்போது எனக்குச் சட்டைகள் போட்டு விடுவா.. ஆகா.. என்ன பராமரிப்பு? எவ்வளவு அக்கறை! எனது வதனத்தை வருடிக்கொடுக்கும் போது நான் அடையும் சந்தோசம் அளவிடமுடியாது. எந்த நேரமும் எஜமானியின் கையணைப்பில் சந்தோசமாகவே இருப்பேன். இந்தப் பாக்கியம் எனக்குக் கிடைத்ததையிட்டு மிகமிக மகிழ்ச்சியும் பெருமையும் அடைந்தபோதும், என் மனத்தில் ஒரு மூலையில் சிறு கவலை குடிகொண்டுதான் இருந்தது. அது என்ன என்று அறிய விரும்புகிறீர்களா?

தமிழினத்தை எண்ணும்போதுதான் கண்ணீர் தாரை தாரையாக வருகின்றது. அங்குவாழ் தமிழ்மக்களைவிட நான் மேலானவன், என்றுதான் என்னறிவுக்கு எட்டியவரையில் சொல்லமுடியும். ஏனெனில் இங்குள்ள தமிழர்களுக்கு, எனக்குக் கிடைக்கும் மதிப்பும் ஆதரவும் இல்லை என்றே சொல்வேன். நான் இங்கு பிறக்காவிட்டாலும் இங்கு வாழும் சந்தர்ப்பத்தை அளித்த ஆண்டவனுக்கு நன்றி கூறவேண்டும். எங்கள் பிறப்புத்தான் கடைசிப்பிறப்பு என்று சொல்கிறார்கள்; எம்நாட்டுத் தமிழர்கள். இது உண்மையோ பொய்யோ தெரியாது. அது எப்படி இருந்தாலும், இந்தப்பிறவியில் இப்படி ஒரு வாழ்க்கையை அனுபவித்துப் பெருமைப்படுவதைவிட, எனது நாட்டுத் தமிழ்மக்கள் எங்களிலும் கேடாக இருப்பதை நினைக்கும்போது, எனக்குப் பெரும் கவலைதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னறிவுக்கு எட்டியவரையில் எம்மினத்தவருக்கு ஜேர்மனியில் நல்ல மதிப்பும் மரியாதையும் இருக்கிறது என்றே சொல்வேன். எங்கள் நாட்டில் தெருத்தெருவாகத் திரிகின்ற இனங்கள் எல்லாம் இங்குள்ள ஆட்களின் மடிகளிலும், கூடைகளிலும் சட்டை, பெனியன்கள் போட்டுச் சுத்தமாக இருக்கிறார்கள். இங்கே "தெருநாய்" என்ற பெயருடன் ஒருவராவது ரோட்டில் போனதை நான் காணவே இல்லை.

சுருக்கச் சொன்னால் எம்மினத்துக்கு உள்ள ஆதரவும், மதிப்பும் மனிதருக்கு இல்லைப்போலதான் இருக்கிறது. இது எனது தாழ்மையான அபிப்ராயம். அதுக்காக மானிடரே! என்னைக் கண்டிக்காதீர்கள். நான் நினைப்பது சரியோ, பிழையோ தெரியாது. ஆனால் இது மனத்தில் எழுந்த என் உள்ளக்கிடக்கை. இங்கும் எம்மினத்தவருக்கு மரியாதை பலே.

நேரம் இருக்கும்போது மேலும் உங்களுடன் உரையாடுகிறேன்.

பின்னரே உணவையும் பாலையும் எனக்குத் தருவதற்கு ஏஜமானியம்மா எதிர்பார்த்துக் காத்திருக்கப் போகின்றா. நான் போய் வருகிறேன். மீண்டும் சந்திப்போம்.

நன்றி— வணக்கம்!

★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவகை விருந்து...

கதிரவன் உதயமாக முயன்றுகொண்டிருக்கும் வைகறைப் பொழுதிலே, பறவைகளின் ஒலியுடனே "கிறுங்" "கிறுங்" என்ற சத்தமும் இணைந்துகொண்டிருந்தது. பூரணி செல்லமாக அழைக்கும் கோமாதாவிடமிருந்து வத்ந பால், செம்புக்குள் வந்துகொண்டிருக்கும்போது, ஏற்பட்ட ஒலிதான் அந்த "கிறுங் கிறுங்" என்ற ஓசை.

வெண்ணுரை பொங்கி, செம்புநிறைய பாலைக் கறந்து, மூன்று நான்கு தடவை என ஒரு வாளிக்குள் நிரப்பினாள் பூரணி. கோமாதா என அழைக்கப்படும் பசு உட்பட, பட்டியிலுள்ள வேறு பசுக்களிலிருந்தும் அதிகாலையிலேயே பாலைக் கறந்து முடிய, சரியாக ஆறு மணிக்கு அவள் கணவன் வசந்தன் எழும்பி, தனது காலைக்கடனை முடித்து! கிறீச், கிறீச்! என இராகம் இசைக்கும் துவிச்சக்கரவண்டியில் வைத்துக் கட்டப்பட்டு, அவனுக்காகக் காத்திருக்கும், அந்த வெண்கலப் பாத்திரத்துடனே சந்தையை நோக்கி விரைவதுதான் வசந்தனுடைய நேரசூசிகையின் முதற்பாடம். பால்விற்ற பணத்திலே அத்தியாவசிய உணவுப் பொருட்கள், குழந்தை மா என்பனவற்றையும் உடனே வாங்கி வந்துவிடுவான்.

மண்ணையும் மழையையும் நம்பி, தமது வாழ்க்கையைக் கடத்திக் கொண்டிருக்கும் ஏழ்மைக்குடும்ப அங்கத்தவன் வசந்தன். தனது முறைப்பெண்ணையே மணம் செய்வேன் என்றும், சீதனத்தின் எதிரி நான் என்றும் வாழ்ந்துகாட்டும் விவசாயி இவன். மண்ணுடன் போராடி, நெல்மணிகளை அறுவடையாக்கும் வசந்தனிடம் பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கவில்லை. ஆனால் குணமும், நிம்மதியும், சந்தோசமும் நிரம்பியிருந்தன. கணவனது அயராத உழைப்புக்கு ஒத்துப்போகக்கூடிய வலுவும், துணிவும் படைத்தவள் பூரணி. தோட்ட வேலைகள், வீட்டு வேலைகள்... என்று, ஓடி ஆடி எந்த நேரமும் ஏதோ ஒரு வேலை செய்துகொண்டிருக்கும் பூரணி ஒரு நிறுத்தமற்ற யந்திரம் என்றே கூறலாம்.

"பூரணி! மிளகாய்க்கன்றுக்குத் தண்ணீர் ஊற்றவேணும் வாறியா?" என்று கேள்விகேட்ட வசந்தன் தன் மனதுக்குள்... அவளை நான் கஸ்டப்படுத்துகிறனோ? அவளுக்குத் தண்ணி அள்ள ஏலுமோ? தெரியாது... என யோசித்தான்.

"என்ன இப்படிக் கேட்கிறீங்கள். நானும் வரத்தானே வேணும். பிள்ளைகள் இருவரும் முற்றத்தில் இருந்து விளையாடிக் கொண்டிருப்பார்கள். நானும் வாறன். என்னுடைய பட்டையை (வாளி) எடுங்கோ, இந்தா வந்துவிடுவேன், எனக்கூறிக்கொண்டு, மூன்று வயது நிரம்பிய வைகுந்தனையும், நான்கு வயது நிரம்பிய ஆருத்ராவையும் கூப்பிட்டு, முற்றத்தில ஒரு பாயை விரித்து, அவர்களை இருத்திவிட்டு, ''விளையாடிக்கொண்டிருங்க'' நான் அதிலபோய் தண்ணி ஊத்திற்று வாறன். இந்த விளையாட்டுச் சாமான்களுடன் விளையாடுங்க..." என இரண்டு மூன்று சிரட்டைகளையும், வெற்றுப் பவுடர்ப்பேணி ஒன்றையும், ஒரு சிறு தடியையும் கொடுத்து, டங்... டங்... என இராகம் எழுப்பிக் காட்டிவிட்டுச் சென்றாள் அந்த இளந்தாய்.

"என்ன உனக்குத் தண்ணி அள்ள ஏலுமோ? நீ கஸ்டப்படவேண்டாம். போய் பிள்ளையளோட இரு. நான் மெல்ல மெல்ல ஊத்தி முடிக்கிறன்."

''எனக்கென்ன வருத்தமோ? ஏன் என்னால முடியும்தானே" என்று அவள் சொல்லும்போது, அவளை ஏற இறங்கப் பார்த்தான் வசந்தன் ஒருவித மலர்ச்சியுடனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரணியின் மூன்றாவது பிரசவத்துக்கு இன்னும் இரண்டு மாதங்கள் இருக்கின்றன. அவள் முகத்தில் ஏழ்மையின் சாயல் தெரிந்தாலும், இயற்கையோடு கூடிய அவளது எழில் வதனம், கர்ப்பவதியாக இருக்கும்போது, மேலும் மெருகு பெற்றிருப்பதுபோல இருந்தது வசந்தனுக்கு.

"பூரணி! நானே தண்ணி ஊத்துகிறன். நீ போய் பிள்ளைகளைக் கவனமாகப் பார்த்துக்கொண்டிரு. பிறக்கப் போகிற என் மகளுக்கு நீ ஏதும் செய்யாமல், பேசாமல் இரு." எனச் செல்லமாக அவளைக் கடிந்துகொண்டான்.

"பூரணி! பூரணி! எங்க பிள்ளை இருக்கிறாய்?" என்று கேட்டுக்கொண்டு, சங்கரி மாமி வந்தார். "என்ன? நீயும் தோட்ட வேலைக்குள்ள கஸ்டப்படுகிறியே? யார் உன்னை வேலை செய்யச் சொன்னது? ஏன் தோட்டத்துக்கு வந்தனீ?"

"மாமி! நான் தோட்டத்துக்குள்ளதான் இருக்கிறன். ஆனால் நான் வேலை செய்ததைப் பார்த்தனீங்களோ? ஏன் கண் காணாமல் கதைக்கிறீங்கள்? நான் இந்த வரம்பில் பிள்ளையளோட விளையாடிக் கொண்டிருக்கிறன்."

"ஓ... வயித்தில பிள்ளையோட நீ விளையாடு... அங்க ஊரில என்ன கதைக்கினம் என்று உனக்குத் தெரியுமா?"

"என்ன மாமி! கதைக்கினம்? நாட்டுப் பிரச்சினை... சீவியப் பிரச்சினைகள்தானே... சாப்பாட்டுக்கு எங்கே போறது? எதைச் சாப்பிடுகிறது? இதுதானே கதை? வேறென்ன மாமி?" என ஒரு புதிர் படைத்தாள் பூரணி.

"பூரணி! நீயும் உன்னுடைய பேச்சும்... நீ செல்லப்பிள்ளை மாதிரி, வறுமையிலும் வளப்பமாக வாழுகிறாய். ஆனால் அது ஊர்ச்சனங்களுக்குப் பொறுக்குதில்லை."

"ஏன் மாமி? என்ன சொல்லுங்களன்?..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீயும் கணவனும் வறுமையிலும் செழுமையாக வாழ்கிறீர்கள்... ஆனால் சனங்கள் என்னவென்றால் வசந்தனுக்கு தோட்டவேலையுடன் குழந்தைகளைப் பெருக்கிறதும்தான் வேலையாம். நாலு வயதில... மூன்று வயதில... வயித்தில... என ஏதோ கதைக்கிறார்கள். எனக்கும் கேட்க ஒரு மாதிரியாகத்தான் இருக்கு. பூரணி! நான் கேட்கிறேன் என்று குறை நினைக்காதே பிள்ளை! ஏன் உனது குடும்பத்தைத் திட்டமிட உனக்குத் தெரியாதா? என்ன?" என்று கூறிமுடிக்காமல் நின்றார் சங்கரி மாமி.

பொறுமை இழந்தவளாக, பூரணி "மாமி! எங்கள் குடும்பம் பற்றியும், அதைத் திட்டமிடுதல் பற்றியும் எனக்குத் தெரியும் மாமி. அப்படித் திட்டமிட்டதன் விளைவுதான் இப்படி மாமி!"

"என்ன பூரணி சொல்கிறாய்?"

"மாமி! நான் சொல்லுகிறதையெல்லாம் நீங்கள் எங்க ஜீரணிக்கப்போறீங்க? அதுகளைப் பற்றி ஏன் கதைப்பான்? வேறு ஏதாவதையாவது கதைப்பம்."

"இல்லை பூரணி நீ சொல்ல வந்ததைச் சொல்லு. நான் அதைக்கேட்டு, இந்த ஊரின் வாயை அடைச்சவிடுறன்."

"மாமி! உங்களுக்குத் தெரியும்தானே, எனது கல்யாண வீட்டின்போது, ஜேர்மன்மாப்பிள்ளை... அது... இது... என்று ஏதோவெல்லாம் எமது அக்கம்பத்தினர் கதைத்தவர்கள்."

"ஓ! அதுக்கு இப்போ என்ன?"

"என்னுடைய அவர் ஜேர்மனியில் முன்பு இருந்தபோது கற்ற சில நல்ல பாடங்கள்தான் எங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டி."

"என்ன பிள்ளை புதிர் போடுகிறாய்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாமி! அவர் ஜேர்மனியில் வாழ்ந்தபோது, ஜேர்மன் குடும்பங்களின் வாழ்க்கையைப் பார்த்து, ஒன்று, இரண்டு பிள்ளைகளுடன் கால இடைவெளிவிட்டு, சிலவேளை மூன்று பிள்ளை என பெற்று குடும்பத்தைத் திட்டமிடுவதுடன் பொருளாதாரத்தையும் திட்டமிடுகிறார்கள். ஜேர்மன்பெண் ஒரு குழந்தையைத் தள்ளுவண்டியிலும், மற்றக்குழந்தையைத் தனது வயிற்றுடன் பொருத்தப்பட்ட துணிப்பை ஒன்றிலும் சுமந்துசென்று, தனது பிள்ளைகளைப் பொறுப்புடன் வளர்க்கிறாள். இப்படித் தானும் கடைப்பிடிக்கவேண்டும், என்று எண்ணிய என் கணவரின் கொள்கை இது மாமி."

மாமி! ஜேர்மனிய குடும்பங்கள் குடும்பக் கட்டுப் பாட்டுடன் பொருளாதாரத்தையும் கட்டுப்படுத்தித் திட்டமிட்ட வாழ்க்கை வாழ்கிறார்கள். குழந்தைகளை (ஒன்றோ, இரண்டோ, மூன்றோ) குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் பெற்று வளர்க்கிறார்கள், என்ன காரணம் தெரியுமோ?"

"எனக்கு எங்கே தெரியும். நீயே சொல்லு."

"மாமி! முதற்குழந்தை பிறந்தவுடன், அதற்கென வாங்கிய உடை மற்றும் அணிவகைகள், உபகரணங்கள் என்பவற்றை மீண்டும் பயன்படுத்தவேண்டும் என்ற நோக்கில் இன்னுமொரு குழந்தையைப் பெறுகிறார்கள். அந்தக் குழந்தைக்கு மேலதிகமான செலவு தேவையில்லை என்பது அவர்களின் கணிப்பு. அடுத்த காரணம் குழந்தைக்காகத் தாய் வாழ்நாள் முழுக்க நேரத்தை ஒதுக்காமல் குறிப்பிட்ட காலத்தில் பிள்ளைகளைப் பெற்று, வளர்த்துவிட்டால் பின்பு அவர்கள் தமது தொழில்களை மேற்கொள்ள இலகுவாக இருக்குமாம். இதுபோலத்தான் மாமி நானும் நினைக்கிறேன். ஒரு குழந்தைக்காக நான் வேறுவேலைகள் செய்யமுடியாமல், பராமரிப்பிலும் பாதுகாப்பதிலும் பார்க்க, இந்தக்கால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டத்தில் இரண்டு.. மூன்று பிள்ளைகளுக்காக நேரத்தை ஒதுக்கினால் சுலபம்தானே. பிறகு பிள்ளைகளைப் பெறவேண்டும் பராமரிக்கவேண்டும் என்ற வேலையோ, மற்றவர்களுக்கு நாம் தொந்தரவோ கொடுக்கவேண்டிய அவசியமில்லை."

"என்னமோ உன்னுடைய விளக்கங்கள் எனக்கு ஒன்றும் புரியுதில்லை."

"மாமி! எனக்கு இப்போ மூன்று குழந்தைகள். இவ்வளவும் போதும். இவர்களுக்கு என இப்போதே நேரத்தை ஒதுக்கிவிட்டால் இரண்டு, மூன்று வருடங்களால் என்னுடைய உதவி இல்லாமல் வளரத்தொடங்கி விடுவார்கள். அதன்பிறகு எங்கள் தொழிலை நானும் பிள்ளைகளும் அவருக்கு உதவியாகச் செய்வம். இதுதான் மாமி எங்கள் திட்டம். இதை ஜேர்மனியர் செய்தால் "ஜேர்மனியர் எவ்வளவு விவேகிகள்" தள்ளுவண்டியிலும், தாயின்வண்டியிலும் குழந்தையைச் சுமந்து சென்றால், "என்ன மாதிரி பொருளாதாரத்தையும், காலநேரத்தையும், குடும்பத்தையும் திட்டமிடுகிறார்கள்" என்று ஓகோ எனக்கூறி எம்மினம் அவர்களைப் போற்றுகிறது. "ஜேர்மன்காரன் ஜேர்மன்காரன்தான்" என்று வாய்நிறையப் புகழாரம் சூட்டுகிறது.

அதேபோல் நான் கையிலும் வயிற்றிலும் குழந்தையைச் சுமந்துசென்றால்.. வேறு வேலை இல்லை... தோட்ட வேலையுடன் இதுதான் வேலை.. என்று கூறித் தம்மினத்தைத் தாமே தாழ்த்த நினைக்குதுகள் எங்கட சனங்கள். இப்படி இருக்கும்போது எங்க மாமி எங்கட சமூகம் உருப்படப் போகுது? இதனால் சமூகத்தையும் முன்னேறவிட மாட்டார்கள். பெண்களையும் முன்னேறவிட மாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் மாமி! நான் ஒன்று சொல்லுறன். இந்தச் சமூகத்தின் கதைகளைக்கேட்டு, அதற்காக மனம்வருந்தி, வீட்டைச் சிறைக்கூடமாக்கி வாழ நான் விரும்பமாட்டன். எனக்கு எது சரியோ... அதையே செய்வேன். இந்த ஊர்ச்சனங்களின் வாய்களுக்கு ஒவ்வொரு சாப்பாடு கொடுக்கவேணும். அதிலே ஒரு புதுவகை விருந்தாக நான் அவர்களுக்குப் படைக்கப் போறேன் எனக் கூறிக்கொண்டு, "நேரம் போய்விட்டது, நானும் கொஞ்சம் படிக்கவேணும், போயிற்று வாங்கோ மாமி" என்றபோது..

"என்ன படிக்கப்போறியோ? எதைப் படிக்கப்போறாய்?"

"எங்கட சமூகத்தைப் படிக்கப்போறேன்."

"என்ன பூரணி பகிடி விடாமல் சொல்லு!"

"இல்லை மாமி. நான் றெக்டர் பழகப்போறன். லைசென்ஸ் படிக்க வேணும்."

"இப்ப ஓடப்போறியே றெக்டர்?"

"பிள்ளை பிறந்ததும்தான். தோட்டவேலைகள் செய்யும்போது றெக்டர் பொருட்களை ஏத்தி இறக்க, நிலத்தை உழ, நானும் பழகி இருந்தால் நல்லது. மற்றவரிட்டை நாங்க கடமைப்படத் தேவையில்லை. "பெண்கள் விவசாய அணி" என்ற அமைப்புத்தான் ரைக்டர் பழக்கிற பயிற்சியைச் செய்துவருகுது."

"உண்மையே?"

"ஓம் மாமி! ஊருக்கு இந்த நல்லவிசயம் தெரியவராது. இதைச்சொல்லி, என் திட்டங்களையும் விளங்கப் படுத்துங்கோ.

☆☆☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் உரிமை

"பொம்பளை வெளிக்கிட்டு விட்டவா? மாப்பிள்ளை வீட்டார் வரப்போகிறார்கள். 4.30 மணிக்கு வாறதாகச் சொன்னார்கள், இப்போது 4 மணியாகிவிட்டது. சுகந்தி முகத்தைக் கழுவி சாறியை ஊடும்" என்று பகடியாக அவளது நண்பி சுரேகா கேட்டாள்.

"வெளிக்கிடுவது பெரிய வேலையா, என்ன அவசரம்? வாறவை கொஞ்சநேரம் வந்து காவல் இருக்கட்டுமே.. இது என்ன முகூர்த்த நேரமா?.. எதற்கு தடல்புடல்?'' என உண்மையும், பகிடியும் கலந்த குரலில் கேட்டாள் சுகந்தி.

"சுகந்தி நீ கதைத்தது காணும் சாறியை உடுத்து வெளிக்கிடு.."

''நான் வெளிக்கிடுகிறேன் தானே. ஏன் அவசரப்படுகிறாய்? சுரேகா உனக்குப் பழைய ஞாபகங்கள் வருகுதோ?"

"சுகந்தி சும்மா பகிடியை விட்டிட்டு வெளிக்கிடு... வயது போனதுதான் மிச்சம்.. எப்பவும் குழந்தைத்தனம்தான்." என்று அன்புடன் கூடிய நட்புடன் கண்டித்தாள்.

குறிப்பிட்டட நேரத்திற்குச் சற்று பின்னதாகவே மாப்பிள்ளை வீட்டார் அங்கு வந்தனர். மாப்பிள்ளையுடன் அவரது சகோதரி, சிறிய தாய், பெரிய தாய், மைத்துனர் என நால்வர் வந்திருந்தனர். சுரேகாவும் அவர்களை வரவேற்று அமரச்செய்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகந்திக்கு 34 வயதாகிவிட்டது. இலங்கையில் தனியார் மருத்துவமனை ஒன்றில் தாதியாக வேலை பார்த்தவள். நாட்டு நிலைமைகளால் ஜேர்மன் வந்து சேர்ந்து இரண்டு வருடங்களாகி விட்டன. ஜேர்மனியில் உறவு என்று சொல்லிக்கொள்ள யாரும் இல்லை. துரதிர்ஸ்டவசமாக தாயையும் தந்தையையும் விடுதலைப் போரிலே குண்டுக்குப் பலிகொடுத்த தனிமரம். வசந்திக்கு மூன்று அண்ணன்களும் இரண்டு அக்காவும் இருக்கின்றனர். பெரிய அண்ணா கனடாவில் குடும்பமாக வாழ்கிறார். இரண்டாவது அண்ணா நார்வேயில் 'குடிவெறியன்' என்ற பட்டத்துடன் நாளெல்லாம் பொழுதெல்லாம் குடியுடனே குடும்பம் நடத்துகிறார். மூன்றாவது அண்ணா பிரான்சில் குடியும் குடித்தனமும் ஆவதற்கு காத்திருக்கிறார். அவருக்கு பிரான்சில் ஒரு பெண்ணை நிச்சயப்படுத்தி எழுத்து முடிந்துவிட்டது. அப்பெண்ணின் தந்தையார் திடீரென மாரடைப்பால் காலமானதால் திருமணம் ஒரு வருடத்திற்குப் பின்பு என ஒத்தி போடப்பட்டுள்ளது.

சகோதரிகள் இருவர் தாயகத்தில் ஏனோதானோ என்று உயிருடன் போராடி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். தமது தங்கை சுகந்தியை ஏதோவிதப்பட்டு, பணம்திரட்டி பிரான்சுக்கு தமையனிடம் அனுப்பி வைத்தனர். ஆனால் நினையாப் பிரகாரமாக சுகந்தி ஜேர்மனிக்கு வர வேண்டியதாயிற்று. சுகந்தியைப் பிரான்சுக்குக் கூப்பிட ஆரம்பத்தில், பிரான்சில் வசிக்கும் அண்ணன் வசந்தன் முயற்சிகள் செய்தான். பின்னர் அக்கறை குறைந்து தனது தங்கையை ஜேர்மனியிலேயே பதிந்துவிடும்படி, ஜேர்மனியில் இருக்கும் தனது நண்பனிடம் கேட்டுக்கொண்டான்.

சுகந்தி தனி ஆள் என்றபடியால் அவளை ஒரு தமிழ்க் குடும்பத்துடன் வாழும்படி சோசல் அதிகாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுக்கொண்டார். அவ்வாறே அவளுக்கு ஒரு அறையை ஒதுக்கிக் கொடுத்தது சோசல் திணைக்களம்.

அந்தக் குடும்பத்தினரும் சுகந்திமேல் பரிதாபம் கொண்டு, அவளுக்குப் பலவிதத்திலும் துணையாக இருந்தனர். அண்ணாக்கள் கவனிப்பார்கள் என்று வந்த சுகந்திக்கு அண்ணாக்களின் சுயரூபங்கள் மெல்ல மெல்லத் தெரியவந்தன. அவர்கள் திருமணமானவர்கள், பொறுப்பு அதிகம் அதுதான் கொஞ்சம் கவனக்குறைவாக இருக்கிறார்கள். இது உலக வழமைதானே! என்று சுகந்தி தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டாள்.

ஜேர்மன் மொழி படிப்பதில் தனது பொழுதைக் கழித்து வந்த சுகந்தியின் மேல் அவளுக்கு அறிமுகமான சிலர் அவள் மீது அக்கறை கொண்டனர். 34 வயதாகியும் இன்னும் திருமணமாகவில்லை... தனிமையாக எத்தனை நாளைக்கு இருக்கிறது? தமையன்மார் யாராவது சுகந்திக்கு ஒரு வரனைத்தேடி திருமணம் செய்யலாமே, என அனுதாபம் தெரிவிப்பவர்களும் இருந்தனர். அவர்களில் சிலர் தாமும் வரன் தேடும் படலத்தில் ஈடுபட்டதும் உண்டு. இங்கு முன்னின்று ஊக்கமுடன் செய்வதற்கு... உற்றவர்கள் இல்லாதபடியால் திருமணப்பேச்சுக்கள் வருவதும் மறைவதுமாக இருந்தன. இவற்றில் ஓரிரண்டு திருமணப் பேச்சை பிரான்சிலுள்ள வசந்தனுக்கு, சுகந்தி இருந்த வீட்டுக்காரர் அறிவித்திருந்தார். ஆனால் சுகந்தியின் அண்ணன் இதில் அக்கறையற்று இருந்தான். சாக்குப் போக்குச் சொல்லி தட்டிக் கழித்தான்.

34 வயதாகியும் திருமணம் செய்யாமல் இருக்கும் தங்கையைப் பற்றி அண்ணன்மாருக்கு அக்கறையே இல்லை.

சுகந்தியின் வீட்டுக்காரர் தியாகராஜாவும் அவர் மனைவி சகுந்தலாவும் பேசிய வரன்வீட்டார்தான் இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் பார்க்க வந்திருக்கிறார்கள். என்னவோ ஏதோவென்று பெண்பார்க்க ஒப்புக்கொண்டாள். அவளிலும், பார்க்க வயதிலும் குறைந்த பெண்கள் குழந்தைகளுடன் செல்வதைப் பார்க்கும்போதெல்லாம் தான் இன்னும் திருமணம் செய்யாமல் இருப்பதை நினைத்து வெட்கப்பட்டாள். வேதனைப்பட்டாள்.

மாப்பிள்ளை வீட்டாருக்கு சுகந்தியைப் பார்த்த உடனேயே பிடித்துக் கொண்டது. மாப்பிள்ளையின் சகோதரி தனது அண்ணனைப் பற்றி அறிமுகம் செய்து வைத்தாள். தமையனுக்கு 38 வயதென்பதையும், அவர் சீதனம் எதையும் எதிர்பார்க்கவில்லையென்பதையும், சாதகம் பார்ப்பதில் நம்பிக்கையற்றவர் என்பதையும் வசந்தனின் சகோதரி சொல்லி வைத்தாள்.

தனக்கு கணவனாக வருபவர் முற்போக்கு எண்ணம் கொண்டவராக இருப்பதை நினைத்து சுகந்தி மிகவும் மகிழ்ச்சியடைந்தாள். மாப்பிள்ளையின் வீட்டார் இத்திருமணத்திற்குச் சம்மதித்ததனால் தியாகராஜாவுக்கும் சகுந்தலாவுக்கும் ஒரே மகிழ்ச்சி.

அன்றைய தினம் இரவு சுகந்தி பிரான்சிலுள்ள அண்ணனுக்கு டெலிபோன் எடுத்து, மாப்பிள்ளை வீட்டார் வந்து போன விடயம் பற்றியும், பெண்ணைப் பிடித்தது பற்றியும், சீதனம் எது வேண்டாம் என்று கூறியது பற்றியும் நடந்தவை எல்லாவற்றையும் கூறி, அந்தத் திருமணத்தைச் செய்யலாம் எனக்கும் விருப்பம் என சொல்லி முடித்தாள்.

டெலிபோன் மறுமுனையில் வசந்தன் பேசும் போது." சாதகம் பார்த்துப் பொருத்தம் பார்க்க வேணும்" என்றான்.

"அவை . தங்களுக்கு அதில் நம்பிக்கை இல்லையாம், மனம் பொருந்தினால் போதுமாம்... சீதனமும் தேவையில்லையாம்" என சுகந்தி வசந்தனுக்கு பதில் கூறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் வசந்தனோ குரலை கடுமையாக வைத்துக்கொண்டு, சாதகம் பார்த்துத்தான் செய்ய வேணும் அவர்களுடைய அவசரத்துக்கு நாம் அவசரப்பட முடியாது." என உத்தரவு இடுவதுபோல் அதிகாரத் தோரணையில் கூறினான்.

தனது அண்ணன் வசந்தனுக்கு தனது திருமணத்தில் எவ்வித அக்கறையும் இல்லையென்பதையும், அவர் தனது வாழ்க்கையை மட்டும் சுயநலத்துடன் சிந்திக்கிறார் என்பதையும் புரிந்துகொண்ட சுகந்தி, சாதகம் பார்க்க வேண்டும் என்று சொல்வதெல்லாம் தனது திருமணத்தைத் தட்டிக் கழிப்பதற்கான சாக்கே என நினைத்துக் கொண்டாள்.

தனது திருமணத்தைப் பற்றியும், தனது வாழ்க்கையைப் பற்றியும் முடிவெடுக்க தனக்கு சுதந்திரமுண்டு எனச் சிந்தித்த சுகந்தி, தான் திருமணம் செய்யப்போகும் விசாரனை ஒரு முறைச் சந்தித்து அவருடன் மனம்விட்டு பேச விரும்புவதாக தியாகராஜா மூலம் சொல்லி அனுப்பினாள்.

தனக்குக் கணவனாக வரப்போகும் விசாகனைச் சந்தித்த சுகந்தி, தான் எடுத்திருக்கும் முடிவைச் சொன்னாள். அண்ணன் என்ற பாசத்திற்காக கொடுத்த மதிப்பை தனது முடிவெடுக்கும் சரித்திரத்தையே பறிப்பதற்கு பயன் படுத்தியுள்ளதை நிதானமாக அதேநேரத்தில் துணிவாகவும் எடுத்துக் கூறினாள். விசாகனும் அவளது முடிவை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டான்.

சுகந்தியும், விசாகனும் தங்களது திருமணத்திற்கான ஆயத்தங்களில் ஈடுபடத் தொடங்கினர்.

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தின் கோலமா?

காலை வெயில் உடலிற்பட்டு வெப்பத்தையூட்ட மாதவன் ஒரு புத்துணர்ச்சியுடன் செயல்பட்டான். காலை நேரம் என்றதினால் அன்றாடக் கடமைகளில் மக்கள் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். தெருவீதிகளில் கார்கள் தாறுமாறாக ஓடிக்கொண்டிருந்தன. மாதவன் கார் நெரிசல்களினூடே மிக அவசரமாக நடந்து கொண்டிருந் தான். ஜேர்மனி வந்து ஒருவருடம்தான் இருக்கும். ஆனால் வீட்டின் நினைவை மறக்காதவனாக வாழ்ந்து கொண்டிருந் தான். தனது மகனுக்கு மாதாமாதம் அனுப்பும் பார்சலுக்காகவே இன்று கடையே நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறான்.

ஊரில் இருக்கும்போது புடவைக்கடை முதலாளியாக இருந்தவன் மாதவன். பிரச்சினையின்போது அவனது கடை ஆமிக்காரரின் ஆக்கிரமிப்புக்குள்ளாகி தீக்கிரையாகிவிட்டது. ஏதோ உயிருடன் தப்பிவிட்டோம் என்ற நிலையில் தனது சொந்த ஊரில் மனைவியுடனும் அன்புமகன் பிரதீப்புடனும் வாழ்ந்து வந்தான். எல்லோரும் வெளிநாட்டில் பணத்தை வெட்டி அள்ளுகிறார்கள் என்று இங்கிருப்போர் இருக்கின்ற நிலபுலன்களை, நகைகளை விற்று வெளியேறிக் கொண்டிருந்தனர். பிரச்சினைக்குள் அகப்பட்டும் பலர் வெளிநாடுகளுக்குச் சென்றனர். இவற்றையெல்லாம் பார்த்த மாதவன் தானும் வெளிநாடு போகத் திட்டமிட்டு மனைவியிடம் அதைத் தெரிவித்தான். மனைவியும் பலவாறு சிந்தித்துவிட்டு இங்கிருந்துதான் என்ன செய்வது? அங்கு அவர் போனால் நாங்கள் என்ன செய்வது? என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருதலைக்கொள்ளி எறும்புபோல் ஒரு முடிவு கிடையாதவளாக கணவனின் பயணத்தைத் தாமதம் செய்து வைத்தாள். நாட்களும் இரவுபகலாகச் சுழன்று பிரச்சினை, ஊரடங்கு... அழுகுரல்... ஆமி... போன்ற கீர்த்தனைகளுடன் ஓடிக்கொண்டிருந்தன.

மாதவனோ தான் வெளிநாடு போகப்போகிறேன் என்பதை மனைவிக்கு எடுத்துக்கூறி ஒருவாறு அவளின் சம்மதத்தைப் பெற்றான். சீதா தமது குடும்பநிலைமையை உணர்ந்து கணவனை நோக்கி இங்கிருந்தும் என்ன செய்வது? எப்படி வாழ்வது? கடன்காரர்கள் வேறு வந்து நச்சரிப்பார் என்றுகூறி வெளிநாடு போவதற்கு ஒழுங்கு செய்யுங்கள் என்றாள். மாதவனும் அவளையும் மகனையும் விட்டுப் பிரிய மனமின்றி ஒரு கணம் சிந்தித்தான். வேதனை அவனை வாட்டினாலும் எல்லாவற்றையும் யோசித்துப் பின் ஒரு முடிவுக்கு வந்தவனாகி மனைவியிடமிருந்தும் மகனிட மிருந்தும் விடைபெற்று ஜேர்மனிக்கு வந்து சேர்ந்தான். அங்கு தன்னினத்தோரின் முகங்கள் பலவற்றைக் கண்டு சந்தோஷப்பட்டான்.

ஏதோ ஒன்றிரண்டு வருடம் இருந்துவிட்டு உடனே திரும்பிவிடுவேன் என்று மனைவியிடம் கூறித்தான் பயண ஒழுங்கு செய்தான். மேல்நாட்டு நாகரீகங்களை, அங்குள்ள பெண்மணிகளின் அலங்காரங்களை, ஆடைகளிலிருந்து அறிந்துகொண்டான். இயற்கை வனப்புகளை போட்டோ எடுத்து மனைவிக்கு அனுப்பி வைத்தான். இங்கு வந்து மேலே வேலைதேட ஆரம்பித்தும், வேலை கிடைத்தபாடில்லை. எங்கே வேலை தேடுவது? எப்படி கேட்பது? என்று கேள்வியாகக் கொண்டு அலைந்தான். பின் நாட்கள் செல்ல ஏன் இங்குள்ள நம்மினத்தோர் பலர் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்பதையும் தானே அறிய வேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பங்கள் அவனுக்கு ஏற்பட்டன. இங்கு வந்ததும்தான் அவனுக்குப் புரிந்தது. பணம் வெட்டி அள்ளுகிறார்களா? அல்லது பெட்டிப் பாம்பாக முடங்கிக் கிடக்கிறார்களா என்று... இருந்தும் மாதவன் தனது அயராத முயற்சியால் ஏதோ ஒரு தோட்டத்தில் உருளைக்கிழங்கு கிண்டும் வேலை ஒன்றை நண்பர்மூலம் தேடிக்கொண்டான். அதுவும் கிழமையில் மூன்று நாட்கள் என்ற நிபந்தனையுடன் அவ்வேலையைக் கொடுத்தார் தோட்டக்காரர். வந்துவிட்டோம் என்ன செய்வது? சாரை உண்ணும் ஊருக்குச் சென்றால் நடுமுறிவு எமக்கு என நினைந்து வேலைக்கு ஒப்புக்கொண்டு விட்டான். வேலையில் சேர்ந்து மூன்று மாதங்கள் பறந்தன. கொடும் வெயில் உடலை எரித்து பொக்களிக்காததுதான் மிச்சம்... அந்தச் சூழ்நிலையில் வேலை செய்தான். கிழங்கை எடுப்பதற்கு மண்ணை வெட்டும்போது.. இதுதான் பணத்தை வெட்டி அள்ளுவது என்று சொல்கிறார்களோ? என நினைந்து வேலையில் மூழ்குவான். வேலைக்களைப்புடன் தனது அறைக்குப் போனதும் முன்னுக்கு இருந்து வரவேற்பது அவனது மகன் பிரதீப்பின் போட்டோதான். கண்ணா பிரதீப்! எப்படி இருக்கிறாய்? என அந்த போட்டோவுடன் கதைத்து விட்டுத்தான் சாப்பிடுவான். அப்படி அளவு கடந்த பிரியம். வேலையால் கிடைத்த சம்பளத்தை எல்லாம் சேர்த்து மொத்தமாக மனைவிக்கு அனுப்புவோம் என திட்டமிட்டுச் சேர்த்து வந்தான். இப்பணத்தை இப்போ அனுப்புவதா? பின்பு அனுப்புவதா? என கொஞ்சம் யோசிக்க வைத்தது அடுத்தமாதம் வரவிருக்கும் பிரதீப்பின் பேர்த் டே தான்.

ஜேர்மன் வந்த சில நாட்களில் மாதவனுக்கு நண்பர்கள் சிலர் சேர்ந்துவிட்டனர். அவர்களும் 25வதும் 30வதும் பேர்த் டே என்று கொண்டாடி இவனுக்கு அழைப்பு கொடுத்ததும், நிறைய உணவு வகை, குடிவகை எல்லாம் அழைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்ததும், நிறைய உணவு வகை, குடிவகை எல்லாம் போட்டி போட்டு வந்தோர்க்கு பரிமாறப்பட்டதையும் இவன் நினைத்துக்கொண்டான். மற்றும் எத்தனையோ குடும்பங்கள் தமது பிள்ளைகளுக்கு பிறந்ததினத்தை பெரிய கோலாகலமாகக் கொண்டாடியதையும் அறிவான். தனது மகனின் பிறந்த தினத்தைத்தான் கொண்டாட முடியவில்லையே..? சீதா அங்கு என்னமாதிரி கொண்டாடுகிறாளோ? உடைகள் வேண்டிக் கொடுக்கிறாளோ? என யோசித்து கவலையில் மூழ்கினான்.

றிங்... றிங் என வீட்டு அழைப்புமணி அவனது யோசனையைக் குலைத்தது. எழும்பி வந்து கதவைத் திறந்தபோது, அவனது நண்பன் தர்மன் வந்துநின்றான். வா-வா... அவனே அழைத்து வேலை விடயங்கள் எப்படி? என விசாரித்தான். "என்ன அண்ணே! இன்றைக்கு ஒருமாதிரியா யோசிக்கிறீங்க? வீட்டில் இருந்து ஏதும் கடிதம் வந்ததோ?"

"இல்லை தர்மன்.. வாற 25ஆம் திகதி மகன் பிரதீப்புக்கு பிறந்தநாள்... அதை எப்படி நான் கொண்டாடுவது. போனவருடம் வீட்டில் நாங்கள் பிரச்சினைக்குள்ளும் வடிவாகக் கொண்டாடினனாங்கள்... இப்ப என்ன செய்வது? பிரதீப் அங்கே... நான் இங்கே.... என்ன வாழ்க்கை என்றுதான் யோசிக்கிறேன்."

"நீங்கள் ஏன் யோசிக்கிறீங்க... ஊரில் உங்கள் மனைவி கொண்டாடுவாதானே. நீங்க காசை அனுப்புங்கோ... உடுப்புகள், பிறஷன்ரேசனை அனுப்பிவிடுங்கோவன்.... அல்லது இப்படியும் செய்யலாம்தானே.."

"எப்படி?"

"நாங்கள் உங்கள் மகனின் பேர்த் டேயை இங்கையும் கொண்டாடுவம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதெப்படி தர்மன்?"

"இங்க பாருங்க.. நீங்கள் உங்கள் நண்பர்கள், உறவுக்காரர்கள், தெரிந்தவர்களுக்கு பேர்த் டே என்று வரச் சொல்லுங்கள்.. நாங்கள் இங்கு சாப்பாட்டுச் சாமான்களை வாங்கி வைப்போம். தூர இடத்திலும் இருந்து ஆட்கள் வருவினம். தண்ணி விடாய்க்கு கொஞ்சம் றிங்ஸ் வகை வேண்ட வேணும்" மாதவனும் இப்படிச் செய்தால் தனக்கு சந்தோஷம்... பிரதீப்பின் பிறந்தநாளையும் கொண்டாடின மனநிறைவு வருமென உடன்பட்டான்.

பிறந்ததின நாளும் வந்தது. ஆட்கள் வந்துகொண்டிருந் தார்கள். உருளைக்கிழங்கு பிடுங்கி உழைத்த காசுகள் எல்லாம் பேர்த் டே அலங்காரச் சரங்களாக சருகைகளாகத் தொங்கிக் கொண்டிருந்தன. மகன் பிரதீப்பின் போட்டோ 'என்லாஜ்' பண்ணப்பட்டு மூன்றடி நீள அகலப் பிரேம் போட்ட கண்ணாடிக்குள் அவன் சிரித்துக் கொண்டிருந்தான். சிற்றுண்டி வகைகள், பலகார வகைகள், கேக் என்பன பிரதீப் முன் வைக்கப்பட்டிருந்தன. ஆட்கள் எல்லோரும் வந்தபின் மாதவனுக்காக கைதட்டல்களின் மத்தியில் கேக் வெட்டி எல்லோருக்கும் தீத்தினான். பேர்த் டே முடிந்தது. சாப்பிடுவோர் சாப்பிட்டனர். குடிவகை பாவிப்போர் அடுத்த அறைக்குச் சென்றனர். இவ்வாறு பார்ட்டி நடந்து கொண்டிருந்தபோது மாதவனின் ஊர்ப் பிராமணர் சோமாஸ் கந்த சர்மா... பேர்த் டே என்று கேள்விப்பட்டு வந்தார்.

சர்மாவைக் கண்ட மாதவன் "ஐயா! வாங்க, வாங்க.. எப்ப இங்கு வந்தனீங்க? எந்த 'ஸ்ரட்டில' இருக்கிறீங்க?.. என்று விசாரித்துவிட்டு, "இருங்க.." என்று அமரச் செய்தான். சர்மா யோசித்துவிட்டு நான் இங்கு ஒரு கல்யாண வீட்டிற்கு வந்தனான். உமது மகனின் 'பேர்த் டே' என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விப்பட்டதும் நம்ம ஊரார் என்று பாசத்தில் சும்மா பார்த்து விட்டுப்போவம் என்று வந்தனான்."

எல்லாவற்றையும் கவனித்துவிட்டு ஒரு சிறிய பார்சலைக் கையில் வைத்துக்கொண்டு "எங்கே உமது மகன்?" என்று கேட்டுக் கொண்டு தமது தோளிலிருந்து நழுவிய தோள்த்துண்டை எடுத்துத் தோளில் போடத் திரும்பிய போது கண்ணாடிப் பிரேம் அவரது கண்ணுக்குத் தென் பட்டது. "ஆ- இதென்ன செயல் மாதவன்? உம்முடைய புத்தி எங்கே போய்விட்டது? நீர் என்ன பிறந்ததினமா வேறு ஏதும் கொண்டாடுகிறீரா?" என்று ஆவேசத்துடன் கேட்டார்.

"ஏன் ஐயா? என்ன என்று அவன் தெரியாது முழித்தான்." சர்மா அவனுக்கு ஏதும் கூற விரும்பாது... அருகில் நின்ற பெண்மணியைச் சற்றுத் தூரத்திற்கு அழைத்துச் சென்று- "இதோ பாருங்க நீங்கள் எல்லாம் சைவ சமயத்தவர்கள்தானே. ஒருவரின் படத்தை வைத்து ஏதும் கொண்டாட்டம் நடத்தினால் அது என்ன அர்த்தம் தெரியுமா? ஒருவர் இறந்தபின்தான் அவருடைய படத்தை வைத்துப் பூசிப்பார்கள். கொண்டாடுவார்கள். உயிரோடு இருக்கும் பிள்ளையை இப்படி சாகடித்துவிட்டுக் கொண்டாடுவது போல் கொண்டாடுகிறீர்களே" எனக் கூறிவிட்டுச் சென்றுவிட்டார்.

மாதவன், சர்மா என்ன கூறினாரென பெண்மணியைக் கேட்டான். "என்ன வீண் கொண்டாட்டம், செலவுத்தனம் என்று சொல்லிவிட்டு இந்தப் பார்சலையும் தந்துவிட்டுப் போகிறார்" எனப் பொய்யாகச் சொன்னாள் அப்பெண்மணி.

பேர்த் டேயும் முடிந்தது. நாட்களும் நகர்ந்தன. காசு செலவாகி அனுப்பும் காலமும் கடந்தன. பேர்த் டே பிரசன்சில் கிடைத்த சில சட்டைகளையும், விளையாட்டுப் பொருட்களையும் ஆசையுடன் பார்சல் பண்ணி பிரதீப்புக்கு அனுப்பி வைத்தான் மாதவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிறந்த நாளும் நல்லநாளுமாக இத்தினத்தில் வைத்தியசாலையில் நெருப்புக் காய்ச்சலுடன் தவிக்கிறானே என்ரை குஞ்சு... அப்பாவும் அங்கு... நான் மட்டும் தனிய என்ன செய்வது? அவனுடைய பிறந்தநாளில் எப்படி இருக்க வேண்டியவன் வாடி வதங்கி சுருண்டு கிடக்கிறானே" என்று எண்ணி ஊரில் தாயின் மனம் வேதனைப்பட்டது. "ஹோர் லிக்ஸ், தோடம்பழம், யூஸ்வகைகள் என்று இன்னோரன்ன நல்ல சத்தான சாப்பாடு வாங்கிக் கொடுக்கட்டாம் டொக்டர்-நான் எங்கு போவது காசுக்கு?... போக்குவரத்துச் செலவுக்கே காசு இல்லை என்று வருந்தினாள் சீதா. கடவுளிடம் முறையிட்டு என் கணவருக்கு ஏதாவது ஒரு வழியைக் காட்டி, ஒரு வேலையைத் தேடிக்கொடு... அவர் ஏதாவது ஐந்து... பத்து அனுப்பினாலாவது இங்கு என் குலக்கொழுந்தை கவனமாக கவனின்பேனே என அவள் நெஞ்சம் ஆலாய்ப் பறந்தது.

ஊரொத்த பஞ்சம் பட்டினிதானே. யாரிடம் பணம் கடனாகக் கேட்பது? என்ற நிலையில் இங்கு சீதா வாழ்ந்தாள். எல்லோரும் கையை விரிக்கின்றனரே என ஏங்கினாள் தாய் நாட்டில். ஆனால் இங்கு அவள் கணவனோ யார் யாரைக் கூப்பிடுவது நோயாளியான மகனின் பேர்த் டேக்கு... எனக்கூப்பிட்டு அவர்களுக்கு மேலதிக சாப்பாடுகளை வழங்கிக் கொண்டிருக்கிறான். இதென்ன மாயம்? மாற்றம்? வெளிநாட்டு மண்ணில் நம்மினத்தவர் கால்பட்டவுடன் தாய்நாட்டுப்பற்று, குடும்ப அக்கறை யாவும் பறந்துவிடு கின்றன. கலியுகத்தின் பிரதிபலிப்புகளோ இவை? தனிப்பட்ட இளைஞர்களின் மனம் மாறுவதிலும் பார்க்க பொறுப்பான குடும்பஸ்தர்கள் மாறிவிடுவது பெரிய விந்தையாக உள்ளது.

★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாய நீதிவான்

சூரிய ஒளி பனித்துளிகளை உறிஞ்சிக் கொண்டிருக்கும் அந்தப் பொன்வண்ணக் காலைப்பொழுது, பார்ப்பதற்கு அழகான காட்சி. திலகம் தனது காலைக்கடன்களை முடித்துவிட்டு பிள்ளைகளையும் பாடசாலைக்கு அனுப்பிவிட்டு, அப்பாடா என்று சற்று ஓய்வு எடுத்துக் கொண்டாள். அத்துடன் மீதியாய் இன்னும் பல வேலைகள் அவளுக்காகக் காத்திருக்கின்றன என்பதை எண்ணி மனதிற் சலிப்படையும்போது நீண்ட கொட்டாவி வெளியே வந்தது. அவள் கணவன் எழும்புவதற்கு முன் சகல வேலைகளையும் முடித்துவிட்டு மத்தியானச் சாப்பாட்டையும் தயார் செய்துவிட வேண்டும் என்ற ஆதங்கம் மனதிற் குடிகொண்டது. இரவு வேலையால் வந்து கணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான் என்பதனால் தானே எல்லா வேலைகளையும் அவள் பொறுப்பேற்றுக் கொண்டாள். காலைக்காட்சியின் இயற்கை நிகழ்வுகள் அவள் மனதிற்கு இதமாக இருந்தாலும் அதனை இரசிக்கும் நிலையில் அவள் மனநிலை இல்லை. நாள் முழுவதும் பம்பரமாகச் சுழன்று ஓடிக்கொண்டே இருப்பதுதான் இவளது வாழ்க்கை என்று சுருங்கக் கூறிவிடலாம்.

"திலகா.. திலகா தேநீர் வைச்சிட்டீரா? இங்கு கொண்டு வந்து தாரும்" என்று குரல் கொடுத்தான் அவளது கணவன் காந்தன்.

நேரம் காலை 10.30 மணி இருக்கும்... அந்நேரத்தில் காந்தனுக்கு ஏற்பட்ட தண்ணீர் தாகத்தால் மீண்டும் குரல் கொடுத்தான்.

"ஓ... தேநீர் வைச்சிட்டேன்.. கொண்டு வருகின்றேன்.. இந்தா வந்திட்டேன்.." என்று கூறியவாறே தேநீரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிலுக்கு அருகில் உள்ள சிறிய மேசை ஒன்றில் வைத்துவிட்டு...

"எழும்புங்கோ தேநீர் கேட்டியள்... பிறகு பேசாமல் படுத்திருக்கிறீங்கள்..." என்று அவனைத் துயில் எழுப்பினாள் திலகா.

"ஓ...நான் குடிக்கிறேன்.. நீர் இதில் இரும் கொஞ்சம் கதைக்க வேணும்..."

"என்ன புதுசா என்னுடன் கதைக்கப் போறீங்கள்? எனக்கு வீடு முட்ட வேலைகள் இருக்கு.. சொல்லுங்கோவன் பிள்ளைகளும் ஸ்கூலால் வரப்போகினம்..."

"அப்படி ஒன்றும் பெரிய கதை இல்லை. ராத்திரி வேலை செய்யும்போதுதான் இந்தச் செய்தி கேள்விப்பட்டு எனக்கு நித்திரையே கொஞ்சநேரம் வரமாட்டேன் என்று சொல்லிவிட்டது. ஞானரத்தினத்தின் மனைவி யாரோ ஒருவருடன் ஓடிப்போய்விட்டாளாம்.. இந்தப் பெண்களால்தான் உலகம் இப்படி சீரழிந்துகொண்டு போகிறது. அந்தப் பெடியன் ஞானம் எவ்வளவு நல்லவன்.. அவனை வேண்டாம் என்று விட்டு ஓடி இன்னொருத்தனிடம் என்ன அள்ளப் போகிறாளோ தெரியாது... எல்லாத்துக்கும் இந்தப் பொம்பிளையள்தான் கால்..."

கணவனின் பேச்சு திலகாவிற்கு எரிச்சலை ஊட்டியது. எல்லாத்துக்கும் பழிபோட பொம்பிளையள்தான் தயாராக இருக்கனுமா? நல்ல சுலபமான வழி... என நினைத்துக் கொண்டிருக்கும் போது.. மீண்டும் காந்தன், தொடர்ந்தான்.

"அன்றைக்கு ஒரு செய்தி கேட்டன். குலசேகரத்தின் மூத்த மகள் தனக்குப் பிடித்தவனுடன் வேறு இடத்துக்குப் போய்விட்டாளாம். அதால குலசேகரம் மானம் போனதென்று... ஏதோ விஷம் குடித்து ஒருவாறு தப்பிவிட்டாராம்... இதுகள் எல்லாம் யாரால வருகிறது? பொம்பிளைப் பிள்ளையளை எனக்கு கண்ணில் காட்டக்கூடாது..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓ... உங்களுக்கு பொம்பிளைப் பிள்ளையளை கண்ணில் காட்டக்கூடாது. பொம்பிளைப் பிள்ளையள் வேண்டாம் என்றால் நீங்கள் கல்யாணமே கட்டியிருக்கக் கூடாது. எல்லாவற்றையும் அனுபவித்துவிட்டு இதுவும் சொல்லுவியள்... இன்னும் சொல்லுவியள்..."

"திலகா இதையும் உமக்குச் சொல்ல மறந்திட்டன்... என்னுடைய மச்சான் சரவணபவானின் மனைவி.. அவளோட வேலை செய்கிற ஒருத்தனோட சிநேகிதம் என்றும், அவளை விவாகரத்துச் செய்ய திரிகின்றான், என்ன மாதிரி குடும்பஸ்தன் இப்படி அழிந்து குட்டிச்சுவராகப் போகிறான்.. எல்லாம் இந்தப் பொம்பிளைச் சனியன்களால் வந்த வினைகள்தான்..."

"இன்னும் இருக்கா? சொல்லுங்கோ ஏன் இப்படி ஒன்றையும் நீங்கள் கேள்விப்படவில்லையா?

"எப்படி?"

"தேவன் ஓடிவிட்டான்.. பூதன் இன்னாரின் மகளுடன் ஓடிவிட்டான் கந்தன்.. கடத்திக்கொண்டு போய்விட்டான்... என்று இப்படி ஆண்கள் ஓட்டம் பிடித்ததாக இன்னும் செய்திகள் எட்டவில்லையோ...?"

சற்று இழுத்துக் கதைத்தவாறே.. "அப்படி இல்லையே"

திலகாவிற்கு மனம் ஒருநிலையில் இல்லை இதுதான் தருணம் என எண்ணிக்கொண்டு, "ஒரு குடும்பம் சீரழிவதற்குப் பெண்தான் காரணம் என்று சொல்லுகிறீர்கள்? அப்படி இருக்கமுடியாது. ஒரு குடும்பம் திசைமாறிப் போவதற்கு அங்கு இருவருக்கும்தான் பங்கு உண்டு. ஒரு கை தட்டி ஓசை எழும்பாது. இருவரிலும் ஏதோ பலவீனம் இருக்கத்தான் வேணும் என்பதை விளங்கிக் கொள்ளாமல் எடுத்ததற்கெல்லாம் பொம்பிளையள்தான் காரணம் என்று சொல்லுகிறியள். இந்த ஆண்களின் சுபாவமே இப்படித்தான் இருக்கவேணும் என்று எங்கள் சமுதாயத்தில் கோடுகீறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடப்பட்டுள்ளது. பொம்பிளையளும் வேணும். அவர்களைக் குறைசொல்லி அடிமையாக நினைத்து அதிகாரம் செலுத்தவும் வேணும், இதுதான் நமது ஆண்களின் கொள்கை."

"என்ன திலகா உமக்கு ஒன்றும் விளங்காது. இப்படிப் பொம்பிளையள் நடப்பதாலதான் சில குடும்பங்கள் சீரழிந்து போகின்றன. பேசாமல்... கணவன் சொற்படி நடந்துவிட்டால் ஏன் இந்த வீண் விபரீதங்கள் ஏற்படப்போகுது?"

"என்னப்பா நீங்கள் இப்படிப் பழைய காலத்திலா இருக்கிறியள்? பெண்ணாகப் பிறந்தவள் இப்போது என்னென்ன வேலைகளை, சாதனைகளைச் செய்து கொண்டிருக்கிறாள். அவளுக்கு என்று சுயசிந்தனை உண்டுதானே! அதைவிட்டு ஒரு ஆணின் சொற்படி கட்டாயம் நடக்கவேண்டிய ஜீவனாகத்தான் இன்னும் பெண் இருக்கவேணுமா? நீங்களே யோசித்துப் பாருங்கோவன்."

"எதை நானா?"

"... ஒரு பெண் மாறாக நடந்துவிட்டாள் என்று ஒருவரோ அல்லது சமுதாயமோ சொல்லும்போது அங்கு பெண்களை மட்டுந்தான் சுட்டிக் காட்டப்படுகிறது. அதற்கு உடந்தையாக உள்ள ஆணைக் குறிப்பிடாமல் விடுவதேன்? என்று எனக்குத் தெரியாது."

"திலகா நீர் ஏதோ கனக்குத் தெரிந்த மாதிரி பேசுகிறாய். நான் உமக்குக் கொடுத்த சந்தர்ப்பம்தான் இப்படி எல்லாம் கதைக்க வைக்கிறது. உம்மை ஏன் கட்டுப்படுத்த வேணும் என்று கொஞ்சநாளாக விட்டு வந்தன்... உமக்கும் கனக்கக் கொள்கைகள் இருக்கிறது போல இருக்கு."

"எல்லோருக்கும் கொள்கைகள் இருக்குத்தான். அவற்றை வெளிக்காட்டச் சந்தர்ப்பம் கொடுக்கப்படுவ தில்லையே. காரணம், தம்மை மீறிக் கொள்கை வகுத்து விடுவார்கள்.. தமக்கு அடிபணிய வைக்க முடியாது என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயம் ஆண்களுக்கு உண்டு... எதற்கு எடுத்தாலும் இந்தப் பெண்களால்தான் பெரிய குழப்பம் என்று எடுத்ததற் கெல்லாம் வாயில் வந்தபடி பேசிவிடுகிறார்கள்... இந்தச் சமுதாயத்தினருடன் சேர்ந்து..."

"திலகா எனக்கு இப்போது ஒரு கொள்கை உருவாகிறது... பெண்களுக்கு சுதந்திரம் கொடுத்தால் அவ்வளவுதான். இனிப் பேசாமல் இரும்..."

இந்தா தொடங்கிவிட்டதே ஆண்களின் சுயரூபம்.. மனித சுதந்திரத்தை பெண்களுக்கு ஆண்களா கொடுக்கவேண்டும்.. இப்படியான கொள்கைகள் இன்னும் வேண்டுமா? நான் விளங்காமற்தான் கேட்கிறேன்.. தப்பாக எண்ணிக் கோபப்படவேண்டாம். நான் படித்தவள் என்ற கர்வத்திலோ நோக்கத்திலோ கேட்கவில்லை.. அவன் மனைவி இன்னொருவனுடன் ஓடிவிட்டாள். கந்தையரின் மகள் வேறு சினேகிதம் அப்படிப் போய்விட்டாள் என்ற கசப்பான வார்த்தைகள் எல்லாம் பெண்ணைத்தான் சுற்றிவளைத்துப் பேசப்படுகின்றன. அந்தப் பெண்கள் உயர்திணையாகவும், உடன்போக்குக் காரணர்கள் அஃறிணையாகவும் இங்கு கருதியா பெண்களின் பெயரையே இந்தக் காரண காரியங்களுக்குச் சூட்டிவிடுகிறார்கள்.. ஒரு பெண் ஓடுவதற்கு காரணமான உடன்போக்குக்கு உரியது மரமா? அல்லது பறவையா? மிருகமா? அங்கே உயர்திணைப் பெயரான ஆண்வர்க்கம்தானே இருக்கின்றனர்.. என்பதை மறந்து.. பெண் ஓடிவிட்டாள்.. என்று சொல்கின்றனர்.. இந்த உடன்போக்கு நிகழ்ச்சிக்கு பெண்கள் மட்டுமல்ல ஆண்களும்தான் காரணமாகும்..."

"என்ன நீர் சொல்லுகிறீர் திலகா? உடன்போக்கு... அது... இது... என்று சொல்லி என்னைக் குழப்புகிறீர்..."

"இல்லைப் பாருங்கோ, ஆண்கள் கொடுக்கும் பசப்பு வார்த்தைகள் உறுதிமொழிகள் என்பனவே பெண்களை உடன்போக்கு நிகழ்வுக்கு தயார் செய்கின்றன. ஆண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிக்கும் பேச்சு வலைகளிலே பெண்கள் சிக்கி இழுபட்டுச் சென்றுவிடும் காரியத்தை.. ஒரு பக்கமாக பெண்களின் மேல் வசைமாலையைச் சூட்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறது சமுதாயம். ஒரு குடும்பத்தில் கணவனாலே நாளுக்கு நாள் ஏற்படுத்தும் இன்னல்களாலோ அல்லது ஏதும் கருத்தொற்றுமையின்மை காரணமாகவோ.. கணவன் மனைவியரிடையே பிளவு ஏற்பட கணவனின் கொடுமையிலி ருந்து விலகுவதற்கு மனைவி மாற்று வழிகளை நாடலாம். அவள் ஏன் அப்படிச் செய்தாள்? அதற்குரிய காரணங்கள் என்ன? என்று சமுதாயம் யோசிப்பதில்லையே... இந்த நிகழ்வுகளுக்கு ஒரு ஆண் ஒரு பெண்தான் காரணர்களாக இருக்கின்றனர். ஏனப்பா இதை இப்படிச் செய்யலாமே.. சந்திரன் ஓடிவிட்டான்... என்று ஆணின் பெயரைச் சொன்னால் என்ன?.. பெண்கள் மீது இப்படியா அபாண்டமாக பழி சுமத்தவேண்டும்? நான் சொல்லுகிறேன் என்று கேட்டுக்கொண்டிராமல் இதைப் பற்றி யோசியுங்கள்.. இதற்கு என்ன பதில் சொல்வீர்கள்? நான் சொல்வதில் நியாயம் உண்டா? இல்லையா?"

என்று பெரியதொரு கருத்தைத் திலகா கணவன் மீது அள்ளிக் கொட்டிவிட்டு அவனது கருத்துக்களை எதிர்பார்த்து அவன் முகத்தை நோக்கினாள்.

"திலகா ஏதோ பெண்நிலைவாதப் பேச்சாளன் பேசுகிற மாதிரிப் பேசிக்கொண்டோ போகிறீர்.. உண்மையைச் சொல்லுகிறேன்.. கேட்க ஆசையாகவும் தெளிவாகவும் இருக்கின்றது... ஆனால் என்னைப் பொறுத்தவரையில் இப்படி மேடையில் பேசுவதுபோல் பேசவும், எழுதவும்தான் சரி போல் இருக்கிறது. நிஜ வாழ்க்கைக்கும் இவற்றுக்கும் வெகுதூரம்... ஏன் நான்கூட அதைத்தான் கடைப்பிடிப்பேன். என்ன வந்தாலும், உயிரே போனாலும் ஒரு பெண் மற்றொருவனை நாடக்கூடாது...இனிக்கதைத்து போதும் பேசாமல் இரும்.."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் கோபப்படுகிறீங்கள்? நான்தானே ஏற்கெனவே சொன்னேன் இவை சும்மா பேச்சுக்கு கதைத்துக்கொள்ளும் உரையாடல் என்று... ஏதோ நடந்துவிட்ட மாதிரி கோபமும் பதட்டமும் அடைகிறீங்க.. நீங்க சொன்னது சரிதான். ஒரு பெண் மற்றொருவனை நாடக்கூடாது என்பது உண்மைதான். கணவன் இயமனாக இருந்தாலும் பொறுமையுடன் சித்திரவதைகளை, ஆக்கிரமிப்புகளை, அனுபவிக்கவேணும்.. இதுதான் உங்கள் முடிவு சரி... அப்படியென்றால்..."

"அப்படியென்றால்... சொல்லுமுன்... ஏன் பேசாமல் விழுங்கிவிட்டீர்..."

"அப்படியாயின் தேனும் பாலும் போல இணைந்து இனிமையாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு குடும்பத்தின் தலைவன்... மாற்றான் மனைவியின் அழகிலே மயங்கி அப்பெண் வழிச் செல்கின்றானே... அது என்ன நியாயம்? இதையும் இந்த மனைவியானவள் சகித்து மாற்றான் மனைவியிடம் வழியனுப்பிவைக்க வேண்டுமா? ஓகோ.. இங்கேயும் இன்னொருத்தன் மனைவியான அந்த அழகிய பெண்ணின் மனதில் கல்லை எறிந்து குழப்பிவிட்டு... இந்தக் குடும்பஸ்தன் தப்பித்துக்கொள்ள, அப்பாவி அந்தப் பெண்ணே 'கள்ளத்தொடர்பு' என்ற இழிமொழிக்கு ஆளாகிறாள்... நல்ல நியாயம்தான். இந்தச் சமுதாயம் வகுத்துவிட்ட தீர்ப்பு, சமுதாய நீதவானுக்கு ஆண்வர்க்கம் கைலஞ்சம் கொடுத்து அதைத் தன்பக்கம் வைத்துள்ளது. என்ன ஆதாரங்கள், சாட்சிகள், தடயங்களை வைத்து பெண் பக்கத்தினர் வாதாடினாலும் முடிவு ஆண்கள் பக்கம் சார்பாகவே அமைந்துவிடுகின்றது. காரணம் நீதிமன்றத்தையே ஆணினம் விலைகொடுத்து வாங்கியுள்ளது போலத்தான் இருக்கிறது. எனவே அங்கு எவ்வாறு பெண்கள் வாதாடினாலும் அதன் முடிவு ஆண்களுக்கே சாதகமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவு. இப்படி இருக்கும்போது உங்களைக் குற்றம் சொல்லக்கூடாது. எல்லாம் எம் சமுதாய வார்ப்புக்கள்தான் இவை" என திலகா கூறி முடிக்குமுன்… அழைப்பு மணியின் சத்தம் கேட்கவே திலகா வாசலை நோக்கிச் சென்றாள்.

தபாற்காரன் சில கடிதங்களையும் இலங்கையிலிருந்து வந்த வீரகேசரிப் பத்திரிகைச் சுருள் ஒன்றையும் திலகாவிடம் கொடுத்துவிட்டுச் சென்றான்.

கடிதங்களை அப்படியே வைத்துவிட்டு முதலில் வீரகேசரிப் பத்திரிகையை மேலெழுந்தவாறு நோட்டமிட்டாள். முதற்பக்கத்தில் உள்ள செய்தி ஒன்றில்…

"கணவனின் கொடுமையால் இளம்பெண் தற்கொலை…" என குறிப்பிடப்பட்டிருந்தது. பத்திரிகையின் மறுபக்கத்தின் ஒரு ஓரத்தில்…

"சகோதரனின் அடக்குமுறையால் மனம் வருந்திய மாணவி ஓடும் ரயிலில் தஞ்சம்…" என்றும் குண்டு குண்டான எழுத்துக்களால் பெண்ணின் நிலைமைகள் பொறிக்கப்பட்டிருந்தன.

இவற்றை வாசித்து ஏக்கப் பெருமூச்சுவிட்ட திலகா மனவருத்தத்துடன் அப்பத்திரிகையை கணவனிடம் நீட்டினாள்.

உயிரை மாய்க்காது வாழ்ந்தால் வசைகூறும் உலகம். வசைமொழி தாங்காது காலன் எனும் ஆணைத்தேடி விட்டால் அவளுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கும் சமுதாயம், போலிச்சமுதாயம்.

'பெண்களின் பக்கமும் நான் சார்வேன்' என்று காண்பிப்பதற்காகவே சமுதாய நீதவானின்… இந்த நடிப்பு.

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருகப்பிரவேசம்

காலை ஒன்பது மணி வெயில் உடலுக்கு இளஞ் சூட்டால் இதம் கொடுக்கவே, சந்திரன் புத்துணர்ச்சியுடன் புகையிலைக் கன்றுகளுக்கு நீர் ஊற்றிக் கொண்டிருந்தான். காலைப் பனியில் பனி முத்துக்களைச் சுமந்த வண்ணம் புகையிலைக் கன்றுகளும் காற்றில் அசைபட்டு அவன் ஊற்றிய தண்ணீரில் சிலிர்த்தன. ஊற்றப்பட்ட தண்ணீரின் தாக்கத்தால் மண்ணைத் தொட்டு முத்தமிட்டு நிமிர்ந்தன. இரண்டாயிரம் கன்றுகளை நாட்டி, தன் அயராத முயற்சியால் பராமரித்து, பல திட்டங்களை நிறைவேற்றல் கணக்குப் போட்டபடி இருந்தான்.

ஏழை விவசாயி சந்திரன் மண்ணுடன் போராடும் ஊக்கமுள்ள உழைப்பாளி. தனது பிரயாசையால் தனக்குத் தேவையான காய்கறி வகைகளை நாட்டித் தனது சீவியத்தைப் போக்கிவிடுவான். மற்றவர்களிடம் கைநீட்ட அவன் மனம் கூசும். அவனுக்கு ஏற்றாற்போல அவனது மனைவி பரிமளாவும் இருந்தாள். தந்தை என்ற ஸ்தானமும் அவனுக்கு உண்டு என்பதை நிரூபிக்க. இருபிள்ளைகள் அவனுக்கு இருந்தனர்.

தனது தங்கையின் திருமணத்திற்குத்தான் எவ்வளவு சிரமப்பட்டு சீதனம் கொடுத்தேன் என்று எப்போதும் எண்ணி வருந்துவான். தங்கைக்கு மணமுடித்து ஐந்து வருடங்களுக்குப் பின்னர்தான் அவன் கஸ்டப்பட்டு, கடன்களை அடைத்துத் தலைநிமிர்ந்தான். தான்பட்ட வேதனையை உணர்ந்த சந்திரன் அக்கிராமத்தில் சீதனத்தை ஒழிக்க வேண்டுமென முற்பட்டான். அது அரங்கேறக்கூடிய காரியமா? ஆனால் மற்றவர் திருந்தாவிட்டாலும் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்தினால் திருப்தி என்ற எண்ணமுடையவனாக மணம் செய்துகொண்டான். பரிமளாவோ வரும்போது வீடு, காசு என்று கொண்டுவரக்கூடிய தகுதியில் இருக்கவில்லை. மகளுக்கு என்று ஏதாவது கையுறைப் பொருளாகவும் கொடுத்துவிட அவளது பெற்றோரிடம் எதுவும் இருக்கவில்லை.

ஏதோ எல்லோருக்கும் கழிந்து செல்கின்ற காலம் இவர்களைப் பொறுத்தவரையிலும் கடந்துதான் சென்றது. சூரியனும் வெளிப்படுவதும், மறைவதுமாக நாட்கள் ஓடி ஏதோ விதத்தில் இவர்கள் வாழ்க்கையும் ஓடிக்கொண்டிருந்தது. இவர்களும் கழகத்தின் பிரசைகளாகக் கணக்கெடுக்கப் பட்டவர்கள்தான்.

சந்திரன் தனது தொழிலுக்காகத் தந்தையின் துண்டுக்காணி ஒன்றை முதுசமாக்கிக் கொண்டான். அதிலே ஒரு கொட்டில் அமைத்து சந்திரன் குடும்பம் வாழ்ந்து வந்தது. வீடும் தோட்டமும் ஒன்றாக இருந்தமையால் பரிமளாவுக்குத் தோட்டவேலைகளில் ஈடுபட, அவனுக்கு உதவியாக நிற்க சிரமம் இருக்கவில்லை. இவ்வாறு வருடாவருடம் சேகரிக்கும் வருமானத்தில் குருவி சேர்ப்பதுபோல் சேர்த்து ஒரு இல்லிடத்தை அமைக்கத் திட்டம் தீட்டப்பட்டது. ஏறக்குறைய நான்கு வருட வருமானம் முழுவதும், வயிற்றிற் சேர வேண்டியதிற்குப் பதிலாக மண்ணிலும், கல்லிலும் போடப்பட்டன. வயிற்றைக் கட்டி வாயைக்கட்டி சிக்கனமாக வாழ்ந்து மிச்சம் பிடித்து ஒரு வீடு அமைத்துவிட வேண்டும் என்பதுதான் சந்திரனின் இலட்சியம். மனிதனுக்கு முதல் அவசியம் ஒரு இல்லம். இது சிறப்பாக, அழகாக இருந்தால் சமூகத்தில் மதிப்பு என்றும் அவனுக்குத் தெரியும். ஒரு சிறு கல்வீட்டில் இருப்பவர்கள் தட்டுப்பாட்டால் ஒரு கிழமை சாப்பிடாமல் இருந்தாலும் அவர்கள் மேன்மக்கள். ஆனால் ஒரு குடிசையில் இருப்பவர்கள் ஒரு கிழமை தேவையை மீறிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலரக உணவு உண்டாலும் அவர்கள் அந்தஸ்து குறைந்தவர்கள்- இது அவன் வாழ்ந்த சமூகத்தின் கணிப்பீடு. எனவேதான் அவன் வீட்டின் இலட்சிய புருஷனாக மாறினான்.

ஒருவாறு அத்திவாரம்- அவர், யன்னல், மரம்பரப்புதல்- வேலைமுடிந்து இனி ஓடு போடுதல் என்ற அத்தியாயத்திற்கு, அவன் வீடு எனும் புத்தகத்தில் படிக்க வந்துவிட்டான். இம்முறை புகையிலையை விற்று ஓடு போட்டுவிட வேண்டும் என்று எண்ணி, எண்ணி புகையிலைக் கன்றுகளுடன் மகிழ்ந்து கதை பல பேசினான். இம்முறை நல்ல விளைச்சலாக வரவேண்டும் என்று எண்ணி மிகவும் கண்ணும் கருத்துமாகப் பேணி வளர்த்தான் புகையிலைக் கன்றுகளை. புகையிலைக் கன்றுகளும் அவனது ஆவலைத் தாம் தீர்க்க வேண்டும் என்று எண்ணியது போல் செழிப்பாக, விசாரித்து இலைகளைச் சுமந்துகொண்டு நின்றன. உரிய பருவம் வந்ததும் ஆதரவாய் வளர்த்த கன்றுகளில் ஒவ்வொன்றாக வெட்டிப் பதப்படுத்தினான். தமது உடல் வெட்டுப் பட்டாலும் சந்திரனது ஏழ்மையையும், அவனது முயற்சியையும் கண்ட கன்றுகள் நமக்காக அழவில்லை. அவனது ஆசையைத் தாம் தீர்த்து வைக்கிறோமே என எண்ணி மகிழ்ந்தன.

புகையிலை வேலையும் முடிந்துவிட்டது. நாட்டு நிலைமை காரணமாக அவன் எதிர்பார்த்த விலைக்கு விற்க முடியாமற் போனதையிட்டு மிகவும் வருத்தப்பட்டான். என்ன செய்ய முடியும்? உள்ளூர் முதலாளிகளின் கண்கள் அவனது உற்பத்தியில் பாய்ந்தன. இதனால் நாட்டு நிலைமையைக் காட்டி, தரகர் கடலிகள் என்றும் கூறி, அவனது உழைப்பில் தாமும் சுரண்டிக்கொள்ளும் முதலாளிகளுக்குத்தானே புகையிலையைக் காசுத் தாளாக்கிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கும் வலு உண்டு. அவன் என்ன செய்வான்? அவனது உற்பத்தி வருமானத்தில் அவனுக்குக் கிடைத்தது அரைப்பங்குதான் என்று சொல்லமுடியும். அதைக்கொண்டு தமது சாப்பாட்டுக்குப் போக மிகுதியில் ஓடு வாங்குவதற்கு ஆயத்தமானான். அவன் முயற்சியால் மனவேகத்திற்கு ஏற்றாற்போல ஓடும் வாங்கி வேய்ந்து, வீடு முழுமைபெற்று விட்டது? வீட்டின் தோற்றத்தைத் தனது காணி வேலியின் ஓரத்தில் நின்று இரசித்தான். பெருமை கொண்டான். மனம் பூரணம் அடைந்தது. இனி என்ன? பூச்சு வேலைகள்... ஆறுதலாகப் பார்க்கலாம். முதலில் குடி புகுந்துவிடுவோம். அதன்பின் அங்கிருந்துகொண்டு கொஞ்சம் கொஞ்சமாக வேலைகளைச் செய்யலாம் என எண்ணி மகிழ்ந்தான்.

பரிமளா கணவனின் ஊக்கத்தைக் கண்டு மகிழ்ந்து இறைவனுக்கு நன்றி செலுத்தினாள். இவ்வளவு காலமும் இருந்த மண் ஊறலுக்குள் பிள்ளைகளை வளர்க்கப் பட்டபாடு..? ஈரத்தால் குளிர் தாங்காத பிள்ளைகளின் துன்பம் எல்லாம் இப்போது மறைந்துவிடும். விறகுவைத்து எடுக்க இடமின்றி பட்ட கஸ்டங்கள் எல்லாம் கடவுளே நீ கண்டு இப்போது தீர்க்க முன்வந்துவிட்டாய் என்று நன்றி சொன்னாள்.

ஒரு நல்ல நாளில் பால் காய்ச்சிக் கிருகப்பிரவேசம் செய்வது என முடிவு எடுக்கப்பட்டது. பெரிதாக ஒன்றும் இல்லாமல் சுவாமிப்படம் வைத்து, சுவாமியையே முதலில் குடியமர்த்துதல் எனக் கருதியவனாக, நெருங்கிய உறவு களுக்கும் அழைப்பு விடுக்க வேண்டும் என்றும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

நாளைக்கு "குடிபுகல்" என்று பெரிய நிம்மதியுடன் பரிமளாவும், சந்திரனும் சந்தோஷம் மனதிற் தாண்டவமாட நித்திரைக்குச் சென்றனர். இரவு ஒரு மணியளவில் திடீரென டும்... டும்.... டும்... என்று சத்தம் தூரத்தில் கேட்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலிருந்தது. குடிசைக்குள் துயின்ற சந்திரனும், பரிமளாவும் சத்தத்தைக் கேட்டு விழித்து எங்கேயாவது ஓடுவதற்குத் தயாரானார்கள். பிள்ளைகளையும் தூக்கிக்கொண்டு எங்கே ஓடுவது எனத் திணறிக் கொண்டிருந்தபோது அவர்களுக்கு மிக அண்மையில் செவிப்பறை சிதறும்படி டுமீல்..ம்.. என்ற சத்தத்துடன "பொம்பர்" சத்தம் கேட்டது.

எங்கு? ஏன்? எதற்கு? வீசுவது என்று தெரியாமல் வீசப்பட்ட இராணுவத்தினரின் "பொம்பர்" ஒன்று சந்திரனது புதுமனையிற் புகுந்தது. கிழக்கக் கரைப்பக்கம் இடிந்துவிழுந்த நிலையில் வீடு உருமாறிச் சிதைந்தது. சுவாமிப்படம் குடியிருக்க முன்பு "பொம்பர்" அங்கே குடிபுகுந்த நிகழ்வால் சந்திரன் பரிமளா நிலைகுலைந்து நின்றனர். வேதனை தாங்க முடியாமல் அக்கணநேரம் தத்தளித்து செய்வதறியாது நிலத்தில் இருந்தனர். ஆகாயத்தை அண்ணாந்து பார்த்த படியே தமது நிலையை எண்ணி வேதனைப்பட்டனர். அதேநேரம் உயிர் தப்பினோமே என்று நிம்மதிப் பெருமூச்சு ஒன்றுதான் வெளிவந்தது.

கை... கால் உண்டு... மீண்டும் முயற்சிப்போம் என்று எண்ணி ஆறுதலை வலிந்து பெற முயன்றான் அயரா உழைப்பாளி சந்திரன்.

ஆனால் இதுமாதிரி எத்தனை எத்தனையோ?... என அவன் எண்ணி எண்ணி வேதனைப்பட்டாலும் அவனால் இருக்கமுடியவில்லையே. மறந்துவிடக் கூடிய விடயமா? அவனது நிலைமைக்கு?...?...

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெளிவு

வீட்டுமணி கலீர் கலீரென ஒலித்தது. அந்த மணியின் ஓசையிலே ஏதோ அவசரக்காரர் நின்று அவதிப்படுவது போன்ற உணர்வை ஞானமணிக்கு ஏற்படுத்தியது. இறைச்சி வெட்டிக் கொண்டிருந்த கையைக்கூட கழுவாமல் அப்படியே போய் திறந்துவிட்டு எட்டி ஆவேசத்துடன் பார்த்தாள்.

"நீயா இப்படி பெல் அடித்தது? மெதுவாக அடிக்கத் தெரியாதா?" என்று, மகள் பிரியாவைக் கேட்டு முகத்தைச் சுளித்துக்கொண்டாள். "அம்மா! அம்மா! என்னை ஒரு டொச் பெட்டை சொக்கிளேட் என்றும், அவுஸ்லாண்டர் என்றும் ஏசிப்போட்டா" என்றும் விழுங்கி... விழுங்கிச் சொல்லும் போது அழுதுவிட்டாள்.

"யார் அந்தப்பிள்ளை? நீ ரீச்சரிடம் சொல்லவில்லையா?"

"சொன்னனன்தான், ஆனால் அவ அதைக் கேட்கவில்லை."

"பிரியா! நீ அழவேண்டாம். நான் பிறகு ரீச்சரோடு கதைக்கிறன். நீ பயப்படக்கூடாது. அவர்கள் பேசினாலும் நீ கேட்காத மாதிரி இரு, எல்லாத்துக்கும் நாளைக்கு நான் ரீச்சரைச் சந்திக்கிறன். நீ கால் முகத்தைக் கழுவிப்போ சாப்பிடு ராசாத்தி...! நீ கெட்டிக்காரிதானே.... கணக்கில் எல்லாம் சேர்குட் எடுத்திருக்கிறாய். நீ கவலைப்படக்கூடாது" என்று பிரியாவைச் சமாதானப்படுத்திய ஞானமணி தனக்குள். "பெரியவர்கள்தான் அவுஸ்லாண்டர் என்றும் புறம்பு காட்டுகிறார்கள் என்றும் இருந்தேன். இந்தச் சின்னன் களுக்கும் அந்த எண்ணங்கள் தோன்றிவிட்டன" என வேதனையும் கோபமும் அடைந்தாள். 'நாம் என்ன வந்தேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிகள்தானே. எல்லாவற்றுக்கும் ஆமாம்போட வேண்டியதுதான்' என்றும் எண்ணிப் பெருமூச்சுவிட்டாள்.

பிரியா, இரண்டாம் வகுப்பு படிக்கின்றாள். சுறுசுறுப்பான, விவேகமான மாணவி. எந்த நேரமும் ஏதாவது எழுதுவதிலும், படங்கள் வரைவதிலும் தனக்குத் தெரிந்த விதத்தில் சிறு சிறு கதைகள் எழுதுதிலும், பொழுதைக் கழிப்பாள். வீட்டில் அவள் மனம் வேதனைப்படும்படி ஒன்றும் நடைபெறாது செல்லமாகவே வாழ்ந்து வந்தாள். அவள் மனம் வருந்தும்படி தாயார் அவளுடன் நடந்து கொள்வது குறைவு. ஆனால் பாடசாலை சென்றவுடன்தான் பிரியாவுக்கு ஒருவிதப் பயம் குடிகொண்டுவிடும். தான் கறுப்பு என்பதனால் "சுவாற்ஸ்" என்று மற்றப்பிள்ளைகள் சொல்வதை அவளால் பொறுத்துக்கொள்ள முடிவதில்லை. பிரியா மற்றப்பிள்ளைகளுடன் சேரமுயன்றால், சேர்ந்து விளையாட விரும்பினால் மற்றபிள்ளைகள் அவளைச் சேர்த்துக்கொள்ள மாட்டார்கள். இதனால் பிரியா தனித்து விடப்பட்ட சிறுமியாக மற்றவர்கள் விளையாடுவதைக் கவலையுடன் பார்த்துக்கொண்டு நிற்பாள்.

ஒருநாள் விளையாட்டுப் பாடம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. எல்லோரும் தங்கள் விளையாட்டுப் உடைகளை அணிந்தார்கள். விளையாட்டுப்பாட ஆசிரியர் அவர்களுக்குப் பயிற்சியளித்துக் கொண்டிருந்தார்கள் அப்போது, அவர் பிரியாவை அவதானித்து, "ஏன் பேசாமல் நிற்கிறீர்? பயிற்சியில் சேர்ந்து நான் செய்துகாட்டுவதுபோல் செய்யவேணும்" என்றார். உடனே பிரியா... ஓ... ஓ... என்று விம்மி விம்மி அழத் தொடங்கினாள். ஏன் அழுகிறீர்? என்ன நடந்தது? விளையாட விருப்பம் இல்லையா? என்று பரிவுடன் அவளின் தலையில் தடவிக்கொண்டு ஆசிரியர் கேட்டார்.

பிரியாவின் கண்களிரண்டிலிருந்தும் முத்து முத்தாகக் கண்ணீர் 'பொலபொல'வென்று கொட்ட... அங்கே நிற்கிறான் தொப்பியாஸ். அவன் என்னைப் பார்த்து "நீ ஒருநாளும் குளிப்பதில்லையா? அதுதான் உம்மைப் பாக்கப் புகைக்கூடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடைக்கிற ஆளின் நிறம்போல இருக்கிறது. நீ குளித்தால் எங்களைப்போல வெள்ளையாக வருவீர்... என்று கூறினான் என தொப்பியாஸ் என்ற சக மாணவனைச் சுட்டிக்காட்டி அழுதாள். ஆசிரியருக்குக் கோபம் ஏற்படவே... தொப்பியாஸ்! தொப்பியாஸ்!" என்று சத்தமாகக் கூப்பிட்டு, பிரியாவிடம் ஏன் இப்படிச் சொன்னீர்?" என்று அதட்டினார்.

"உடனே தொப்பியாஸ் பயந்துகொண்டு," அவவைப் பார்க்க ஸ்முற்சிக் ஆக (அழுக்கு உடையவர்போல) இருந்தது. சீ இஸ்ற் சுவாற்ஸ... அதுதான் அப்படிக்கேட்டேன்; என்றான் மனத்தில் வஞ்சகம் இன்றி.

ஆசிரியர் உண்மையை விளங்கிக் கொண்டவராக... அவ பிரவுன் நிறம்தான். அழுக்குஅல்ல. அவ உங்கள் வகுப்பு மாணவி. நாங்கள் எல்லோரும் மக்கள்தான்... என்று அன்பாக விளங்கப் படுத்தினார். பின்னர் தொப்பியாசைப் பார்த்து, பிரியாவிடம் மன்னிப்புக் கேட்டு, "இனிமேல் இப்படிச் செய்யமாட்டன்" என்று கூறினான்.

இந்த செய்கைக்குப் பிறகு பிரியாவுக்கு அவனை அறியாமலேயே அவள் மனதில் ஒரு பலவீனம். ஒருவிதப் பயம் குடிகொள்ள வைத்தது.

காலை எட்டுமணி முதலாம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. Frau. Schimidt எல்லோருக்கும் காலைவணக்கம் கூறிக்கொண்டு உள்ளே வருகின்றார். ஜேர்மன் பாஷைப் பாடம் என்றபடியால் எல்லோரும் பாடப்புத்தகத்தை எடுத்துக் கொள்கின்றனர். "82ஆம் பக்கத்தை எல்லோரும் எடுங்கள்" என கூறிவிட்டு "யார் முதலில் வாசிக்கப் போகிறீர்கள்?" எனக் கேட்கிறார். உடனே பிரியா உட்பட எண்மர் தமது கைகளை உயர்த்துகின்றனர்.

"சரி! எல்லோரும் கையைவிடுங்கள்" என்று கூறிவிட்டு, "ஸ்ரெபானி முதல் வாசியும்" எனக்கூறவே, ஸ்ரெபானி என்ற சிறுமி தடக்கித் தடக்கி எழுத்துக்களைக் கூட்டி வாசித்துவிட்டனர். இறுதியாகப் பிரியாவின் முறை வருகிறது. பிரியா ஆவலுடன் வாசிக்க ஆயத்தமாகிறாள். உடனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியை "வேண்டாம்" எனக்கூறி, "நான் தருகின்ற பயிற்சிகள் எல்லோரும் செய்யுங்கள்" எனக் கட்டளையிடுகின்றார். எல்லா மாணவர்களும் தமது அப்பியாசப் புத்தகத்தில் எழுதுவதற்குத் தயாராகின்றனர். பிரியாவும் குழம்பிய மனத்துடன் "இந்த ரீச்சர் கூடாது, நான் வாசிக்கப்போக வேண்டாம், எனக்கூறிவிட்டா; என்னில் விருப்பம் இல்லையாக்கும்..." என அழத் தொடங்கினாள். கண்ணீரை வெளியே காட்டாமல் துடைத்துவிட்டு, அந்தப் பாடத்தை மற்றைய மாணவர்களுக்கு முதல் செய்து முடித்துவிட்டுப் பேசாமல் இருந்தாள்.

பிரியா எழுதாமல் இருப்பதைக் கண்ட ஆசிரியை, "பிரியா! நீர் எழுதவில்லையா?" என்று கேட்டபோது, "எழுதிவிட்டேன்" என்று கூறவே "இங்கு கொண்டுவாரும் கொப்பியை!" எனக்கூறினார். பிரியா கொப்பியைக் காட்டவே ஓரிரு பிழைகளுடன் தெளிவாக எழுதியிருந்தாள் பிரியா. "குட்" எனக்கூறி போய் இருக்கும்படி ஆசிரியர் கூறினார். சில மாணவர்கள் தாம் எழுதியவற்றை ஆசிரியைக்குக் காண்பித்தனர். மற்றையோர்கள் எழுதி முடிக்குமுன்னரே அடுத்த பாடத்திற்கான மணி ஒலித்தது. ஆசிரியை அவர்களைப் பார்த்து, "வீட்டுப் பாடமாகச் செய்து கொண்டு வாருங்கள்" எனக்கூறி, வேறும் இரண்டு அப்பியாசங்களைக் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டார்.

தொடர்ந்து பாடசாலையில் இரண்டாம், மூன்றாம் பாடங்கள் எனத் தொடர்ந்து நடைபெற்றன. பிரியா எந்நேரமும் தனித்து விடப்பட்ட நிலையிலேயே இருந்தாள். மற்ற மாணவர்கள் அவளுடன் சேர்ந்து கதைப்பதில்லை. அவ்வாறு பிரியா மற்ற மாணவியுடன் ஏதும் தானாகப் பேசினால், அந்த மாணவி கதைத்துவிட்டு, பின் தனது நண்பியின் காதுக்குள் 'குசுகுசு' என்று சிரித்துக் கதைத்தாள். அதைப் பார்த்த பிரியாவுக்கு அந்த மாணவி மீது எரிச்சல் வந்தது. தன்னுடன் சேர்ந்து கதைத்துவிட்டு தன்னைப் பற்றி ஏதோ அந்த மாணவியுடன் ஏதோ கதைக்கிறாள் என எண்ணினாள். இதனால் பிரியாவுக்குப் பாடசாலைக்குப்

போவதென்றால் வெறுப்புணர்வு ஏற்படத் தொடங்கியது. 'இந்த வெள்ளை மாணவர்களுடன் நான்தான் கறுப்பு மாணவியாக இருக்கிறேன். எனக்கு ஏன் இப்படி நிறம் வந்தது?' என்று அந்தப் பிஞ்சுமனம் எண்ணத் தொடங்கியது. 'அவர்களும் ஜேர்மனியில்தான் பிறந்தவர்கள் நானும் ஜேர்மனியிற்தான் பிறந்தனான்' ஏன் நான் கறுப்பாக இருக்க வேணும்? ஏன் வேறுமொழி... தமிழ் பேச வேணும்? கறுப்பாக இருப்பதால்தானே எல்லோரும் என்னைப் பார்க்க கூடியதாக இருக்கிறேன். வெள்ளையாக இருந்தால் என்னை அவ்வளவுக்கு அடையாளம் தெரியாதே..' என்று பலவாறு யோசித்து, விடைபுரியாது குழப்பம் அடைந்தவளாக எதற்கும் அம்மாவைக் கேட்போம் என்று நினைத்து, அந்த நினைவுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துக் கொண்டாள்.

அன்று மத்தியானம் பிரியா.... தனது தாயிடம், "பாடசாலையில் நான் எத்தனைதரம் கையை உயர்த்தியும் நான் வாசிக்கவிடவில்லை. மற்றவர்களை வாசிக்கவிட்டவா அம்மா! என்னை மட்டும் அவ வாசிக்க விடவில்லை. கூடாத ரீச்சர் இப்படித்தான் எப்பவும் எனக்குத் தெரியும் என்று, கையை உயர்த்தினால், என்னைக் கேட்காமல், மத்தப் பிள்ளைகளையே கேட்பா.

ஏனம்மா! என்னையும் கேட்கலாம்தானே? நான் மறுமொழி சொல்லவேண்டும் என்று எவ்வளவு ஆசையாக இருப்பேன். ஆனால் அவ என்னைக் கேட்கமாட்டா. நெடுகவும் டொச்சுப் பிள்ளைகளைத்தான் கேட்பா" என்று பிரியா சொல்லிக்கொண்டிருக்கும்போது...

ஞானமணிக்கும் மனத்திலே அந்த ஆசிரியையைப் பற்றி, ஒருவித வெறுப்பும், 'அவவே வித்தியாசம் காட்டத் தொடங்கி விட்டாவா? இந்தப் பிஞ்சு மனத்துக்கு என்ன தெரியும்? அதை அனுசரித்துப் போகத் தெரியாதா?' என்று எண்ணி நாளைக்குப்போய், இதுபற்றி விசாரிக்க வேணும், என்று எண்ணிக்கொண்டாள். ஒரு குழந்தை ஆவலாக இருப்பதை மழுங்கடித்து, அதன் மூளையைக் குழப்பக் கூடாது என்று நினைத்து "பிரியா! நீ கவலைப்படக்கூடாது. ரீச்சர் அப்படிச் செய்யமாட்டா. அவவுக்கு எல்லாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளும் ஒன்றுதான். எல்லோரையும் ஒரேமாதிரியாகத் தான் நடத்துவார். அது நீ கை உயர்த்தினதைக் கவனிக்க வில்லையாக்கும்" என்று பிரியாவைச் சமாதானப்படுத்தினாள் ஞானமணி. ஏனெனில் ஒரு ஆசிரியரிடம் எப்போ ஒருபிள்ளை வெறுப்புக் கொள்ளத் தொடங்கிவிடுகிறதோ, அப்போதே அந்த ஆசிரியை படிப்பிக்கும் பாடங்களையும் வெறுத்து, அதனைக் கிரகித்து மனதிற் பதித்துக்கொள்ள மறுத்துவிடும். இந்தநிலை பிரியாவுக்கு வந்துவிடும் என்ற பயத்தினாலே... "ஆசிரியை நல்லவ. அவ தெரியாமல் விட்டுவிட்டா" எனக்கூறவே... அம்மாவின் வாக்கை அமுதவாக்கென அந்தப் பிஞ்சுமனம் நம்பி... ஆசிரியையும் நல்லவர் என்று ஏற்றுக்கொண்டு, படம் ஒன்றைக் கீற ஆரம்பித்துவிட்டாள்.

மறுநாள் காலை ஞானமணி பிரியாவுடன் பாடசாலைக்குச் சென்றாள். அப்போது நேரம் 7.45 இருக்கும். ஆசிரியை இன்னும் வகுப்புக்கு வரவில்லை. மாணவர்கள் உள்ளே நுழைந்து தத்தமது இருக்கைகளில் இருந்து சிரித்துக் கதைத்துக் கொண்டிருந்தனர். ஒரு சிலர் எழும்பி நின்று கதைத்துக்கொண்டு ஏதோ விளையாடினர். தாயுடன் வந்த இறுமாப்பில் பிரியா வகுப்பில் போய் அமர்ந்து கொண்டாள். ஞானமணி வகுப்பறைக்கு வெளியே ஆசிரியைக்காகக் காத்து நின்றாள். நேரம் 8.00 மணி ஆகவே வகுப்பாசிரியை பிதவ்.ஸ்மித் சில புத்தகங்களுடன் வகுப்பறையே நோக்கி வந்து கொண்டிருந்தார். ஞானமணியைக் கண்டதும், "குட் மோகன்" (Gut Morgen) சொல்ல, பதிலுக்கு ஞானமணியும் 'குட்மோகன்' சொன்னாள்.

'வந்த விடயம் என்ன?' என்பதுபோல் ஆசிரியை ஞானமணியைப் பார்த்து விழிக்க, ஞானமணி 'மன்னிக்கவேண்டும்' என்றுகூறி, நேற்று பிரியா வந்து சொன்னவற்றையும் மற்றைய மாணவர்கள் வித்தியாசக் கண்கொண்டு பார்ப்பதையும் ஒவ்வொரு சம்பவமாகக் கோர்வைப் படுத்தி, ஆத்திரம் முகத்தில் தெறிக்கக் கூறினாள். "மேலும் நேற்று பிரியா வீட்டில் எந்நேரமும் அழுது கொண்டிருந்தாள்.... ரீச்சர் தன்னை வாசிக்கச் சொல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை... வாசிக்கப் போகவேண்டாம்; என்று மறுத்து விட்டா, என அழுது கொண்டிருந்தாள்" எனத் தனக்குத் தெரிந்த டொச்சில் ஏதோ விளாசித் தள்ளினாள் ஞானமணி. பின்பு தயவு செய்து, மற்றப் பிள்ளைகள் இவளை ஒதுக்கு வதை நீங்கள் அவதானிது, பிரியாவை அவர்களுடன் சேர்த்துப் பழகச் சொல்லுங்கள்... ஒதுக்கப்பட்டு இருந்தால் நெடுகவும் ஒதுக்கிக் கொண்டுவருவார்கள் என இரந்து வேண்டுவதுபோல் ஞானமணி ஆசிரியையிடம் வேண்டிக் கொண்டாள்.

எல்லாவற்றையும் பொறுமையாகத் தெளிந்த முகத்துடன் ஞானமணியின் உள்ளக்கிடக்கையை விளங்கிக் கொண்ட Frau. Schimidt ஞானமணியை நோக்கி, "நீங்கள் யோசிக்கத் தேவையில்லை. எப்போது உங்களிடமிருந்து பிள்ளையை 8.00மணிக்கு பாடசாலைக்கு அனுப்புகிறீர்களோ, அந்த நேரத்திலிருந்து, பாடசாலை முடியும் நேரம்வரை அப்பிள்ளை எங்கள் பிள்ளையாக மாறிவிடுகிறது. நாங்கள்தான் அப்பிள்ளைக்கு எல்லாம் பொறுப்பு. உங்கள் பிள்ளை, மற்றவர் பிள்ளை என்ற பேதம் எங்களுக்கு இல்லை. நீங்கள் நினைப்பது மாதிரி நாங்கள் நடப்பதில்லை. பிரியாவை வாசிக்கச் சொல்லவில்லை... அவவிடம் கேள்விகேட்பதில்லை... என்றும் கூறினீர்கள். அவை உண்மை. காரணம் பிரியா விவேகமான பிள்ளை, அதன் குணநலன், அறிவுத்திறன் என்பவை எனக்குத் தெரியும். கணக்குகள் எது செய்வா... வாசிப்பு... மற்றைய அப்பியாசங்கள் எவை செய்வா? எவற்றைச் செய்யமாட்டா... என்று சகலவிபரமும் எனக்குத் தெரியும். பிரியா வகுப்பில் நல்ல கெட்டிக்காரி. அவவால் எனக்குச் சிரமம் இல்லை. சொல்வதை உடனே செய்துவிடுவா. நீங்கள் வீட்டிலேயோ, வேறு தமிழ்ப் பாடசாலயிலேயோ கணக்குப் பாடம் சொல்லிக் கொடுத்திருக்கிறீர்கள். வீட்டிலும் நீங்கள் பிரியாவுடன் உங்கள் பொழுதைச் செலவிட்டுள்ளீர்கள். ஒரு பிள்ளையின் தரம், தன்மை, நடவடிக்கைகளிலிருந்து அப்பிள்ளையின் பெற்றோரின் தன்மைகளை நாம் ஓரளவுக்கு அறிந்துகொள்ள முடியும். நீங்கள் கணக்குப் பாடத்தில், நாங்கள் படிப்பிக்கமுன் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சிகளைச் செய்து பழக்கியிருக்கிறீர்கள்! ஜேர்மன் பிள்ளைகள் அப்படி இல்லை. நாங்கள் படிப்பிப்பதுடன், நின்றுவிடுகிறார்கள். அது விடயமான பயிற்சிகளையே செய்யப் பழக்கப்படுகிறார்கள்.

உதாரணமாக... ஒரு பிள்ளைக்கு பாடசாலையில் நாம் விளங்கப்படுதும்போது விளங்கிக் கொள்வதுதான் அதிகமாகப் பதியும். ஏற்கனவே விளங்கிக் கொண்டுவரும் பிள்ளை, நாம் விளங்கப்படுத்தும்போது, அசட்டையாக "இது எனக்குத் தெரியும்தானே" என இருந்துவிடும். எனவே, ஒரு பிள்ளை சுயமாகச் சிந்தித்து, விளங்கிக் கொள்ளவே பெற்றோர் உதவியாக இருக்கவேண்டும்.' பெற்றோர்களே அப்படி எழுதவேண்டும், இப்படி எழுதவேண்டும் என்று பழக்கி வந்தால் எப்போதும் அப்பிள்ளை பெற்றோரையே எதிர்பார்த்து நிற்கும். எனவே அது படிப்பிக்கின்ற எங்களுக்கும் உங்களுக்கும் கஸ்டம்.

"பிரியாவுக்கு வாசிக்கத் தெரியும். அவ வாசிப்பா- என்று எனக்குத் தெரிந்தபடியால், மீண்டும் அவவை வாசிக்கவிட்டு, நேரத்தைப் போக்காமல் மறுபாடத்தை நான் நேற்று ஆரம்பித்தேன்" என்று பெரிய ஒரு விரிவுரை ஒன்றைச் செய்துமுடித்தார் ஆசிரியை. "பிள்ளையின் வயது, தரத்துக்கு ஏற்பவே நீங்கள் வீட்டில் பாடங்களைச் சொல்லிக் கொடுக்கலாம். பொதுவாக அப்படி யாசப் புத்தகத்தில் நீங்கள் சொல்ல விளங்குவதைவிட, இங்கு நான் மற்ற பிள்ளைகள் மத்தியில் சொல்லி விளங்க வைப்பதே பிள்ளைக்கு அதிகம் பதியக்கூடியதாக இருக்கும். எனவே நீங்கள் கூடியவரையில் பிள்ளைக்குத் திணிக்காமல் இருந்தால் பிள்ளை தானாகச் சிந்தித்து அறிவைப் பெறும். காலம் செல்லச்செல்ல வகுப்பு உயரும்போது, பிள்ளைக்கு நீங்கள் உதவி செய்யலாம். இப்போது, பிள்ளையின் சந்தேகங்களைத் தீர்த்து வீட்டுப்பாடங்கள் செய்வதற்கு ஞாபகமூட்டி, ஊக்கப்படுத்தி உதவிகள் செய்தால் போதுமானது.." என்று கூறவே ஞானமணி தனது அறியாத் தனமையைப் புரிந்து கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானமணி தான் புரியாமல் கேட்டதற்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, "நான் விளங்காமல்தான் கேட்டேன்; இப்போது எல்லாம் அறிந்துவிட்டேன், தவறாக எண்ணக் கூடாது" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது... ஆசிரியை அவளை நோக்கி, "நீங்கள் கவலைப்பட வேண்டாம். இது எல்லாம் எமக்குச் சாதாரண விடயம். இப்படி உங்களைப் போல் எத்தனை பெற்றோர்களுக்கு நாம் விளக்கம் கொடுக்கிறோம். அதற்காகத்தானே பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு என ஒரு நாளையே ஒதுக்குகிறோம். பிள்ளைகளின் குறை, நிறைகள், பெற்றோர்கள் அக்கறை-அக்கறையின்மை, இனி ஆகவேண்டியவை என்ன என்பது பற்றி எல்லாம் கலந்துரையாடுகின்றோம். இவை எல்லாம் எமது கடமைகளில் ஒன்று" என்று கூறி, ஞானமணியை அனுப்பிவிட்டு, வகுப்பறைக்குச் சென்றார் ஆசிரியை.

வகுப்பில் எல்லோரும் குட்மோகன் என்று சொல்ல, ஆசிரியையும் பதிலுக்கு வணக்கம் கூறிவிட்டு, தனது இருக்கையில் அமர்ந்து, பிரியாவை நோட்டமிட்டார். பிரியா பயப்படுவதுபோல் முகம் வாடியிருப்பதைக்கண்டு, அவளைக் கூப்பிட்டார்.

"பிரியா! ஏன் ஒருமாதிரியாக கவலையாக இருக்கிறீர்? ஏதாவது வருத்தமா? தலை இடிக்கிறதா?" என அன்போடு ஆதரவோடு கேட்டார். பின், "உமது அம்மா எல்லாம் சொன்னது. எல்லாவற்றையும் இனி மறந்து விட வேண்டும் O.K. உம்மில் எனக்கு விருப்பம்தானே. நல்லபிள்ளை" என்று தலையைத் தடவிவிட்டு, போய் டொச் புத்தகத்தில் 28ஆம் பக்கத்தை எடுங்கோ. எல்லோரும் எடுங்கோ" என்று கூறவே மாணவர்கள் பக்கத்தைத் தேடிப் புரட்டுகின்றனர்.

பிரியா மனம் நிறைந்த சந்தோஷத்துடன் மகிழ்ச்சியாக, 'ரீச்சர் நல்லவதானே...' என்று எண்ணிக்கொண்டு, 28ஆம் பக்கத்தில் பார்வையைப் பதிக்கின்றாள்.

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியைப் பற்றி...



இந்நூலாசிரியை

***விக்னா பாக்கியநாதன்***

1975-1978 வரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கலைமாமணிப் பட்டதாரியாகி பின்னர் வேலணை... சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மத்தியமகா வித்தியாலயத்தில் ஆசிரியையாகக் கடமையாற்றியமை.

1981... ஜேர்மனிக்குப் புலம் பெயர்ந்து திரு.சு.பாக்கியநாதன் பீ.ஏ. (புவியியல் சிறப்பு) அவர்களைத் துணைவராக்கியமை.

1984-ல் சிந்திக்கத்தூண்டிய ஜேர்மனிய கலாச்சாரம் என்னும் ஒப்பீட்டு ஆய்வுநூலை இருவரும் இணைந்து எழுதி வெளியிட்டமை.

1987-1993 வரை கலைவிளக்கு எனும் மாதாந்த சஞ்சிகையை வெளியிட்டு வந்த கணவருக்குத் துணையாசிரியையாகச் செயற்பட்டமை. இன்று இச் சஞ்சிகை கலைவிளக்கு வீடியோப் பத்திரிகையாக வெளிவந்துகொண்டிருக்கிறது.

1987 முதல் இன்றுவரை டோற்மூண்ட். கரிதாஸ் தமிழ்ப்பாடசாலையில் பகுதி நேர வேலையாக ஆசிரியையாகப் பணியாற்றல்.

### *1988 முதல் ஆசிரியை எழுதிய பிற நூல்கள்*

| | |
|---|---|
| ஆதங்கம் | (புதுக்கவிதைகள்) |
| அழிவின் சுவடுகள் | (புதுக்கவிதைகள்) |
| கவிமலர்கள் | (மரபுக்கவிதைகள்) |
| பாலர் பாடல் | (பாடல்கள்) |
| உறவுக்குப் போராட்டம் | (சிறுகதைகள்) |
| குறுகிய காலத்தில் தமிழை எவ்வாறு கற்பிக்கலாம்? | (ஆய்வுக்கட்டுரை) |
| மாணவர் கட்டுரைகள் | (பாடநூல்) |
| இலக்கணம் கற்போம் | (இலக்கணப் பாடங்கள்) |
| ஆண்டு-3 செயல்நூல் | (பாடநூல்) |
| குறளின் நிழல்கள் | (நவீன குறள்கள்) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் பிரிண்டர்ஸ் 044-8224803